

# மலாயா சரித்திரம்

ஆக்கியோர்

சுவாமி சத்தியாநந்தா

29423

மனோன்மணி விலாச புத்தகசாலை

கோலாலம்பூர்

மா. ரா. அரசு

# மலாயா சரித்திரம்

## (HISTORY OF MALAYA)

BY

**SWAMI SATYANANDA** Ph. D., J. P.

Instructor, Training Classes and Refresher Course for Indian Teachers (Selangor Education Dept.)
Ex-Principal, Vivekananda Boys' School and Saradamani Girls' School, Singapore.

---

**With a Foreword**

BY

**HUGH LESLIE HODGE,**

B.A., HONS. (LONDON); M.R.S.T.,

*Assistant Director of Education (Indian*
*Federation of Malaya.*

---

PUBLISHERS :

**MANONMONEY VILAS BOOK DEPOT,**
**KUALA LUMPUR.**

Copyright] 1958 [Price $ 3.00

திருத்தி விரிவு படுத்திய
ஐந்தாம் பதிப்பு

The Premier Art Press, Purasawalkam, Madras-7.

# FOREWORD

I readily accede to the invitation to write a short foreword for Swami Satyananda's 'History of Malaya'. This work is an interesting and comprehensive account of the history of the country we now call Malaya, from the very earliest time down to the present day. As befits a book intended for Tamil schools, there are special references to the various historical links with India throughout this long period, and the early immigrations are dealt with in some detail; but the part played by the other neighbouring countries of Asia, and also by the impact of Western civilization, is also adequately related. The text is illustrated with maps and photographs which add much to its interest and value.

The book deals with recent developments and includes accounts of the occupation of this country by the Japanese, their surrender, the events leading to the formation of the Federation of Malaya, the functions of Government, the duties of citizens, and the position of Malaya in the British Commonwealth. I hope that the book will be widely studied by teachers and by older pupils, and that it will play a part in raising the standard of Tamil Education in Malaya.

**Sd. H. L. HODGE,**
Assistant Director of Education (Indian,)
Federation of Malaya.

Kuala Lumpur,
25th August, 1949.

# முகவுரை

சுவாமி சத்தியானந்தரது 'மலாயா சரித்திரம்' எனும் இந்நூலுக்குச் சிறியதொரு முகவுரை எழுதுமாறு வந்த அழைப்பை ஆர்வத்துடன் ஏற்றுள்ளேன்.

இன்றைக்கு 'மலாயா' என்று சொல்லப்படும் நாட்டின் மிகப் புராதன கால முதல் இக்காலம் வரையுள்ள சரித்திரத்தை இந்நூல் சுவையுடனும் விரிவாகவும் கூறுகின்றது. தமிழ்ப் பள்ளிக்கூடங்களுக்குத் தகுதி வாய்ந்த ஒரு புத்தகமாதலின், இதன்பால் இந்தியாவிற்கும் மலாயாவிற்குமுள்ள நீண்ட தொடர்பு விசேஷமாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது; இஃதுடன் பண்டைக் குடியேற்றங்களும் விருத்தாந்தத்துடன் கையாளப்பட்டிருக்கின்றன; என்றாலும், ஆசியாவில் இதர அயல் நாடுகள் கொண்டுள்ள பங்கும் மேற்கத்திய நாகரிகத்தினது உத்வேகமும் இச்சரித்திரத்தின்கண் போதிய அளவு கூறப்பட்டிருக்கின்றன. இச்சரித்திரம் தேச படங்களாலும் புகைப் படங்களாலும் விளக்கப்பட்டிருத்தலின், இதன் உபயோகமும் இனிமையும் கூடுகின்றன.

இனி, அண்மை நிகழ்ச்சியான ஜப்பானியர் ஆதிக்கம், அவர்களின் சரணாகதி, ஐக்கிய மலாயா அமைவதற்கு ஏதுவாயிருந்த நிகழ்ச்சிகள், மலாயாவின் இப்போதைய அரசியல் விவரம், மலாயப் பிரஜைகளின் கடமைகள், பிரிட்டிஷ் சம்மேளனத்தில் மலாயா வகிக்கும் இடம் ஆகியனவும் இந்நூலின்கண் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

ஆகவே, இந்நூல் பள்ளி ஆசிரியர்களினாலும் மேல்தர மாணாக்கர்களினாலும் பரக்கப் பயிலப்படுமெனவும், மலாயாவிலே தமிழ்க்கல்வியின் நிலையை உயர்த்துவதில் பங்கு பெறுமெனவும் நம்புகிறேன்.

எச். எல். ஹாட்ஜ்,
மலாயா சமஷ்டிக் கல்வி இலாக்கா
இந்தியப்பகுதி உதவி டைரக்டர்.

கோலாலம்பூர்,
25—8—1949.

# முன்னுரை

'மலாயா சரித்திரம்' என்னும் பெயரிய இந்நூலுக்கு முகவுரை ஈந்துள்ள கனந்தங்கிய எச். எல். ஹாட்ஜ், பி. ஏ. (லண்டன்), எம். ஆர். எஸ். டி., (ஐக்கிய மலாயக் கல்வி இலாக்கா இந்தியப்பகுதி உதவியதிகாரி) அவர்கள் இந்நாட்டிலுள்ள தமிழ்ச் சிறுவர்களது தாய்மொழிக் கல்வி வளர்ச்சியிலும், தமிழ் ஆசிரியர்களது மேம்பாட்டிலும், இன்னும் பொதுவாக இந்திய மக்களின் நலத்திலும் கொண்டுள்ள ஆர்வத்தை யாவரும் அறிவர்; இவற்றின்பொருட்டு அவர் எடுத்துக்கொள்ளும் முயற்சிகளையும் பலரும் நன்கறிவர். திரு. ஹாட்ஜ் அவர்களுடைய மேலான நோக்கம், அவர் ஆற்றும் அரிய தொண்டு இவற்றிற்காக மலாயா வாழ் தமிழ் மக்களும் பிறரும் அன்னாருக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறார்களென்பது எனது துணிபு.

1937-ஆம் ஆண்டு முதல் சிங்கை விவேகானந்த ஆண் பாடசாலை, சாரதாமணி பெண்பாடசாலை இவற்றிற்கு அத்தியட்சராகவும் மேல் வகுப்பு ஆசிரியராகவுமிருந்து யான் பணிசெய்துவந்த வேளையிலே, 'இந்தியாவுக்கும்மலாயாவுக்குமிடையே தொன்றுதொட்டு இருந்து வரும் சரித்திர சம்பந்தமான தொடர்பையும் மலாய் நாட்டின் பொது வரலாற்றையும் விளக்கத்துடன் எடுத்துக் கூறும் இந்நாட்டுச் சரித்திர நூல் ஒன்று மலாயாவிலுள்ள தமிழ்ப் பள்ளிக்கூடங்களின் உபயோகத்திற்கு அவசியம் வேண்டும்,' என்ற கருத்தைத் திரு. ஹாட்ஜ் அவர்கள் என்னிடம் கூறினார்கள். இக்கருத்தினை என்னால் இயன்ற அளவு நிறைவேற்றலாமென எண்ணங்கொண்டேன். எனவே, அறிஞர் ஆராய்ச்சிக்காரர்கள் பலரால் ஆங்கிலத்திலே எழுதப்பட்ட மலாயா சரித்திர சம்பந்தமான நூல்களையும் இன்னும் இவ்விஷயம்

பற்றிப் பல பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் அறிஞர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளையும் எனக்கு அவகாசம் கிடைத்தபோதெல்லாம் படித்து, தகுந்த குறிப்புகளைச்சேகரித்து வந்தேன். இக்குறிப்புகளில் பெரும்பாலன என்னிடம் கல்வி பயின்ற உயர்தர வகுப்பு மாணவ மாணவிகளுக்குப் புகட்டப்பட்டவை. பிறகு இக்குறிப்புகள் அனைத்தையும் தொகுத்து, தொடுவாய்ப் பகுதிகளின் தமிழ்ப் பள்ளிக்கூடங்களது உதவிக் கண்காணிப்பாளர் திரு. தி. ப. கோபால கிருஷ்ணன் அவர்களுடைய முகவுரையுடன் திரு. உ. இராமசாமி நாடார் அவர்கள்தம் செலவில் ஒரு நூல் வடிவமாகச் சிங்கை ஸ்டார் பிரஸில் அச்சிட்டு, 1941ல் வெளியிட்டேன். அந்நூலுக்குத் தேவையான கையெழுத்துப் பிரதிகளைத் தயாரிப்பதில் என் மாணுக்கருள் ஐவரான ச. பாலசுப்பிரமணியம், பி. துரை ராஜு, மு. காந்தி நாதன், கோ. முருகையன், க. சிவநேசன் என்பவர் மிகவும் துணை புரிந்தனர். இவர்களுடன் ஸ்ரீலஸ்ரீ சுவாமி ஆத்மராம், பி. ஏ. அவர்கள் கையெழுத்துப் பிரிதிகளைப் பார்வையிட்டுச் சில திருத்தங்கள் செய்து உதவினுர்கள். அந்நூலின் பாங்கிற்குரிய கருத்துகள் சில, திரு. ஹாட்ஜ், திரு. கோபால கிருஷ்ணன் இவர்களால் நல்கப்பட்டவை. இனி, அதனுள் அச்சிடப்பட்ட படங்களில் அநேகம் ஜொகூர் பாரு ஆங்கிலக் கல்லூரி ஆசிரியர் திரு. செ. சுப்பிரமணியம் அவர்களால் தந்து உதவப்பட்டவை.

1945ல் முடிவுற்ற இரண்டாவது உலக மகாயுத்தத்திற்குப் பிறகு மலாயாவில் பல மாறுதல்கள் நிகழலாயின. எனவே, யான் முன்னர் யாத்த மலாயா சரித்திர நூலினை மாறிய நிலைக்கொவ்வ முற்றும் புதுக்கி எழுத முற்பட்டேன். இந்நாட்டுச் சரித்திரம் பற்றி அறிஞர் சிலர் அண்மையிலே எழுதிய நூல்களை ஆராய்ந்து, புது விஷயங்கள் பல சேர்த்து, 'மலாயா சரித்திரம்' என்ற இந்நூலை எழுதினேன். இவ்வேலையில் அன்பர்களும் என் மாணுக்கர்

களுமான திரு. இரா. சண்முகம், திரு எஸ். மார்ட்டின், திரு. பி. துரை ராஜு, திருமதி க. அ. மங்களம் ஆகியோர் பெருந்துணை புரிந்தனர். ஐக்கியமலாயாக் கல்வி இலாக்கா இந்தியப் பள்ளிக்கூடங்களின் கண்காணிப்பாளர் திரு. லே. தி. ராஜன், பி. ஏ., எல். டி., அவர்கள் இந்நூலின் இறுதியிலுள்ள சில பாடங்களைத் தொகுப்பதற்குத் துணை புரிந்ததுமன்றி, அவற்றிற்குரிய சில ஆங்கில நூல்களும் தந்துதவினார்கள். ஐக்கிய மலாயாப் பொதுஜன உறவு இலாக்காக்காரர் சில பட 'புளோக்குகள்' கொடுத்துதவினார்கள். மலாக்கா திரு. உ. அரு. அருணாசலஞ்செட்டியாரவர்கள் மலாக்கா சம்பந்தமான படங்களின் விவரங்கள் குறித்துக்கொடுத்து உதவி புரிந்தார்கள். கோலாலம்பூர் மனோன்மணி விலாச புத்தக சாலையார் இச்சரித்திரத்தை அச்சிட்டுத் தமிழ்த் தொண்டு புரிய முன் வந்துள்ளனர்.

மேலே சொல்லப்பட்டவர்கள் எல்லோரும் எனது முயற்சியில் பங்கு பற்றியிருக்கிறார்கள். இவர்கள் அனைவருக்கும் எனது நன்றி உரித்தாகுக.

இந்நூலின் செம்மைப்பாட்டுக்கான சூழ்தல்கள் எங்கிருந்து வரினும் அவற்றை உவகையுடன் ஏற்றுக் கொள்வேன்.

கோலாலம்பூர்,<br>
1—9—'1949

சுவாமி சத்தியாநந்தா

## பதிப்புரை

இந்திய நாட்டின் கலாசாரம் தொன்மையும் மாண்பும் மிக்கது. அது கீழை நாடுகளை அக்காலத்தில் ஆட்சிபுரிந்தது. அதன் சின்னங்களை இன்றும் நாம் காண்கிறோம். மலாய் நாடும் இந்தியக் கலாசாரத்தில் நன்கு பழகி வந்திருக்கிறது. மலாயாவின் பண்டைய சரித்திரமும் இன்றைய சரித்திரமும் கொண்டதொரு நடுநிலை நூல் தமிழில் இதுகாறும் இருந்ததில்லை. அக்குறையை நிவர்த்திப்பதே இந்நூலின் நோக்கம்.

'மலாயா சரித்திரம்' என்னும் மிகச்சிறந்த இந்நூல் மலாயா வாழ் தமிழ் மக்களுக்கு இன்றியமையாததொன்றும். இம்மாதிரி நூலொன்றை எழுதி வெளியிட நீண்ட நாட்களாகவே ஒருவரும் முன் வந்தாரில்லை. எனவே, சுவாமி சத்தியாநந்தா அவர்கள் தமது நெடுநாளைய அனுபவத்தாலும் ஆராய்ச்சியாலும் இந்நூலைத் திறம்படத்தொகுத்துத் தந்தார்கள். இதில் தமிழரின் பண்டைப் பெருமை, பழங்காலத்தவர் இந்நாட்டில் செய்த செயல்கள் யாவும் தெளிவுற எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

சரித்திர சம்பந்தமான நூல்கள் ஒவ்வொரு நாட்டுக்கும் அவசியம் தேவை. அதுவும், அவ்வந்நாட்டில் உள்ள அத்தனை மொழிகளிலும் அவையிருக்க வேண்டுவது மிகமிக அவசியம். பண்டைத்தொடர்புள்ள நந்தமிழ்மொழியில் அதை யாத்த பெருமை சுவாமிகளையே இப்போது சாரும். சுவாமி சத்தியாநந்தா அவர்களை மலாயாத் தமிழர்கள் நன்கறிவர். அன்னாரின் புனிதத் தொண்டு யாவருக்கும் பயன் அளித்து வருகிறது. அப்பயனைப் பள்ளி மாணவர்களும்

ஆசிரியர்களும் ஏனையோரும் இந்நூலின் மூலம் அடைவ ரென்பது எமது துணிபு.

எங்கள் பிரசுரங்களை ஆதரித்தது போல இனியும் தமிழன்பர்கள் ஆதரித்து ஊக்குவிக்க வேண்டுகின்றோம். தமிழன்னையின் ஆசி எமக்கும் பிறர்க்கும் கிடைக்க நமது பணி நற்பணியாக இருக்க வேண்டுமென இறையையிறைஞ் சுகிறோம்.

கோலாலம்பூர் மனோன்மணி விலாச புத்தகசாலை.

## பொருளடக்கம்


| பிரிவு | பாடம் | பக்கம் |
| --- | --- | --- |
| க. பிரவேசனம் | 1. சரித்திரம் ... | 1 |
| | 2. நாகரிக வளர்ச்சி—I ... | 2 |
| | 3. நாகரிக வளர்ச்சி—II ... | 5 |
| | 4. நாகரிக வளர்ச்சி—III ... | 7 |
| உ. மலாயா | 1. மலாயாவின் இயற்கை அமைப்பு ... | 10 |
| | 2. குடிகள், மதங்கள், பாஷைகள், தொழில்கள் ... | 14 |
| ங. புராதன காலம் | 1. மலாயாவில் பூர்வகுடிகள் | 16 |
| | 2. சீனர் ... | 22 |
| | 3. இதர ஜாதிகள் ... | 26 |
| | 4. பழந்தமிழர்கள் ... | 28 |
| | 5. இந்தியரின் கப்பல் வர்த்தகம் | 36 |
| | 6. இந்தியா - மலாயா—I ... | 38 |
| | 7. இந்தியா - மலாயா—II ... | 41 |
| | 8. லங்கா சுகமும் கடாரமும்... | 44 |
| | 9. லங்கா சுக மன்னர்கள்: மாறன் மஹாவங்ஸன் ... | 49 |
| | 10. மஹா போதி ஸத்வன் ... | 53 |

| பிரிவு | பாடம் | பக்கம் |
|---|---|---|
| | 11. ஸ்ரீ மஹா வங்ஸனும் பிரீத துரியனும்—I ... | 55 |
| | 12. ஸ்ரீ மஹா வங்ஸனும் பிரீத துரியனும்—II ... | 59 |
| | 13. பிரான் மஹாபோதிஸத்வன் | 62 |
| | 14. ஸ்ரீ விஜயா இராச்சியம் ... | 66 |
| | 15. ஜாவா இராச்சியங்கள் ... | 69 |
| | 16. இந்து-சீன இராச்சியங்கள் | 73 |
| | 17. பூர்விக சிங்கப்பூர் ... | 77 |
| | 18. பரமேஸ்வரனும் மலாக்கா இராச்சியமும் ... | 79 |
| ச. மத்திய காலம் | 1. முகமது நபி ... | 83 |
| | 2. மலாயாவின் முதல் முஸ்லீம் சுல்தான் ... | 85 |
| | 3. ஸ்ரீமகா ராஜா ... | 86 |
| | 4. ராஜா காசீம் ... | 88 |
| | 5. மன்சூர்ஷா (கி.பி. 1459-77) | 90 |
| | 6. அல்லாவுடீன் ரீயட்ஷா ... | 92 |
| | 7. சுல்தான் மாமூட் ... | 94 |
| | 8. போர்ச்சுகீசியர் வருகை ... | 98 |
| | 9. போர்ச்சுகீசியர் மலாக்காவைப் பிடித்தல் ... | 102 |
| | 10. மலாய மலாக்காவின் இறுதி | 108 |
| | 11. போர்ச்சுகீசிரியரின் ஆட்சி. | 111 |
| | 12. போர்ச்சுகீசியரும் சுல்தான் மாமூடின் இறுதியும் ... | 114 |
| | 13. ஜொகூர் ... | 117 |

| பிரிவு | பாடம் | பக்கம் |
|---|---|---|
| | 14. அச்சை | ... 119 |
| | 15. டச்சுக்காரரின் வருகை. | 121 |
| | 16. போர்ச்சிகீசிய மலாக்காவின் வீழ்ச்சி | ... 123 |
| | 17. டச்சுக்காரரின் ஆளுகை | 125 |
| | 18. ஜொகூரும் டச்சுக்காரரும் | 128 |
| | 19. பழைய ஜொகூரின் பரிதாப நிலை | ... 130 |
| | 20. பண்டாஹரா சுல்தான்கள் | 133 |
| | 21. ராஜா கிச்சிலும் பூகிஸ் ஜாதியாரும் | ... 135 |
| | 22. பூகிஸ்காரரின் ஆட்சி | ... 136 |
| | 23. பூகிஸ்காரரும் டச்சுக்காரரும் | ... 137 |
| ரு. நவீன காலம் | 1. பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி | ... 141 |
| | 2. கெப்டன் பிரான்ஸிஸ் லைட்டும் பினுங்கும் | ... 144 |
| | 3. ஸர் ஸ்டாம்போர்ட் ரபிள்ஸும் சிங்கப்பூரும், | 147 |
| | 4. தொடுவாய்ப் பகுதிகள். | 154 |
| | 5. மலாய் ராஜ்யங்கள் | ... 157 |
| | 6. பேரா சமஸ்தானம் | ... 161 |
| | 7. சிலாங்கூர் சமஸ்தானம். | 167 |
| | 8. நகரி செம்பிலான் சமஸ்தானம் | ... 170 |
| | 9. பஹாங் சமஸ்தானம் | ... 175 |
| | 10. ஜொகூர் சமஸ்தானம் | ... 182 |

| பிரிவு | பாடம் | பக்கம் |
| --- | --- | --- |
| | 11. கெடா, பெர்லிஸ். கிளந்தான், திரங்கானு சமஸ்தானங்கள் | ... 184 |
| | 12. பிரிட்டிஷ் மலாயாவும் அதன் அரசியலும் | ... 187 |
| | 13. ஜப்பானின் வெற்றிக் காலம் | ... 193 |
| | 14. ஏகத்துவ மலாயாவும் சிங்கப்பூரும் | ... 199 |
| | 15. மலாயாவின் இப்போதைய அரசியல் விவரம்—I | ... 204 |
| | 16. மலாயாவின் இப்போதைய அரசியல் விவரம்—II | ... 215 |
| | 17. ஸ்தல ஆட்சி | ... 217 |
| | 18. தேசிய மலாயாவின் உதயம் | ... 226 |
| | 19. பிரிட்டிஷ் சம்மேளனமும் (காமன் வெல்த்) மலாயாவும் | ... 235 |

அநுபந்தம்

மலாய் மொழியில் சாதாரணமாக வழங்கப்படும் சில இந்திய வார்த்தைகள்.

# படங்களின் அட்டவணை

எண் | பக்கம்


1. மலேஷியா — இந்தியர், சக்கேயர், ஜக்கூனியர், மலாயர் சஞ்சாரம் ... ... ... 1
2. மலாயா—இயற்கை அமைப்பு ... ... 10
3. இந்தியா—இச்சரித்திர சம்பந்தமான இடங்களும் சில பழைய ராஜ்யங்களும் ... ... 33
4. பீடோரில் கிடைத்த அவலோகிதேஸ்வர விக்கிரகம்; ஈப்போவுக்கு அருகே கிடைத்த புத்தரின் சிலை ; கெடாவிலுள்ள சிதைந்த இந்துக் கோவில் அஸ்திவாரம் ... ... ... 41
5. மலாயா-சரித்திர சம்பந்தமான பழைய இடங்கள் 44
6. மலேஷியா — சரித்திர சம்பந்தமான பழைய இடங்கள் ... ... ... ... 65
7. ஜாவாவிலுள்ள பழைய இந்து ஆலயம்: மத்திய ஜாவாவிலுள்ள பௌத்த ஸ்தூபிகை; மலாக்கா பழைய மகரச்சிலை ... ... ... 73
8. பாலித் தீவு இந்துக்கள் பஜனை செய்தல்: போர்னியோக் குகையிலுள்ள இந்து விக்கிரகங்கள் : மத்திய சியத்திலுள்ள சிதைந்த இந்து ஆலயம் ... 81
9. மலாக்காவில் பழைய யாளிச் சிலை; கெடாவில் கிடைத்த சிற்றுருவமான ஆலயமொன்றின் வெண்கலக் கூரை; கெடாவில் கிடைத்த கிரந்த அட்சரங்கள் எழுதப்பட்ட களிமண் தகடு ... ... ... ... 89
10. மலாக்கா செயின்ட் ஜோன் குன்றிலுள்ள கோட்டை (டச்சுக்காரரால் கட்டப்பட்டது); மலாக்கா ஆறும் பாலமும்; மலாக்காக் குன்றின் மேல் செயின் பால்ஸ் ஆலயம் ... ... 113
11. மலாக்காவில் போர்ச்சுகீசியர் கட்டிய கோட்டையின் வாயில்: அங்கோர்-வாட் இந்து ஆலயங்கள், மலாக்காவில் டச்சுக்காரர் கட்டிய கோட்டையின் பிரதான வாயில் ... 121

எண் பக்கம்

12. கெப்டன் பிரான்ஸிஸ் லைட் (சிலை); ஸர் தோமஸ் ஸ்டாம்போர்ட் ரபிள்ஸ் (சிலை) ... 145
13. ஸர் தோமஸ் ஸ்டாம்போர்ட் ரபிள்ஸ் (படம்): மலாக்காத் தெருவொன்றின் காட்சி ... 153
14. கோலாலம்பூர் அரசாங்கக் காரியாலயங்கள்; சிங்கப்பூர் கவர்னர் மாளிகை: சிங்கப்பூர் புல்லர்ட்டன் கட்டடம் ... ... ... 161
15. கோலாலம்பூர் ரயில்வே ஸ்டேஷன் உள் தோற்றம்; கோலாலம்பூர் பத்துமலை உள் தோற்றம், கோலாலம்பூர் ரயில்வே ஸ்டேஷன் வெளித் தோற்றம் ... ... ... ... 169
16. கோலாலம்பூர் விவேகானந்த ஆச்சிரமம்; ஜப்பானியர் விட்டுப்போன பீரங்கிகள்; சீனர் சபா மண்டபம், கோலாலம்பூர்; சிலாங்கூர் சுல்தானின் மஸூதி ... ... ... 185
17. பிரபு லூயி மவுன்ட்பேட்டன் சிங்கப்பூரில் இறங்குதல்; பத்துமலைப் படிகள் ... ... 193
18. ஜப்பானியர் சரணாகதி ... ... ... 200
19. புது பெடரல் சட்டசபையின் அங்கத்தினர்கள்; இரண்டாவது சிலாங்கூர் சமஸ்தானக் கவுன்சிலின் அங்குரார்ப்பணக்கூட்டம் ... ... 206
20. பெடரேஷன் ஹை கமிஷனரும் சபாநாயகர் ராஜா சர் உடாவும் மற்றும் பலரும்; ஹை கமிஷனர் சர். டொனல்ட் மெக்லிவ்ரேயும் சுல்தான்களின் பிரதிநிதிகளும் மற்றும் பலரும் ... 214
21. பிரிட்டிஷ் காலனி மந்திரி திரு. ஆலன் லென்னொக்ஸ் பாய்டு: ஸர் ஜெரால்ட் டெம்பிளரும் சுவாமி சத்தியானந்தாவும் ... ... 216




மலேஷியா.




ஐக்கிய மலாயா அரசுச் சின்னம்



# ஐக்கிய மலாயா கொடி வணக்கம்.

தாளம் (Time) Signature 4/4. ராகம். Key C Major

| | | | |
|---|---|---|---|
| போற்றுக | மலாயா | பொதுக் | கொடி |
| ஏற்றம் | செய் | விக்கு | மதனை |
| நாட்டுக | நல்ல | வண்ண | மாய் |
| நாடெலாம் | ஒன்றி | நயம் | மேவ |
| மாதாவாம் | மலாயா | மகிழ்வாய் | |
| மேதாவாய் | அன்பு | ஈந்து | கூவுகின்றாள் |
| " ஐக்கிய | மலாயாப் | பைங் | கொடியை |
| கை(க்)குவித்து | நேசி | விசு | வாசி." |

"வரலாறு வாழ்வைப் பெருக்கும்."

# மலாயா சரித்திரம்

## க. பிரவேசனம்

## 1. சரித்திரம்

நம்மைச் சூழ்ந்திருக்கும் எந்தப் பொருளையேனும் உள்ளவாறு நாமுணர்தற்கு அதன் வரலாறு இன்றியமையாததாகும். வரலாறு மூன்று தொடர்ச்சியான பிரிவுகளையுடையது. அவையாவன, ஒரு பொருளின் தோற்றம் அல்லது உற்பத்தி, அதன் வளர்ச்சி அல்லது அபிவிருத்தி, அதன் இப்போதைய நிலை அல்லது தற்கால அந்தஸ்து என்பனவாம்.

ஒரு நாட்டின் சரித்திரத்தை நாம் கற்பது—அது முதலிலே எப்படி இருந்தது? அதன் நாகரிகம் எவ்வாறு உற்பத்தியாயிற்று? அஃது என்னென்ன வளர்ச்சிப் பாட்டைப் பெற்றது? பிறகு எவ்விதம் இப்போதைய நிலையை அடைந்துள்ளது?—இன்னவற்றை ஆராய்ந்து அறிதற்பொருட்டேயாம்.

இன்னும் சரித்திரப் படிப்பினல், 'ஒரு தேசத்தின் மக்கள் காலத்திற்குக் காலம் எவ்வாறு ஜீவித்தார்கள்? என்ன செயல்களைச் செய்தார்கள்? அவர்களுக்கும் பிற நாட்டவருக்கும் என்ன தொடர்புகள் உண்டாயின? பிற நாட்டவர்கள் அந்நாட்டிற்கு என்ன செய்துள்ளார்கள்?' என்பனவற்றையெல்லாம் அறியக்கூடும். அவற்றுடன் ஒவ்வொரு சமூகத்தாருக்கும் அவர்களது உரிமைகளையும் சரித்திரம் விளக்கும்.

உலக சரித்திரத்தையும் தேச சரித்திரங்களையும் ஆராய்ச்சி நிபுணர்கள் பல பிரிவுகளாகப் பிரித்திருக்கின்

றனர். மிகவும் புராதன காலத்தைப் பற்றிய வரலாற்றைச் சரித்திர காலத்திற்கு அப்பாற்பட்டது என்கிறார்கள். மற்றைய வரலாறுகளைப் புராதன காலச்சரித்திரம், மத்திய காலச் சரித்திரம், நவீன காலச் சரித்திரம் என்று வகுத்திருக்கிறார்கள். சரித்திரம் தொடர்பான கதையாதலால், ஆரம்பமுதல் தொடர்ந்து படித்தால்தான் பூரண விளக்கம் உண்டாகும்.

நாம் மலாயாவின் சரித்திரத்தைக் கற்கும் போது 'மலாயா' எனப்படுவது யாதென அறிதல் வேண்டும். இப்போது மலாயாவில் பல ஜாதிகள், சமயங்கள், மொழிகள், தொழில்கள், பல மாதிரியான சமூக நடையுடை பாவனைகள், பொருளாதார நிலைகள், அரசியல் முறைகள் இன்னோரன்ன பல விஷயங்கள் உள்ளன. இவையெல்லாம் எவ்வாறு இந்நாட்டில் அமையலாயின என்று ஆ ரா ய் ந் து காணுவோமாயின், மலாயா சரித்திரத்தை நாம் தெரிந்துகொண்டவர்களாவோம்.

---

## 2. நாகரிக வளர்ச்சி—I

மலாயா தேச சரித்திரத்தைப் படிப்பதற்கு முன்னர், மனிதசமுதாயம் பொதுவாக எவ்விதம் படிப்படியாக நாகரிக முயற்சி பெற்று வந்திருக்கிறது என்பதைக் கவனிப்போம் :

மிகப் பழமையான காலத்தில் மனிதர் மிருகங்களைப் போலவே இருந்தார்கள். அவர்களுக்கு நெருப்பு மூட்டவோ சமைக்கவோ தெரியாது. மிருகங்களையும் இதர பிராணிகளையும் கொல்லவும் விரட்டவும் அவர்களிடம் ஆயுதங்கள் இருந்ததில்லை. மரக்கிளைகளிலும் மலைக் குகைகளிலும்

வசித்து வந்தார்கள்; அக்காலத்தில் செம்மையான பாஷை பேச இயலாதவர்களாயிருந்தார்கள்.

ஆயினும், மனிதருக்கும் விலங்குகளுக்கும் ஒரு முக்கியமான வேற்றுமை உண்டு. அஃது என்னவென்றால், விலங்குகளைவிட மாந்தர்க்கு விசேஷமான மூளை இருக்கின்றது. நாகரிகம் மிகவும் முன்னேறிய இக்காலத்திலும் இயற்கைத் தடைகளை நீக்குவதற்கு மனிதர் பல வாறாக முயற்சிகள் செய்தே வருகிறார்கள். எனவே, சரித்திரம் அல்லது நாகரிக வளர்ச்சி என்பது, மனிதர் தமக்கு ஏற்படும் பல விதமான கஷ்டங்களை நீக்கக் கையாண்ட முயற்சிகளின் வரலாறு எனக்கூறலாம்.

'தேவையே யுக்திக்கும் வளர்ச்சிக்கும் தாயாய் இருக்கிறது,' என்பது ஒரு முதுமொழி. மனிதர் ஒரு விஷயத்தைக் கண்டு அறிந்தது, அதற்குத் தேவை உண்டான பிறகே. ஆரம்ப காலத்து மனிதர் முதலாவதாகக் காட்டு மிருகங்களுக்குப் பயந்திருந்தார்கள். இன்னும், அவர்களது உணவுக்காகவும் மிருகங்களின் மாமிசம் தேவைப்பட்டது. ஆகவே, மிருகங்களை விரட்ட வேண்டும் அல்லது கொல்ல வேண்டும் என்னும் அவா அவர்களைத் தூண்டிற்று. இத்தேவையின்பொருட்டு ஆதி மனிதர்கள் ஆயுதங்களை ஆக்கினர். அவை பெரும்பாலும் சிகிமுகிக்கற்களால் செய்யப்பட்டவையாகும். அவ்வாயுதங்கள் திருத்தமற்றனவாதலால் அக்காலத்தைப் பழைய கற்காலம் என்று சரித்திர ஆசிரியர் கூறுவர். அக்காலத்தில் மாந்தர் எல்லோரும் வேட்டையாடி ஜீவித்தனர். வேட்டைக்குக் கல்லாயுதங்களையே பாவித்தார்கள். கொன்ற பிராணிகளின் இறைச்சியைப் பச்சையாகவும் அல்லது தேனுடன் கலந்தும் புசித்தார்கள். கொன்ற மிருகங்களின் தோலினாலும் மரத்தின் இலைகளினாலும்

சீதோஷ்ண மாறுதல்களினின்றும் தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்கு ஆடைகள் தைத்தார்கள். அவர்கள் தையலுக்கு உபயோகித்த ஊசி, பிராணிகளின் எலும்பினால் செய்யப்பட்டது.

பழைய கற்காலத்திற்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு புதிய கற்காலம் தொடங்கிற்று. அக்காலத்திலும் கல்லாயுதங்களே உபயோகிக்கப்பட்டன என்றாலும் அவை திருத்தமாகவும் கூராகவும் செய்யப்பட்டன. அக்காலத்தில் மனிதர் நெருப்பு மூட்டவும் கற்றறிந்து கொண்டார்கள்.

ஆதிகால மனிதர் எப்பொழுது நெருப்பு உண்டு பண்ண அறிந்தார்கள் என்பது திட்டமாய்ச் சொல்ல இயலாது. கல் ஆயுதம் செய்யும்போது ஒரு கல்லை மற்றொரு கல்லோடு மோதியிருப்பார்கள். அல்லது ஒரு கட்டையின் மேல் மற்றொரு கட்டையைத்தேய்த்து நெருப்பு உண்டாக்கியிருப்பார்கள். அப்பொழுது நெருப்புப் பொறி உண்டாகியிருக்கும். அப்பொறிகள் இலைச்சருகு அல்லது காய்ந்த புற்களில் பற்றி நெருப்பாகியிருக்கலாம். அப்படி உண்டான நெருப்பில் ஏதாவது தானியம் வெந்திருக்கலாம். புராதன மனிதர் அவைகளைத் தின்று ருசி பார்த்த பின் நெருப்பை மூட்ட வேண்டும் என்ற அவா அவர்களுக்கு ஏற்பட்டு இருக்கலாம். நெருப்பினால் உணவைச் சமைத்தார்கள் ; குளிர் காய்ந்தார்கள். நெருப்பு வெளிச்சத்தைக் கண்டு காட்டு மிருகங்கள் பயந்து ஓடலாயின. நெருப்பின் உதவியால் சட்டி பானைகள் வனையவும் புராதன மனிதர் பழகிக்கொண்டனர்.

மேலே நாம் கண்ட நெருப்புண்டு பண்ணும் முறைகள் முற்காலத்திலிருந்து ஏறக்குறைய 150 வருஷங்களுக்கு முன்னாற்கூடக் கையாளப்பட்டு வந்தன.

19–வது நூற்ருண்டின் மத்தியில்தான் தீக்குச்சி செய்யும் முறை கண்டுபிடிக்கப்பட்டது.

புதிய கற்காலத்து மாந்தர் வேறுபல விஷயங்களும் தெரிந்துகொண்டார்கள். சிலர் மரக் கம்புகளால் குடில்கள் கட்டவும், சணலிலிருந்து சீலை நெய்யவும், சில காட்டு மிருகங்களைப் பழக்கி வீட்டு மிருகங்களாக வளர்க்கவும், பயிரிடவும், அம்பு, வில், ஈட்டி, கோடரி, கத்தி முதலிய ஆயுதங்களை உபயோகிக்கவும் கற்றுக்கொண்டனர். புதிய கற்காலத்து மனிதருக்குச் சிப்பிகள், சங்குகள், மணிகள் முதலியவற்ருல் ஆபரணங்களாக்கி அணியவும் தெரிந்திருந்தது.

உலகத்திலே உள்ள பல தேசங்களிலும் கற்கால நாகரிகம் இருந்திருக்க வேண்டும். சில தேசங்களில் பழைய கற்காலம் முடியுமுன்னரே வேறு சில தேசங்களில் புதிய கற்காலம் ஆரம்பமாயிற்று.

---

# 3. நாகரிக வளர்ச்சி—II

ஆதிகாலத்து மனிதர் கல்லாயுதங்களுடன் திருப்தியடையவில்லை. ஏதாவது கடினமான வஸ்துவைக் கண்டுபிடித்து அதிலிருந்து கூர்மையான ஆயுதங்களை ஆக்க வேண்டுமென்ற அவா அவர்களுக்கு இருந்தது.

புதிய கற்காலம் முடியுமுன்னரே சில தேசங்களில் மனிதர் தங்கம் என்னும் உலோகத்தைக் கண்டுபிடித்தார்கள் என்று சில சரித்திரக்காரர் கூறுகின்றனர். தங்கத்தை உருக்கி நகைகள் செய்து அணிந்தார்கள்.

பிறகு மனிதர் செம்பு என்னும் உலோகத்தைக் கண்டு பிடித்தார்கள். செம்பின் உபயோகத்தைச் சுமார்

6000 ஆண்டுகளுக்கு முன்னரே அவர்கள் அறிந்திருக்க வெண்டுமென்பது சரித்திர ஆசிரியர்கள் துணிபு. செம்பி னுல் பல வகை ஆயுதங்களைச் செய்தார்கள் என்ருலும், செம்பு கடினமற்ற பொருளாதலால், அதனுல் ஆக்கப் பட்ட ஆயுதங்கள் மனிதருக்கு அதிகமாக உபயோகப் படவில்லை. இக்குறையைத் தீர்த்துக்கொள்ள முயன்ற தன் பயனுகத் தகரம் என்னும் வேருேர் உலோகத்தைக் கண்டுபிடித்தார்கள். பிறகு செம்பையும் தகரத்தையும் கலந்தால் புதியதும் கெட்டியானதுமான ஓர் உலோகம் ஆக்கலாம் என்பதைத் தெரிந்துகொண்டார்கள். இக் கலப்பு உலோகத்துக்கு **வெண்கலம்** என்று பெயரிட்டார் கள். வெண்கலத்தால் ஆக்கப்பட்ட ஆயுதங்கள் மிகவும் கடினமான வேலைகளுக்கு ஏற்றவையாகும்.

பிறகு இரும்பு என்னும் உலோகப் பொருளைச் சுமார் 4000 வருஷங்களுக்கு முன்னர் மனிதர் கண்டறிந்தார்கள். ஆசியாக் கண்டத்துத் துருக்கித் தேசத்தில் வதிந்த 'ஹிரைட்ஸ்' என்னும் ஜாதியினரே முதன்முதலாக இரும்பின் உபயோகத்தைத் தெரிந்திருந்தார்கள் என்று சரித்திர ஆசிரியர் சிலர் கூறுகின்றனர். இன்றைக்கு நாம் எல்லோரும் இரும்புக் காலத்தில் வாழ்கிருேம். ஏனென்ருல், இந்தக் காலத்தில் இதர உலோகங்கள் உபயோகிக்கப் பட்டாலும், பல வித ஆயுதங்களும் இயந்திரங்களும் பெரும்பான்மை இரும்பினுலேயே செய்யப்படுகின்றன.

அண்மையில் ஐக்கிய அமெரிக்க நாட்டு விஞ்ஞான சாஸ்திரிகள் **அணுவின் சக்தியையும்** உபயோகிக்கக் கண்டறிந்திருக்கிருர்கள். அதன் பலாபலன்கள் வருங் காலத்தில்தான் தெரியக்கூடும்.

கல்லாயுதங்களால் பண்பாடும் நுட்பமும் பொருந்திய வேலைகள் செய்ய இயலாமல் இருந்தது. உலோகப் பொருள்களினால் ஆகிய ஆயுதங்கள் ஏற்பட்ட பிறகே மனிதர் கட்டடங்கள் கட்டவும், ஓடங்கள், படகுகள், தோணிகள், கப்பல்கள் செய்யவும், வண்டிகள் செய்யவும் இயன்றது. எனவே, கற்காலத்தைப்பார்க்கிலும் உலோக காலங்களில் மனித சமுதாயம் அதிக சீர்திருத்தம் அடைந்தது என்பதற்கு ஐயமில்லை.

## 4. நாகரிக வளர்ச்சி—III

கற்கால மனிதர் நாகரிகத்தில் மிகவும் கீழ்மையான வர்கள். சீர்திருத்தமான பழக்க வழக்கங்கள் அவர்களுக்கு இருந்திருக்கவில்லை. காட்டு மிருகங்களைப்போலவே பகலில் அவர்களும் வேட்டையாடினார்கள்; இரவில் உறங்கினார்கள்; சில வேளைகளில் இரண்டு மூன்று நாட்கள் தொடர்ச்சியாக வேட்டையில் ஈடுபட்டிருப்பார் கள். எதையும் சிந்திக்கவோ, கண்டு அறியவோ, அவர் களுக்குப் போதிய நேரம் இருக்கவில்லை. அவர்களின் வாழ்க்கை எப்போதும் அபாயகரமாய் இருந்தது. ஆகை யால், அவர்கள் எப்பொழுதும் ஆபத்துக்களை விலக்குவதி லேயே கருத்தாய் இருந்தார்கள். கல்விக் காரியங்களில் அவர்கள் எதுவும் செய்யவில்லை.

புதிய கற்காலம் முடிவுறுமுன்னரே சிலர் வேட்டை யாடுவதை விட்டு வேறு முயற்சிகளில் ஈடுபட்டார்கள்; ஆறுகள், குளம், குட்டைகளில் மீன்களைப் பிடித்து உணவாகப் புசித்தார்கள்; ஆடு மாடுகளை மேய்த்தார்கள்; பயிரிட்டார்கள். அவர்கள் சணற்சீலை அணிவார்கள்; உணவைச் சமைத்து உண்பார்கள். அவர்களின் வாழ்க்கை அபாயங்கள் குறைந்ததாய் இருந்ததால், அவர்கள்

முன்னேற்றம் அடைந்தார்கள். இத்தகையவர்கள் மற்றையோரைவிட நாகரிகமானவர்கள்.

மாந்தர் கமத் தொழிலில் ஈடுபட்ட பின்னர்த்தான் நாகரிகச் சிறப்பைப் பெற்றூர்கள் எனலாம். நாகரிகம் வளர்வதற்கு மனிதருக்கு அமைதியும் அவகாசமுமீ ஓரளவு தேவை. எந்நேரமும் அவர்கள் ஏதாவது முயற்சிகளில் ஈடுபட்டிருந்தால், தங்கள் வாழ்க்கை முறையைத் திருத்தவோ, மேலான விஷயங்களேச் சிந்திக்கவோ அவர்களுக்குத் தருணம் இருந்திருக்காது. இன்னும் ஜீவியத்தின்பொருட்டு வேட்டையாடுவோரும் மந்தை மேய்ப்போரும் கூட்டமாகக் கூடி ஓர் இடத்தில் வசிக்கவில்லே. ஏனென்றல், வேட்டையாடுவோர் வேட்டைக்குரிய மிருகங்களேயும் பிராணிகளேயும் நோக்கிச் சஞ்சரிக்க நேரிட்டது. மந்தை மேய்ப்போரும் மந்தைக்குரிய தீனியின் பொருட்டு அடிக்கடி இடம்விட்டு இடம் பெயர்ந்தார்கள்.

மனிதர் ஒருங்கு கூடி வாழ்ந்தால்தான் ஒருவரைப் பார்த்து ஒருவர் உதவி புரியவும் முடியும். சேர்ந்து வாழ்தலினலே பொது நன்மைக்கான வீதிகள் அமைத்தல், கிணறு குளங்கள் வெட்டுதல், பொது மண்டபங்கள் கட்டுதல் முதலியன செய்யலாம். இவைகளேச் செய்வதே நாகரிகத்தின் அறிகுறியாம்.

பயிர்த்தொழில் செய்வோருக்கு ஒரு வருஷத்தில் எத்தனேயோ ஓய்வு நாட்கள் உண்டு. அந்நாட்களில் அவர்கள் சீர்திருத்த முறைகளேக் கண்டறிந்தார்கள். இன்னும் கூட்டமாகச் சிறு கிராமங்களில் வசித்தார்கள். அவர்கள் நாகரிகத்தில் முன்னேறினூர்கள்.

ஆதிகாலத்தில் நதிகளின் பள்ளத்தாக்குகளில் தான் நாகரிக முன்னேற்றம் படைத்த மனிதர் அதிக

மாக வாழ்ந்தனர். உலகத்திலேயே மிகவும் புராதனமான இந்திய, சீன, பாபிலோனிய எகிப்திய நாகரிகங்கள் நதிக் கரைப் பிரதேசங்களில்தான் முதலில் உற்பத்தியாயின. இன்றைக்கும் அப்பிரதேசங்களில் ஜன நெருக்கம் அதிகம். இதற்கு மூன்று ஏதுக்கள் உள்ளன. முதலாவதாக, நதிக்கரைகள் வளமுள்ள நிலங்களாயும் நீர்பாய்ச்சக் கூடியவையாயும் உள்ளன. இவ்விடங்களில் தானியங்கள் நன்கு வளரும். இரண்டாவதாக, நதிக்கரை ஓரங்களில் ஜனங்கள் வசித்தால், அந்நதியே போக்குவரத்துக்குப் பிரயோசனப்படுகிறது. மூன்றாவதாக, நதிக்கரைகளிலுள்ள களிமண்ணால் செங்கல் செய்து மண் வீடுகள் இலகுவில் கட்டக்கூடும்.

மலாயா அல்லது மலேஷிய நாடுகளின் நாகரிகமும் நதிகளைச் சேர்ந்த பிரதேசங்களில்தான் ஆரம்பத்தில் உண்டாயிற்று. பேரா, சிலாங்கூர், பஹாங், ஜொகூர், கெடா, கிளாந்தன், திரங்கானு எல்லாம் நதிகளின் பெயர்களே. இப்பெயர்களைக்கொண்டே மலாயா தேசத்து சமஸ்தானங்களும் விளங்குகின்றன.

கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக மனிதரின் பிரயாசையை எல்லாத் துறைகளிலும் குறைப்பதற்காகப்பல வித இயந்திரங்களை மாந்தர் நிர்மாணித்திருக்கின்றனர். விஞ்ஞான சாஸ்திர அறிவும் கூடி வருகிறபடியால், நாகரிகம் வளர்ந்து வருகிறது. மனிதர்கள் செய்யும் வேலைகளில் பலவற்றை இயந்திரங்களே செய்வதால், மனிதரில் பெரும்பாலோருக்கு அதிக ஓய்வு நேரம் கிடைத்திருக்கின்றது. இஃது அவர்கள் முன்னேற்றம் அடைவதற்கு வேண்டிய விஷயங்களைச் சிந்தித்துக் கண்டறிய வசதி அளித்திருக்கின்றது. நல்ல துறையில் இன்றைய மனித சமுதாயம் இவ்வசதியை உபயோகித்தல் வேண்டும்.

# உ. மலாயா

## 1. மலாயாவின் இயற்கையமைப்பு

மலாயா ஆசியாக் கண்டத்தின் தென்கிழக்கில் உத்த ராக்ஷ பாகை (Latitude) 1 முதல் 7க்குள்ளும், குண ரேகாந்தர பாகை (Longitude) 100முதல் 105க்குள்ளும் இருக்கிறது. அதன் உருவத்தைப் படத்தில் கவனித்துப் பார்ப்போமானால், அஃது ஒரு முதலையின் வடிவத்தைக் கிட்டத்தட்ட ஒத்திருப்பதைக் காண்போம். மலாயா வின் நான்கு பாகங்களிலும் என்னென்ன இருக்கின்றன? படத்தைப் பாருங்கள். வடக்கே தைலாந்து (சீயம்), கிழக்கே தென் சீனக்கடல், தெற்கே சிங்கப்பூர் ஜலசந்தி, மேற்கே மலாக்கா ஜலசந்தி—மூன்று பக்கங்களில் நீரும், ஒரு பக்கத்தில் நிலமுமிருக்கின்றன. அப்படி இருப்பதால் தான் மலாய் நாடு ஒரு **தீபகற்பம்** என்று சொல்லப்படு கிறது. இன்னும், படத்தைப் பார்த்தால், இத்தீபகற்ப மானது கிரா **பூசந்தி** என்னும் ஓர் ஒடுங்கிய நிலபாகத்தி னால் ஆசியாக்கண்டத்துடன் இணைக்கப்பெற்றிருப்பதைக் காணலாம். மலாயா மூன்று பக்கங்களிலும் கடலால் சூழப்பட்டிருக்கிறபடியால்தான் இங்கு வந்த அன்னியர் களெல்லோரும் கடல் மார்க்கமாக வரும்படி நேர்ந்தது.

மலாயா இயற்கை வளம் நிரம்பிய நாடு. இந்நாட்டை மூன்று இயற்கைப் பிரிவுகளாகப் பிரிக்கலாம். முதற்பிரிவு, **மேற்குக்கரைச் சமவெளி**; இரண்டாவது **கிழக்குக்கரைச் சமவெளி**; மூன்றாவது **மத்திய மலைப்பிரதேசம்**.

மேற்குக்கரைச் சமவெளி சற்று அகலமானது. இங்கு அனேக நதிகள் பாய்கின்றபடியால், இது நீர்வளம் நிலவளம் பொருந்திய பிரதேசமாயிருக்கிறது. மலாயாவில்,

மலாயா - இயற்கை அமைப்பு



இதுதான் மிகப் பிரயோஜனமுள்ள் பாகமாகும். ஜன நெருக்கமும் இங்கு அதிகம். அனேக பெரிய ரப்பர்த் தோட்டங்களும், தென்னந்தோப்புகளும், நெல் வயல் களும், அன்னுசித் தோட்டங்களும், எண்ணெய்ப் பனே மரத் தோப்புகளும் (Palm-oil), ஈயச் சுரங்கங்களும், நிலக்கரிச் சுரங்கங்களும், சில பொன் சுரங்கங்களும், இரும்புச் சுரங்கங்களும் இங்குள்ளன. அலோர்ஸ்டார், பினுங்கு, பிறை, தைப்பிங், ஈப்போ, குவாலாலம்பூர், கிள்ளான், சிரம்பான், மலாக்கா, கிமாஸ், ஜொகூர் பாரு, சிங்கப்பூர் இவை இப்பகுதியிலுள்ள முக்கிய பெரும்பட் டணங்களாம். மேலும், மலாயாவின் பிரதம இருப்புப் பாதை மேற்குக் கரைச் சமவெளிக்கு ஊடே செல்லு கின்றது. சிறந்த ரஸ்தாக்களும் இங்கு உண்டு.

கிழக்குக்கரைச் சமவெளி மிக ஒடுக்கமானது. ஆனு லும், நதி முகக்துவாரங்களுக்கு அண்மையிலிருக்கும்பாகங் கள் செழிப்பானவை. இங்கு இரண்டு பெரிய நதிகளைத் தவிர மற்ற நதிகள் யாவும் மிகச் சிறியவை என்பதைப் படத்தைப் பார்த்து அறிந்துகொள்ளலாம். இது பெரும் பாலும் கரடுமுரடான காட்டுப்பிரதேசமாகையால், இங்கு ஜனத்தொகை மிகக்குறைவு. நதிப் பிரதேசங்களில் மாத்தி ரம் சில நெல்வயல்களும் ரப்பர்த் தோட்டங்களும் உண்டு. இங்குமங்கும் சில சிறிய ஈயச் சுரங்கங்களும் இரும்புச் சுரங்கங்களும் உள்ளன. பட்டணங்களும் குறைவு. நல்ல ரஸ்தாக்களும் இல்லை. படத்தைப் பார்ப்போ மானுல், கிமாஸிலிருந்து கோட்டாபாரு வரைக்கும் மலைப் பிரதேசங்களுக்கு ஊடாக ஓர் இருப்புப்பாதை செல்வ தைக் காணலாம். இவ்விருப்புப் பாதையிலுள்ள முக்கிய நகரம் குவாலலிப்பிஸ் ஒன்றே.

மலாயாவின் மத்திய பாகம் வடக்கிலிருந்து ஏறத் தாழத் தெற்கு வரை மலைத் தொடர்களடர்ந்த காட்டுப் பிரதேசமாய் இருக்கின்றது. இக்காடுகளில் புலி, யானை, காட்டெருமை, தபீர்மான், கல்யானை, மான், மரை, கரடி, குரங்கு, காட்டுப்பன்றி, செந்நாய் முதலிய மிருகங்களும், பல விதப் பறவை இனங்களும், பல விதப் பாம்புகளும், வண்ணத்துப் பூச்சிகளும், ஈக்களும் வசிக்கின்றன. இங்குச் சீமாங்கியர் ஸக்கேயர் என்னும் நாகரிகமற்ற குடிகளும் வசிக்கின்றார்கள். இப்பிரதேசத்தில் வைரமான பல வித மரங்கள் கிடைக்கின்றன. செங்காய் (Chengai), மெர்பாவ் (Merbau) இவை இங்கு அகப்படும் உளுத்தல் அடையாத மரங்கள். இவைகளினால் பாலங்களும் வீட்டுக்குரிய தூண்களும் செய்யப்படுகின்றன. மெராந்தி, ஸெரயா, கப்பூர் முதலிய மரங்களிலிருந்து நல்ல பலகைகள் அறுக்கப்படுகின்றன. கடலிற்செல்லும் தந்திக்கம்பிகளுக்குப் பூச்சுக் கொடுக்க உதவும் சித்தா பெர்ச்சா என்னும் ஒரு விதப் பாலும் சூயிங் கம் செய்யப்படும் பாலும், தாமார் செய்யப்படும் பாலும் காட்டு மரங்களினின்றுதான் எடுக்கப்படுகின்றன. இந்தியா, பர்மா ஆகிய நாடுகளைப் பார்க்கிலும் மலாயாவில் மர இனங்கள் அதிகம் எனத் தாவர சாஸ்திரிகள் சொல்கின்றனர். இன்னும் நல்ல ஜாதிப் பிரம்பு, மூங்கில், சவ்வரிசிப் பனை, மூலிகைகள் முதலியனவும் கிடைக்கின்றன. மலாயாவின் மலைத்தொடர்கள் சிலவற்றில் கருங்கல், சலவைக் கல் முதலியனவும் வெட்டி எடுக்கப்படுகின்றன. இம்மலைத் தொடர்களிலுள்ள முக்கிய சிகரங்களாவன; குனோங் தஹான், குனோங் கொர்பு, குனோங் பிந்தாங், குனோங் பினோம் என்பனவாம்.

மலாயாவின் மலைத் தொடர்களிலிருந்து அனேக நதிகள் உற்பத்தியாகின்றன. அவற்றுள் மலாக்கா ஜல சந்தியில் சங்கமமாகும் நதிகளின் முகத்துவாரங்களில் தெலுக்கான்சன், ஸ்வெட்டன்ஹாம் துறைமுகம் முதலிய சிறந்த துறைமுகங்களுண்டு. ஆயினும், நதிகள் யாவும் அதிக ஆழமில்லாதவையாகையால், கப்பல்கள் அவற்றின் உள்ளே செல்ல இயலாது. சீனக்கடலில் சங்கமமாகும் நதிகளின் முகத்துவாரங்களிலே மணல் தடைகள் உளவாகையால், பெரிய கப்பல்கள் அங்குச் செல்ல முடியாது. மலாயாவின் நதிகள் எல்லாவற்றிலும் சிறு ஓடங்களும் மோட்டார் லாஞ்சுகளும் போக்கு வரத்துச் செய்கின்றன. இவை சிறந்த பிரயாணச் சாதனங்களாகின்றன. மலாயாவின் ஆறுகளிலெல்லாம் முதலைகள் உண்டு. சிங்கப்பூர், பினங்கு இவை இரண்டுமே மலாயாவின் பிரதமத் துறைமுகங்களெனலாம். பேரா சமஸ்தானத்திலுள்ள லுமுட் துறைமுகம் இயற்கையானது; ஆனால், இது பாவிப்பிலில்லை. இதைப் பற்றிப் பின்னால் கவனிப்போம்.

மலாயாவைச் சூழ்ந்து சுமத்திரா, ஜாவா, போர்னியோ, ஸெலிபிஸ், பிலிப்பைன் முதலிய தீவுகளும், இந்து—சீன, தைலாந்து முதலிய நாடுகளுமுள்ளன. இவை யாவும் சேர்ந்து, 'மலேஷியா' என்று சொல்லப்படுகின்றன. ஏனெனில், இந்நாடுகளின் சுதேசிகள் யாவரும் மலாயர் இனத்தைச் சேர்ந்தவர்களாவர்.

# 2. குடிகள், மதங்கள், பாஷைகள் தொழில்கள்

மலாயாத் தீபகற்பம் 50,961 சதுரமைல் விஸ்தீரணங் கொண்டது. இதில் சுமார் 80% காடு, மலை, சகதி நிறைந்தது ; 14% ரப்பர் பயிராகும் நிலம் ; 3% நெல் சாகுபடியாகும் நிலம் ; 3% தென்னை, எண்ணெய்ப் பனை, பழமரம், காய்கறி, அன்னுசி முதலியன பயிராகும் நிலம். இங்கு வசிப்பவர்களின் ஜனத்தொகை, 1957-ஆம் வருட ஜனக் கணக்கெடுப்பின்படி, சுமார் 77,33,315 ஆகும். இதில் மலாய் சமஷ்டியின் (Federation of Malaya) ஜன சங்கியை 62,76,915. விவரங்கள் வருமாறு—43·7% மலாயர் ; 5·4% மலேஷியர் ; 38·6% சீனர்; 11% இந்தியர்; 0·2% ஐரோப்பியர் ; 0·2% யூரேஷியர் ; 0·9% மற்றவர்கள்.

இனி சிங்கப்பூரின் (Singapore) ஜனசங்கியை 14,56,400. விவரங்கள் வருமாறு :—7·9% மலாயர் ; 4·5 மலேஷியர் ; 77·5% சீனர் ; 7·6% இந்தியர் ; 0·9% ஐரோப்பியர் ; 0·9% யூரேஷியர் ; 0·7% மற்றவர்கள். இந்நாட்டில் வசிக்கும் மக்கள் பல வகைப்பட்டவர்கள். மலாயர், மலேஷியர் முதலியோர் முகம்மதிய மதத்தைத் தழுவியிருக்கிறார்கள். சீனரில் அநேகர் பௌத்த சமயத்தையும், கோங்-ஃபூஷியஸ்* சமயத்தையும் அனுஷ்டிக்கிறார்கள். இந்தியரில் பெரும்பாலோர் இந்து மதத்தினராவர். சிலர் சீக்கிய முகம்மதிய கிறிஸ்துவ மதங்களை அனுஷ்டித்து வருகிறார்கள். சீனரில் சிலரும், ஐரோப்பியரும், யூரேஷியரும் கிறிஸ்துவ சமயத்தைக் கைக்கொண்டிருக்கிறார்கள். சக்கேயர், சீமாங்கியர் என்னும் மலாய்

*இவர் கி. மு. 500 அளவில் சீனாவிலே பிறந்த பெரியார்; அறவாழ்க்கையை வற்புறுத்தியவர்.

நாட்டு வனவேடர்களுக்கு மத நம்பிக்கையில்லை. இன்னும் அராபியர், யூதர் முதலியோரும் சிறு தொகையாக மலாயாவில் வசிக்கிறார்கள்.

மலாயாப்பாஷை தேச பாஷையாகக் கொண்டாடப்படுகிறது. ஆங்கிலம் அரசாங்க பாஷையாகக் கருதப்படுகிறது. இன்னும், சீனம் (இதில் பல உட்பிரிவுகள் உண்டு), தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி, குஜராத்தி, பஞ்சாபி முதலிய பாஷைகளும் பேசப்படுகின்றன.

மலாயர்கள் பெரும்பாலும் விவசாயிகளாகவும், மீன் பிடிப்பவர்களாகவும், நெசவுத் தொழில் செய்பவர்களாகவும், சிலர் மோட்டார்கார் சாரதிகளாகவும், உத்தியோகஸ்தர்களாகவும், போலீஸ்காரராகவும் இருக்கிறார்கள். சீனர் வர்த்தகர்களாகவும், சுரங்கங்கள் ரப்பர்த் தோட்டங்கள் தொழிற்சாலைகள் ஆகியன நடத்துகிறவர்களாகவும், உத்தியோகஸ்தர்களாகவும், பலர் தொழிலாளர்களாகவும் இருக்கிறார்கள். இந்தியர் பலர் தொழிலாளர்களாகவும், கொடுக்கல் வாங்கல் செய்கிறவர்களாகவும் இருக்கிறார்கள். ஐரோப்பியர் அரசாங்கத்தைக் கொண்டு நடத்துகிறவர்களாகவும், பலர் ஆபீசுகளின் தலைவர்களாகவும், தலைமை உத்தியோகஸ்தர்களாகவும், வைத்தியர்களாகவும், வழக்கறிஞர்களாகவும், பத்திரிகாசிரியர்களாகவும் இருக்கிறார்கள். சீமாங்சியர், சக்கேயர் இவர்கள் நாகரிகமற்ற குடிகளாகையால், காடு மலைகளிலுள்ள வேர், கிழங்கு, பழம், பறவைகள், காட்டு மிருகங்கள் முதலியவற்றை உணவாகக்கொண்டு ஜீவிக்கிறார்கள்.

# ௩. புராதன காலம்

## 1. மலாயாவில் பூர்வ குடிகள்

முதலில் தென்கிழக்கு ஆசியாவிலும் மலாயாவிலும் வசித்தவர்கள் நீகிரோவர்களாவர். இவர்களுக்குச் சீமாங்கியர் அல்லது பங்கனியர் என்னும் பெயர்களும் வழங்கி வருகின்றன. இவர்கள் இந்தியாவிலுள்ள ஆதிக்குடிகளின் வமிசத்தைச் சேர்ந்தவர்கள். மானிட வர்க்க ஆராய்ச்சிக்காரர் (Ethnologists) இவர்களைப் 'பொலிநீஷியர்' என்றும் கூறுவர். இவர்களுடைய வமிசத்தார் இப்போது பேரா, பஹாங், கிளந்தான், மடகாஸ்கர், பிலிப்பைன், வட ஆஸ்திரேலியா, அந்தமான் தீவுகள் முதலியவிடங்களில் காணப்படுகிறார்கள். மலாயாவில் இவர்களுடைய ஜனசங்கியை சுமார் 2,000. இவர்கள் மலைகளிலும் காடுகளிலும் வசிக்கிறார்கள். இவர்களுடைய உறைவிடங்கள் இலைகளினால் மூடப்பட்ட சிறு பரண்கள். இவ்விதப் பரணின் தரையில் கம்புகள் அடுக்கி அவற்றின் மேல் உறங்குவார்கள். அவ்வேளையில் காட்டுத்தீ மூட்டி வைத்திருப்பார்கள். போக்கு வரவு செய்வதற்குப் படகுகளையோ மற்ற விதமான வாகனங்களையோ உபயோகிப்பதில்லை. வீடு வாசல்கள் இல்லை. காடுகளில் கிடைக்கும், காய், கனி, கிழங்கு, பட்சி, மிருகம் இவைகளே இவர்களது உணவாகும். சிக்கிமுக்கிக் கற்களால் செய்யப்பட்ட கூர்மையான ஆயுதங்களை உபயோகிக்கிறார்கள். அம்பும் வில்லுமே இவர்களது முக்கியமான ஆயுதங்கள். இவர்கள் உணவுகளைச் சேமித்து வைப்பதில்லை. குடும்பக் கூட்டமாக வசிப்பார்கள். இவர்களுக்குத் தலைவன் இல்லை. இவர்கள் கள்ளங் கபடமற்றவர்கள்; இவர்களுடைய பெண்கள் கற்பில்

சிறந்தவர்கள். இடியையும் மின்னலையும் சீமாங்கியர் வணங்கி வருகிறார்கள் ; இவற்றிற்குப் பயப்படுகிறார்கள் ; இவற்றைச் சமாதானப்படுத்தத் தங்கள் கெண்டைக் காலின் முன்புறத்திலிருந்து இரத்தம் எடுக்கிறார்கள். இவர்களுள் வட்டத் தலையும் நீண்ட தலையும் உடைய இரண்டு பிரிவினர் உண்டு. கறுப்பு நிறமாகவும், சுருட்டை மயிர் உள்ளவர்களாகவும், பார்ப்பதற்கு விகாரமாயுமிருப்பார்கள். சீமாங்கியர் சக்கேயருடன் கலப்பு மணம் செய்திருக்கிறார்கள் ; சக்கேயர்களிடமிருந்தே ஊது குழலின் உபயோகத்தைக் கற்றறிந்துகொண்டார்கள்.

அடுத்தபடியாக, **சக்கேயர்** அல்லது **செனோயர்** என்பவர்கள் யூனானிலிருக்கும் (Yunan) மலைப் பிரதேசங்களிலிருந்து வந்து மலாயாவில் குடியேறியவர்கள் ; மங்கோலிய-இந்தோனேஷிய வமிசத்தவர்கள் ; மங்கலான மஞ்சள் நிறமுடையவர்கள். இவர்கள் பேசும் மொழி இந்து-சீனாவைச் சேர்ந்த 'மொன் அன்னம்' மொழியாகும். சீமாங்கியரைவிட அழகிலும் உயரத்திலும் நிறத்திலும் சிறந்தவர்கள். இவர்களுடைய தலை நீண்டும் மயிர் சுருண்டுமிருக்கும். இவர்கள் தங்கள் தேகத்தில் பச்சை குத்திக்கொள்வார்கள். நீண்ட ஒரு மூங்கில் ஊதுகுழலே இவர்களுடைய ஆயுதமாகும். இவர்களுடைய இருப்பிடம் மரங்களின் மேலும் மரத்தூண்கள் மேலும் ஓலைகளால் வேயப்பட்ட குடிசைகளாகும். இவர்களுடைய ஜனத்தொகை 20,000. பேரா, பஹாங், சிலாங்கூர் இப்பிரதேசங்களிலுள்ள காடுகளிலே நதிக்கரையோரமாக இவர்கள் வசிக்கிறார்கள். மலைப்பிரதேசங்களில் நெற்பயிரும், சம வெளிகளில் கரும்பு, வாழை, சோளம், புகையிலை இவற்றையும் பயிரிடுகிறார்கள். இவர்களுள் ஒவ்வொரு கூட்டத்திற்கும் ஒவ்வொரு தலைவனுண்டு. இக்

கூட்டங்கள் ஓரிடத்தில் அகப்படும் உணவுகள் முடிந்த வுடன் வேறிடத்திற்குப் பெயர்ந்து செல்லும். சக்கேயர் பேய் பிசாசுகளுக்கும் பலவித நோய்த் தேவதைகளுக்கும் பயந்தவர்கள். அவற்றை அணுகவொட்டாமல் தடுப்பதற் காகத் தம் வீடுகளின் வெளிப்புறத்தில் காய்ந்த தேன் கூட் டையும், துவாரங்கள் இட்ட தேங்காய் ஓட்டையும் கட்டித் தொங்கவிடுவார்கள்; இறந்தவர்களது பிரேதக் குழிகளின்மேல் உணவும் ஆயுதங்களும் வைப்பார்கள். இங்ஙனம் செய்வதால் செத்தவர்களின் ஆவி இறந்தவர் களது உலகத்தைச் சீக்கிரமாக அடையுமென்பது சக்கே யரது நம்பிக்கை. மந்திரத்தில் நம்பிக்கையுடையவர்கள்; மாந்திரிகன் இறக்குந் தறுவாயில் பழகிய புலி ஒன்று வந்து அவன் உடலைக் கிழித்து அவனது உரிரை விடுவிக்கும் என்ற நம்பிக்கை சக்கேயருக்கு உண்டு.

கிராமங்களின் அண்மையிலிருக்கும் சக்கேயர்கள் மெல்ல மெல்ல நாகரிகம் பெற்று வருகிறார்கள்.

மூன்றாவதாக **ஜக்கூனியர்** அல்லது **ஆதிமலாயர்.** இவர்கள் யூனானின் வடமேற்கு மலைப் பிரதேசத்திலிருந்து வந்தவர்கள்; 'மங்கோலிய—இந்தோனேஷியா' வமி சத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களது வகுப்பார் நகரிசெம் பிலான், தென்பஹாங், ஜொகூர், சுமத்திரா முதலிய இடங் களில் காணப்படுகிறார்கள். கல், கட்டை போன்ற ஜடப் பொருள்களிலும் தேவதைகள் இருப்பதாக நம்புவார்கள். இந்து தெய்வங்களையும் ஆவாகனம் செய்யக் கற்றுக் கொண்டார்கள். ஜக்கூனியரது உடம்பில் இந்தியர்களு டைய தேகக் கூறுகளின் அமைப்பும் பொலினிஷியரது தேகக்கூறுகளின் அமைப்பும் காணப்படுகின்றமையால், அவர்களுக்கும் பின் கூறிய இரு வகுப்பார்களுக்குமிடை யே பண்டைக் காலத்திலே கலப்பு ஏற்பட்டிருக்க வேண்

டுமென ஆராய்ச்சிக்காரர் கூறுகின்றனர். ஜக்கூனியர்களில் அநேகருக்கு உருண்டைத் தலையும், மிருதுவான மயிரும் உண்டு. இவர்கள் ஒரு விதமான கொச்சை மலாய்ப் பாஷை பேசுகிறார்கள். அதில் அந்நிய சொற்கள் கலந்தொலிக்கும். இவர்கள் பெரும்பாலும், தனிமையான ஆற்றங்கரையோரங்களிலும், மறைவான கடற்கரையோரங்களிலும் வசித்து வருகிறார்கள். மீன் பிடித்தல், வேட்டையாடல், சொற்பமாக விவசாயஞ் செய்தல் ஆகியவை இவர்களது தொழில்களாம். இவர்களுக்குத் தலைவர்கள் உண்டு. ஜக்கூனியரின் வீடுகள் குத்துக் கட்டைகளின்மேல் கட்டப்பட்டு அத்தாப்பாலும் புல்லாலும் மூடப்பட்டிருக்கும். முற்காலத்திலே இவர்களில் அநேகர் கடற்கொள்ளைக்காரர்களாய் இருந்தனர். இப்பொழுதும் அவர்களுக்கு 'ஓராங் லாவுட்'* என்னும் பெயர் வழங்கப்படுகிறது. ஏனென்றால், இவர்களில் அநேகர் ஓடங்களிலேயே தங்களது வாழ்நாட்களைக் கழிக்கின்றனர். முந்நாட்களில் இந்திய சீன வர்த்தகர்கள் ஜக்கூனியர்களின் துணையைக் கொண்டே காடுகளிலுள்ள கற்பூரம், சாம்பிராணி, பிசின்கள் முதலிய பொருள்களை எடுத்தார்கள்.

கடைசியாக **மலாயர்கள்.** இவர்களும் ஜக்கூனியரும் ஒரே பாரம்பரியத்தவர்கள். இவர்கள் யூனானிலிருந்து கி. மு. 2000 ஆண்டளவில் வந்து முதலிலே மீக்கொங், மீனம் என்ற நதிகளின் பள்ளத்தாக்குகளிலும், இந்து – சீனாவிலும் குடியேறினார்கள். பின்னர்த் தரை மார்க்கமாகவும் கடல் மார்க்கமாகவும் சுமத்திரா, ஜாவா முதலிய இடங்களை அடைந்தார்கள். அவ்விடங்களிலிருந்து ஒரு பகுதியார் இறுதியாக மலாய் நாட்டில்

* ஓராங் = ஆள் ; லாவுட் = கடல் ; கடல் மனிதன்.

வந்து குடியேறினார்கள். மலாயர்கள் பாவித்து வந்த நாற்கோணமான வாய்ச்சிகளும் கயிற்றுக்கோடுகளினால் சித்திரிக்கப்பட்ட பானைகளும் தென்சீனா, இந்து-சீனா, சுமத்திரா, ஜாவா ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவைதான் அவர்களது சஞ்சாரத்தை அனுமானித்து அறிய ஏதுவாயுள்ளன. மலாயர் நெல், வாழை, தென்னை, சோளம், கரும்பு, புகையிலை, வெற்றிலை இவற்றைப் பயிரிடக் கற்றிருந்தார்கள்; நெல், சோளம் இவற்றிலிருந்து சாராயம் காய்ச்சினார்கள்; படகு ஓட்டவும், மீன் பிடிக்கவும், வேட்டையாடவும் இவர்களுக்குத் தெரிந்திருந்தது. மலாயர்களின் மூதாதைகள் நாம் முன்னர்ப் படித்த புதிய கற்கால நாகரிகத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் மனித மூளையையும் புசித்ததுண்டு. மூங்கில் கம்புகளாலான பொறிகளைக் கொண்டே மீன் பிடித்தார்கள். ஐக்கூனியரைப்போலவே குத்துக் கட்டைகளின் மேல் வீடுகள் கட்டுவார்கள். தளத்துக்கும் பக்க அடைப்புகளுக்கும் மூங்கிலை உபயோகித்தார்கள்; கட்டும் வேலைக்குப் பிரம்பு நார் உபயோகிக்கப்பட்டது. பன்றி, எருமை, ஆடு, மாடு இவைகளை வளர்த்தார்கள். மரவுரிகளாலான உடை தரித்தார்கள். ஆயிரம் வரை எண்மானம் அவர்களுக்குத் தெரிந்திருந்தது. நக்ஷத்திரங்களைப்பற்றிய அறிவும் அவர்களுக்கு ஓரளவு இருந்தது. ஆராய்ச்சிக்காரர் மலாயர்களதுமண்டையோடானது நாம் முன்னர்ப்படித்த ஏனைய ஜாதியாரது மண்டையோட்டைக்காட்டிலும் உருவத்தில் பெரியது என்று கூறுகிறார்கள். இதனால், இவர்களுக்கு அறிவும் அதிகமாக இருக்க வேண்டுமென்பது தெளிவு. தற்போதைய மலாயரது உடலில் தனி மலாய இரத்தம் ஓடவில்லை. ஏனென்றால், அவர்களது சஞ்சாரத்திலே அவர்களுக்கு முன்னிருந்த சீமாங்கியர், சக்கே

யருடனும், பின் வந்த இந்தியர், சீனர், சீயங்காரர், பூகிஸ் காரர், அராபியர், ஐரோப்பியர் முதலியோருடனும் இரத்தக் கலப்பு ஏற்படுத்திக்கொண்டார்கள். இதனால், மலாயர்களில் பலருக்குத் தேக உறுப்புத் தோற்றங்கள், பலவிதமாக வாய்ந்திருக்கின்றன. இந்தியர், சீனர், ஜாவானியர், பூகிஸ்காரர், அராபியர், ஐரோப்பியர் முதலியோர்களிடமிருந்தே பல நாகரிக முறைகளை மலாயர்கள் கற்றுக் கொண்டார்கள். இச்சாதியார்களிடமிருந்தே மலாயர் விவசாயம், வியாபாரம், நாணயப் புழக்கம், இரும்பு, வெள்ளி தங்கம் இவற்றின் உபயோகம், ஆடை நெய்தல், வீடுகள் அமைத்தல், படகுகள் கட்டுதல், அரசியல் முறைகள் முதலியவற்றைத் தெரிந்துகொண்டார்கள். இவர்கள் பேசும் வார்த்தைகளிற்பல அந்நிய பாஷைகளிலிருந்து கடன் வாங்கப்பட்டவையே. கடந்த சுமார் 600 ஆண்டுகளாக அராபியரிடமிருந்து இஸ்லாமிய சமயத்தையும் தற்போது எழுதும் எழுத்துக்களையும் பெற்றார்கள். மலாய் ஆடவரும் பெண்டிரும் நல்ல சம்பிரதாயம் உடையவர்கள். மேலே நாம் கண்ட ஏதுக்கள் எல்லாம் அவர்களுக்கு இத்தன்மையை அளித்திருக்கின்றன. மலாயர் விவசாயம் அல்லது கிராம வாழ்க்கையையே இயல்பாக விரும்புகிறார்கள். அவர்களது அகவாழ்வு சுமுகமானது.

இது வரையிலும் நாம் படித்ததிலிருந்து மலாயர் மலாய் நாட்டுச் சுயகுடிகள் அல்லர் என்பது நன்றாகத் தெரிய வருகிறது. 'மலாயா' என்னும் சொல் ஒரு தமிழ்ப் பதமாகும். இந்தப் பெயர் எப்படி உண்டாயிற்று? பழைய காலத்திலே முதன்முதலாகக் கிழக்கிந்திய நாடுகளுக்கு வந்து ஆங்காங்கே இராச்சியங்களை நிறுவினவர்கள் தென்னிந்தியாவிலுள்ள கிழக்கு மலைத்தொடரைச் சார்ந்த பிரதேசங்களிலிருந்த தமிழர்களே. இவர்கள் மலைப்

பிரதேசங்களிலிருந்து வந்தபடியாலும் மலேஷியா நாடுகளில் மலைகள் நிறைந்திருந்தமையாலும் தாங்கள் ஸ்தாபித்த இராச்சியங்களுக்கு 'மலாயா' (மலை) என்னும் பெயரைச் சூட்டினார்கள். இதினின்றே மலாயர், மலேஷியா என்னும் சொற்கள் பிறந்தன. முதன்முதல் மலாய ஜாதியாருக்கு நாகரிகம் அளித்தவர்கள் தமிழர்களே. அவர்களைப் பற்றித்தான் அடுத்த சில பாடங்களில் படிக்கப் போகிறோம். இன்னும், மகதம், வங்காளம், யாதவம் முதலிய வட இந்திய நாட்டவரும் மலாயருக்கு நாகரிகமளிப்பதில் தமிழரோடு ஓரளவுக்குப் பங்கெடுத்திருக்கிறார்கள்.

---

## 2. சீனர்

மிகவும் புராதன காலத்திலேயே சீனர்மலாயாவுக்கும் மலேஷியாவுக்கும் விஜயம் செய்திருத்தல் கூடும். சீனர் இந்நாடுகளுக்கு வர்த்தகத்தின்பொருட்டே வந்தார்கள். நீங்கள் அடுத்த பாடங்களில் படிக்கப்போகும் இந்தியர்களைப் போன்று தம் கலாசாரத்தை இந்நாடுகளில் பரப்புவதற்கு அவர்கள் எண்ணங்கொண்டார்கள் இல்லை. என்றாலும், பழஞ்சீன சாசனங்களினின்றும் புராதன மலாயாவின் வரலாற்றை நாம் ஓரளவிற்கு அறிந்து கொள்ளலாம்.

கி. பி. 502—556 அளவில் எழுதப்பெற்ற லியாங் சரித்திரம் (History of the Leang) என்ற சீன சாசனம்

அக்காலத்தே மலாயாவின் வடக்கிலிருந்த **லம்-யா-சி** அல்லது **லங்கா-சுகம்** என்ற இராச்சியத்தைப்பற்றிக் குறிப்பிடுகின்றது. லங்கா—சுகத்தின் மன்னர்கள் அக்காலத்திலே நாலு தடவை தம் பிரதிநிதிகளைச் சீனுவுக்கு அனுப்பியதாக மேலே சொல்லப்பட்ட சாசனம் கூறுகிறது. லங்காசுகத்தைப்பற்றிய விவரங்களைப் பிறகு வரும்பாடங்களில் படிப்பீர்கள். இன்னும் ஸ்ரீ விஜயா என்ற இராச்சியத்தைப் பற்றியும் படிப்பீர்கள். கி. பி. 14—ஆம் நூற்றுண்டில் ஸ்ரீ விஜயா சாம்ராச்சியம் வீழ்ச்சியடைந்தவுடன் அதன் தலை நகரமாகிய பலம்பாங்கில் வசித்து வந்த சீனர்கள் தங்களை வலிமைபொருந்திய ஒரு கூட்டமாக அமைத்துக் கொண்டனர். பலம்பாங்கில் நீண்ட காலம் வசித்து வந்த **லியாங் தான் மிங்** என்ற சீனனொருவன் அவர்களுக்குத் தலைவனுய் இருந்தான். இவன் சீனுவிலுள்ள கன்டோன் (Canton) பிரதேசத்திலிருந்து வந்தவன். இவன் ஒரு கடல் கொள்ளைக்காரன். ஸ்ரீ விஜயாவின் வீழ்ச்சியைத் தொடர்ந்து சுமார் 200 ஆண்டுகளாக, பலம்பாங் சீனரது ஆக்கிரமிப்பிலேயே இருந்தது.

இன்னும், கி. பி. 1405 தொடக்கம் இருபத்தைந்து ஆண்டுகளாகச்சீனக்கடற்படைத் தளகர்த்தன் **செங்ஹோ** என்பவன் பத்தாயிரம் படைவீரர்கள் கொண்ட கப்பல்களுடனே ஏழு தடவை தென்சீனக் கடலிலும் இந்துமகா சமுத்திரத்திலும் ஆப்பிரிக்காக் கிழக்குக் கரையிலும் பிரயாணம் செய்திருக்கிருன்.

கி. பி. 15—ஆம் நூற்றுண்டில் மலாக்கா சுல்தான் மன்சூர் ஷா என்பவனுக்குச் சீனச் சக்கரவர்த்தி ஒரு தோணி நிறைய ஊசிகள் அனுப்பியதாகவும், அதற்குப் பிரதியுபகாரமாக மன்சூர் ஷா ஒரு தோணிச் சவ்வரிசி சீனசக்கரவர்த்திக்கு அனுப்பியதாகவும் அக்காலத்து

மலாய் வரலாறுகள் கூறுகின்றன. சவ்வரிசியோடு தன் பிரதிநிதிகள் சிலரையும் மன்சூர் ஷா சீனுவுக்கு அனுப்பினன். இப்பிரதிநிதிகள் சீனச் சக்கரவர்த்தியின் அரண்மனையிலுள்ள ஏழுவாயில்களையும் கடந்து கொலுமண்டபத்துள் பிரவேசித்தார்கள். அவர்களுக்கு மரியாதையாக ஜெயகண்டிகள் ஒலித்தன. சீன சக்கரவர்த்தி கொலு மண்டபத்தில் கண்ணுடிச் சிவிகையுள்ளே அமர்ந்திருந்தார். மலாய்ப் பிரதிநிதிகள் அவருக்கு மரியாதை செலுத்திவிட்டுத் திரும்பும்பொழுது ஹங்லியூ என்ற சீன இளவரசி ஒருத்தியை மன்சூர் ஷாவுக்கு வெகுமதியாய்ப் பெற்று வந்தார்கள். அவளோடுகூட 500 சீன மேன் மக்களும் மலாக்காவுக்கு வந்து குடியேறினுர்கள். அவர்கள் வசித்துவந்த இடந்தான் இன்னும் புக்கிட் சீனு (சீனு மலை) என்று வழங்கப்படுகிறது.

கி. பி. 1512 முதல் 1515 வரை மலாக்காவில் வசித்துவந்த தோம்பையர்ஸ் என்ற போர்ச்சுகீசிய எழுத்தாளர், "மலாக்காவிலுள்ள சீனர் அவ்வளவு உண்மையானவர்களல்லர்; அவர்கள் திருடுவார்கள்; அவர்கள் பொது ஜனங்களே," என்று எழுதியிருக்கிறுர். அவர் கூறும் வரலாற்றின்படி அந்நாட்களில் சீனர்களுக்கும் மலாயர்களுக்கும் கலப்பு மணம் நடப்பதை இஸ்லாம் மதம் தடை செய்யவில்லை. கலப்பு மணச் சடங்குகள் சீனர் வழமைப்படியே நடந்தன. பிறகு, மலாயர்கள் ஸ்திர முகமதியர்கள் ஆனபின்னரே இவ்விதக்கலப்புமணம் நிறுத்தப்பட்டது. அப்பொழுது சீனக்குடியேற்றக்காரர்கள் பாலித்தீவு, பத்தாக் முதலிய பிரதேசங்களைச் சேர்ந்த அடிமைப் பெண்களைச் சேர்த்துக்கொண்டார்கள்." இவ்விதக் கலப்பினின்றே 'பாபா' (Baba Race) என்ற புது வர்க்கம் உற்பத்தியாயிற்று. இந்த வர்க்கத்தார் சீன நடை

யுடை பாவனைகள், பழக்க வழக்கங்கள் இவற்றைக் கை யாண்டு வருகின்றனர். ஆனால், சீன மொழி பேசுவதில்லை. சீன ஹொக்கியன் பதங்கள் கலந்த சிதைவான மலாய்ப் பாஷையே இவர்கள் பேசுவார்கள். இதிலிருந்து ஹொக் கியன் வகுப்பைச் சேர்ந்த சீனர்தான் முதன்முதல் மலாயாவுக்கு வந்திருக்க வேண்டும் என நம்பலாம். இவர்கள் அமோய் (Amoy) என்ற இடத்திலிருந்து வந்தார்கள்.

மலாயாவுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் வியா பாரத் தொடர்பு ஏற்பட்ட பின்பே கண்டோன் (Canton), புக்கியன் (Fukien), ஹைநான் (Hainan) முதலிய இடங்களிலிருந்து ஏராளமான சீனர் மலாயாவுக்கும் மலேஷியாவுக்கும் வந்து குடியேறினர்கள்.

மலாயாவின் வியாபாரம் பெரும்பான்மையாகச் சீன ரது ஆதிக்கத்திலேயே இருக்கின்றது. இந்நாட்டின் செழிப்பிற்கு ஆதாரமாயுள்ள ரப்பர்த்தோட்டங்கள், ஈயச் சுரங்கங்கள் இவற்றுள் அநேகம் சீனருக்கே உரியவை. இன்னும், அவர்கள் பாங்கி அதிபதிகள், டாக்டர், நியாய துரந்தரர், கணக்குப் பரிசோதகர்கள், அரசாங்கச் சேவகர் கள், உபாத்தியாயர்கள், குத்தகைக்காரர், ரப்பர்ப் பொருள் கள் உற்பத்தியாளர், மர வியாபாரிகள், புத்தகசாலை அதி பதிகள், விடுதிகள் நடத்துவோர், பன்றி வளர்ப்போர், கோழி வாத்துக்கள் வளர்ப்பவர், காய்கறி உற்பத்தி செய் பவர், பயிர்த்தொழில் செய்பவர், தச்சர்கள், கொல்லர்கள், மீன் பிடிப்பவர்கள் ஆகியோராய் இருந்து வருகிறார்கள்.

சீனர் இல்லாமல் மலாயா இன்றைய விருத்தியை அடைந்திருக்க முடியாது என்பது மிகையாகாது. "முயற்சி திருவினையாக்கும்," என்பது சீன சமூகத் துக்கே பொருந்தும். சீன ஆடவரும் பெண்டிரும் மிக

வும் சுறுசுறுப்பும், இடையரு உழைப்பும், மதியூகமும் நிரம்ப உடையவர்கள்.

இதர சமூகத்தாருடன் சீனர் அளவளாவிப் பழகு வார்களென்றாலும், அவர்களுக்குச் சுய அபிமானம் அதி கம். பிற சமூகத்தாரைத் தங்கள் சொந்த முயற்சிகளி லும் விவகாரங்களிலும் தலையிட விட மாட்டார்கள். 1945-ஆம் ஆண்டில் முடிவடைந்த இரண்டாவது உலக மகா யுத்தத்திற்கு முன்னர் அவர்கள் மலாய் நாட்டு அரசியலில் மிகவும் சம்பந்தப்பட்டதில்லை. இப்பொழுது தேசபரிபாலனத்தில் தாங்களும் பங்கு பெற்றுக்கொள்ள முன் வந்திருக்கிறார்கள்.

இன்று மலாயாவிலுள்ள சீனரில் $\frac{2}{3}$ பாகத்தவர்கள் சீன நாட்டிலேயே பிறந்தவர்கள். இவர்கள் தங்கள் உழைப்பின் பெரும்பாகத்தைச் சீனாவுக்கே அனுப்பு வார்கள். சமீப காலத்திலே தாய் நாட்டிலிருந்து சீனப் பெண்களும் அதிகம் வந்துகொண்டிருக்கிறார்கள். இத னால், சீனர்களில் பெரும்பாலோர் மலாயாவிலேயே நிரந் தரமாக வசிக்கப்போகிறார்கள் என்று தோன்றுகிறது.

---

## 3. இதர ஜாதிகள்

சீனர், இந்தியர், ஐரோப்பியர் அல்லாத இதர நாட்ட வர்களும் மலாயாவில் வசிக்கிறார்கள். அவர்களைப்பற்றி யும் நாம் கொஞ்சம் தெரிந்துகொள்ள வேண்டுமல்லவா?

மலாயாவின் வட எல்லையாகத் தைலாந்து அல்லது சீயம் இருக்கிறது. மலாய் நாட்டின் வட சமஸ்தானங் கள் கி. பி. 1909 வரை சீயம் தேசத்தின் ஆக்கிரமிப்பில்

இருந்தவை. இது சம்பந்தமான வரலாற்றைப் பற்றிப் பின்னால் படிப்பீர்கள். ஆகவே, மலாயாவில் வடபாகங்களில் சீயங்காரர் ஆங்காங்கே இன்றும் வசிந்து வருகிறார்கள். இவர்கள் சாதாரணமான தொழில்களே செய்து வருகிறார்கள்.

அராபியா தேசத்துக்கும் மலேஷியாவுக்கும் இடையே நீண்ட கால வியாபாரத் தொடர்புண்டு. இன்றைக்கு மலாயாவில் சில ஆயிரம் அராபியர்கள் இருக்கிறார்கள். என்றாலும், இஸ்லாமிய சமய சம்பந்தமாகவும் நிதி சம்பந்தமாகவும் அவர்களுக்குப் பெருஞ் செல்வாக்குண்டு. கி. பி. 17-ஆம் நூற்றாண்டிலேயே முகமது நபியின் வழியில் வந்த **ஸைதுகள்** (Sayids) பேரா சமஸ்தானத்திலே இராஜாங்கப் பதவிகள் பெற்றிருந்தார்கள். ஸைது சமூகத்தாருக்கும் பேரா சுல்தான்மார், சுமத்திராவிலுள்ள சீயக் சமஸ்தான சுல்தான்மார் இவர்களுக்கும் குடும்பத் தொடர்புகள் இருந்து வந்தன. பழைய அராபியக் குடியேற்றக்காரர்கள் மலாய்ப் பெண்களுடன் கலப்பு மணம் புரிந்திருக்கிறார்கள். என்றாலும், ஷரிபா (Sharifah) எனும் பெண்ணினம் (அதாவது ஸைது எனும் ஆண்பாலுக்கு இது பெண்பால்) ஸைது ஒருவனையோ அல்லது மலாய் ராஜா பதவியைச் சேர்ந்த ஒருவனையோதான் மணக்கலாம்.

மலாயாவிலுள்ள யூரேஷியரில் பழமையானவர்கள் போர்ச்சுகீசிய இரத்தக் கலப்புடையவர்கள். இவர்கள் ஆதியிலே மலாக்காவில் வசித்தார்கள். இன்றும் இவர்களுள் ஏழ்மையானவர்கள் மலாக்காவிலே செம்படவராக இருக்கின்றனர் : இயல்புடையவர்கள் தோட்டங்களுக்கு அதிபதிகளாகவும் குமாஸ்தாக்களாகவும் உபாத்தியாயர்களாகவும் இருக்கிறார்கள். போர்ச்சுகீசிய யூரே

ஷியர்கள் அனைவரும் ரோமன் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவர்கள். இன்னும், டச்சு யூரேஷியர்களும் பலர் மலாயாவில் நல்லியல்போடு வசித்து வருகிறார்கள். பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி காலத்தில் இந்தியாவி லிருந்தும் யூரேஷியர் பலர் வந்து சிங்கப்பூரிலும், பினாங் கிலும் குடியேறினார்கள். மலாயா யூரேஷியர்கள், பொது வாகக் கூறுமிடத்து, மரியாதை உடையோராகவும், அரசாங்கத்தில் கௌரவமான உத்தியோகஸ்தர்களாகவும் இருந்து வருகிறார்கள்.

இன்றைக்கு மலாயாவிலுள்ள ஒவ்வொரு ஜாதியின ரும் தங்கள் சமூக கலாசாரப் பண்பாடுகளுக்கொப்பத் தத்தமக்குரிய பிரத்தியேக ஸ்தாபனங்களை நடத்தி வரு கிறார்கள்.

---

# 4. பழந்தமிழர்கள்

மலாயாவின் (சிங்கப்பூர் உட்பட) இன்றைய ஜனத் தொகையில் 9·3 சதவிகிதம் இந்தியர்களாவர். இவர்களில் 5/6 பாகம் தமிழர்கள். "மலாயாவுலகிற்கு முதன்முத லாக நாகரிகத்தை அளித்தது இந்தியாவே. தென்னாட்டுத் தமிழர்கள் தான் பழைய காலத்திலே இந்தியாவின் தலை சிறந்த மீகாமன்களாய் விளங்கினர்," என அறிஞர் ரோலண்ட் பிராடெல் (Rolland Braddel) கூறுகிறார். அத்தமிழ் மாலுமிகள்தான் நாகரிகத்தை மலாய் நாட்டுக் குக் கொண்டு வந்தார்கள். ஆகையால், அவர்களைப்பற்றி நாம் கொஞ்சம் அறிந்துகொள்ள வேண்டுமல்லவா?

இப்பொழுது அராபிக் கடல், வங்காளக்குடாக் கடல், இந்து மகா சமுத்திரம் இவை இருக்கும்

இடங்களில் மிகப் பழைய காலத்திலே விஸ்தாரமான நிலப்பரப்பு ஒன்று இருந்தது. அதுதான் பண்டைத் தமிழகம். அது சரித்திர காலத்திற்கு முன்னரே கடலால் விழுங்கப்பட்டது. இதனைப் பற்றிய விவரங்கள் பழந் தமிழ் நூல்களில் காணப்படுகின்றன. ஆராய்ச்சியாளர் கடல் கொண்ட இந்நிலப்பரப்பை 'அழிந்துபோன லெமுரியா' எனச் சொல்வர். தமிழ் நூல்கள் இதைக் குமரிக் கண்டம் எனக் குறிப்பிடுகின்றன. இதேதான் மானிட நாகரிகத்திற்கு முதற்பிறப்பிடம் எனவும் பல அறிஞர்கள் கருதுகின்றார்கள். இப்போது இருக்கும் தென்னிந்தியாவும் இலங்கையும், மறைந்த குமரிக் கண்டத்தின் எஞ்சிய ஒரு பாகமாகும்.

சரித்திர காலந்தொட்டு துங்கபத்திரை நதிக்குத் தெற்கேயும், கன்னியாகுமரி முனைக்கு வடக்கேயும் உள்ள நாடுகளுக்குத் தமிழ் நாடுகள் என்னும் பெயர் வழங்கி வருகிறது. வெகு காலத்திற்கு முன் கீழ் நாடுகளுக்கு வந்த கிரேக்க யாத்திரிகரான டோலமி(Ptolemy) என்பவருக்கு இந்த நாடுகளைப் பற்றியும் தெரிந்திருந்தது. அவர் இவைகளுக்குத் 'தமரிக்கா' என்று பெயரிட்டார். (தமரிக்கா-தமிழ் நாடு), தமிழ் மொழி ஒன்றே முன் காலத்தில் இங்குப் பேசப்பட்டு வந்தது. தமிழ் நாட்டில் மூன்று இராச்சியங்கள் இருந்தன. அவை சேர இராச்சியம், சோழ இராச்சியம், பாண்டிய இராச்சியம் என்பனவாம்.

சேர இராச்சியம் மேற்கிலிருந்தது. இப்பொழுது திருவாங்கூர், கொச்சி, மலையாளம் என வழங்கும் பிரதேசங்கள் ஆதிகாலத்திலே சேர இராச்சியத்தில் அடங்கியிருந்தன. அதைச் சேர மன்னர்கள் ஆண்டார்கள். அவர்களுக்குரியது விற்கொடி. அவ்விராச்சியத்தின் முக்கியப் பட்டினம் கரூர் அல்லது வஞ்சி. இது பெரியாற்றினது

கரையிலிருந்தது. சேர இராச்சியத்திற்கு இரண்டு துறை முகப்பட்டினங்களிருந்தன. அவைகளில் முக்கியமானது முசிறி (கரங்கனூர்). இது பெரியாற்றின் முகத்துவாரத்தில் உள்ளது. மற்றொன்று, சற்று வடக்கேயிருந்த தொண்டி. பழைய காலத்தில் கிரேக்கர், ரோமர், எகிப்தியர் முதலியோர் இத்துறை முகங்களுக்கு வந்து வியாபாரஞ் செய்தல் வழக்கம். இத்துறைமுகங்களிலிருந்து வாசனைத் திரவியங்கள், சந்தனம், யானைத் தந்தம், கற்பூரம், தேக்கு, கருங்காலி, மயிலின் தோகை, ஆடைகள் முதலியன மேல் நாடுகளுக்கு ஏற்றுமதியாயின. வஞ்சியில் கிரேக்கக் காவலாளர்கள் சேர மன்னர்களிடம் சேவகம் செய்து வந்தார்கள்.

இப்பொழுது தஞ்சாவூர் ஜில்லா, திருச்சிராப்பள்ளி ஜில்லா, தென்னுற்காடு ஜில்லா, கோயம்புத்தூர் ஜில்லா, நீலகிரி என வழங்கும் இடங்கள் யாவும் முற்காலத்தில் சோழ நாடாய் இருந்தன. சோழ நாடு மிகவும் நீர்வளம் நிலவளம் பொருந்தியது. தக்ஷிண கங்கையான காவிரி இங்குப்பாயும் நதிகளுள் மிக முக்கியமானது. ஏனென்றல், சோழநாட்டின் வளத்திற்கு இது உறுதுணையாய் இருக்கிறது. காவிரிக்குப் 'பொன்னி' என்ற பெயரும் வழங்கலாயிற்று. ஏனென்றல், ஆதிகாலத்திலே காவிரியில் பொன் ஏராளமாக எடுக்கப்பட்டது. சோழ இராச்சியத்துக்கு ஆதித் தலைநகரம் உறையூர். இதற்குத் துறைமுகம் காவிரிப்பூம்பட்டினம் அல்லது புகார் நகரம். புகார் என்றல், 'ஆற்றின் முகத்துவாரத்தில் இருக்கும் பட்டினம்' என்பது பொருள். காவிரிப்பூம்பட்டினமும் கடலால் கொள்ளப்பட்டுவிட்டதென்று ஆராய்ச்சிக்காரர்கள் கூறுகிறுர்கள். வீரம் நிறைந்த பல் சோழ மன்னர்கள் உறையூரிலிருந்து செங்கோல் செலுத்தினுர்கள்.

அவர்களுக்குரிய துவஜம் புலிக்கொடி, பிற்காலத்தில் காவிரிப்பூம்பட்டினமே தலைநகரமாயிற்று. இது அக் காலத்திலே சீனு, மலாயா, பர்மா, இலங்கை முதலிய நாடு களுடன் சிறந்த வியாபாரத்தை நடத்தியது. சோழ அரசர் களுள் மூவர்களைப்பற்றி நாம் தெரிந்திருக்க வேண்டுவது அவசியம். முதலாமவன், கரிகால் சோழன். இவன் 2000 ஆண்டுகளுக்கு முன் இருந்தவன் ; திறல் மிகுந்த வீரன் ; ஒரு முறை சேரநாட்டுச் சேனையையும், பாண்டி நாட்டுச் சேனையையும், சண்டையில் ஒருமிக்கத் தோற்கடித் தான். *சோழநாட்டவர்களுடைய முக்கியத் தொழில்* வேளாண்மையாகையால், நீர்ப்பாசனத்தின்பொருட்டு *காவிரியிலிருந்து அநேக கால்வாய்களை* வெட்டினுன். ஆற்று ஜலம் உடைப்பெடுத்து வீணுகச் செலவழியாதபடி *இரண்டு பக்கங்களுக்கும் கரை இட்டான்.* இவன் காலத்திலேதான் சோழ நாட்டின் தலை நகர் உறையூரி *லிருந்து காவிரிப்பூம்பட்டினத்திற்கு மாற்றப்பட்டது.*

இரண்டாமவராகக் கி. பி. 985ல் முதலாம் இராஜ *ராஜ சோழர் பட்டத்துக்கு வந்து சுமார் 28 வருட காலம்* ஆண்டார். இவரும் பெரிய போர் வீரர். கீழ் மாகாண *இராஜ புத்திரர்களைச் சண்டையில் முறியடித்தார். சேர* நாடு, இலங்கை, கலிங்கம் முதலிய தேசங்களையும் கைப் பற்றினுர். இவருடைய காலத்தில் அரசாட்சி வெகு சீரான முறையில் நடத்தப்பட்டது. தற்சமயம் தஞ்சா வூரிலிருக்கும் அழகு நிறைந்த பிரகதீஸ்வரர் கோவிலும் அதன் கோபுரமும் இவரால் கட்டப்பட்டவை. இவர் சிவ மதத்தினராய் இருந்தார் என்ருலும், மற்ற மதங்களின் மீது துவேஷங்கொண்டாரில்லை. இதற்குச் சான்ருக நாக பட்டினத்தில் பௌத்தக் கோவில் ஒன்று கட்டியிருக் கிருர். இந்தக் கோவில் அந்நாட்களிலே கடாரத்தையும்

(கெடா இராச்சியம்) ஸ்ரீ விஜயாவையும் ஆண்டு வந்த மாறன் விஜயோத்துங்க வர்மன் என்றபௌத்த அரசனது வேண்டுகோட்படி கட்டப்பட்டது. இராஜ ராஜ சோழருக்குப் பிறகு அவருடைய மகனர் இராஜேந்திர சோழர் (கி. பி. 1012-1043) சிம்மாசனம் ஏறினர். இவரும் தகப்பனரைப் போலவே ஒரு ஜயவீரர். இவரைத் தமிழ் நாட்டு நெப்போலியன் எனலாம். இவரிடம் சிறந்த கடற் படை இருந்தது. இவர் நிக்கோபார், அந்தமான் முதலிய தீவுகளைப் பிடித்து, பர்மாவுக்குச் சென்று, அதையும் ஜயித்தார். இதோடு நிற்கவில்லை. பாண்டி நாடு, சேரநாடு, இலங்கை, கங்கைக் கரையிலிருந்த சில இராச்சியங்கள் முதலியனவும் இவர் கைவசமாயின. மலாயா, ஜாவா, சுமத்திரா, இந்து-சீன முதலியவற்றையும் தமது கொடியின்கீழ்க் கொண்டுவந்தார்.* இவருடைய வழித் தோன்றல்களில் ஒருவன் நீல உத்தமன் என்னும் அரசன்தான் சிங்கப்பூரை முதலில் ஆண்டதாகவும் அப்பெயரை இத்தீவுக்கு இட்டதாகவும் ஆராய்ச்சிக்காரர் கூறுகிறார்கள்.

கடைசியானது பாண்டிய இராச்சியம். இப்போதைய மதுரை ஜில்லா, திருநெல்வேலி ஜில்லா, இராமநாதபுரம் ஜில்லா ஆகிய மூன்றும் அக்காலத்தே பாண்டி நாடாய் இருந்தன. பாண்டிய இராச்சியத்துக்குத் தலைநகரம் மதுரை: துறைமுகப்பட்டினம் கொற்கை. இது தாமிரவர்ணியின் முதத்துவாரத்தில் உள்ளது. மதுரையைச் 'செந்தமிழ் அகம்,' என்றும் சொல்வதுண்டு. ஏனென்றால், மிகப் பழங்காலத்திலிருந்து

---

*என்றாலும் காழகத்தை (கடாரம்-கெடா) கைப்பற்றிய பின் அந்நாட்டு மன்னனது பரிதாப நிலையைக் கண்டு அதை அவனுக்கே திருப்பிக் கொடுத்துவிட்டார்.


இந்தியா

இங்கேதான் ‘ தமிழ்ச் சங்கம் ’ இருந்து வந்தது. மூன்று நாடுகளிலும் உள்ள தமிழ்ப் புலவர் அனைவரும் இச் சங்கத்தில் கூடித் தமிழ் மொழியை ஆராய்ந்தும், சிறந்த பல நூல்கள் ஆக்கியும் தமிழை வளர்த்து வந்தனர்.

கொற்கையிலிருந்து வெகு காலமாக வெளித் தேசங்களுடன் வியாபாரம் நடந்து வந்தது. இங்ஙனம் வியாபாரஞ்செய்த அந்நியருள் பிரதானமானவர்கள் கிரேக்கரும் ரோமருமே. பாண்டிய அரசர்கள் ரோம வீரர்களைத் தங்கள் சேனையில் வைத்திருந்தார்கள். ஒரு பாண்டிய மன்னன் ரோமாபுரி அரசரான அகஸ்டஸ் சீசர் ஒக்டேவியுஸ் (கி. மு. 20) (Augustus Caesar Octavius) என்பவருக்குத் தூதர்களை அனுப்பினான். வேறொரு பாண்டியக் கோமான் சீன சக்கரவர்த்தியான குபுலைகான்* (Kublai Khan, கி. பி. 1216—1294) என்பவருக்குத் தூதர்களை அனுப்பியதாக மார்க்கோ போலோ (Marco Polo) கூறுகிறார். உக்கிரப் பெருவழுதி நெடுஞ்செழியன் என்னும் ஆற்றல் நிறைந்த பாண்டிய மன்னன் ஒருவன் 2000 வருடங்களுக்கு முன்னர் மதுரையிலிருந்து செங்கோல் ஓச்சினான், இவன் ஒரு முறை இமயமலை வரை படையெடுத்துச் சென்று அங்கே பாண்டியருக்குரிய மீன் கொடியை நாட்டினான். வேறொரு முறை சண்டையில் சேர சோழ சேனைகள் ஆகிய இரண்டையும் சின்ன பின்னமாக்கினான். இந்த யுத்தம் காவிரிப்பூம்பட்டினத்துக்கு அருகிலிருந்த தலையாலங்கானம் (தலைச்சங்காடு) என்னுமிடத்தில் நடைபெற்றது. நெடுஞ்செழியன் தன் குடிகளிடத்தில் அன்புள்ளவன் ; குடிகளும் அவனை நேசித்தார்கள். அவன் அனேக புலவர்களை ஆதரித்து வந்தான். தமிழ்ச் சங்கக் காப்பியங்களுள் ஒன்றாகிய சிலப்

*கான்-கோன் ; இரண்டும் ஒரே கருத்துள்ள வார்த்தைகள்

பதிகாரம் நெடுஞ்செழியனுடன் சம்பந்தப்பட்டது. இதை ஆக்கியவர் **இளங்கோ அடிகள்**, இன்னுமொரு தமிழ்ச் சங்கக் காப்பியத்தைப்பற்றியும் நாம் தெரிந்துகொள்ள வேண்டும். அதன் பெயர் **மணிமேகலை**. அதைச் சிலப் பதிகாரத்தின் தொடர்ச்சி என்று கொள்ளலாம், அதை ஆக்கியவர் ***சீத்தலைச் சாத்தனுர்.*** இந்நூல்களினின்றும் பண்டைத் தமிழரின் பண்பாடுகள் பலவற்றை நாம் தெரிந்துகொள்ளலாம்.

கி. மு. 321-297 இவ்வாண்டுகளுக்கிடையே தமிழ் நாட்டைச் சுற்றிப் பார்த்திருந்த கிரேக்க நிபுணரான **மெகஸ்தனிஸ்** என்பவர், அக்காலத்திலே **அல்லி** என்னும் பெண்ணரசி ஒருத்தி மதுரையிலிருந்து அரசு செலுத்திய தாகக் கூறியுள்ளார். டோலமி, மார்க்கோ போலோ ஆகிய இருவரும் மதுரையின் எழிலைப் பற்றி மெச்சிக் கூறியிருக்கிறார்கள்.

பண்டைக்காலத்தில் **பல்லவர்கள்** என்ற ஒரு ஜாதி யார் காஞ்சீபுரத்தை ஆண்டு வந்தவர். இவர்கள் யார்? கி. மு. 4—ஆம் நூற்றுண்டில் ஐரோப்பாவைச் சேர்ந்த மெஸிடோனியா தேசத்து அரச வீரரான **அலக்ஸாந்தர்** இந்தியா மீது படையெடுத்தார். அவர் ஸிந்து நதியைக் கடந்து பஞ்சாபிலுள்ள சில மாகாணங்களை ஜயித்தார். அவருக்குப் பின்னர் அவரது தேசத்தார் வெகு காலம் பஞ்சாப் மாகாணங்களை ஆண்டு வந்தனர். அப்பொழுது வட இந்தியாவிலுள்ள ஆரியர்களுடன் கலப்புற்றுர்கள். அவர்களுள் ஒரு கூட்டத்தார் சிறிது காலத்துக்குப் பிறகு தென்கிழக்காக வந்து காஞ்சீபுரத்தில் தங்கினுர் கள்; தமிழர்களுடைய நாகரிகத்திலும் பங்கு பெற்றுர் கள். இவர்கள்தான் **பல்லவர்கள்** என்று சொல்லப்படு பவர்கள். காஞ்சியில் சுமார் 450 வருடங்கள் பல்லவர்

கள் செழித்திருந்தனர். காஞ்சி விசித்திரமான ஒரு நகரம். அதைச் சுற்றிலுமுள்ள நிலங்கள், நீர்வளம் நிலவளம் பொருந்தியவை. பல்லவ அரசர்கள் எல்லோரும் தங்கள் சொந்தப் பெயருடன் வர்மன் என்னும் பட்டத்தைச் சேர்த்துக்கொள்வார்கள். வர்மன் என்பதற்குப் "போர்க் கவசம்" என்பது அர்த்தம். கி. பி. 7-ஆம் 8-ஆம் நூற்றுண்டுகளில் பல்லவ அரசர்கள் முழு வல்லமையுடன் அரசு புரிந்தார்கள். இந்த அரசர்கள் மலாயா உலகில் அனேக இராச்சியங்களை நிறுவினுர்கள். மலேஷியா நாடுகளிலே தற்சமயம் ஆங்காங்குத் தோண்டி எடுக்கப் பட்ட கல்வெட்டுகளில் வர்மன் என்னும் பட்டத்தையுடைய அரசர்களின் பெயர்கள் காணப்படுவதால், பல்லவர்கள் இங்கு ஆண்டு வந்தார்கள் என்பது தெரிய வருகிறது.

பல்லவர்கள் சண்டையில் வெகு சமர்த்தர்கள். அருகிலிருந்த சோழ இராச்சியம் இவர்களால் வெகு கஷ்டமடைந்தது. இருந்தாலும், கடைசியில் சோழருடைய பக்கமே வெற்றி பெற்றது. இறுதியில் பல்லவருடைய இராச்சியம் சோழ மன்னராலும் வடக்கேயிருந்த சாளுக்கியராலும் சிதைவுற்றது.

முற்காலத்தில் இந்தியாவின் கிழக்குக் கரையிலே சோழ மண்டலத்திற்கு வடக்கே கலிங்கம் என்னும் ஓர் இராச்சியமிருந்தது. இவ்விராச்சிய வாசிகள் வர்த்தகஞ் செய்வதில் முதன்மையானவர்கள். அவர்களில் பெரும் பாலோர் மலாயா நாடுகளுக்கு வருவதுண்டு. மலாயர்கள் இக்கலிங்கர்களை 'கிலிங்' (கலிங்கர்) எனச் சிதைத்

துக் கூறினார்கள். இக்காலை, இப்பெயரே தமிழருக்கு மலாயரால் வழங்கப்படுகிறது.

---

# 5. இந்தியரின் கப்பல் வர்த்தகம்

பழந்தமிழ் நூல்கள், வேதங்கள், பௌத்த நூல்கள் புராணங்கள் முதலியவற்றில் கடல் யாத்திரை, வியாபாரம் ஆகியவற்றைப் பற்றிய கூற்றுகள் பலவுள்ளன. பண்டைக்காலத்து இந்தியக் கப்பல்களுள் ஒவ்வொன்றுக்கும் அதனதன் அளவுக்குத் தகுந்தாற்போலப் பல பெயர்கள் வழங்கப்பெற்றன. அவைகள் சில 200 அடி நீளமுள்ளனவாகவும், நீர் மட்டத்தினின்று பல அடிகள் உயரங் கொண்டனவாகவும், நூற்றுக்கணக்கான பிரயாணிகளைக் கொள்ளுவனவாகவும் இருந்தனவெனப் பழைய சரித்திர ஆசிரியர்கள் கூறியுள்ளனர். சில கப்பல்கள் 600 பிரயாணிகளுக்குமேல் கொள்ளக்கூடியனவாக இருந்தனவாம். நான்கு பாய்மரங்கள் கொண்ட கப்பல்கள் தங்கம், வெள்ளி, செம்பு இவற்றால் அலங்கரிக்கப்பட்டன. மூன்று பாய்மரம் உடையவை வெண் சாயத்தாலும், இரு பாய்மரம் உடையவை மஞ்சள் நிறத்தாலும் பூச்சிடப்பட்டன. கப்பல்களின் முகப்பில் மனிதர் அல்லது மிருகங்களின் தலைகளும், தனிக் கண்களும் செதுக்கப்பட்டிருந்தன. நீண்ட துடுப்புகளால் கப்பல்கள் செலுத்தப்பட்டன.

பிரயாணிகள் ஒரு வருடத்திற்குப் போதிய உணவையும் தண்ணீரையும் கொண்டு செல்வார்கள்.

கோழி, வெள்ளாடு, காய்கறி, கிழங்கு ஆகியவற்றைக் கப்பல்களில் உணவுக்காக வைத்திருப்பது வழக்கம். ஜோதிஷ யந்திரத்தின் (Armillary Sphere) உபயோகம் பழைய இந்தியர்களுக்குத் தெரிந்திருந்தது. எனவே, இதன் உதவியால் சூரிய, சந்திர, நட்சத்திரங்களின் நிலைகளைக் கவனித்து மாலுமிகள் திசைகளை அறிந்துகொண்டனர். துறைமுகங்களைக் 'கலங்கரை விளக்குகளால்' (Light-Houses) அறிவார்கள். தரைக்குச் செய்திகளை அனுப்புவதற்குப் புறுக்களை உபயோகப்படுத்தினர்.

சுமார் 3,000 வருடங்களுக்கு முன்னரே தமிழ் வர்த்தகர்கள் அலக்ஸாண்டிரியா, ரோமாபுரி, கிரேக்கு முதலிய மேல் நாடுகளுக்கும், சீனு மலேஷியா முதலிய கீழ் நாடுகளுக்குமிடையே வியாபாரத்தை நடத்தி வந்தனர். இதற்குப் பருவக்காற்றுகள் அவர்கட்குப் பெருந்துணையாயிருந்தன. இந்திய நாட்டின் வாசனைச் சரக்குகள், துணிமணிகள், முத்து, வைரம், தேக்கு, அரிசி, மயில் தோகை, யானைத் தந்தம் ஆகியவற்றை எல்லா நாடுகளுக்கும் கொண்டு சென்றனர். இவ்வர்த்தகப் பொருள்களின் பெயர்களிற்சில கிரேக்கர், ரோமர்,* பொனீசியர்,† (Phoenicians) முதலியோரால் தமிழ் மொழியிலிருந்து கையாளப்பட்டு இப்போது ஆங்கிலத்திலும் கலந்தொலிக்கின்றன. உதாரணமாக 'அரிசி' என்னும் தமிழ் வார்த்தை

*இவர்கள் யாவரையும் தமிழர் 'யவனர்' (Iaones) எனச் சொல்வர்.

†வொய்னீசியாவானது சிரியா தேசத்தின் கரையிலிருந்த ஒரு நாடு. இந்நாட்டவர்கள் கைதேர்ந்த மாலுமிகள். கடலிலேயே சஞ்சாரஞ்செய்ததனுல் அவர்களுடைய தோல் கறுத்துச் சிவந்திருந்தது. ஆகையினலே, கிரேக்கர் அவர்களை 'வொய்னீசியர்' (இரத்தச் சிவப்பு) எனக் குறிப்பிட்டனர்.

கிரேக்க பாஷையில் 'ஔரைஜா' என்றும் ஆங்கிலத்தில் 'ரைஸ்' என்றும்; தமிழ்ப்பதமான 'இஞ்சி வேர்' கிரேக்க பாஷையில் 'ஜிஞ்சிவர்' என்றும் ஆங்கிலத்தில் 'ஜிஞ்சர்' என்றும் ; மயிலைக் குறிக்கும் செந்தமிழ்ச் சொல்லான 'தோகை' என்பது யூதர் மொழியாகிய ஹிப்ரூ பாஷையில் *'துகி' என்றும் மருவி வழங்கப்படுகின்றன.

சீனாவின் ஏற்றுமதிப் பொருள்களான பட்டு, கொப்பரைகள், மருந்து வகைகள், ஆமை ஓடு, தேயிலை முதலியவற்றைத் தமிழ் வர்த்தகர்களே வாங்கி மேல் நாடுகளுக்கு ஏற்றிச் சென்றனர். மலாய் நாடுகளிலும் தமிழர்களே வியாபாரத்தை நடத்தினர். மலாய்ப் பாஷையில் எத்துணையோ தமிழ்ப் பதங்களும், சமஸ்கிருதப் பதங்களும் உள்ளன. வெளிநாட்டு வர்த்தகத்துக்கு இன்றியமையாத கருவியாகிய 'கப்பலைக்' குறிக்கும் மலாய் வார்த்தை சுத்தத் தமிழ்ப்பதமே.

அடுத்த பாடத்தில் இந்தியாவிற்கும் மலாயாவிற்குமிடையே தொன்று தொட்டு இருந்த தொடர்பைக் கவனிப்போம்.

---

# 6. இந்தியா-மலாயா—I

வெகுகாலமாக இந்தியாவிலிருந்து மலாயா, சீனா ஆகிய தேசங்களுக்குச் சென்றுகொண்டிருந்த கப்பல்களுக்கும், இத்தேசங்களிலிருந்து இந்தியாவிற்குச் சென்றுகொண்டிருந்த கப்பல்களுக்கும் மலாக்கா ஜலசந்தி ஒரு சந்திப்பு இடமாயிற்று. சிங்கப்பூரிலும் இக்கப்பல்கள் தங்கின. ஆகவே, இந்த ஜலசந்தியின் இரு பக்கத்துக்-

*யூதரின் மொழி

கரைகளிலும் வர்த்தகர்கள் பண்டகசாலைகளை ஏற்படுத்தினார்கள். இப்பண்டக சாலைகளிற் சில, நாளடைவில் பெரிய துறைமுகங்களாயின. பின்னர் வெண்கலக் கால இறுதியில் அவை இந்தியர்களது குடியேற்ற ஸ்தலங்கள் ஆயின. அத்தகைய ஸ்தலங்களில் பலம்பாங் (சுமத்திராவில்), மலாக்கா, சிங்கப்பூர், கெடா, சீயம்* முக்கியமானவை. இன்னும், இந்துசீனா, ஜாவா, பெக்கான் (பஹாங்) முதலியனவும் தென்சீனக் கடலைச் சார்ந்த இடங்களில் இந்தியரின் குடியேற்ற ஸ்தலங்கள் ஆயின. இவ்விடங்களில் இந்தியர் ஸ்தாபித்த இராச்சியங்களைப் பற்றிப் பின்னர்க் கவனிப்போம்.

மலேஷியா நாடுகள் ஈயம், பொன், வாசனைத் திரவியங்கள் ஆகியவற்றிற்கு எப்போதும் பெயர் போனவை. ஆகையால்தான், நம் பழைய நூல்கள் இப்பிரதேசங்களை **'ஸ்வர்ணபூமி'** அல்லது **'ஸ்வர்ண கூட்டியகம்'** என்றும் குறிப்பிடுகின்றன. (சமஸ்கிருதத்தில், ஸ்வர்ணம் = பொன், கூட்டியகம் = வீடு.)

மேற்கூறிய பொருள்களைப் பெறுவதற்காகவே இந்திய வர்த்தகர்கள் இந்நாட்டுக்கு வந்தனர். மலாயாவின் பல இடங்களிலும் இன்றைக்கும் ஈயச் சுரங்கங்கள் உள்ளன. முன் காலத்தில் அவர்கள்தான் இச்சுரங்க வேலைகளைக் கொண்டு நடத்தினர். இன்றும் ரவுபில் (Raub) பொன் சுரங்கங்கள் அனேகம் உள; பஹாங்கிலுள்ள நதிகள் யாவற்றுள்ளும் கொஞ்சம் பொன்னாகிலும் கிடையாமற்போகாது. பேராவிலுள்ள பத்தாங் படாங் (Batang Padang) ஜில்லாவிலும் பொன் உண்டு. முன்

*சயமா (துர்க்கை) என்பதன் திரிபு

காலத்தில் மலாக்காவுக்குச் சமீபத்திலிருக்கும் ஒபிர் (Mount Ophir) குன்றிலிருந்து புத்றாங் மாகாணத்துக்கு ஊடாகச் சீயத்திலிருக்கும் பட்டாணி வரையில் பொன் சுரங்கங்கள் இருந்ததாகத் தெரிகின்றது.

மலாயாவில் இந்தியர்கள் பொன் எடுப்பதற்கு முன்னர் ஸைபீரியாவிலிருந்தே (Siberia) பொன் இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்டது. பின்பு கிறிஸ்தவ சகாப்தத்திற்குச் சிறிது காலத்திற்கு முன்பு மத்திய ஆசியாவில் மக்களிடையே கிளர்ச்சியுண்டாகி இந்தியாவுக்கும் ஸைபீரியாவுக்குமிடையே இருந்து வந்த கரைமார்க்கப் பாதை துண்டிக்கப்பட்டது. இதுவே இந்தியர்களை மலாயாவில் பொன் வெட்டியெடுக்கத் தூண்டுவதற்குக் காரணமாயிற்று.

இந்தியமாலுமிகளும் வர்த்தகர்களும் எங்ஙனம் மலேஷியாவில் குடியேற்ற ஸ்தலங்கள் ஏற்படுத்தினார்களென்பதை முன்னர்க் கவனித்தோம். இந்தக் குடியேற்ற ஸதலங்களுக்குத் தாய்நாட்டிலிருந்து மெல்ல மெல்லப் போர் வீரரும், புரோகிதரும், சிற்பிகளும் வந்து சேர்ந்தார்கள். காலாகாலத்திலே மலேஷியா முழுவதும் இந்தியரது ஆதிக்கத்திற்குட்பட்டு, அவர்களது பாஷை, பழக்கவழக்கங்கள், அரசியல் முறைகள், சமயக் கோட்பாடுகள் ஆகிய யாவும் எங்கும் பரவின. மீன் பிடிப்பவராகவும், வேடுவராகவும், நாகரிகமற்றவர்களாகவுமிருந்த மலாயருக்கு இந்தியர் நாகரிகவாழ்க்கையின் முறைகளை அளித்தனர்; அவர்களது நாடுகளைச்செழிப்பாக்கினர். பயிரிடுதல்,பாசனஞ்செய்தல், ஏர் உழுதல் முதலியவற்றை மலாயர் இந்தியரிடமிருந்து கற்றுக்கொண்டார்கள். வியாபார முறைகள், நாணயத்தின் உபயோகம், இரும்பு ஆயுதங்கள் செய்தல், பொன், வெள்ளி இவற்றால் ஆபரணங்கள் செய்தல், வீடு கட்டு



பீடோரில் கிடைத்த
அவலோகிதேஸ்வர விக்கிரகம்



ஈப்போவுக்கு அருகே
கிடைத்த புத்தரின் சிலை



கெடாவிலுள்ள சிதைந்த இந்துக்கோவில் அஸ்திவாரம்

தல், வைத்திய சாஸ்திரம் ஆகியனவும் இந்தியர்களாலே மலாயருக்குக் கற்பிக்கப்பட்டன. பட்டைகளை உடுத்தியவர்களுக்குப் பருத்தி ஆடையும் பட்டு வஸ்திரமும் நெசவு செய்து அணியக் கற்பித்தார்கள். மலாய் மொழியில் வழங்கப்படும் சமய சம்பந்தமான பதங்கள், வியாபாரத்திற்குரிய பதங்கள், வேளாண்மைப் பதங்கள், ஆயுதங்களின் பெயர்கள், வாத்தியக் கருவிகளின் பெயர்கள், யுத்தப் பதங்கள், அரசியல் வார்த்தைகள், வான சாஸ்திர சம்பந்தமான வார்த்தைகள், பிராணி தாவரவர்க்கங்களைக் குறிக்கும் சொற்கள் இன்ன பிறவும் சம்ஸ்கிருதம் அல்லது தமிழ்ப் பதங்களே.*

---

# 7. இந்தியா–மலாயா—II

இந்தியர்கள் மலேஷியாவிலே ஏற்படுத்தியிருந்த ஒவ்வோர் இராச்சியத்திலும் அரசாங்கப் புரோகிதர்கள் இருந்தார்கள். அவர்களுக்கு இராஜாங்கவட்டாரங்களில் நிரம்பச் செல்வாக்கிருந்தது. இன்றைக்கும் சீயம், கம்போடியா ஆகிய இராச்சியங்களிலே பிராமணியவழிப் புரோகிதர்கள் இருந்து வருகின்றார்கள். இவர்களே அந்நாடுகளின் இராஜாங்கச் சின்னங்கள் யாவற்றையும் பாதுகாப்பவர்கள். இவர்கள்தான் இராஜாங்கச் சடங்குகளையும் நடாத்தி வருகின்றார்கள்.

பேரா சமஸ்தானத்திலே பாரம்பரியமாக வரும் இராஜாங்க உத்தியோகஸ்தன் ஒருவன்தான் இன்றைக்கும் இராஜாங்கச் சின்னங்களைக் கையாளலாம். 'ஸ்ரீநராதி ராஜா' என்பது அவனது பட்டப்பெயராகும். அவனது குடும்பத்திலே எவரும் மாட்டு இறைச்சியைப் புசித்தல்

*புத்தகத்தின் இறுதியிலுள்ள அட்டவணையைப் பார்க்க.

கூடாது. அவனது குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் சிவ பெருமானது நந்தியின் ஓக்காளத்திலிருந்து தாம் தோன்றியுள்ளதாகக் கொள்வர். இன்னும் பேரா சமஸ்தானத்திலே சிங்காதனமேறும் வைபவம் நடக்கும்பொழுது ஸ்ரீநராதி ராஜாதான் பட்டப்பிரகடனம் செய்வான். பிராமணர் மந்திர தீட்சை செய்வது போன்று, பிரகடன வேளையிலே ஸ்ரீநராதி ராஜா பட்டங்கட்டிக்கொள்ளும் அரசனது செவிக்குள்ளே அவனது ராஜ பரம்பரையின் ஆதி மூதாதையினுடைய ஹிந்து நாமகரணத்தை உச்சரிப்பான்.

நகரிசெம்பிலானிலே "யாங் — டி — பெர்துவான் பிராமணீய முறைப்படியே பட்டப் பிரகடனம் செய்யப் படுகின்றார். அப்பொழுது தூதனொருவன் இடக் காலில் நின்றுகொண்டு வல உள்ளங்காலை இட முழங்காலில் படிய வைத்து, வலக் கையினால் தன் கண்ணை மறைத்து, இடக் கையின் விரல் நுனிகளை இடக் கன்னத்திலே கொடுத்துப் பட்டப் பிரகடனம் செய்வான்.

மலாய்ச் சுல்தான்மாரின் முடிசூட்டு விழாக்களிலே முஸ்லிம் ஆசார மினுக்குகள் இன்றைக்கு இருந்தாலும் முன்னைய ஹிந்து சடங்குகளெல்லாம் நடந்தே ஆகின்றன. பர்மா, சீயம் ஆகிய நாடுகளிலும் அவ்வாறே முடிசூட்டு விழாவில் சுத்திகரணம் முதலில் நடக்கின்றது. பிறகு அஷ்டதிக்கு அபிஷேகம் நடக்கின்றது. அதற்கு நீரும் எண்ணெயும் கலந்து பாவிக்கப்படுகிறது. சில மலாய் சமஸ்தானங்களில் சதுர் திக்கு அபிஷேகம் நடக்கின்றது. சடங்குகளெல்லாம் முடிந்த பிறகு அரசன் தன் பரிவாரத்தோடு அரண்மனையை, ஹிந்து வழமைக்கொப்ப, வலம் வருகின்றான்; பின்னால் குடி ஜனங்களுக்குத் தரிசனை அளிக்கின்றான். பேரா சமஸ்தானத்திலே அவ்வாறு தரிசனை

கொடுக்கும்போது சுல்தான் ஒரு ஹிந்து தேவதையைப் போன்று ஆடையாபரணங்களினாலே தன்னை அலங்கரித்திருப்பான்; சுல்தானின் தலையணியில் "மின்னல் முத்திரை" § என்ற ஒரு சின்னம் மாட்டப்படுகின்றது. இது ஹிந்து இந்திரனது வச்சிராயுதத்தின் சங்கேதம் எனக் கொள்ளப்படுகின்றது. இன்னும் பேரா சுல்தான் தரிக்கும் கவசத்தின் தோள் பட்டையில் ஆகாச கங்கையிலிருந்து வந்த குத்துவாள் ஒன்று இருக்கும். அதில் மகாதேவன் மகாதேவி இருவர்களது உருவங்களும் பொறிக்கப்பெற்றிருக்கும்.

பேரா சுல்தான் முடி சூட்டப்பெற்றுச் சிங்காதனத்தில் வீற்றிருக்கையில் ஸ்ரீ நராதிராஜா சிதைந்த சம்ஸ்கிருதத்தில் வாழ்த்து வாசிப்பதுண்டு. சீயத்திலும் இவ்வித வாழ்த்து வாசிக்கப்படுகிறது. நகரி செம்பிலானில் இவ்வாழ்த்தின் மொழி பெயர்ப்பு முடி சூட்டு விழாவில் படிக்கப்படும். இவ்வாழ்த்தை வாசிப்பவர் முஸ்லிம் மதாசாரியரல்லர்; முன்னைய பிராமணரைப் பிரதிநிதிக்கிற இராஜாங்க உத்தியோகஸ்தனொருவனே அதை வாசிக்கிறான். அவ்வாழ்த்தில் ஹிந்து வேதகாலத்துப் பஞ்ச தேவதைகளும் ஆவாகனம் செய்யப்படுகின்றார்கள், முடி சூட்டு விழாச் சடங்குகள் நடக்கும் பொழுது சுல்தான்மார் எல்லோரும் ஒரு யோகி தியானத்தில் இருப்பது போன்று ஆடாமலசையாமல் அமர்ந்திருத்தல் வேண்டும்.

மலாய்ச் சுல்தான்மார்களின் முடி சூட்டு விழாச் சடங்கு முடிந்தவுடன் ராமாயண சம்பந்தமான பாவைக் கூத்து நடக்கிறது. அதில் கூத்துத் தலைவன் மஞ்சள்

§ மலாயில் "மத்ரை கிலத்"—மத்ரை = முத்திரை; கிலத் = மின்னல்

சால்வை அணிந்து தன்னை விஷ்ணுவின் அவதாரமாகப் பாவனை செய்துகொண்டு ஜகத்குருவும் நடராஜனுமான சிவனுக்கு அர்க்கியம் செலுத்துகிறான்.

இன்னும், பிறப்பு, இறப்பு, விவாகம், எழுத்தறிவித்தல் முதலிய தருணங்களில் ஒரு ஹிந்து செய்யும் எல்லாச் சடங்குகளையும் ஒவ்வொரு மலாயனும் செய்துவருகிறான். கிராமங்களில் வசிக்கும் மலாய் வைத்தியன் இன்றைக்கு முஸ்லிமாய் இருந்தாலும், நோயாளியைப் பிடித்துள்ள பேய்களை ஓட்டுவதற்குச் சிவனையே அழைக்கிறான். கிரகப்பிரவேசத்திற்கும் பிராயச்சித்தத்திற்கும் கிராம மலாயர்கள் சிவனையே அழைக்கிறார்கள்.

எனவே, ஹிந்துக்களுடைய பண்பாடுகள், மலாய்ச் சுல்தான்மார் முதல் மலாய்ப் பாமரன் ஈறாக, மலாயர்களின் வாழ்க்கையில் படிந்துள்ளன என்பது வெள்ளிடை மலை.

---

## 8. லங்கா சுகமும் கடாரமும்

நாம் முன்னொரு பாடத்தில் கண்டபடி கி. பி. 5–ஆம் நூற்றாண்டு வரையில் தமிழகத்திலிருந்து வந்தவர்கள் மலாயாவிலும் மலேஷியாவின் இதர பாகங்களிலும் நிறுவிய இராச்சியங்களுள் பிரதானமானவைகளைப்பற்றி இப்போது படிக்கப் போகிறோம்.

கொந்தளிப்பான வங்காளக் குடாக்கடலைக் கடந்த பின்னர் மலாயாவினது வடமேற்குக்கரை இந்தியக் கப்பல்களுக்கு ஏற்ற உறைவிடமாற்று. இப்போதைய கெடாவிலுள்ள ஜெரைக் குன்றிற்குச் (Gunong Jerai) சற்று தெற்கே இருக்கும் மர்பாவ் ஆற்றின் வாய்


மலாயா சரித்திர
சம்பந்தமான இடங்கள்
பட்டாணி
பங்கோர் தீவு
கடாரம்

(Kuala Merbau) கப்பல்கள் தங்குவதற்கு வசதியை அளித்தது. மேலும், அக்குன்றின் தெற்கு எல்லையில் இருக்கும் மேட்டுப்பாங்கான நிலமானது மர்பாவ் கிச்சில், சுங்கை பூஜாங்* ஆகிய இரு நதிகளாலும் நல்ல வளத்தைப் பெற்றிருக்கின்றது. எனவே, இந்தியருக்கு இப்பிரதேசம் குடியேற்றத்திற்குத் தகுதியுள்ளதாய் இருந்தது, நீர்வளம் நிலவளம் பொருந்திய நிலமாகையால், இந்தியக் குடியேற்றக்காரர்க்கு நெல் பயிர் செய்ய வசதியாயிருந்தது.

முதலிலே குடியேற்றக்காரர் பூஜாங் நதிதீரத்தில் ஒரு பட்டினத்தை உண்டாக்கினார்கள். இன்னும் அதையடுத்த அயற்பிரதேசங்களிலும் குடியேறினர். காலாகாலத்தில் குடியேற்ற இடங்கள் யாவும் ஒன்று சேர்க்கப்பட்டன; சேர்க்கப்படவே, கிறிஸ்தவ சகாப்த ஆரம்ப காலத்திலே பிரபலமான இராச்சியம் ஒன்றுண்டாயிற்று. இவ்விராச்சியம் தற்போதைய **கெடா, பெர்லிஸ், வெல்லெஸ்லி மாகாணம், சிங்காரா** (சீயத்தில்) ஆகிய பிரதேசங்களைக்கொண்டது. இவ்விராச்சிய வாசிகள் பௌத்த சமயத்தின் உட்பிரிவுகளான **மஹாயனம் ஹிநாயனம்**† இரண்டினையும் அனுஷ்டித்திருந்தார்கள் என்பதைக் கெடாவிலே சமீபத்தில் கிடைத்துள்ள சிலாசாசனங்களிலிருந்தும் பழைய சீன சரித்திரங்களிலிருந்தும் அறிகின்றோம். இது வரை அகப்பட்டுள்ள சாசனங்கள் யாவும் கிரந்த அக்ஷரங்களிலேயே‡ எழுதப்பட்டவை. இவ்

* சுங்கை (மலாய்) = நதி; பூஜாங் (சம்ஸ்கிருதம்) = பாம்பு போல வளைந்திருக்கும் நதி.

†மஹாயன — பெரு நெறி; ஹிநாயன — சிறு நெறி.

‡நாகர எழுத்துக்களைத் தமிழ் எழுத்துக்களின் வடிவமாக எழுதுதல்.

விராச்சியத்தின் மன்னர்களைப்பற்றி அடுத்த சில பாடங்களில் கவனிப்போம்.

இதன் குடிகள் வங்காளக் குடாக் கடலிலிருந்து சீனக்கடலுக்குத் தரை மார்க்கமாக நடந்து வந்த வியாபாரத்திலுல் செல்வ விருத்தியைப் பெற்றனர். பண்டைச் சீன வரலாறுகளிலிருந்து பின் வருவனவற்றை அறிகின்ரேம் :— "லம் - யா - சியில்* (லங்கா சுகம்) மதில்களால் சூழப்பட்ட பெரிய பட்டினங்களும் மாடமாளிகைகளும் உண்டு. அதன் மன்னர்கள் சீனவுக்குத் தூதர்களையும், வர்த்தகர்களையும் அனுப்புவர். வறியோரது உடை பருத்தியாலானது. பிரபுக்களும் பெண்களும் நீண்ட தலை மயிரை வைத்திருப்பார்கள் ; தங்கக் கடுக்கன்களையணிவர் ; வர்ணச் சால்வைகளையும் அரைக் கட்டுகளையும் தரிப்பர். அரசர்கள் யானைமேல் அம்பாரியை வைத்து வாத்தியங்கள் முழங்கப் பவனி வருவர். பெண்கள் இரத்தினங்கள் பதிக்கப்பெற்ற ஒட்டியாணங்களை அணிவர்."

கெடாவில் புராதன ஆராய்ச்சிக்காரர் அகழ்ந்து எடுத்த பழைய ஆணிகளைக்கொண்டு லங்கா சுக வாசிகளின் வீடுகள் பலகைகளாலேயே ஆனவையென யூகிக்க இடமுண்டு.

லங்காசுகம் இப்போதைய இந்து சீனவிலிருந்த சம்பா என்னும் இராச்சியத்துக்கு முதலில் அடங்கியிருந்தது. கி. பி. 6-ஆம் நூற்ருண்டில் சம்பா சிதைவுறவே லங்கா சுகத்தில் பல் பிரிவுகள் உண்டாயின. உண்டாகவே, கடாரம்† (கெடா) ஒரு தனி இராச்சிய

* லங்க (சம்ஸ்கிருதம்) = ஐக்கியம் ; சுகம் = இன்பம்.

† கடாரம் — கருமை கலந்த பொன்மை. இந்நாட்டின் செழிப்பை முன்னிட்டுக் காரணப் பெயராக இப்பெயர் தமிழரால் வழங்கப்பட்டது.

மாயிற்று. கி. பி. 7–ஆம் 8-ஆம் நூற்றுண்டுகளில் தென்னிந்தியாவிலிருந்து சைவர்கள் திரள் திரளாய்க் கடாரத்துக்கு வந்தார்கள். அவர்கள் சுங்கை பூஜாங் நதி தீரத்தில் பல சிவ ஆலயங்களைக் கட்டினுர்கள். அவர்கள் மூலமாகத்தான் கம்போடியா, ஜாவா, சீயம் முதலிய நாடுகளுக்குள் ஹிந்துக்கலை, பண்பாடு (Culture) ஆகியவை பரவின.

சுங்கை பூஜாங், தக்குவாப்பா (சீயத்தில்) ஆகிய நதிகளின் பள்ளத்தாக்குகளிலே புராதன ஆராய்ச்சிக்காரர் வெண்கல விக்கிரகங்கள், வெண்கலத் தட்டுகள், பூஜா பாத்திரங்கள், தங்கம் வெள்ளி இவற்றுல் செய்யப்பட்ட அக்ஷரத் தகடுகள், படிக மணிகள் முதலியவற்றைச் சமீபத்திலே தோண்டி எடுத்திருக்கின்றனர். பழைய சைவக் கோயில்களின் சேஷங்களும் சிற்சில இடங்களில் ஆங்காங்கு இன்றும் காணப்படுகின்றன. இக்கோயில்களும் இவற்றைச் சார்ந்த மதில்களும் பீடங்களும் பெரும்பான்மை களிமண்ணுலும், செம்பிறைக் (Laterite) கற்களினுலும், பலகைகளினுலும் ஆனவை. சில இடங்களில் கருங்கற்களும் உபயோகிக்கப்பட்டன.

சுமார் கி. பி. 1005ல் சுமத்திராவிலிருந்த ஸ்ரீ விஜயா இராச்சியம் கடாரத்தின்மீது பாய்ந்து அதைத் தனக்கு அடிமையாக்கிற்று. இதனுல், ஸ்ரீ விஜயாவின் சமயமாகிய மஹாயன பௌத்தம் சைவ சமயத்தின் இடத்தை எடுக்க நேரிட்டது. அந்நாட்களில் இந்தியரைத் தவிர, அராபியரும் சீனரும் கடாரத்துடன் மும்முரமாக வியாபாரஞ் செய்தனர்.

கி. பி. 13-ஆம் நூற்றுண்டளவில் ஸ்ரீ விஜயா இராச்சியம் சீர் குலைந்ததனுல், மீண்டும் சைவ சமயம் தலையெடுத்தது. ஆயினும், சிறிது காலத்திற்குப் பின்னர்,

சியத்தின் பகைமையால் கடாரமும் அதனையடுத்திருந்த சிறிய இராச்சியங்களும் மறைந்தன.

இன்னும், பேராவின் மேற்குக் கரையிலிருந்து அதன் நடுப்பாகம் வரை ‘கங்கா நகரம்’ என்ற ஓர் இந்திய இராச்சியும் முன் காலத்தில் இருந்தது. இதை நிறுவிய அரசனைப்பற்றி அடுத்த பாடத்தில் கவனிப்போம். பேராவிலுள்ள கின்டா ஜில்லாவில் புராதன ஆராய்ச்சிக்காரர் வெண்கலத்தால் சமைக்கப்பட்ட இரு ஹினாயன பௌத்த விக்கிரகங்களை அகழ்ந்து எடுத்திருக்கிறார்கள்; இன்னும் கிரியான் ஜில்லாவில் அவர்கள் கருட வாகனாருடராய் விஷ்ணுவின் உருவம் பதிக்கப்பெற்ற ஆபரணம் ஒன்றையும் விஷ்ணு வர்மன் என்று கிரந்தத்தில் எழுதப்பட்ட மோதிரம் ஒன்றையும் அகழ்ந்து எடுத்திருக்கிறார்கள்; இவை புதிய கற்கால ஆயுதங்களோடு கண்டெடுக்கப்பட்டவை. கங்கா நகர வாசிகள் பௌத்த சமயத்தையும் இந்து சமயத்தையும் ஒன்றாக அனுஷ்டித்தார்கள் என யூகிக்க இடமுண்டு.

மேலும், பாஹாங் நதி தீரத்தில் ‘இந்திரபுரம்’ என்னும் பிறிதோர் இந்து இராச்சியம் முன்னர் இருந்தது.

ஜொகூர் நதி தீரத்தில் ‘கோட்டா திங்கி’ என்ற ஒரு பட்டினம் இருக்கிறது. ‘கோட்டா’ என்பது இந்திய வார்த்தை (கோட்டா - கோட்டை). எனவே, இப்பிரதேசத்தில் பண்டைக்காலத்தில் இந்தியரது குடியேற்ற ஸ்தலம் ஒன்று இருந்திருக்க வேண்டும். இங்குப் பல நாடுகளைச் சேர்ந்த சிறு மணிகள் புராதன ஆராய்ச்சிக்காரரால் அகழ்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் கி. மு. 6-ஆம் நூற்றாண்டிற்கு உரியவை எனவும் ஆராய்ச்சிக்காரர் கூறுகிறார்கள். அம்மணிகளில் பல, இந்தியாவைச் சேர்ந்தவை; சில ரோமாபுரியைச் சேர்ந்

தவை ; சில, வொய்னீசியாவைச் சேர்ந்தவை ; வேறு சில, வட சிரியாவைச் சேர்ந்த ஹிட்டைட் (Hittites of Northern Syria) ஜாதியாருக்குரியவை. இதனுல், ஜொகூர் நதிப் பிரதேசம் ஒரு வியாபார ஸ்தலமாயும் இருந் திருக்க வேண்டும். டோலமி இப்பிரதேசத்தைப் பலந்தா (Palanda) எனக் குறிப்பிட்டுள்ளார்.

---

## 9. லங்கா சுக மன்னர்கள்: மாறன் மஹாவங்ஸன்

மலாய் மொழியிலுள்ள வரலாறுகளினின்றும் லங்கா சுகம், கடாரம், கங்கா நகரம் முதலிய பழைய இராச்சியங் களை ஆண்ட சில மன்னர்களைப்பற்றி நாம் அறிந்து கொள்ளலாம்.

லங்காசுகத்தை முதன்முதல் ஆண்டவன் மாறன் மஹாவங்ஸன் எனக் கூறப்படுகின்றுன். அவன் பாடலி புரத்தில் கி. மு. 300-ஆவது ஆண்டில் அரசு செலுத்தி வந்த மித்திர குப்த ராஜா பரம்பரையில் வந்தவன். அவன் நாட்டிலே குடிஜனங்கள் அவனை அன்போடு தர்மராஜா என்று வழங்கினுர்கள். மாறன் மஹாவங்ஸன் ஆட்சி யிலே லங்காசுகம் சீரும் செழிப்பும் பெற்று ஓங்கிற்று. அதன் மூலப்பொருள்கள் வீணுக்கப்படவில்லை.

காடுகளிலே புலிகளும் யானைகளும் எதேச்சையா கத் திரிந்தன. நாட்டின் பூர்வ குடிகள் வனுந்திரவாசிக ளாய் இருந்தனர். அவர்கள் வேட்டையாடிச் சீவித்தனர்; குள்ளமானவர்கள். அவர்களது முகம் வெண்கல நிற முடையது. அவர்களது உடல் வர்ணம் பழுப்பு முதல் மஞ்சள் ஈருய் இருந்தது. அவர்களது கண்கள் சிவந்தும்,

மயிர்கள் தடித்தும் நீண்டும் இருந்தன. அவர்கள் குடிசைகள் மரக்கிளைகளின்மேல் அமைக்கப்பட்ட பரண்கள் : இன்னும் அவர்கள் மலைக்குகைகளுக்குள்ளும் வசித்தனர். அவர்கள் முகத்தில் விசித்திரமான கோடுகளை வரைந்துகொள்வார்கள். ஆடவர் தம் ஆண்மைக்கு அறிகுறியாக முள்ளம்பன்றிகளின் இரு வக்கிர தந்தங்களைக் கன்னங்களின் இரு பக்கத்திலும் அணிந்து கொள்வார்கள். இதனால் விலங்குகளையும் அவர்கள் அச்சுறுத்த முடிந்தது. அவர்கள் வெகு எளிதான உடை அணிந்து, மிருகங்களின் எலும்புகள், ஓடுகள், கற்கள், மூங்கில் இவைகளினாலான ஆயுதங்களைத் தாங்கிக் கொண்டு நடமாடித் திரிந்தார்கள்.

இவ்விதச் சூழ்நிலை அமைந்த தேசத்தை மாறன் மஹாவங்ஸன் ஒரு வனவாச ஸ்தலம் எனக்கொண்டிருந்தான். அவனும் அவன் பரிவாரங்களும் முதலிலே கடலோரத்தில் குடிசைகள் கட்டி வாழ்ந்தனர் ; இந்து முறைப்படி கடவுளை வணங்கினர் ; தங்களுக்கு ஆக்கமும் ஆற்றலும் அளிக்கும்படி கடவுளைப் பிரார்த்தித்தனர்.

மாறன் மஹாவங்ஸன் ஆட்சிக்காலத்திலே இந்தியாவிலிருந்து பல கப்பல்கள் தொடர்ந்து லங்காசுகத்திற்கு வந்தன. இரவு வேளையிலே அக்கப்பல்கள்மீது விளக்குகள் எரிந்துகொண்டிருக்கும். கப்பல்களில் வந்தவர்கள் தங்களுக்கெனக் கடற்கரையில் கூடாரங்கள் அடித்துக் கொண்டனர். தங்கள் பாதுகாப்பின்பொருட்டும் நிரைக் கட்டைகள் அடித்துக்கொண்டார்கள். மலாயாவின் பூர்வ குடிகள் இவை எல்லாவற்றையும் கண்டு முதலில் அச்சம் எய்தினர் என்றாலும், பிறகு நாட்டுக்கு வந்தவர்களுக்கு உணவு ஆக்கிக் கொடுக்கத் துணிவுற்று முன்

வந்தார்கள். ஆயினும், அவர்களில் சிலர் இரவுநேரத்தில் தம் ஆயுதங்களைக்கொண்டு மாறன் மஹாவங்ஸனையும் அவனைச் சேர்ந்தவர்களையும் அடிக்கடி இடர்ப்படுத்தி வந்தார்கள்.

பூர்வ குடிகள் இவ்வாறு நடந்துகொண்டது மாறன் மஹாவங்ஸன் கூட்டத்தாருக்கு ஓர் அறைகூவலாய் இருந்தது. ஆகையால், பூர்வ குடிகளை எதிர்த்துச் சண்டை செய்தார்கள். பூர்வ குடிகளில் சிலர் தோற்கடிக்கப்பட்டார்கள். வேறு சிலர் கைதிகளாயினர். மற்றையவர்கள் அதிக சேதத்துடன் காடுகளுக்குள்ளே ஓடினர். மாறன் மஹாவங்ஸன் படையினர் அவர்களைத் தொடர்ந்து விரட்டினார்கள். இதனால், சுயகுடிகள் பயங்கொண்டு தங்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்வதன்பொருட்டு மாறனின் ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்டார்கள். பிறகு அவர்கள் அமைதியுடன் வாழ்ந்து மாறனை ஒரு தெய்வமெனக் கொண்டாடினார்கள். அதிலிருந்து பூர்வ குடிகளை மாறன் அன்பு ஆதரவுடன் நடத்தினான்.

மாறன் தன் ஆதிக்கத்தின்கீழ் வந்த பிரதேசத்திற்குக் கோமானானான். தனக்கும் தன்னைச் சேர்ந்தவர்களுக்கும் ஒரு கோட்டை கட்டினான். ராஜாங்கத்தில் பல இலாக்காக்களை ஏற்படுத்தினான். நிர்வகிப்புக்குச் சுய குடிகளோடு இந்தியாவிலிருந்தும் ஆட்களைத் தேர்ந்தெடுத்தான். லங்காசுகத்தை நிறுவி மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் இன்றைக்குப் புலௌ பரிச்சா (Pulau Percha) என்று சொல்லப்படும் தீவைத் தன் ராஜ்யத்துடன் சேர்த்துக்கொண்டான். இதற்கே புலௌ லங்காவி என்ற பெயரும் வழங்கப்படுகிறது. காவி என்பது ரிஷிகள் சன்னியாசிகள் தம் ஆடைகளுக்குத் தோய்க்கும் காவியாகும்.

மாறன் தன் நாட்டை எட்டு ஜில்லாக்களாகப் பிரித்

திருந்தான். அவைகளின் பெயர்கள் : பலித் (இப்பொழுது பேர்லிஸ்), கெடா, சேது (இப்பொழுது செட்டுள்), திரங், சத்துன், கங்கா, தமெலன், லங்காபுரம்.

மாறன் பள்ளிக்கூடங்கள் நிறுவித் தன் மொழியைச் சுய குடிகளுக்குப் படிப்பித்தான். ஆலயங்கள் கட்டிச் சைவ தெய்வங்களை அங்கே நிலை நாட்டி, குடி ஜனங் களுக்குள்ளே சமயப் பற்றை வளர்த்தான். புது மொழி யைச் சுய குடிகள் ஆவலுடன் கற்றனர்.

மாறன் ஓர் அகண்ட சாம்ராஜ்யத்தை நிறுவ விரும் பினான். தன் மக்களை மூன்று திக்குகளுக்கு அனுப்பினான். அவனது மூத்த மகன் ஒரு பெரிய படையுடன் வடக்கே சென்று, மீனம் நதியை அடைந்தான். அந்நதிப் பிரதேசம் எழிலும் செழிப்பும் நிறைந்திருந்தது. அங்கே ஒரு குறிச் சியை ஏற்படுத்தி அதற்கு அயோத்தியா என்று பெயரிட் டான். இது வட இந்தியாவிலுள்ள அயோத்திமாநகரை நினைவூட்டும் பெயராம்.

அயோத்திப் பிரதேசத்திலிருந்த சுய குடிகள் இவ்விள வரசனையும் இவனது பரிவாரத்தையும் அடிக்கடி தாக்கி வந்தார்கள். எனவே, ஒரு நாள் இளவரசன் அவர்களைத் துரத்திச் சென்று முறியடித்தான். அது தொடக்கம் சுய குடிகளின் தொல்லை ஒழிந்தது.

மாறனின் இரண்டாவது மகன் **காஞ்சி சர்ச்சனன்** என்பான் ஒரு படையுடன் தெற்கே சென்று இன்று பேரா நதி என்று வழங்கப்படும் ஆற்றுப் பிரதேசத்தை அடைந்தான். அங்கே சுதேசிகள் அவனை எதிர்த்துச் சண்டை செய்து தோல்வி அடைந்தார்கள். பிறகு காஞ்சி சர்ச்சனன் தன் தெய்வத்தை வணங்கி இந்திர சக்தி என்னும் பெயர் கொண்ட அம்பை எய்தான். அது

சென்று தைத்த இடத்திற்குக் **கங்கா நகரம்** என்று பெயரிட்டான்.

மஹாவங்ஸனின் மகள் படையுடன் கிழக்குத் திசையை நோக்கிச் சென்று அடர்ந்த காடுகளையும் உயர்ந்த மலைகளையும் கடந்து 6000 சதுர மைல் கொண்ட தேசத்தை அடைந்தாள். கம்பீரமும் அழகும் நிறைந்த அவளது தோற்றம் அங்குள்ள சுய குடிகளை அவளுக்கு அடிபணியச் செய்தது. அவர்கள் அவளைத் தெய்வமென வணங்கினர். அவள் ஆங்கு நிறுவிய நாட்டிற்குப் பத்தினி என்று பெயரிட்டாள். இன்று அவ்விடம் பட்டாணி என்று சொல்லப்படுகிறது.

இவை இவ்வாறிருந்துகொண்டிருக்க, மாறன் மஹாவங்ஸனுக்கு உடல் நோய் கண்டு, அவன் சுகத்துக்காகத் திமோர் தீவுக்குச் சென்றான்; அங்கு வேட்டையாடச் சென்றிருந்த வேளையில் நரம்புத்தளர்ச்சியடைந்து இறந்து விட்டான். அவனது பிரேதம் லங்காசுகத்துக்குக் கொண்டுவரப்பட்டு ஜெரைக் குன்றின் அடிவாரத்தில் புதைக்கப்பட்டது. மஹாவங்ஸன் இறந்த பின் சாம்ராச்சியத்தில் பிளவுகள் உண்டாயின. ஒவ்வொருவரும் தத்தம் பிரதேசத்தை லங்கா சுகத்தினின்றும் பிரித்துக்கொண்டு சுய ஆட்சி புரியத் தொடங்கினர்.

---

# 10. மஹா போதி ஸத்வன்

மாறன் மஹாவங்ஸன் நோய்வாய்ப்பட்டுத் திமோர் தீவுக்குப் போயிருந்த போது அவனது கடைப்பிள்ளை போதி ஸத்வன் இளவரசனாக நியமிக்கப்பட்டிருந்தான்.

அவன் இளைஞனாய் இருந்ததனால் அண்ணன்மார்களை யும் தமக்கையையும் எவ்விதத்திலும் எதிர்க்க முடிய வில்லை.

போதி ஸத்வன் கல்வி கேள்விகளில் சிறந்தவன்; பக்திமான்; அறவோன்; க்ஷத்திரியருக்குரிய வேட்டை யாடும் தொழிலிலும் கெட்டிக்காரன். இந்தியாவிலிருந்து சிற்பிகளை வரவழைத்துத் தனது தலைநகரான சுவர்க் கத்தில் அனேக சைவ பௌத்த ஆலயங்களைக் கட்டுவித் தான்; தகப்பன் கட்டிய மண்டபங்களைப் புதுப்பித்தான். இந்திய மேளங்கள், பஜ பஜந்திரி என்ற இரு ஊது குழல் கள் இவைகளை ஆராதனை வேளையிலும் அரசாங்கச் சடங் குகளிலும் பாவிக்கும்படி செய்தான்; தங்கத்தாலும் வெள்ளியாலுமான முக்கோண யந்திரத் தகடுகளில் வேதாகம மந்திரங்களைப் பாலி சம்ஸ்கிருத பாஷைகளிலே எழுதுவித்தான்; சம்ஸ்கிருதத்தை அரசாங்க மொழியாக் கினான். இவன் காலத்தில் வட இந்தியா, தென் இந்தியா ஆகிய இடங்களிலிருந்து ஏராளமான ஜனங்கள் லங்கா சுகத்திற்கு வந்து குடியேறினார்கள்.

போதி ஸத்வன் காலத்தில் இந்துக்களுக்கும் சுய குடி களுக்கும் கலப்பு மணம் ஏற்பட்டது. அரசனும் குடி களும் எண்ணத்திலும் செய்கையிலும் ஒன்றுபட்டிருந் தார்கள். தேசம் எல்லாத் துறைகளிலும் வளர்ச்சி யடைந்தது. அதன் பெயர் எங்கும் பரவியது.

போதி ஸத்வனுக்கு ஒரு மகன் பிறந்தான். இந்து வழக்கப்படி தன் மகனை முன்னிட்டுப் பரிசுகள் வழங்கினான். அரசாங்கத் தலைவர்களோடு அயோத்தியா மன்னன், பத்தினி அரசி, கங்கா நகர மன்னன் ஆகி யோரும் குழந்தைக்கு விலையுயர்ந்த வெகுமதிகள் அனுப் பினார்கள். போதி ஸத்வன் அயோத்திக்குத் தங்கத்தின

லான ஒரு சிறு மரமும், தங்கத்தினலான சிவனின் திரி சூலமும் அனுப்பினன். இவை வெள்ளித் தகட்டினல் பொதியப்பட்டிருந்தன. இன்னும் சகோதர பரஸ்பரத்தை நிலவச் செய்தற்குக் கொண்டாட்ட நாட்களிலே பரிசுகள் தங்களிடையே பரிவர்த்தனஞ் செய்துகொள்ளல் வேண்டு மென்றும், தங்கள் வழித்தோன்றல்கள் அவ்வழக்கத்தைக் கையாள வேண்டுமென்றும் அண்ணன்மாருக்கும் தமக் கைக்கும் போதி ஸத்வன் ஓலை அனுப்பினன்.

அவன் தன் நாட்டில் இந்து பௌத்த மத ஆராய்ச் சிக்காகப் பல நிலையங்களை நாட்டினன். இன்றைக்குத் தொகை (Tokai) என்று சொல்லப்படும் இடத்தில் பல கோவில்கள் கட்டி அவற்றின் சுவர்களில் சமய நீதி வாக் கியங்களை வெட்டுவித்தான். பண்டிதர்கள், சன்னியாசி கள் ஆகியோரை ஜாவா, சுமத்திரா முதலிய நாடுகளுக்கு அனுப்பி இந்து பௌத்த மதப் பிரசாரம் செய்வித்தான். தன் இறுதி நாட்களில் தனிமையாய் இருந்து கடவுளைத் தியானித்து வந்தான்.

---

# 11. ஸ்ரீ மஹாவங்ஸனும் பிரீததுரியனும்—I

மஹா போதி ஸத்வன் தவநெறி நின்று இறந்தான். பிறகு அவன் மகன் ஸ்ரீ மஹாவங்ஸன் பட்டத்துக்கு வந் தான். போதி ஸத்வன் தேடி வைத்திருந்த செல்வமுஞ் சீரும் சிறப்பும் மஹாவங்ஸனுக்கு நல்ல வாய்ப்பாக இருந் தன. இன்னும், அவன் ஆற்றல், ஒழுக்கம், எழில் உடை யவன். மலாயர்களும் இந்தியர்களும் ஒருங்கே அவனை மதித்துப் பாராட்டலாயினர்.

இந்நாட்களிலே தங்கள் இனத்தைச் சேர்ந்த ஒருவனே பட்டத்துக்கு வர வேண்டும் என்ற விருப்பம் மலாயர்களுக்கு உண்டாயிற்று. இவ்விருப்பம் நிறைவேற வேண்டுமாயின், ஸ்ரீ மஹாவங்ஸன் பட்டத்தைத் துறக்க வேண்டும். ஆனால், மலாயர்களுக்கு அவனிடத்திலே அதிக அபிமானம் இருந்ததனால், அவர்கள் அதை விரும்பவில்லை. எனவே, தம் அரசனுக்கு ஒரு யோசனை கூறினார்கள். அஃதாவது, ஸ்ரீ மஹாவங்ஸன் தன் மலாய்த் தலைமை அதிகாரியின் மகளை மணந்துகொள்ள வேண்டும் என்பதே. இதற்கு அவன் இசைந்தான். மலாய்ப்பெண் ஒருத்தியின் வயிற்றில் பிறக்கும் குழந்தை மலாயனாகவே இருப்பான் என்றும் தகப்பனுக்குப் பிறகு அவனே பட்டத்துக்கு வருவான் என்றும் கருதி மலாயர்கள் திருப்தி அடைந்தார்கள். என்றாலும், ஸ்ரீ மஹாவங்ஸன் மலாயர்களை முழுதும் நம்பிவிடவில்லை. ஆதலால், தற்பாதுகாப்பின்பொருட்டு இந்தியக் குடியேற்றக்காரருக்கு மட்டும் ஒரு கோட்டையை ஜெரைக் குன்றின் அடிவாரத்தில் கட்டுவித்தான். அதற்குக் கோட்டா கோல மூடா அல்லது சுங்கை மாஸ் என்னும் பெயரிடப்பட்டது. (சுங்கை = சுங்கம்); அதாவது இறை அல்லது வரி வாங்கும் ஸ்தலம் என்னும் கருத்துப்பெறும். இக்கோட்டை கட்டுவதை ஸ்ரீ மஹாவங்ஸன் தானாகவே பார்வையிட்டான்.

அவன் மறைந்த பின்னர் அவன் மகன் ப்ரீததுரியன் சிம்மாசனம் ஏறினான். ப்ரீததுரியன் மேலே நாம் படித்த மலாய்ப் பெண்ணுக்குப் பிறந்தவன். இவனை முதலாம் மலாய் அரசன் என்று கூறலாம். மலாயர்களும் மலாய்த் தலைவர்களும் இவனிடம் அதிக ப்ரீதியாய் இருந்தார்கள்; அவன் விரும்பியபடி அவனை ஆட்சி செய்ய விட்டார்கள். இஃது அவனுக்குக்

கேட்டை உண்டுபண்ணிற்று; அவன் யதேச்சாதிகாரமாக நடக்கப் பழகினன். பழைய நான்கு மந்திரிகளின் உத்தியோகப்பதவிகளை ஒழித்துவிட்டு, தானே சர்வாதிகாரியாக இருந்து அரசாங்கத்தை நடத்தலானன். தன் தகப்பனர் கட்டிய சுங்கை மாஸ் கோட்டையை ஒதுக்கி வைத்துவிட்டு, தான் ஒரு புதுக்கோட்டையைக் **கோட்டா ஒளர்** என்ற இடத்தில் அமைத்தான். இதைக் கட்டுவதற்காக வரிப்பணம் வசூலித்தான். அப்பணத்தைக்கொண்டு சுமத்திராவிலுள்ள **அச்சை** இராச்சியத்திலிருந்து விலை உயர்ந்த இரும்புத் தகடுகளை வரவழைத்து, தான் அமைத்த புதுக் கோட்டையின் மதில்களுக்கும் தரைக்கும் பாவித்தான்.

பிரீததுரியனுக்கு வேட்டையாடுவதில் மிக விருப்பம்; மிருகச் சண்டைகளைப் பார்ப்பதில் அவனுக்கு உவகையுண்டு. காட்டு மிருகங்களை விருத்தி செய்வதற்காக வன பரிபாலன சட்டங்கள் இயற்றினன். அச்சட்டங்களுக்கு மாருக நடப்போர் சிரச்சேதம் செய்யப்படுவார்கள் என்றும் விதித்தான். அவன் கல் நெஞ்சன்; குரூரத் தன்மையுடையவன். விலங்குகளைக் கொல்லுவதிலும் வெட்டுவதிலும் அவனுக்கு இன்பம் இருந்தது. இறுமாப்பு அதிகமுடையவனய் இருந்தான். அவன் எவரையும் பொருட்படுத்தவில்லை. சினம் மேலிடுகிற வேளைகளில் எதிரிகளைப் பார்த்துத் தன் பற்களை நெருமுவான். இந்தியர்கள் இதைக் கண்டு அவனுக்குப் "பல தந்தன்" (வலிமையான பல்லுடையோன்) எனப் பட்டப்பெயர் இட்டார்கள். மலாயர்கள் அவனுக்கு மிகவும் அஞ்சினர்கள். வேறு சிலர் அவனைப் புத்தி மாருட்டக்காரன் என்றார்கள்.

நாட்கள் செல்லச் செல்ல மலாயர்கள் பிரீததுரியனின் துர்க்குணங்களையும் நடத்தையையும் கண்டு முணுமுணுக்

கத் தொடங்கினர்கள். அவனை வெறுக்கத் துவங்கினர் கள். அவன் இதைத் தெரிந்ததும் சிலரைக் கைதுசெய்து *விசாரணையின்றி அவர்களைக் கொன்றான்.* இதனால் மலா யர்களுக்குள்ளே பெருங்கவலையும் அதிருப்தியும் ஏற்பட் டன. நிலைமையைச் சீர்படுத்த அவர்கள் எவ்வளவோ முயன்றும் ஒன்றும் ஆகவில்லை. அவர்களில் சிலர் பிரீத துரியனது மனைவி மூலமாக அவனைத் திருத்துவதற்கு முயன்றார்கள். தங்கள் துன்பங்களை நீக்கிக்கொள்ள அரசியின் துணையை நாடினர்கள்.

இதைப் பிரீததுரியன் அறிந்து கோபங்கொண்டான். தன் தூஷணையில் சம்பந்தபட்டவர்கள் எல்லோரையும் தண்டிக்க முயன்றான். பொது ஜனங்களின் உணர்ச்சி குமுறி எழுந்தது. அரசனது 'தெய்வாதீன உரிமையைப் பற்றிப்' பலத்த விவாதங்கள் நிகழ்ந்தன. பிரீததுரியன் தன் மலாய்த் தலைவனைக்கூடக் கண்டு பேச மறுத்துவிட்டான். எனவே, குடிபடைகள் ஆயுத பலங்கொண்டு, அரசனால் விளைந்துகொண்டிருந்த ஊழல்களைப் போக்க நினைத்தார் கள்.

பிரீததுரியன் அவர்களை நையாண்டி பண்ணினன். என்றாலும், ஏதேனும் கிளர்ச்சி எழுமாயின் அதை அடக் குவதற்குப் பட்டாளமும் ஆயுதங்களும் திரட்டினன். அரசாங்கப் பழைய வீரர்களுக்குப் பெரு வெகுமதிகள் அளிப்பதாகச் சொல்லி அவர்களையும் தன்னுடன்சேர்த்துக் கொண்டான். தன் மூதாதை மாறன் மஹாவங்ஸனின் பெயரைக் காப்பாற்றுவதற்கு வீரர்கள் முன்வரல் வேண் டும் எனச் செய்தி விடுத்தான். இதனால், அவனுக்கு ஆதரவு கிடைத்தது.

---

# 12. ஸ்ரீ மஹாவங்ஸனும் பிரீததுரியனும்—II

பிரீததுரியனுக்கும் குடிபடைகளுக்கும் மூண்ட இக் கலகத்தில் இந்தியத்தலைவர்களுள் பெரும்பாலோர் நடு நிலைமை வகித்தார்கள். அரசின் வட தென் பாகங்களைச் சேர்ந்த மலாய்த் தலைவர்கள் மன்னனை எதிர்த்துச் சண்டை செய்வதற்கென ஒரு பெரும்படையைத் திரட்டினார்கள். இதில் சேர்ந்தவர்கள் பெரும்பாலோர் நடுத்தர வகுப்பார் களே. அவ்வகுப்பிலே செல்வாக்கும் கௌரவமும் நிறைந்த மலாய்த் தலைவர்கள் இருந்தனர். பிரீததுரியன் தன் அரசாங்க சேனைகளைத் திரட்டினான். கோட்டை மீது பெரிய பீரங்கிகளை ஏற்றினான். தானே இரும்புப் போர்க் கவசம் அணிந்துகொண்டு தன் படைகளின் யுத்த ஆயுதங்களைக் கவனித்தான். இனி, குடி ஜனங்கள் எவ் விதத்திலாவது அரசனைத் தோற்கடிப்பதென உறுதிசெய்து கொண்டார்கள். கோட்டைச் சுவர்களில் உயரமான ஏணிகளை வைத்து எப்படியாயினும் உட்சென்று ஏராள மான எறிபடைகளைக் கொண்டு கோட்டையைத் தகர்ப்ப தென எத்தனித்தார்கள். எனவே, எங்கும் பெரிய பர பரப்பு ஏற்பட்டிருந்தது.

அரசி புத்திசாலியானபடியால் இரகசியமாக மலாய்த் தலைவர்களைக் கூட்டி அவர்கள் வாயிலாக எல்லாச் செய்தி களையும் அறிந்துகொண்டாள். தன் கணவன் குடி ஜனங்கள் விரும்பியபடி நடக்க வேண்டியது அவசியம் என்பதை உணர்ந்தாள். அவள் இராச்சியப் படைகளிடம் வெடி மருந்துகள் பாவிக்க வேண்டாமெனக் கேட்டுக் கொண்டாள். சாதாரண வெற்று வேட்டுகளையே உப யோகிக்கும்படி சொன்னாள்.

சண்டை தொடங்கிற்று. கோட்டை ஏழு நாள் இரவு பகலாக முற்றுகையிடப்பட்டது. குடி ஜனங்களுக்கும் எதிரிகளுக்கும் பெருஞ்சேதம் ஏற்பட்டிருக்குமென அரசன் நினைத்தான், ஆனால், அரசியின் வேண்டுகோளின்படி படைகள் நடந்துகொண்டதனால் இரு சாரிலும் சேதம் ஏற்படவில்லை. என்றாலும், எதிரிகள் ஏணிகளைப் பாவித்துக் கோட்டை மதில்கள்மீது ஏறிவிட்டார்கள். இதனைக் கண்ட பிரீததுரியன் தனக்குத் துரோகம் தன் கோட்டைக்குள்ளேயே நடந்துவிட்டதாக உணர்ந்தான், அவன் மனம் உடைந்தது. மாறுவேடம் அணிந்து கோட்டையின் கிழக்கு முகப்பிலிருந்த ஒரு சிறு வாயில் வழியாகக் காட்டினுள்ளே ஓடி மறைந்தான். எதிர்ப்பகுதியின் தலைவர்கள் கோட்டையின் மேற்குப்புறத்தாலேயே உள் நுழைந்தனர்; கைது செய்யும்பொருட்டு அரசனைத் தேடினார்கள்; அவனைக்கண்டு பிடிப்பதற்கு இராச்சியத்தின் பல பகுதிகளுக்கும் வேவு பார்க்கும் கோஷ்டியார்களை அனுப்பினார்கள். ஆனால், பலன் கிட்டவில்லை.

இதற்குச் சில தினங்களுக்குப் பிறகு முக்கியமான இந்தியர்களுடன் கலந்தாலோசித்து மலாய்த் தலைவர்கள் ஆட்சிப் பொறுப்பை அரசியிடம் ஒப்புவித்தார்கள். அரசி பகட்டு, பதவி, மினுக்கு, கௌரவம் முதலியவற்றை விரும்பியவள் அல்ல; ஆயினும், வேறு வழியில்லாமையால் அவள் அரசாங்கப் பொறுப்பை ஏற்றுக்கொண்டாள். வயதிலும் அறிவிலும் முதிர்ந்த சிலரைக்கொண்டு ஓர் அரசியல் நிர்வகிப்புக்சபைஏற்படுத்தி அதன் ஆலோசனைப்படி நாட்டை ஆட்சி செய்தாள். அவள் தான தருமசிந்தனை உடையவள்; ஆகையால், சிம்மாசனம் ஏறியதும் அதிகமான பணத்தை அறச்செயல்களுக்கு அளித்தாள். விதவைகளும் அநாதைகளும் இரட்சிக்கப்பட்டனர். கிணறு

கள் தோண்டுவித்தாள் : ஏழைகளுக்கு உறைவிடங்கள் கட்டுவித்து அவர்களுக்கு உடையும் உணவும் வழங்கினுள். தன் கணவன் பாவங்களுக்குக் கழுவாய் தேடுவதன்பொருட்டுக் கோயில்கள் கட்டினுள் ; சிதைந்த கோயில்களைச் செப்பனிட்டாள். இத்தகைய உத்தமியைக் குடி ஜனங்கள் ஒரு தேவதையெனக் கொண்டாடினுர்கள். இவ்விதமான ஓர் இந்துப் பெண் முன் காலத்திலே இருந்தாள் என்பது யாவராலும் மெச்சத் தகுந்ததே.

எப்படி இருந்தாலும், சில ஆண்டுகள் செல்ல, அவளுக்கு அரசியல் பொறுப்புப் பெரும்பாரமாய் இருந்தது. அவள் பூரண ஓய்வெடுத்துக்கொள்ள விரும்பினுள். இதனை நிர்வகிப்புச் சபையிடம் தெரிவித்தாள். சபையார் அவள் இடத்தை எடுத்துக்கொள்ளத் தகுதியான ஒருவரைக் குறிப்பிடும்படி அரசியிடமே சொன்னுர்கள். மாறன் மஹாவங்ஸனின் அரச வழி விளங்குவதன் பொருட்டு அந்த வமிசத்தைச் சேர்ந்த ஒருவரை வடக்கே இருந்த அயோத்தியாவினின்ருே அல்லது வேறு இடங்களினின்ருே தேர்ந்தெடுக்க வேண்டுமென அவள் கூறினுள். பிறகு சபையோரின் சம்மதத்தின் பேரில் தன் கணவனின் பெரிய தகப்பனை அயோத்தியா (சீயம்) அரசனுக்குத் தூதர்களை அனுப்பினுள். அவர்கள் திரும்பி வந்து பிரீததுரியனின் இரண்டாம் மனைவியின் மகனைப்பட்டதுக்கு வரச் சொன்னுர்கள். அவன் லங்காசுகத்திலேயே வசித்து வந்தவன். அவன் பெயர் பிரான் மஹா போதி ஸத்வன். இரண்டாம் மனைவி, மாறன் மஹாவங்ஸன் வழியில் வந்தவளாவள்.

அரசியின் உடன்பாடு பெற்ற பிரான் மஹா போதி ஸத்வனுக்குச் சமய அரசாங்கச் சடங்குகளுடன் பட்டம் சூட்டப்பெற்றது. குடி ஜனங்கள் தங்கள் புது அரசனுக்கு

வெற்றி வாழ்த்தொலிகள் முழங்கினார்கள். அரசி இதன் பிறகு தன் விருப்பப்படி ஓய்வெடுத்துக்கொள்ளச் சென்றாள். லங்காசுக அரசியலில் இதுகாறும் ஏற்பட்டவை யெல்லாம் துரிதமான நிகழ்ச்சிகள்.

மாறன் வழித் தோன்றல் அரண்மனையில் இருக்கும் வரை நாடு சீருஞ் சிறப்பும் பெற்று ஓங்கும் எனக் குடி ஜனங்கள் நம்பினார்கள். என்றாலும், பிரீத துரியனின் மகன் தன் தந்தையைப்போன்று ஆகிவிடுவானோ என்ற ஐயம் மலாய்த் தலைவர்கள் பலரிடம் இருந்தது இயல்பே. ஆனாலும், அவர்களுக்கு ஒரு தைரியம் இருந்தது. என்ன வென்றால், அரசனை நியமிப்பதும் விலக்குவதும் குடி ஜனங்களால் முடியும் என்பதாகும்.

---

# 13, பிரான் மஹா போதி ஸத்வன்

பிரான் மஹா போதி ஸத்வன் லங்காசுகத்தில் கடைசி இந்து அரசனாகவும் முதல் முஸ்லிம் அரசனாகவும் இருந்தான். இவன் பேராற்றலும், புத்திக் கூர்மையும், உற்சாகமும் உடையவன்; தன் தகப்பன் அட்டூழியங்களைத் தெரிந்து அவனுக்கு வழங்கப்பட்ட தண்டனை சரியென்றே கருதினான். *அதினின்று* தானும் பாடம் படித்துக்கொண்டான். இவன் குடி ஜனங்கள் விருப்பத்துக்கு மாறாக எதையும் செய்யத் துணியவில்லை.

இவனது முடிசூட்டு விழாவுக்குச் சீயம், சுமத்திரா, ஜாவா முதலிய நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். *அவ்வேளையில்* இவன் செய்த பட்டப் பிரகடனத்திலே சமய சுதந்தரம், பிரஜா உரிமை, குடியேற்றக்காரருக்கும் அன்னியருக்கும் வியாபார உரிமை ஆகியன தன் இராச்சியத்தில் அளிக்கப்படும் எனக் கூறினான். இன்

னும் தேசத்தின் பெயரை **லங்காசுக லின்டெடாங்கன்** எனவும் மாற்றினன். சீயத்தின் உதவியையும் ஆலோசனையையும் வேண்டினன்.

இம்மன்னனின் கானகப் பயிற்சிகள் இவனது உடலை உரம்படுத்தின. கிராமக் குடிகளுடன் இவன் நெருங்கிப் பழகி வந்ததனுல் சாந்த குணமும் தயவும் உடையவனுக மாறிவிட்டான். அரச பரிபாலனத்தைப் பற்றி இவன் நன்கு அறிந்திருந்தான். பட்டத்துக்கு வந்தவுடன் நாட்டு மலாய்த் தலைவர்கள் எல்லோரையும் அழைத்துத் தனக்கு விசுவாசப் பிரமாணம் பண்ணும்படி செய்தான். இது **அலோர்ஸ்டாரில்** நடந்தது. **அலோர்ஸ்டாரின்** பழைய பெயர் **அலோர்ஸ்தியர்**.

காலாஹிதம் என்ற மலாய்த் தலைவன் விசுவாசப் பிரமாணம் செய்ய மறுத்தான். சமய ரீதிப்படி பிரீத துரியனின் வைப்பாட்டியின் மகன் ஒருவனுக்குத் தான் வணக்கம் செலுத்த முடியாதென்று கூறிவிட்டான். பிறகு கலாஹிதம் இராச்சியத்தின் வடக்கே சென்று அரசனைக் கவிழ்ப்பதற்குப் புரட்சி ஏற்பாடுகள் செய்தான். சிவபெருமான் முன்னிலையில் வம்பு வழியில் பிறந்த ஓர் அரசன் லங்காசுகத்துத் திவ்விய சிம்மாசனத்தைத் தீட்டுப் படுத்துகிருன் எனத் துர்ப்பிரசாரம் செய்தான். இப்பிரசாரத்திஞல் பல முக்கிய மலாயர்கள் அவனது கட்சியில் சேர்ந்தனர். அவர்கள் **உதவி** ஒத்தாசையைக்கொண்டு அலோர்ஸ்டாருக்கு நாலு மைல் மேற்கே இருந்த **கோலபத்தான்** (இப்பொழுது கோலகெடா) என்ற இடத்தைக் கைப்பற்றினன்; சுங்கைமாஸ் கோட்டையிலும் ஒரு சிறு படையை நிறுத்தினன்.

அரசன் இவ்விதத் தாக்குதலை எதிர் பார்க்கவில்லை. **என்ருலும் சுணங்காது சீயத்துக்குத்தூதனுப்பி அந்நாட்டு**

அரசனது உதவியைக் கோரினன். அத்துடன் தனது படையையும் திரட்டிக்கொண்டு சுங்கை மாஸ் கோட்டைக்குச் சென்று அதை முற்றுகையிட்டான். ஆயினும், அரசாங்கப் படை கோட்டையை அடைவதில் காலதாமதம் ஏற்பட்டதனால், அது கோட்டைக்குள் நுழைய முடியவில்லை. கோட்டையைச் சுற்றி நிலைமை குழப்பமுற்றிருந்தது. அவ்வேளையிலே அதிருஷ்டவசமாகச் சீயத்து உதவிப்படையொன்று அரசனின் சகாயத்திற்கு வந்து சேர்ந்தது. எனவே, இரு படைகளுமாகக் கூடி கலாஹிதம் என்பவனின் கலகப்படைகளைத் தாக்கிச் சின்னபின்னமாக்கின. சுங்கை மாஸ் கோட்டை மீட்கப்பட்டது. இவ்விதமான கிளர்ச்சிகள் மீண்டும் தோன்றாவண்ணம் புரட்சிக்காரத் தலைவர்கள் எல்லோரையும் கைது செய்து பொது ஜனங்களுக்கு முன்னால் பிரான் மஹா போதி ஸத்வன் சிரச்சேதம் செய்வித்தான்.

பிறகு அரசன் வெற்றி வீரனாகத் தனது ராஜதானிக்குத் திரும்பினான். சீயங்காரர் தனக்குச் செய்த உதவியின் பொருட்டு அவர்களைப் பாராட்டி உபசரித்தான். இந்து வழக்கப்படி சீயத்து அரசனுக்குத் தங்கத்தினால் செய்யப்பட்ட பூ ஒன்றைப் பிரான் மஹா போதி ஸத்வன் அனுப்பினான். லங்காசுகவாசிகள் பல வெகுமதிகளை அளித்தும் சீயத்துப் படைகளுக்குத் தங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள். இவ்விதமாக லங்காசுகவாசிகளுக்கும் சீயங்காரருக்கும் பரஸ்பரம் ஏற்பட்டது. சீயங்காரர்களின் கருத்துக்கள், பழக்க வழக்கங்கள், நடையுடை பாவனைகள், மொழி ஆகியவற்றை லங்காசுகவாசிகள் விரும்பினார்கள். இன்னும், தங்கள் பெண்களைச் சீயப் போர் வீரர்களுக்கு மணம் செய்து கொடுத்தார்கள்.




மலேசியா சரித்திர
சம்பந்தமான இடங்கள்

இதனால் இரு தேசத்தவர்களுக்குமிடையே ஜாதிக்கலப்பு ஏற்படலாயிற்று.

சீயத்தின் கலாசாரம் லங்காசுக வாசிகளின் மனப் பான்மையை விசாலமடையச் செய்தது. ஆதலினாலே அந்நியர்கள் எல்லோரையும் உபசரிக்கவும் அவர்களிடமிருந்து புது விஷயங்களைக் கற்றுக்கொள்ளவும் தொடங்கினார்கள். லங்காசுகத்தின் சீரும் சிறப்பும் ஓங்கவே, ஜாவா, சுமத்திரா இந்நாடுகளில் கி. பி. 1250—1300 அளவில் வசித்து வந்த இந்திய முஸ்லீம் மதாசாரியர்கள் லங்காசுகத்திற்கு வரத் தொடங்கினார்கள். இன்னும் கி.பி. 1474 அளவில் ஸைக் அப்துல்லா என்னும் பெயரிய இஸ்லாமிய பிரசாரகர் லங்காசுகத்துக்கு வந்து சேர்ந்தார். இவர் "அலங்காசுகப்" என்ற ஓர் இந்துப் பிரதேசத்தைப் பற்றி அராபிய நாட்டிலேயே கேள்விப்பட்டிருந்தார். அது பல நூற்றாண்டுகளாகச் செல்வமுஞ் செழிப்பும் படைத்து, ஈயம், மூங்கில் ஆகிய பொருள்களில் நல்ல வியாபாரம் செய்கின்ற நாடாகவும் இருத்ததாக அவர் அறிந்திருந்தார். எனவே, லங்காசுகம் ஸைக் அப்துல்லாவைக் கவர்ந்தது. அவரது தோற்றமும் பாவனையும் அவர் ஒரு பேரறிஞர் என்பதைக் காட்டின. ஜனங்கள் திரள் திரளாக வந்து அவர் பிரசங்கங்களைக் கேட்டார்கள். அவர் பேச்சு வன்மையும் உடையவர். இந்துக்களாய் இருந்த பலர் இப்பொழுது இஸ்லாமியர்களானார்கள்.

ஸைக் அப்துல்லாவைப் பிரான் மஹா போதி ஸத்வன் தனது கொலு மண்டபத்துக்கு வரவழைத்து அங்குப் பிரசங்கம் செய்யுமாறு கேட்டுக்கொண்டான். அப்துல்லாவின் பேச்சு அரசன் மனத்தைக் கவர்ந்தது. எனவே, அவன் இஸ்லாமிய சமயத்தைத் தழுவி, தன் பெயரை முஸ்ஸூபுல் ஷா என மாற்றிக்கொண்டான். ஸைக்

அப்துல்லாவைத் தனது ராஜாங்க மதப் பிரசாரகராக நியமித்தான். அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி. முஸ்ஸாபுல் ஷா இஸ்லாமிய சமயத்தைப் பின்பற்றும்படி குடி ஜனங்களைக் கட்டாயப்படுத்தவில்லை. என்றாலும், ஜனங்கள் படிப்படியாக ஸ்லாமிய சமயத்தைத் தழுவத் தொடங்கினர்கள்.

அரசன் இறந்த பின்னர் அவன் மகன் முகம்மது ஷா பட்டத்துக்கு வந்தான். அவன் இஸ்லாமிய சமயம், கலாசாரம் ஆகியவற்றைத் தீவிரமாய்ப் பரப்பினன். இஸ்லாமிய பள்ளிக்கூடங்கள் ஸ்தாபித்தான். இவைகள் மூலம் அராபிய வார்த்தைகள் ஏராளமாக மக்களின் தினசரிப் பேச்சில் நுழைந்தன. அராபிய எழுத்துக்களும் கையாளப்படலாயின. நாட்டின் பெயரைக் "கெடாதாருல் அமன்" என்றும் மாற்றினன். அராபிய மொழியில் தாருல் என்றல் 'தேசம்' என்றும், அமன் என்றல் 'இரட்சிக்கப்பட்ட உடைமைகள்' என்றும் பொருளாகும்.

முகம்மது ஷா ஏற்கனவே இருந்த சைவ ஆலயங்களை அழித்து அவைகள் இருந்த இடத்தில் பள்ளிவாசல்கள் கட்டினன். இஸ்லாமிய சிற்ப வேலைகளைக் கட்டடங்கள் அமைப்பதில் கையாண்டான். இவ்வாறக அவன் மூலமாகவும், அவன் வழி வந்தவர்கள் மூலமாகவும் இஸ்லாமிய சமயமும் கலாசாரமும் மலாய் நாட்டில் பரவலாயின.

## 14. ஸ்ரீ விஜயா இராச்சியம்

இந்தியர்கள் சுமார் 3,000 வருடங்களுக்கு முன்னர் சுமத்திராவில் பல இராச்சியங்களை ஸ்தாபித்தார்கள். அவை யாவற்றுள்ளும் மலாக்கா ஜலசந்தியைப்பார்க்க

இப்போதைய பலம்பாங் இருக்குமிடத்தின் அருகிலிருந்த ஸ்ரீ விஜயா * இராச்சியமே சிறப்புடையது. ஆதியில் கலிங்கத்திலிருந்து வந்த சைலேந்திர (மலை) அரசினர்கள் அதனை ஆண்டார்கள். இக்காலை பேராவை அரசு புரிந்து வரும் அரசர்கள் இம்மன்னர்களின் வழித்தோன்றல்களாவர். ஸ்ரீ விஜயா இராச்சிய வாசிகள் மஹாயன பௌத்த மதத்தை அனுஷ்டித்து வந்தார்களென்பதை முன் பாடத்தில் படித்தோம். அவர்கள் போரில் வெகு தீரர்களாகையாலே கி. பி. 5-ஆம் நூற்றுண்டுமட்டில் *சுமத்திரா முழுவதையும், 8-ஆம் நூற்றுண்டில் மத்திய* ஜாவாவிலிருந்த இன்னுமோர் இந்து இராச்சியத்தையும், 9-ஆம் நூற்றுண்டில் மலாயா தீபகற்பம் முழுவதையும், இன்னும் போர்னியோ, பிலிப்பைன், ஸெலிபிஸ், பார்மோஸா, இலங்கையின் தென்பாகம் ஆகியவற்றையும் தங்களுக்கு அடிமைப்படுத்தினர்.

*ஆயினும், மத்திய ஜாவாவிலுள்ள* இந்து இராச்சியத்திற்கும் ஸ்ரீ விஜயாவுக்கும் வெகு சீக்கிரத்தில் விரோதம் ஏற்பட்டு மத்திய ஜாவா சுவாதீனமடைந்தது.

முன் காலத்தில் பலம்பாங்கானது பல துறைகளிலும் விருத்தியடைந்து, பிரசித்தி பெற்ற பட்டினமாகவும் சிறந்த துறைமுகமாகவும் விளங்கிற்று. சம்ஸ்கிருதப் பயிற்சிக்காகக் கலாசாலைகள் இருந்தன. சீன சந்நியாசிகள் இவற்றில் தங்கியிருந்து கலை பயின்றுர்கள். சீனுக் கடல், வங்காளக் குடாக் கடல், சுண்டா ஜலசந்தி, கிரா பூசந்தி ஆகிய திசைகளிலிருந்து கப்பல்கள் வந்து பலம்பாங்கை

* விஜயா = பெரு வெற்றி

‡ இலங்கை மலாயர்கள் (Ceylon Malays) அந்நாட்களிலே இலங்கையில் குடியேறிய ஸ்ரீ விஜயா ராஜ்ய வாசிகளின் சந்ததிகளாவர்.

அடைந்தன. இங்நகர வாசிகள் மிக்க செல்வப் பெருக்குடையோராய் இருந்தனர். நெல், கரும்பு, தென்னை, பாக்கு முதலியன பயிரிடப்பட்டன. கரியபோளம், யானைத்தந்தம், காண்டா மிருகக் கொம்பு, கற்பூரம், துணி மணிகள், ஈயம், பொன் முதலிய வஸ்துக்களில் வியாபாரம் செய்தனர்.

அரசர்கள் மிகச் செல்வாக்குப் படைத்திருந்தமையால், குடிகளிடமிருந்து அதிக வரிகளை வாங்கவில்லை. பட்டினம் பல மைல்களுக்கு மதில்களால் சூழப்பட்டிருந்தது. பல கிராமங்களுமிருந்தன. ஸ்ரீ விஜயா இராச்சியம் மலாயாவின் தலைமையாயிருந்த காலை மலாயாவிலே எடுக்கப்பட்ட ஈயம் முழுவதும் சீனுவிற்கு விற்கப்பட்டது.

கி. பி. 11-ஆம் நூற்ருண்டில் இவ்விராச்சியத்திற்கு இறுதிக்காலம் கிட்டியது. இதன் மன்னர்கள் பேரவாவால் அந்நிய வியாபாரிகளுக்குக் கொடு வரிகளை விதித்தனர். சமயச் சண்டை, வர்த்தகச் சண்டை முதலியவை தலையெடுத்தன. குடிகளின் தொழில்களுக்குப் பல பிரதிகூலங்கள் உண்டாயின. அந்நியரும் இவ்விராச்சியத்தைக் கொள்ளையடிக்கத் தொடங்கினர். அவர்களுள் முக்கியமானவர் இருவர். முதலாமவர் தமிழ்நாட்டுச் சோழ மன்னர்கள். இவர்கள் சுமார் 200 ஆண்டு காலமாகப் பல தடவை ஸ்ரீ விஜயா மீது பாய்ந்து அதைச் சேர்ந்த பல நாடுகளைச் சூறையாடினர். இவர்களாலேதான் பலம்பாங் சிதைவுற்றது. அதன் பிறகு ஸ்ரீ விஜயாவுக்கு ஜம்பி எனும் வேருெரு பட்டினம் தலைநகரமாயிற்று. இரண்டாவதாகக் கீழ் ஜாவாவிலிருந்த மஜபாஹித் என்னும் இந்து இராச்சியமானது கி. பி. 1377-ல் விஜயாவைச் சேர்ந்த எல்லா ஊர்களையும் கைப்பற்றியது. ஜம்பி அழிந்துபட்டது. போதாக்குறைக்கு, கி. பி. 13-ஆம்

நூற்றுண்டில் வட சுமத்திரா இந்திய முஸ்லிம்களால் பிடிக்கப்பட்டது. இத்துர் அதிருஷ்டங்கள் காரணமாக ஸ்ரீ விஜயா மறைந்து பட்டது.

முன் காலத்தில் சுமத்திராவின் தெற்குக் கரையிலே **கண்டோலி** என்ற சைவ ராஜ்யம் ஒன்று இருந்தது. **கந்தவி அல்லது கதலி** என்ருல் வடமொழியில் 'வாழை' எனப் பொருள்படும். இதினின்று இவ்விராச்சியம் வாழை நிறைந்த நாடாய் இருந்திருக்குமென ஊகிக்க இடமுண்டு. கி. பி. 454 மட்டில் **ஈசுவர நரேந்திரன்** எனும் மன்னன் இதனை ஆண்டான். இவன் சீனுவுடன் உறவு பாராட்டித் தன் தூதர்களை அங்கு அனுப்பினுன். இவன் சந்ததியில் வந்தவர்களுள் **பிரியவர்மன்** என்பவன் சிறந்த அரசனுயிருந்தான்; இவன் காலத்திலே சம்ஸ்கிருதம் அரசாங்க மொழியாக வழங்கப்பட்டது; கி. பி. 5-ஆம் நூற்றுண்டில் கண்டோலி ஸ்ரீ விஜயாவுடன் இணைக்கப் பட்டது. பிறகு ஸ்ரீ விஜயாவின் மறைவுடன் அதுவும் அழிந்துபட்டது.

---

# 15. ஜாவா இராச்சியங்கள்

ஜாவாவைப் பற்றி இராமாயணத்திலும் பழைய பௌத்த நூல்களிலும் கூறப்பட்டிருக்கிறது. 'ஜாவா' என்பது சம்ஸ்கிருதத்தில் 'வாற்கோதுமை' எனும் பொருளைத்தரும். இப்போதைய பத்தேவியாவைச் சுற்றி யுள்ள இடங்களில் ஆதிகாலத்திலே **தருமநகரம்** என்னும் ஓர் இராச்சியம் இருந்தது. இது பல்லவ அரசர் களால் ஆளப்பட்டது. கி. பி. 413ல் யாத்திரிகரான **பா ஹின் (Fah Hin)** இந்தியாவுக்குச் சென்றுவிட்டு

இலங்கை மார்க்கமாகச் சீனுவுக்குத் திரும்பும் பொழுது இவ்விராச்சியத்திலே தங்கினர். அவர் ஜாவா முழுவதை யும் சுற்றிப்பார்த்தார், எங்கும் இந்துக்கள் நிறைந்திருந்த தாகவும் பௌத்தர்கள் மிகக் குறைவாய் இருந்ததாகவும் குறிப்பிட்டிருக்கிறர். கி. பி. 423ல் குணவர்மர் என் னும் காஷ்மீரத்தின் அரச குமாரரான பௌத்த சந்நியாசி சீனுவுக்குச் செல்லும் வழியில் தரும நகரத்திலே தங்கி மதப் பிரசாரஞ் செய்தார். இந்து வர்த்தகர்கள் நிறைந்த வியாபாரக் கப்பல்கள் சீனுவுக்கும் இவ்விராச்சியத்துக்கும் இடையே போய்க்கொண்டிருந்ததாக அவர் குறிப்பிட்டி ருக்கிறர். இவ்விராச்சிய அரசனுன தேவவர்மன் கி. பி. 132ல் சீன சக்கரவர்த்திக்குத் தூது அனுப்பியதாகச் சீன சரித்திர ஆசிரியர்கள் கூறியிருக்கின்றனர்கள். இவை யா வற்றிலுமிருந்து தரும இராச்சியம் வெகு சீரும் சிறப்பு முடையதாய் இருந்திருக்க வேண்டுமென நிர்ணயிக்க இடமுண்டு. கி. பி. 6-ஆம் நூற்றுண்டில் ஓர் எரிமலை யின் வெடிப்பால் இந்த இராச்சியம் சிதைவுற்றது.

மத்திய ஜாவாவில் முன்னர் ஒரு சைவ இராச்சியம் இருந்ததை நிரூபிக்கச் சில ஆதாரங்கள் உண்டு. இங்குக் கி. பி. 732ல் செதுக்கப்பட்ட ஒரு சிலாசாசனம் சமீபத் தில் கிடைத்துள்ளது. அதில் தென்னிந்தியாவிலே பொதிய மலையிலிருந்த அகஸ்தியரின் ஆச்சிரமமான 'குஞ்சர குஞ்சம்' என்பதைப்பற்றிக் குறிப்பிடப்பட்டிருக் கிறது. இன்னும் ஒரு சிலாசாசனம் அகஸ்தியரின் விக்கிர கத்திற்குப் பிரதிஷ்டை நடந்ததாகக் கூறுகிறது கி. பி. 863ல் செதுக்கப்பட்ட ஒரு சிலாசாசனம் அகஸ்தியரது வழித்தோன்றல்கள் ஜாவாவில் குடியேறியதாகக் கூறு கிறது. இவை யாவும் தென்னிந்திய சைவருக்கும் மத்திய ஜாவாவுக்குமிடையே இருந்த தொடர்பை விளக்காநிற்

கின்றன. கி. பி. 8-ஆம் நூற்றுண்டில் மத்திய ஜாவாவை ஸ்ரீ விஜயா கைப்பற்றியது. ஆயினும், கி.பி. 9-ஆம் நூற்றுண்டின் இறுதியில் அது சுயேச்சை பெற்றது. மத்திய ஜாவாவின் பல இடங்களிலும் சிதைவுற்ற இந்துக் கோவில்கள் ஆங்காங்கு இன்றும் காணப்படுகின்றன. அவற்றின் சுவர்களில் இராமாயணக் கதைகள் சித்திரிக்கப் பெற்றிருக்கின்றன. கி. பி. 10-ஆம் நூற்றுண்டில் இவ் விராச்சியம் ஸ்ரீ விஜயாவின் தொடர்ந்த பகைமையால் சிதைவுற்றது.

கிழக்கு ஜாவாவில் வேருேர் இந்து இராச்சியம் இருந்தது. அதன் குடிகள் 'காவி' எனும் பாஷையைப் பேசி வந்தார்கள். இவர்கள் தங்களை விஷ்ணு வழியில் வந்தவர்களாகக் கொண்டனர். இவ்விராச்சியத்தை எர் லங்கர் எனும் உத்தம மன்னர் ஒரு காலத்தில் அரசு புரிந்தார். அவர் காலத்தில்தான் இராமாயணமும், மகா பாரதமும் காவி பாஷையில் மொழி பெயர்க்கப்பட்டன. இவற்றின் கதைகளை இன்றும் ஜாவாக்காரர் நடித்து வருகிருர்கள். கி. பி. 12-ஆம் நூற்றுண்டில் விஜயன் எனும் வேருெரு மன்னன் இவ்விராச்சியத்தை ஆண்டு வந்தான். இவன்தான் இக்கிழக்கு ஜாவா இராச்சியத்துக்கு 'மஜபாஹித்' எனும் பெயரை இட்டவன். மஜ பாஹித் என்பது ஜாவா பாஷையில் 'கசப்பான வில்வம்' எனும் பொருளைத் தரும். அக்காலத்தில் சீனுவை ஆண்டு வந்த சக்கரவர்த்தி குபுலைகான் ஒரு முறை தனது தூதர் களைத் திறை பெற்று வருமாறு மஜபாஹித்துக்கு அனுப்பினுன். ஆனுல், விஜயன் கர்வ குணம் உடையவனுதலால், சீனத் தூதரில் ஒருவனை அவமானப்படுத்தி, திறை கொடுக்காமல் திருப்பிவிட்டான். சீன மன்னன் கோபங் கொண்டு உடனே ஒரு சேனையை மஜபாஹித்துக்கு

அனுப்பினுன். நிகழ்ந்த யுத்தத்தில் மஜபாஹிதர்கள் வெற்றியடைந்தார்கள். என்ருலும், அவர்களது அரசன் விஜயன் மாண்டான். அதன் பின்னர் அவனது மகள் ஜயவிஷ்ணு வர்த்தனியும் அவளது மகன் ஹயம்வுருக் என்பவனும் பட்டத்துக்கு வந்தார்கள்.

சீனர் மஜபாஹித்துக்குள் நுழைத்த துப்பாக்கிகள் குண்டுகள் ஆகியவற்றை மஜபாஹித்தர்கள் ஏற்றவாறு பாவித்து முன்னிருந்ததைக்காட்டிலும் இன்னுங்கூடிய வலிமையைப் பெற்ருர்கள். கி. பி. 14-ஆம் நூற்ருண்டில் மஜபாஹித்தின் வெற்றிக்கொடி மலேஷியா நாடுகள் அடங்கலும் பறந்தது. சுமத்திரா, வாலி, நியுகினி, பிலிப்பைன், போர்னியோ, மலாய தீபகற்பம், சிங்கப்பூர் யாவும் மஜபாஹித்துக்கு அடிமையாயின. இறுதியில் 15-ஆம் நூற்ருண்டின் ஆரம்பத்திலே இராச்சியத்தில் பல உள்நாட்டுக்கலகங்கள் ஏற்பட்டன. பஞ்சமும் உண்டாயிற்று. போதாக் குறைக்குச் சீனுவின் விரோதமும் ஒரு பக்கம். முகமதியரும் மஜபாஹித் ஆண்டு வந்த நாடுகளின்மீது கண் பாய்ச்சினர். இப்பிரதிகூலங்களினுல் இவ்விராச்சியம் சீர் குலேந்து அழிவுற்றது.

ஆயினும், வாலித் தீவில்* இன்னும் வைதிக இந்து சமயம் நிலவுகின்றது.

பின்னர் வந்த முகமதிய கிறிஸ்தவ சமயங்களால், இங்கு நிலேபெறவியலவில்லே. வாலிபர்கள் எல்லோரும் இந்துக்களாகவே இருந்து வருகிருர்கள். அவர்கள் வர்ணுசிரமம், கரும சித்தாந்தம் ஆகியவற்றில் நம்பிக்கை உடையவர்கள். இராமாயண மகா பாரத இதிகாசங்களில் அவர்களுக்குப் பற்று அதிகமுண்டு. பிணச் சடங்

* இராமாயண சம்பந்தமான பெயர்.



ஜாவாவிலுள்ள பழமையான ஓர் இந்து ஆலயம் (பிரேம்பானன்)



மத்திய ஜாவாவிலுள்ள பரபுதூர் (Borobudur)
பௌத்த ஸ்தூபிகை



பழைய மகரச்சிலை (மலாக்கா)

குகளை ஐதிக ஆடம்பரங்களுடன் செய்கிறார்கள். பூஜை செய்வதும் மந்திரங்கள் ஓதுவதும் கீர்த்தனைகள் நடத்துவதும் வாலிபர்களது தினசரிக் கடமைகளாகும். சிவசங்கரர் வழிபாடு அவர்களிடையே முக்கியமானது. சித்திர சிற்பக் கலைகளும் பலதிறப்பட்ட கைத்தொழில்களும் அவர்களிடையே உயரிய நிலை அடைந்திருக்கின்றன. ஆண் பெண் இருபாலாரும் சுறுசுறுப்புடன் வேலை செய்வார்கள்; நல்ல தேகக் கட்டு உடையவர்கள்.

## 16. இந்து-சீனா இராச்சியங்கள்

ஆதி காலத்திலே இந்து-சீனாவின் தெற்கே சம்பா எனும் ஓர் இராச்சியமிருந்தது. தென்னிந்தியாவிலிருந்து வந்த இந்துக்கள் முதன்முதலாக மலேஷியாவில் ஸ்தாபித்த இராச்சியம் இதுவே. பண்டைச் சீன சரித்திராசிரியர்கள் இவ்விராச்சியத்தை 'பூ—நான்' (Fu–Nan) எனக் குறிப்பிட்டிருக்கின்றனர். இன்னும், இது ஒரு வல்லரசாய் இருந்ததாகவும் இதன் மன்னர்கள் தானாபத்தியர்களை இந்தியாவுக்கும் சீனாவுக்கும் அனுப்பினார்கள் எனவும் சீன சரித்திரங்களிலிருந்தே தெரிய வருகின்றது. கி. பி. 3-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இரு சிலாசாசனங்கள் சமீபத்திலே வெட்டியெடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றிலிருந்து சம்பாவின் குடிகள் சைவசமயத்தை அனுஷ்டித்திருந்தார்கள் என்பதை அறிகிறோம்.

சம்பாவுக்கு வடக்கே தற்போதைய கம்போடியா இருக்குமிடத்தில் கம்புஜா* எனும் ஒரு சிற்றரசு முன்

* ஓர் இருஷியின் பெயர்

காலத்திலிருந்தது. இது ஏற்கனவே சம்பாவுக்கு உட்பட்டிருந்தது. ஆயினும், கி. பி. 6–ஆம் நூற்ருண்டுமட்டில் கம்புஜா பலதுறைகளிலும் வலிமை பெற்று, சம்பாவைக் கைப்பற்றியது. அந்நாட்களில் இவ்விராச்சியத்தை ஆண்டு வந்த பவவர்மனும் அவனுக்குப் பின்னிருந்த மஹேந்திர வர்மனும் திறன் மிகுந்த தீரர்களாய் இருந்தனரென அக் காலத்துச் சாசனங்களிலிருந்தே அறிகின்ருேம். இரண்டு இராச்சியங்களிலும் *ஹரி-ஹர** வணக்கம் பிரபல்யமாய் இருந்தது. பௌத்த மதமும் கொண்டாடப்பட்டது. குடி ஜனங்கள் *இராமாயணம், மஹாபாரதம், புராணங்கள்*, வேதம் ஆகியவற்றைத் தினமும் பாராயணம் செய்வதுண்டு. சீரிய கூடகோபுரங்களும் மாடமாளிகைகளும் இந்தியாவில் இருந்து வந்த சிற்பசாஸ்திரிகளால் அமைக்கப்பட்டன. பல பெரிய பட்டணங்களும் உண்டாயின. சாதுரியமுள்ள வர்த்தகர்களும் மாலுமிகளும் இந்தியாவோடும் சீனுவோடும் வியாபாரம் நடத்தினர்.

கி. பி. 8–ஆம் நூற்ருண்டு மட்டில் கம்புஜாவுக்கும் ஸ்ரீ விஜயாவுக்கும் ஒரு பெரும்போர் நடந்ததாகவும், அதில் கம்புஜா மன்னன் கைது செய்யப்பட்டு ஸ்ரீ விஜயாவின் மன்னனுல் சிரச் சேதம் செய்யப்பட்டானெனவும் அராபியர் சரித்திரத்திலிருந்து தெரியவருகின்றது. இதன் பிறகு ஸ்ரீ விஜயாவின் அரசன் ஜயவர்மன் எனும் ஓர் இளவரசனைத் தனது பிரதிநிதியாகக் கம்புஜாவுக்கு அனுப்பினுன். ஜயவர்மன் சில வருடங்களுக்குப் பின் ஸ்ரீவிஜயாவுடன் எல்லாச் சம்பந்தங்களையும் நீக்கிவிட்டுச் சுவாதீனம் பெற்று, கம்புஜா இராச்சியத்திற்குத் தானே அதிபதியானுன். இவன் தன் மஹாயன பௌத்த சமயத்தைக் கைவிட்டு, சைவசமயத்தைத் தழுவினுன். இன்னும்,

*ஹரி = விஷ்ணு, ஹர = சிவன்,

இந்து-சீனுவிலிருந்த பல சிறு இராச்சியங்களையும் ஒன்று படுத்திப் பெரிய ஒரு சாம்ராஜ்யத்தை உண்டாக்கினுன்.

ஜயவர்மனுக்குப் பிறகு வேருேர் அரச பரம்பரை கம்புஜா சாம்ராஜ்யத்தை ஆண்டது. இதில் *யசோ வர்மன் எனும் அரசன் மிக்க கீர்த்தி பெற்றவன். இவன் தன் சாசனங்களைக் கிரந்த எழுத்துக்களிலும், தேவ நாகரி § அக்ஷரங்களிலும் எழுதியிருக்கிருன். இவனது ஆளுகையில் சைவம், வைஷ்ணவம், பௌத்தம் ஆகிய மூன்று சமயங்களும் முரண்பாடில்லாமல் குடிகளால் கொண்டாடப்பட்டன. பிரசித்தி பெற்ற அங்கோர்‡ நகரத்தை வனப்புற அமைத்தவன் இவனே.

கி. பி. 1002ல் லிகூரைச்† சேர்ந்த (சீயத்தில்) முத லாம் சூரியவர்மன் எனும் அரசன் கம்புஜா மீது படை யெடுத்து அதைக் கைப்பற்றினுன். இவன் திறல் மிகுந்த போர்வீரன். இவனது ஆளுகையில்தான் சீயம் கம்புஜா வுடன் சேர்க்கப்பட்டது.

கி. பி. 11-ஆம் நூற்ருண்டின் ஈற்றில் பிறிதொரு பரம்பரையைச் சேர்ந்த இரண்டாம் சூரியவர்மன் கம்புஜா சாம்ராஜ்யத்தை ஆண்டான். இவன் காலத்திலேதான் தற்சமயம் அங்கோர்வாட்டில் காணப்படும் வனப்புடைய விஷ்ணு கோயில் கட்டப்பட்டது. இது அங்கோர் பட்டணத்திலிருந்து ஏறக்குறைய ஒரு மைல் தூரத்தி லிருக்கிறது. இவ்வாலயத்தில் மூன்று பீடங்களுண்டு. மேற்பீடத்தில் இராமாயண பாரத சம்பந்தமான காட்சி கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன.

---

*யசோ (யசஸ்)—புகழ்

§ சம்ஸ்கிருதம்

‡ (ஓங்கார்) ஓம் என்பதன் திரிபு

† "லிங்க ஊர்" என்பதன் சிதைவு எனச் சிலர் கொள்வர்

இரண்டாம் சூரியவர்மனுக்குப் பின் கம்புஜாவை ஆண்ட பிரசித்திபெற்ற மன்னர்களுள் ஏழாம்ஜயவர்மன் என்பவன் முதன்மையானவன். இவன் பட்டத்திற்கு வந்ததும் சுமார் நான்கு ஆண்டுகளாக அரசியல் சம்பந்தமான உள்நாட்டுக் கலகங்கள் பல உண்டாயின. ஈற்றில் கி. பி. 1181-ஆம் ஆண்டில் இவன் சிம்மாசனம் ஏறினன். இவனது மனைவி பெயர் ஜயராஜ தேவி. இருவரும் மலரும் மணமும் போல வாழ்ந்தனர். தயாள குணமும் நற்சிந்தனையும் உடையவர்கள். இவர்கள் மஹாயன பௌத்தர்கள். இராச்சியத்தின் பல மாகாணங்களில் அனேக இலவச வைத்தியசாலைகளை நிறுவினார்கள். ஏழாம் ஜயவர்மன் வெற்றி வீரனுயும் இருந்தான்; பர்மாவிலிருந்த பேகு ராஜ்யத்தையும் மலாயா தீபகற்பத்தின் வடபாகத்தையும் கம்புஜாவினது ஆதிக்கத்துக்குக் கொண்டு வந்தான். இவனுக்குப் பிறகு கி. பி. 13-ஆம் நூற்றுண்டு வரை கம்புஜா சாம்ராஜ்யம் அதன் உன்னத நிலைமையை இழக்காது விளங்கிற்று.

கி. பி. 14-ஆம் நூற்றுண்டில் மீகொங் நதியின் பெருத்த பிரவாகத்தாலும் சீயத்தின் நெருக்கடியாலும் இந்த ராஜ்யம் சீர்குலைந்து பாழாய்ப் போயிற்று. இன்று அங்கோரில் காணப்படும் நூற்றுக்கணக்கான சிதைந்த கோயில்களும், தகர்ந்த அரண்மனைகளும், உடைந்த சுவர்களும் கம்புஜா சாம்ராஜ்யத்தின் பண்டைப் பெருமைக்கு அடையாளங்களாய் இருக்கின்றன.

# 17. பூர்விக சிங்கப்பூர்

இந்தியர்கள் சிங்கப்பூரை எப்பொழுது முதன் முதலாகக் கண்டுபிடித்தார்களென்பது சரியாகத் தெரிய வில்லை. ஆயினும், மிகப் பழைய காலந்தொட்டே கப்பல் களுக்கு இது உறைவிடமாய் இருந்திருக்க வேண்டும். இத்தீவின் பழைய பெயர் 'துமாசிக்'. 'துமாஸ்' என்பது சம்ஸ்கிருதத்தில் 'இருள்' எனும் பொருள் படும். இத்தீவு ஸ்ரீ விஜயாவின் ஆதிக்கத்திற்கு உட்பட் டிருந்தது என்பதைப்பற்றி முன்னர்ப் படித்துள்ளோம். 'சிங்கப்பூர்' என்ற பெயர் இதற்குச் சோழ பரம்பரை யைச் சேர்ந்த நீல உத்தமன் என்ற அரசன் ஒருவனால் இடப்பட்டது என்பதையும் முன்னொரு பாடத்தில் படித் தோம். இந்தப் பெயர் வந்த விதத்தைப் பற்றி இன்னும் கொஞ்சம் விரிவாக அறிய வேண்டும். நீல உத்தமன் என் பவன் பிந்தாங் தீவை (Riau Island) கி. பி. 1160ல் ஆண்டு வந்தான். ஒரு நாள் அவனும் அவனது பரிவார மும் துமாசிக்கை அடைந்தனர். அவர்கள் சிங்கப்பூர் நதி முகத்துவாரத்தில் இறங்கினார்கள். இறங்கிய இடத்தில் சிங்கத்தைப் போன்ற ஒரு மிருகத்தைக் கண்டனர். இது காரணமாகத் துமாசிக்கைச் 'சிங்கப்பூர்' (சிங்கம் வசிக்கும் நகரம்) எனக் கூறினர். இந்த விவரம் பழைய மலாய் வரலாற்றில் காணப்படுகிறது.

நீல உத்தமனுக்குப் பின்னர் சைலேந்திர பரம்பரை யைச் சேர்ந்த வேறு சில அரசர்கள் சிங்கப்பூரை ஆண் டனர். அவர்கள் எல்லோரது பெயரும் கிடைக்கவில்லை. கிடைத்தவர்கள் விவரம் பின் வருமாறு:—ஸ்ரீ திருபுவனன் (கி. பி. 1299–1347); பாதுகா ஸ்ரீ விக்கிரம வீரன் (1347–1362); ஸ்ரீ ரண விக்கிரமன் (1362–1375);

பாதுகா ஸ்ரீ மஹா ராஜா (1375-1383). அக்காலத்திலே சிங்கப்பூரின் ஆற்று ஓரத்தில் சில கடற்கொள்ளைக் காரரும் மீன் பிடிப்பவர்களும் வசித்தார்கள். நீல உத்த மனும் அவன் பின்வந்த அரசர்களும் இன்றைய கானிங் கோட்டைக் குன்றில் (Fort Canning Hill) தங்கள் ராஜதானியை அமைத்திருந்தார்கள். இக்குன்றின் அடி வாரங்களில் குடிஜனங்களும் வியாபாரிகளும் வசித்தார்கள்.

கி. பி. 1377ல் மஜபாஹித்தர்கள் மலேஷியாவின் மற்றைய தேசங்களைக் கொள்ளையடித்தகாலை சிங்கப்பூர் தவிர்க்கப்படவில்லை. அவர்கள் சுமார் நூறு வருஷ காலமாக மலாயா தீபகற்பத்தையும் ஏனைய மலேஷியாத் தீவுகளையும் ஆண்டவரெனவும், முடிவில் 15-ஆம் நூற்றுண்டில் அவர்களது ராஜ்யம் எங்ஙனம் அழிந்து பட்டது எனவும் முன்னொரு பாடத்தில் படித்தோம் அல்லவா? அந்த வேளையில் இதுதான் தருணமென்று அந்நாளில் சீயத்துக்குக் கீழ்ப்பட்டிருந்த பஹாங் ராஜ்யத் தினது அதிபதி ஒருவன் சிங்கப்பூரைக் கைப்பற்றி னன். இவன் பெயர் தாமாக்கி*. இவன் சீயத்திலிருந்த பட்டாணி† அரசனது சகோதரனவன்.

தாமாக்கி பழைய சிங்கப்பூருக்கு அதிபதியாய் இருந்து வரும் நாளில் பரமேஸ்வரன் எனும் அரசன் ஒருவன் சுமத்திராவிலிருந்து வந்து சிங்கப்பூரை அபகரித்தான். பின்னுளைய மலாய் வரலாறு ஒன்று இவனை ஸ்ரீ சுல்தான் இஸ்கந்தார்ஷா என்றும் கூறுகிறது. இவனது வரலாற் றைப்பற்றி அடுத்த பாடத்தில் படிக்கப்போகிறீர்கள்.

---

*நகுலனின் மறு பெயரான 'தாமக்கிரந்தி' என்பதன் சிதைவு
† 'பத்தினி' என்பதன் திரிபு

# 18. பரமேஸ்வரனும் மலாக்கா இராச்சியமும்

பரமேஸ்வரன் ஓர் இந்து அரசன். அவன் பலம்பாங்கில், அரசாண்டு வந்தான். அரச குடும்பத்தைச் சேர்ந்த பத்ரா முரல்‡ என்பவனின் மகளை மணஞ்செய்து அவனுக்கு எப்போதும் அடங்கியிருந்து திறை கொடுத்து வருவதாக ஒப்பந்தஞ் செய்துகொண்டான். அதன்படி பரமேஸ்வரன் நடந்து வந்தும், பத்ரா முரல் பரமேஸ்வரனேடு சண்டை தொடுத்து, அவனுடைய ராஜ்யத்தைப் பூராவாகப் பிடுங்கிக்கொண்டான். அதன் பின்பு பரமேஸ்வரன் தன் மனைவி மக்களுடன் சிங்கப்பூருக்கு வந்தான். அப்போது சிங்கப்பூரில் நாம் முன் பாடத்தில் படித்த தாமாக்கி ஆண்டுகொண்டிருந்தான், அவன் பரமேஸ்வரனை வரவேற்றுத் தனது வீட்டில் இருக்க இடங் கொடுத்தான். பரமேஸ்வரன் அங்குத் தங்கியிருக்கும் பொழுது சிங்கப்பூரின் ஆட்சியைக் கைப்பற்றும் ஆசையோடு வந்த எட்டாவது நாள் தாமாக்கியைக் குத்திக் கொன்றுவிட்டான். பிறகு பலம்பாங்கிலிருந்து தன்னேடு வந்த 3000 ஜனங்களுடன் பரமேஸ்வரன் சிங்கப்பூரை ஐந்து வருஷகாலம் அரசு புரிந்து வந்தான். இப்படி இருக்கும்போது ஒரு நாள் தாமாக்கியின்தமையனுனபட்டாணி அரசன் சிங்கப்பூர்மீது படையெடுத்து வந்து, அங்கிருந்த குடிகள் சிலரின் உதவியால். பரமேஸ்வரனைச் சிங்கப்பூரிலிருந்து விரட்டிவிட்டான்.

அதன்பின் பரமேஸ்வரன் மூவாருக்கு ஓடிப் பக்கோ என்ற இடத்தில் தங்கினுன். பலம்பாங்கிலிருந்து அவனுடன் வந்திருந்த குடிகளிற்சிலரும் அவனேடு கூடச்

---

‡ பத்ரா (பத்ர) அதிருஷ்டம்; முரல் (முரளி)—கிருஷ்ணர்

சென்றிருந்தார்கள். பிற்காலத்து மலாக்கா ராஜ்யத்துக்கு அஸ்திவாரம் போட்டவர்கள் இவர்களே ஆவார்கள்.

பரமேஸ்வரன் முதலிலே பகோவில் (Pagoh) தன்னுடைய முகாமை ஏற்படுத்தினன். பிறகு அவ்விடம் தகுதியற்றது எனக் கருதி, சுங்கை உஜோங்‡ நதியின் கரையில் தன்னுடைய கூடாரத்தைப் போட்டான். அதன் பின்பு சுங்கை பேர்ட்டம் எனும் ஆற்றிற்கு வந்தான். அவ்விடத்திலே ஒரு வெண் சருகுமான் தன்னைத் துரத்தி வந்த வேட்டை நாய் ஒன்றைக் காலால் உதைத்து ஆற்றில் தள்ளுவதைக் கண்டான். அவ்வேளையில் பரமேஸ்வரன் துவர்ப்புக்காய் மரமொன்றில் சாய்ந்து கொண்டு நின்று இச்சம்பவத்தைப் பார்த்ததால் அவ்விடத்திற்கு 'மலாக்கா' என்று பெயரிட்டான். இவ்விவரம் மலாய்ச் சரித்திரமொன்றில் காணப்படுகிறது.

பரமேஸ்வரன் மலாக்காவிற்கு வந்த வருஷம் கி. பி. 1403. அப்பொழுது மலாக்கா சீயத்தின் ஆதிக்கத்திற்குட்பட்ட ஒரு சிறு துறைமுகமாகவும் மீன் பிடிக்கும் கிராமமாகவுமிருந்தது. ஜனத்தொகை மிக மிகக் குறைவு. குடிகளில் பாதிப்பேர் கடற்கொள்ளைக்காரர்கள். பரமேஸ்வரன் இக்குடிகளுடனும் மலாக்காவிற்கு வரும் வியாபாரிகளுடனும் நட்புறவு பாராட்டி, அநேகருக்கு மந்திரி உத்தியோகமும் பிரபுப் பட்டமும் கொடுத்து, எல்லோரையும் தன் வசப்படுத்தி, தானே மலாக்காவிற்கு அதிபதியாயினன். அவனது ஆளுகையில் படிப்படியாக மலாக்கா நல்ல விருத்தியடைந்தது. கி. பி. 1405ல் சீனவின் நட்பைப் பெறும்பொருட்டு

‡ உஜோங் — (மலாய்) கடைசி.



பாலித்திவு இந்துக்கள் ஆலயத்தில் பஜனை செய்யுங் காட்சி



போர்னியோக் குகை ஒன்றினுள் இருக்கும் பழைய இந்து
விக்கிரகங்கள்



மத்திய-சீயத்திலுள்ள (ஸ்ரீதேவநகரம்) சிதைந்த இந்து ஆலயம். இது செங்கல்லால் ஆனது.

மிங் வழி வந்த ஹூய்-தி என்ற (Emperor Hui Ti of Ming dynasty) சீனச் சக்கரவர்த்திக்குத் தூதர்களை அனுப்பினான். சீனச் சக்கரவர்த்தி இதனால் மகிழ்ச்சி அடைந்து, பரமேஸ்வரனைப்புகழ்ந்து, அவனுக்கு வெள்ளி யாலான ஒரு முத்திரைக் கம்பும், பத்திரமும், உடுப்பும், தொப்பியும், மஞ்சள் குடையும் கொடுத்தனுப்பியதுடன், பரமேஸ்வரனை மலாக்காவுக்கு அரசனாக நியமித்திருப்ப தாகவும் தன் தூதனும் கடற்படைத் தளகர்த்தனுமான செங் ஹோ (Cheng Ho) என்பவனிடம் சொல்லியனுப் பினான். கி. பி. 1411ல் பரமேஸ்வரன் தன் மனைவி மக்களுடனும் 450 பேர் கொண்ட பரிவாரத்துடனும் சீனாவுக்குச் சென்றான். சீனச் சக்கரவர்த்தி அவனை உப சரித்து, விருந்தளித்து, சன்மானங்களும் கொடுத்து அனுப்பினான். இதன் பிறகு சீனாவுக்கும் மலாக்காவுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வந்தது.

பரமேஸ்வரன் நீதியான முறையில் அரசை நடத்தி னான். பக்க நாடுகளிலிருந்து பல மலாயர்கள் மலாக்கா விற்கு வந்து குடியேறினார்கள். ஜனத்தொகை அதிகரித் தது. பழமரத் தோப்புகளும் நெல் வயல்களும் சீக்கிரத் தில் உண்டாயின. ஆகவே, மலாக்கா வாசிகள் வங்கா ளம், பாசை, ஜாவா, சீனா முதலிய தேசங்களோடு வியாபாரஞ் செய்யத் தொடங்கினர். சுமத்திரா, பெடீர், பாசை முதலிய இடங்களிலிருந்து அரிசி இறக்குமதி யாயிற்று. கிள்ளான், பேரா ஆகிய இடங்களிலிருந்து ஈயம் வரத் தொடங்கிற்று. அரேபியா, கிரீஸ், துருக்கி, இந்தியா, ஆப்பிரிக்கா முதலிய நாடுகளிலிருந்து முகம் மதியர் வியாபாரத்தின்பொருட்டு மலாக்காவிற்கு வந்த னர். கி. பி. 15-ஆம் நூற்றாண்டில் மலாக்கா ராஜ்யம் முற்கூறிய வியாபாரத்தினாலும் கிழக்கிந்திய வாசனைத்

திரவிய வியாபாரத்திலும் ஒரு பிரதான துறைமுக மாயிற்று இவ்வாறு ராஜ்யம் செழிப்புற்றிருக்கையில் கி. பி. 1414ல் பரமேஸ்வரன் மரணமடைந்தான்.

---

# ச. மத்திய காலம்

## 1. முகம்மது நபி

மலாயர்கள் எல்லோரும் இப்பொழுது முகம்மதிய மதத்தைச் சேர்ந்தவர்களென்பது உங்களுக்குத் தெரியும் அல்லவா ? ஆதியில் இவர்கள் இந்து மதத்தையும் பௌத்த மதத்தையும் தழுவியிருந்தார்களென்பதும் உங்களுக்குத் தெரிந்ததே. முகம்மதிய மதம் உண்டான விதத்தை இப்போது நீங்கள் சற்று அறிய வேண்டும். இந்த மதத்தை உண்டாக்கியவர் முகம்மது நபி என்பவர். அவர் கி. பி. 6-ஆம் நூற்றுண்டில் அராபியா தேசத்தில் மெக்கா என்ற பட்டணத்தில் பிறந்தார்.* இந்தப் பட்டணம் இப்போது எல்லா முகமதியர்களுக்கும் ஒரு புண்ணிய க்ஷேத்திரமாயிருக்கிறது.

முகம்மதுவின் இளமையிலேயே அவருடைய பெற்றோர்கள் இறந்துவிட்டனர். பிறகு அவர் கதீஜா என்னும் பணக்கார விதவை ஒருத்தியிடத்தில் ஒட்டகம் ஓட்டும் வேலையாளாய் அமர்ந்தார் ; வேலையைச் சோம்பலில்லாமலும் சாமர்த்தியமாகவும் செய்து வந்தார்.

இப்படி இருக்கும் பொழுது, முகம்மது அடிக்கடி தம்மை மறந்திருப்பது உண்டு. அவ்வேளைகளில் சில தெய்விக உண்மைகளை உணர்ந்தார். இவற்றின் பொருட்டுக் கடவுளே தம்மை ஒரு புதிய மதத்தை ஸ்தாபிக்கும்படி ஆக்ஞாபிக்கிருர் என நம்பினுர். உலகத்தில் 'அல்லா'வாகிய கடவுள் ஒருவரே என்பதும், அவ்வரைப்

---

*ஆராய்ச்சிக்காரர் இவர் பிறந்த தேதியைக் கி. பி. 570 ஆகஸ்டு 29 என்பர்.

பற்றி உலகத்தாருக்குச் சொல்லக்கூடியவர் தாம் ஒருவரே என்பதும் முகம்மதுவின் கொள்கை. இந்தக் கொள்கையைப் பிறருக்கு உபதேசிக்க ஆரம்பித்தார்.

அவரது காலத்தில் அராபியர்கள் சூரிய சந்திரர்களையும் நட்சத்திரங்களையும் தொழுவது வழக்கம். அதுவுமல்லாமல், அவர்களில் ஒவ்வொரு கூட்டத்தாரும் ஒவ்வொரு தெய்வத்தைத் தொழுவார்கள். முகம்மது இவை யாவற்றையும் கண்டித்து, ஒரு புதிய மதத்தை ஸ்தாபிக்க முயன்றதால், மெக்காவிலுள்ள எல்லோரும் அவரைத் தூஷித்து வெறுத்ததுமன்றி, கொல்லவும் எத்தனித்துவிட்டார்கள். அதனால், முகம்மது மெக்காவை விட்டு, அதற்கு வடக்கில் சுமார் 200 மைல் தூரத்திலுள்ள மதீனா (Medina) என்ற பட்டினத்துக்கு ஓட வேண்டியதாயிற்று. இப்படி அவர் ஓடிய ஆண்டு கி. பி. 622 முகம்மதியரிடையே இப்பொழுது வழங்கி வரும் 'ஹிஜிரா' வருஷக்கணக்கு அந்த வருஷத்திலிருந்துதான் ஆரம்பிக்கிறது. (ஹிஜிரா = ஓட்டம்)

மதீனா வாசிகள், மெக்காவில் உள்ளவர்களைப்போல அல்லாமல், முகம்மதுவின் கொள்கைகளை ஒப்புக்கொண்டார்கள். அங்கு அவருடைய சீடர்களும் நாளுக்குநாள் அதிகரித்தனர். உடனே மெக்காவிலுள்ளவர்களையும் தம் வசமாக்க வேண்டுமென்று ஆசை கொண்டு மதீனாவில் ஒரு சிறு சேனையைத் திரட்டிக்கொண்டு மெக்காவை எதிர்த்தார். சண்டையில் முகம்மதுவே ஜயமடைந்தார். அராபியாவில் வேறு சில சிற்றரசுகளையும் ஜயித்தார். இப்படி அராபியா முழுவதும் கூடிய சீக்கிரத்தில் முகம்மதுவைப் பின் பற்றினது. கி. பி. 632 ஜூன் 8-ஆம் தேதி திங்கட்கிழமையன்று நடுப்பகலில் மௌன வழிபாடு செய்துகொண்டு முகம்மது நபி

அல்லாவின் திருப்பதத்தை அடைந்தார். பிறகு அராபியாவிலிருந்து சிறிய ஆசியா, மத்திய ஆசியா, பெர்ஷியா, வட ஆப்பிரிக்கா, இந்தியா முதலிய இடங்களுக்கு முகம்மதிய மதம் பரவிற்று. இம்மதத்தை 'ஸ்லாம்' என்றும் சொல்லுவர். (ஸ்லாம் = சாந்தம்)

---

## 2. மலாயாவின் முதல் முஸ்லீம் சுல்தான்

கி. பி. 12-ஆம் நூற்றுண்டில் இந்தியாவின் வட பாகம் முகம்மதியர் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்தது. தென்பாகத்திலும் அவர்கள் ஒருவாறு பிரவேசிக்க ஆரம்பித்தார்கள். இதனால், முன்பு இந்தியர்கள் மலேஷியாவோடு நடத்தி வந்த வியாபாரம் இப்போது அராபியர், துருக்கியர் முதலிய முகம்மதியர் கைவசமாயிற்று. கி. பி. 14, 15-ஆம் நூற்றுண்டுகளில் முகம்மதிய சமயமும் நாகரிகமும் மலேஷியாவெங்கும் பரவின. மலாக்கா அவர்களது பிரதான வியாபார ஸ்தலமாய் இருந்தது. பரமேஸ்வரனுடைய மரணத்திற்குப் பிறகு அவன் மகன் ராஜா புஸார் மூடா* என்பவன் பட்டத்துக்கு வந்தான். இவன் இஸ்லாம் மதத்தைத் தழுவிய பாசை அரசனுடைய மகளை விவாகஞ் செய்திருந்தான். இதனால், சிறிது காலத்திற்குப் பின் தன் மனைவியின் விருப்பத்தின்படி ஸ்லாம் மதத்தைத் தழுவி, தன் பெயரை முகம்மது இஸ்கந்தர் ஷா‡ என்று மாற்றி வைத்துக்கொண்டான். அதுவுமல்லாமல், தன் குடிகளையும் ஸ்லாம் மதத்தை அனுசரிக்கும்படி செய்தான்.

*புஸார்—பெரிய ; மூடா—இளமை; பெரிய இளவரசர்
‡அலக்ஸாந்தர் என்பதன் திரிபு (அராபி)

இவன் தகப்பனைப்போலச் சீனாவுடன் நட்புறவு பாராட்ட எண்ணி, கி. பி. 1414ல் சீனச் சக்கரவர்த்தியைக் காணச் சென்றிருந்தான்; தன் தந்தை பரமேஸ்வரனது சாவைப் பற்றியும் சீனச் சக்கரவர்த்திக்கு அறிவித்தான். பிறகு, சீயத்து அரசன் தன்னை விரட்டுவதாகச் சீன சக்கரவர்த்திக்குத் தெரிவிக்க மீண்டுமொரு முறை கி. பி. 1419ல் மனைவி மக்களுடனும், அமைச்சர்களுடனும் போனான். சீனச் சக்கரவர்த்தியின் தலையீட்டினால் சீயம் அடக்கப்பட்டது. இன்னும், சீனாவிலிருந்து திரும்பி வந்ததும் ஈய நாணயங்களை அடித்துப் பரப்பினான். இவனது ஆட்சியில் குடி ஜனங்கள் முகம்மதிய அனுஷ்டானங்களை வெகு நுட்பமாக அநுசரித்தனர். அஃதுடன் அராபியாவிலும் இந்தியாவிலுமிருந்து மலேஷியாவுக்கு வந்த முகம்மதிய மதக் குருக்களுக்கு மலாக்கா தலைமை ஸ்தலமாய் விளங்கிற்று. முகம்மது இஸ்கந்தர்ஷா தன்னை அலங்கரித்துக்கொள்வதில் மிக்க பிரியமுடையவன். இவன் காலத்தில் வெள்ளியும் பொன்னும் பண்ட மாற்றாக உபயோகிக்கப்பட்டன. இவ்வாறு பத்து வருடங்கள் ஆண்டதும், கி. பி. 1424ல் இறந்து போனான்.

## 3. ஸ்ரீமகா ராஜா

இவன்தான் மலாக்காவின் மூன்றாம் அரசன். இவனது முதற்பெயர் இராஜாகிச்சில்* புஸார் மூடா சீன வரலாறுகள் இவனை 'ஸீ–லா–மா-ஹா–லா' என்று குறிப்பிடும். இவன் சுமத்திராவிலிருந்த பழைய ஸ்ரீ விஜயாவைவிட, மலாக்கா இராச்சியம் மேலோங்க வேண்டுமென விரும்பினான். அரசியலிலும் வியாபார அலுவல்களிலும்

*கிச்சில்—சிறிய

இவன் சமர்த்தனுய் இருந்தான். அரண்மனே அரசியல் உபசரணைகளை இந்து கொள்கைகளைத்தழுவிச் சீர்திருத்தி யமைத்தான். அவற்றைப் பின்பற்றிய ஒழுங்கு இப்பொ ழுது பேராவில் அநுசரிக்கப்பட்டு வருகிறது. இவன் கி. பி. 1433ல் இரண்டு முறை சீனுவுக்குப் போயிருக் கிருன்; சீன சக்கரவர்த்தியை நேரிற்கண்டான். இவன் சீனுவுக்குத் தூதர்களேயும் அனுப்பியிருக்கிருன். தன் தம்பியை ஒரு முறை கி. பி. 1435ல் கப்பத்தோடு சீனு வுக்கு அனுப்பினுன்.

ஓரிரவு இவன் நித்திரை செய்துகொண்டிருக்கும் போது முஸ்லீம் உபதேசங்களைத் தான் சொல்லிக்கொள் வதாகக் கனவு கண்டான். இதை உடனே மலாக்காவில் இருந்த அப்துல் அஜீஸ் என்னும் முகம்மதிய குருவுக்குத் தெரிவித்தான். அவர் இவனே இஸ்லாம் மதத்தில் சேர்த்து, இவனுக்கு முகம்மது ஷா என்னும் பெயரைச் சூட்டினுர். அது முதல் மலாக்காவை ஆளும் ஒவ்வோர் அரசரும் இஸ்லாம் மதத்தைத் தழுவினுர்கள். வருஷந்தோறும் முகம்மதிய நோன்பு, விரதம் முதலியவற்றைக் கொண் டாடுவதில் முகம்மதுஷா சிறந்தவனுனுன்.

இவனுக்கு இரு மனைவிகள் உண்டு. முதலாம் மனைவி இவனிடம் சில காலம் மந்திரியாயிருந்த ஒரு தமிழனின் புதல்வி. அவளால் முகம்மது ஷாவுக்கு ராஜா காசீம் என்னும் ஒரு மகன் பிறந்தான். ராஜா காசீமுக்கு நராதிராஜா அல்லது துவான் *அலி என்ற ஒரு மாமன் உண்டு. அவனேப்பற்றிப் பின்னுல் கவனிப்போம். முகம்மதுஷாவின் மற்ற மனைவி ருெக்கான் (சுமாத்திரா வில்) அரசனின் சகோதரி. இவள் வயிற்றில் இராஜா

* துவான் (மலாய்) மேலோன்.

இபுராகிம் என்னும் ஒரு மைந்தன் முகம்மது ஷாவுக்குப் பிறந்திருந்தான்.

சிறிது காலத்தில் ஸ்ரீ மகா ராஜா என்ற முகம்மதுஷா இறந்து போகவே, அவன் இரண்டாம் மனைவியின் மகனை ராஜா இபுராகிம் என்பவன் அவன் மாமனை ரெக்கான் அரசனின் பாதுகாப்பில் இருந்து வந்தான்.

ரெக்கான் அரசன் ஸ்ரீ மகா ராஜாவின் முதலாம் மனைவி மகனை ராஜா காசிமைச் சாதாரண தமிழனென நிந்தித்து, மீன் பிடிக்கும்படி துரத்திவிட்டான். பிறகு, ரெக்கான் அரசன் தன் மருமகனை ராஜா இபுராகிமை ஸ்ரீ பரமேஸ்வர தேவஷா என்னும் இந்து - ஸ்லாமியப் பட்டத்துடன் மலாக்கா ஸ்லாமிய சிம்மாசனத்தில் ஏற்றினன்,

பரமேஸ்வர தேவஷா பட்டத்துக்கு வந்த 17-ஆம் ஆண்டில், ராஜா காசிமின் மாமனை துவான் அலி என்பவன், அக்காலத்தில் இந்தியாவிலிருந்து வந்திருந்த ஜலாலுதீன் என்னும் முகமதியனுடைய உதவியைக் கொண்டு, அப்பொழுது மலாக்காவிற்கு ஏகியிருந்த ரெக்கான் அரசனைக் கத்தியால் குத்தச் செய்தான். அதன் விளைவாக ரெக்கான் அரசன் மரண ஆவேசங்கொண்டு தன் மருமகனுகிய ஸ்ரீ பரமேஸ்வர தேவஷாவைக் கொலை செய்தான் ; தானும் மாண்டான். இதன் பின் ராஜா காசிம் பட்டத்திற்கு வந்தான்.

## 4. ராஜா காசீம்

இவன் பட்டத்துக்கு வந்ததும் 'முசபர்ஷா' என்னும் பெயரைச் சூட்டிக்கொண்டான். இவனைப்



பழைய யாளிச் சிலை (மலாக்கா)



சிற்றுருவமான ஆலயமொன்றின் வெண்கலக்கூரை. பூஜாங் நதி (கெடா) தீரத்திலுள்ள சிதைந்த சிவாலயங்களுக்கருகில்



மெர்பெள ஆற்றின் (கெடா) முகத்துவாரத்தினண்டை கிடைக்கப்பெற்ற கிரந்த அக்ஷரங்கள் எழுதப்பட்ட களிமண் தகடு.

பொடா பக்ஷா என்னும் பெயரால் மலாக்காவுக்கு அந்நாளில் வந்த போர்ச்சுகீசியர் கூப்பிட்டார்கள். இவனது முதல் மந்திரியாகிய ஸ்ரீவ ராஜா என்பவன் இவனுடைய மாமனாகிய துவான் அலியின் (நராதி ராஜா) கொடுஞ் செயல்களைப் பார்த்து, மன வருத்தம் அடைந்து, நஞ்சை யுண்டு இறந்தான். இறந்தவனது குமாரத்தியாகிய துங்கு ¶ குடு என்பவளை ராஜா காசீம் மணஞ்செய்துகொண் டான். அவள் வயிற்றில் ராஜா அப்துல்லா என்பவன் பிறந்தான்.

மந்திரியாகிய ஸ்ரீவ ராஜா இறந்த பின், துவான் அலி முதல் மந்திரியாக நியமிக்கப்பட்டான்.

கொஞ்சகாலங்கழித்து யாதோ காரணத்தால் தன் மாமனாகிய இம்மந்திரியை வேலையிலிருந்து நீக்க வேண்டு மென்ற எண்ணம் முசபர்ஷாவுக்கு உதித்தது. அதற் கேற்ப முசபர்ஷா துவான் அலியை அழைத்து, "நீர் பண் டாரா*உத்தியோகத்திலிருந்து விலகிக்கொள்ள வேண்டும். அப்படி விலகினால், என் அரண்மனையிலுள்ள எந்தப் பெண்ணையும் விவாகஞ்செய்துகொள்ளலாம்," என்றான். அவன் அதற்கு மறு மொழியாக, "உன் மனைவியாகிய துங்கு குடு என்பவளை எனக்குவிவாகஞ்செய்துகொடுக்கச் சம்மதித்தால் நான் வேலையிலிருந்து நீங்கிக்கொள்வேன்," என்றான். இதற்கு முசபர்ஷாவும் துங்கு குடுவின் சகோ தரனை துவான் பேராவும் சம்மதித்தார்கள். அந்தப்பெண் ணும் அதற்கு உடன்பட்டு, இரண்டாம் புருஷனாகிய ஸ்ரீ நராதி ராஜாவை, அதாவது துவான் அலியை,

¶ துங்கு—மலாய் இளவரசர் இளவரசிகளின் பட்டப்பெயர்.

*பண்டாரா: பண்டாஹரா—பிரதம மந்திரியும் அரசியலை நடத்துபவனும்.

மணந்து, துங்குசினஜா என்னும் ஒரு மகளையும், துவான் முத்தகிர் என்னும் ஒரு மகனையும் பெற்ருள்.

முசபர்ஷாவின் மாமனுகிய ஸ்ரீ நராதி ராஜா மந்திரி பதவியிலிருந்து நீங்கியவுடன் துவான் பேரா அப்பதவியை அடைந்தான். இவன் ஒரு பராக்கிரமசாலி. முன்பு கிள்ளானில் புங்குளுவாகவும்‡ இருந்தவன். இவன் மந்திரி யானவுடன் மலாக்காவின் அரசாங்க விஷயங்களைக் தன் இஷ்டம்போல நடத்தி வந்தான். போர் வீரனுகையால், மலாக்காவுக்கு விரோதிகளான சீயங்காரர்களை ஒரு முறை பத்துப்பஹாட்டில் நடந்த சண்டையில் தோற்கடித் தான்.

## 5. மன்சூர்ஷா (கி. பி. 1459-1477)

இவன் முசபர்ஷாவின் மகனுன ராஜா அப்துல்லா, தகப்பனர் இறந்ததும் இவன் பட்டத்திற்கு வந்தான். 1459ல் சீனச் சக்கரவர்த்திக்குத் திறையனுப்பினுன். அவன் அதைப் பெற்றுக்கொண்டு உத்தியோகஸ்தர்களை அனுப்பி மன்சூர்ஷாவிற்குப் பட்டங்கட்டினுன். இப் பொழுதும் இவனது மாமனுகிய துவான் பேராவே மந்திரி யாய் இருந்தமையால் அவனே முன்போல அரசாங்க விவ காரங்களை நடத்தி வந்தான். ஒரு முறை ஆக்கிரமிப்பு அவாவால் இருநூறு கப்பல்களுடன் பாஹாங்கிற்குத் துவான் பேரா சென்ருன். அக்காலத்திலே பாஹாங்கில் இந்து தேசாதிபதியாயிருந்த தேவாசுரனையும் அவன் மக ளையும் கைதியாக்கியதோடு சில யானைகளையும் கைப்பற்றி மலாக்காவிற்குக் கொண்டு வந்தான், அப்பெண்ணை மன்

‡கிராம அதிகாரி (மலாய்)

சூர்ஷா தன் அந்தப்புரத்தில் சேர்த்துக்கொண்டான். அவனுடைய தகப்பனை யானைப்பாகர்களுக்குத் தலைவனுக்கினுன்.

பின்னர், தன்னோடு உதவியாகி நின்று போர் புரிந்த சிநேகிதன் ஒருவனைத் துவான் பேரா பாஹாங்கிற்கு ராஜப்பிரதிநிதியாக்கினுன். இதனுல், சீயம் பாஹாங் மீது அது வரை செலுத்தி வந்த ஆதிக்கம் மறைந்துவிட்டது. பிறகு சீயத்துக்கும் மலாக்காவுக்குமிடையே சமாதானம் உண்டாயிற்று. இவ்விதமாகவே மலாக்காவிலிருந்த மலாய்த் தலைவர் பலர் பேரா, சிலாங்கூர், நகரி செம்பிலான், ஜோகூர், மற்றைய அயல் தீவுகள் முதலியவற்றைக் கைப்பற்றினுர்கள். இன்னும், கீழ்ச் சுமத்திராவிலிருந்த நதித்துறைமுகங்களான கம்பார், பெடீர், பாசை, ஆறு முதலியனவும் மலாக்காவின் ஆதிக்கத்திற்குட்பட்டன. எனவே, இப்பிரதேசங்கள் எல்லாம் மலாக்காவிற்குக் கப்பங்கட்டலாயின. இராச்சியம் செல்வமும் செழிப்பும் பெற்றது. பல நாடுகளிலிருந்து வியாபாரிகள் வந்தார்கள். இக்காலத்தில் அனேக சுமத்திரா வாசிகள் மலாக்காவில் வந்து குடியேறினுர்கள்.

மந்திரிமாரும் தலையாரிகளும் அரசியல் அலுவல்கள் யாவற்றையும் கவனித்துவர, மன்சூர்ஷா அந்தப்புர இன்பங்களில் காலங்கழித்து வந்தான். சுல்தானைச் சேவித்து வந்தவர்கள் பட்டங்களையும் வெகுமதிகளையும் பெற்றுர்கள். தலையாரிகள் இஷ்டப்படி தங்கள் விரோதிகளின் கைகால்களைக் கட்டிப் பட்டணத்தைச் சுற்றி அவர்களைத் தரையில் இழுத்தும், அவர்கள் பெண்டு பிள்ளைகளைச் சிரச்சேதம் செய்தும், வீடுவாசல்களைத் தகர்த்தும் வந்தார்கள்.

மன்சூரின் ஆட்சியில் துவான் பேராவே சர்வ அதிகாரத்தையும் பெற்றிருந்தான். சுல்தானே இவனுக்கு அடங்கி நடக்க வேண்டியதாகவும் இருந்தது.

ஒரு நாள் மன்சூர்ஷாவின் மூத்த குமாரன் கால்பந்து விளை யாடுமிடத்திற்குச் சென்றிருந்தான். அப்போது தற்செய லாகப் பந்தானது அவன் தலையிலிருந்த சவுக்கத்துண்டில் பட்டுச் சென்றது. உடனே தன் கிறிஸை உருவி, அந்தப் பந்து அடித்தவனைக் குத்திக்கொன்றுவிட்டான். இறந்த வன் யாரென ஆராயும்போது, அவன் பண்டாஹராவான துவான் பேராவின் மகனெனத் தெரிய வந்தது. துவான் பேரா பழிக்குப் பழி வாங்கும் நோக்கத்துடன் இளவர சனைக் கொல்லும்படி சுல்தானிடம் சொன்னான். இதைச் செய்யச் சுல்தானுக்கு மனமில்லையாகையால் மூத்த குமா ரனைப் பாஹாங்கிற்கு அனுப்பிவிட்டு, அங்கு அப்போது தேசாதிபதியாய் இருந்த ஸ்ரீ பீஜடி ராஜாவை மலாக்கா விற்கு அழைத்தான். இதனால், மன்சூர் ஷாவிற்குப் பின் மலாக்கா சிம்மாசனத்திற்கு உரியவர் எவருமில்லை. ஆகவே, 1477ல் மன்சூர்ஷா இறந்ததும் துவான் பேரா தன் மருமகனை ஒருவனுக்கு **அல்லாவுடீன் ரீயட்ஷா** என்னும் பட்டஞ்சூட்டி அவனைச் சுல்தானாக்கினான்.

## 6. அல்லாவுடீன் ரீயட்ஷா

இவனது பூர்விக நாமம் ராஜா ஹுசேன். மலாக் காவை ஆண்ட சிறந்த அரசர்களுள் இவனொரு வன். இவன் பொதுவாகச் சமாதானப் பிரியன். அவசியமான வேளையிலேதான் சண்டை செய்வான். தனது சேவகரைச் சோம்பலாக இருக்க விடான். ஒரு முறை மலாக்காவின் சந்தையில் திருட்டு நடக்கிறதாக வும் போலீசார் அசட்டையாக இருப்பதாகவும் அறிந்து, ஒரு நள்ளிரவில் இரண்டு காவலாளருடன் தானே

திருட்டைக் கண்டு பிடிக்க வெளியே சென்றான். போகும் வழியில் ஐந்து மனிதர் ஒரு பெட்டியைத் திருடிக்கொண்டு ஓடுவதைக் கண்டான். அல்லாவுடன் அவர்களைத் துரத்திச் சென்று திருடரில் ஒருவனை ஒரு குன்றின்மேல் பிடித்துத் தன் உடைவாளால் இரண்டு துண்டாக்கினான். மற்றத் திருடர் நால்வரும் மலாக்கா நதியை நோக்கி ஓடினார்கள். அங்கு அல்லாவுடனும் காவலாளரும் இரண்டு திருடரைக் கொன்றனர். மற்றைய இரு திருடரும் தப்பிப் பிழைத்து ஓடிவிட்டனர். அடுத்த நாள் காலையில் அல்லாவுடன் போலீஸ் தளகர்த்தனை தெமங்கோங்† என்பவனை நீதி மன்றத்தில் சந்தித்து, "நேற்றிரவு உன் போலீஸார் வேலையில் இருந்தார்களா?" என, தளகர்த்தன் "உண்மையாக இருந்தார்கள், அரசே," என்று கூறினான். "அப்படியானால், நேற்றிரவு கொல்லப்பட்ட மூன்று திருடரும் உனது போலீஸ்காரர்களால் கொல்லப்பட்டவர்களோ?" என்று சுல்தான் கேட்க, தெமங்கோங் வெட்கத்துடன், "எனக்கு அதைப்பற்றி ஒன்றும் தெரியவில்லையே!" என்றான். அதற்குச் சுல்தான், "மூன்று பேர் கொல்லப்பட்டது உனக்குத் தெரியவில்லையே! உன் போலீஸார் எப்பேர்ப் பட்டவர்களாக இருக்கவேண்டும்!" என்று சொல்லிவிட்டு, திருடப்பட்ட பெட்டியைக் காண்பித்து, நடந்த விஷயங்கள் யாவற்றையுங் கூறி, தெமங்கோங்கையும் போலீஸ் ஆட்களையும் அவமானம் பண்ணினான். இதன் பின் போலீஸார் தங்கள் வேலைகளில் மிக்க கவனம் செலுத்தினார்கள். தெமங்கோங் தானே இரவில் பட்டணத்தைச் சுற்றி வருவான். ஓர் இரவில் திருடன் ஒருவன் ஒரு கடையை உடைத்துக்கொண்டிருக்கையில்

† அரண்மனை அலுவல்களைக் கொண்டு நடத்துபவனும் போலீஸ் தளகர்த்தனும்

அவனைப் பிடித்துக் கையை வெட்டி அதைக் கடையின் ஜன்னலில் தொங்க விட்டான். இதன் பின் பட்டணத்தில் திருட்டு அறவே ஒழிந்தது. அல்லாவுடீன் எல்லா முச்சந்திகளிலும் போலீஸ் ஆட்களை நிறுத்தி, திருடப் பெற்ற பொருள்கள் யாவற்றையும் போலீஸ் ஸ்டேஷனுக்கு எடுத்து வரவேண்டுமென்று கட்டளையிட்டான். திருட்டுப் பொருள்களை வைத்திருக்கிறவர்களுடைய கைகளும் வெட்டிவிடப்படுமெனக் கட்டளையும் விடுத்தான்.

துங்கு குடுவிற்கும் ஸ்ரீ நராதி ராஜாவிற்கும் பிறந்த துங்கு சினஜா என்பவளை அல்லாவுடீன் விவாகஞ்செய்து கொண்டான். இவர்களுக்கு மாமூட் என்னும் மகன் பிறந்திருந்தான்.

அல்லாவுடீன் தான் அரசனாக வந்ததைக் குறித்துச் சீனாவிற்குத் தெரிவித்திருந்தான். மலாக்கா சீனாவுக்குத் திறை கட்டி வந்தது. 1481ல் அன்னங்காரர்கள் (Annam) மலாக்காவைப் பிடிக்க எத்தனித்தார்கள். இதைச் சீனச் சக்கரவர்த்தி அறிந்து அன்னத்தைக்கடிந்து கொண்டதால், அன்னங்காரர்கள் மலாக்காவுடன் சண்டை தொடுக்கவில்லை. 1488ல் அல்லாவுடீன் தன்னுடைய 30-ஆம் வயதில் தன் தகப்பனுடைய வைப்பாட்டியின் மகனான முனவர்ஷா என்பவனால் நஞ்சு ஊட்டப்பெற்று இறந்தான்.

---

## 7. சுல்தான் மாமூட்

அல்லாவுடீனுக்குப் பின் அவன் மகனாகிய மாமூட் என்பவன் பட்டத்திற்கு வந்தான். இவன் கருவம் பிடித்த அரசன். இதனால் இவனை யாவரும் வெறுத்தார்கள்.

இவன் ஒரு முறை நோய்வாய்ப்பட்டிருக்கும்போது அரண்மனையிலிருந்த பெண்களும் இவனுடைய பாட்டிக் கிழவியும் இவனைக் கொல்ல எத்தனித்தார்கள். ஆனால், மந்திரியான **துவான் பேராவும்** கடற்படைத் தலைவனான **அங்துவாவும்*** இராப்பகலாக இவனைப் பாதுகாத்து வந்ததனால் இவன் தப்பினான். மாமூடுக்கு ஒன்றுக்கும் பயனற்ற சினேகிதர் பலர் உண்டு. அதுவுமன்றி, அரசாங்க அலுவல்களில் இவனுக்குக் கொஞ்சமேனும் அக்கறை இல்லை. துவான் பேரா இவனுக்குப் பல தடவை புத்திமதிகள் சொல்லியும் ஒன்றும் பயன்படவில்லை. நியாயம் நீதி என்பன இவனிடம் இல்லை. சிறு குற்றஞ் செய்தவர்களையும் மரண தண்டனைக்கு உட்படுத்தினான். இவனை மெச்சிப் பேசியவர்களுக்குப் பணமும் பதவியும் அளித்தான்.

துவான் பேரா 1498ல் இறந்த பின்னர் அவனது சகோதரனான **துவான் பூத்தே**‡ பண்டாஹராவாக நியமிக்கப்பட்டான். இவன் வயது சென்றவனாய் இருந்தும், அயல் நாடுகளாகிய **கிளந்தானுக்கும் புருவாஸுக்கு**மிடையே சண்டை நடக்கும் போது புருவாஸ் பக்கம் சேர்ந்துகொண்டு, கிளந்தானைத் தோற்கடித்தான். அந்த யுத்தத்தில் கைதியாக்கப்பட்ட கிளந்தான் அரச குமாரத்தி ஒருத்தியைச் சுல்தான் மாமூடுக்கு விவாகஞ் செய்து வைத்தான். பிறகு, துவான் பூத்தே இறந்த பின் அச்சமயத்தில் தெமங்கோங் வேலை பார்த்து வந்த **மத்தகிர்** பண்டாஹராவாக நியமிக்கப்பட்டான். இவன் துவான் பேராவின் வைப்பாட்டியின் பிள்ளையும், ராஜா காசீம் பட்டத்திற்குவர உதவி செய்த முகம்மதிய வியாபாரியான

* துவா [மலாய்]—அதிருஷ்டம்
‡ பூத்தே [மலாய்]—வெண்மை

ஜலாலுதீன் வழித்தோன்றலுமாவான். துவான் மத்தகீர் அழகானவன்; ஆனால் மமதையுள்ளவனுயிருந்தான். ஒரு நாளைக்கு ஆறுமுறை தன்னுடைய உடைகளை மாற்றியும் பல தடவை தன்னழகை நிலைக்கண்ணுடியில் பார்த்தும் மெச்சுவான். இவனுக்குப் பல அடிமைகளிருந்தனர். சுல்தான் மாமூட் காலத்தில் இவனே மலாக்காவின் சர்வாதிகாரியாய் இருந்தபடியால், பல விதத்திலும் கைப்பணம் வாங்கிப் பெருஞ்செல்வந்தனுனன். சில சமயங்களில் காசைக் குவியலாகத் தன் நிலத்திலுள்ள பாய்களின் மேல் இறைத்துவிட்டுச் சூழ்ந்திருப்பவர்களை வேண்டிய தொகையை எடுத்துக்கொள்ளும்படி சொல்வான். இவனது மகனின் சிநேகிதர்களுக்குப் பணம் தேவையான போதெல்லாம் தெருக்கள் ஒழுங்காக இருக்க வேண்டுமெனத் தன் மகனைக் கட்டளையிடும்படி செய்வான். இதனால் எந்த நகரவாசிகளின் வீடுகள் தெருவை நோக்கி வெளியே நீண்டிருக்கின்றனவோ அவர்கள் தங்கள் வீடுகள் இடித்துத் தள்ளப்படாவண்ணம் அவன் மகனுக்குக் கைப்பணம் கட்டுவார்கள். அவன் அதைத் தன் சிநேகிதர்கட்குக் கொடுப்பான். இவ்வாறு பண்டாஹரா மகனின் சிநேகிதர்களின் பைகள் நிறைந்தன. துவான் மத்தகீர் ராஜகுமாரரைக்கூட அசட்டையாக நடத்தினுன்.

துவான் மத்தகீரை அவனது பெரும்பதவி காரணமாகவும் கருவம் காரணமாகவும் மலாய் நாட்டாண்மைக்காரரெல்லோரும் விரோதித்தனர். இவனுக்குத் துவான் பத்திமா என்ற அழகிய மகள் ஒருத்தியிருந்தாள். அவளை மாமூட் தன் மனைவியாக்க எண்ணினுன். ஆனால், துவான் மத்தகீர் அவளைத் தனது சொந்தக்காரன் ஒருவனுக்கு விவாகஞ் செய்து கொடுத்துவிட்டான். இதனால் சுல்தான் மாமூடுக்

குக் கோபம் மூண்டது. போதாக் குறைக்குத் துவான் மத்தகிரின் வைரிகள் அவன் தானே சுல்தானுவதற்குச் சூழ்ச்சிகள் செய்கிருனெனப் பொய்க் கதையைக் கட்டி அதைச் சுல்தான் மாமூடிடம் தெரிவித்தார்கள். இதனுல் சுல்தானுனவன் தன் உறவினர்களில் சிலரை அனுப்பி, பண்டாஹுராவைக் கொலை செய்வித்தான். இது கி. பி. 1510–ஆம் ஆண்டில் நடந்தது.

மத்தகிர் பண்டாஹராவாய் இருக்கும் போதுதான் போர்ச்சுகீஸியர்கள் மலாக்காவுக்கு வந்தார்கள். இதைப் பற்றி அடுத்த பாடத்தில் படிப்போம்.

இதன்பின், சுல்தான் மாமூட் இறந்த மத்தகிரின் திரவியங்களை அபகரித்துக்கொண்டு, துவான் பத்திமாவைக் கலியாணஞ் செய்துகொண்டான். பண்டாஹரா ஒழிந்து போனதைப்பற்றி மலாய் நாட்டாண்மைக்காரரும் அவனுக்குக் கைப்பணங் கட்டி வந்த அந்நியதேசத்து வியாபாரிகளும் மனங் குளிர்ந்தனர்.

இப்போது சுல்தான் மாமூட் பாதுகா* துவான் என்னும் பண்டாஹராவின் உதவியைக்கொண்டு மலாக்காவின் அரசியல் விஷயங்களை நடத்தலானுன். மலாக்காவின் கீர்த்தி ஓங்கி வளர்ந்தது. அப்பொழுது சீயத்துக்கும் மலாக்காவுக்கும் நடந்த யுத்தத்தில் சீயத்தை மலாக்கா கடலிலும் தரையிலும் தோற்கடித்தது. அதுவுமல்லாமல், அந்நாட்களில் பாஹாங்குக்கும் சீயத்தின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்த லிகூருக்கும் இடையே (Ligor) நடந்தயுத்தத்தில் மலாக்கா பாஹாங்குக்கு உதவி செய்தது. மேலும் பட்டாணியும் கெடாவும் முஸ்லிம் மதத்தைக் கையாண்டு,

---

*பாதுகா—(பாதுகம்) மலாயா இளவரசரின் பட்டம்

மலாக்காவின் ஆதிக்கத்துக்கு உட்பட்டன. கி. பி. 1508ல் மலாக்காவின் வியாபார விருத்தியின்பொருட்டு ஒரு தூதனை மாமூட் சீனுவுக்கு அனுப்பியதாலே சீயம் பொருமை கொண்டு மலாக்காமீது படையெடுத்தது. சண்டையில் சீயமே தோல்வியடைந்தது.

---

# 8. போர்ச்சுகீசியர் வருகை

வெகுகாலமாக ஐரோப்பாவிற்கும் கீழ்த் தேசங்களுக்கு மிடையே இந்தியர்தான் வர்த்தகத்தை நடத்தி வந்தார்களென்று முன்பாடம் ஒன்றில் படித்தோமல்லவா? இந்த வர்த்தகம் தொன்றுதொட்டு மூன்று மார்க்கங்கள் வழியாய் நடந்து வந்தது. முதலாவது மார்க்கம், அராபிக் கடலைத் தாண்டி, செங்கடலுக்கு ஊடாகச் சென்று ஆப்பிரிக்காவின் வடக்குக் கரையிலுள்ள தொன்மை வாய்ந்த அலக்ஸாண்டிரியா பட்டணம் வழியாக மத்தியதரைக் கடலைத் தாண்டி, வெனிஸ், ஜிநோவா, அதேன்ஸ் முதலிய துறைமுகப்பட்டினங்களுக்குச் செல்லுதல். இவ்விடங்களிலிருந்து ஐரோப்பாவின் மற்றைய பட்டணங்களுக்குச் சாமான்கள் போவது வழக்கம். இரண்டாவது மார்க்கம், இந்தியாவின் மேற்குக் கடற்கரையோரமாகச் சென்று, பாரசீக வளைகுடாவில் (Persian Gulf) பிரவேசித்து, ஒட்டகங்களின் உதவியால் மெஸபட்டோமியாவைக் கடந்து, சிறிய ஆசியாவைத் (Asia Minor) தாண்டி, மத்திய தரைக்கடல் வழியாக முன் சொன்ன துறைமுகங்களை அடைதல். மூன்றாவது மார்க்கம், இந்தியாவின் வடமேற்குக் கணவாய்கள் வழியாகச் சென்று, ஆக்ஸஸ் நதி தீரத்தை அடைந்து, அங்கே

இரண்டு கிளைகளாகப் பிரிந்து, ஒன்று கஸ்பியன் கடல் வழியாக ஐரோப்பாவிலுள்ள வட தேசங்களுக்குச் செல்லுதல்; பிறிதொரு கிளை கருங்கடல் வழியாக மத்திய தரைக் கடலையடைந்து முன் சொல்லிய பட்டணங்களையடைதல்.

கி. பி. 12-ஆம் நூற்றாண்டு மட்டில் முகம்மதியர் கிளம்பி இந்த மார்க்கங்கள் செல்லும் நாடுகளையெல்லாம் கைப்பற்றினர். இன்னும், இவர்கள் இதர மதங்களைச் சேர்ந்தவர்களின் வியாபாரத்தைக் கெடுக்க எண்ணி அவர்களிடமிருந்து அளவுக்கு மிஞ்சிய தீர்வை வாங்கினார்கள். ஆகையால் ஐரோப்பியரது வர்த்தகம் அது முதல் க்ஷீணிக்கத் தொடங்கிற்று. இதனால், ஐரோப்பியர் பழைய மார்க்கங்களை விட்டு இந்தியாவிற்குப் புதிய மார்க்கமொன்றைக் கண்டு பிடிக்க முயன்றார்கள். இன்னும் முகம்மதிய ஆதிக்கம் இந்தியாவிலும் மற்றும் கீழ்நாடுகளிலும் வேரூன்றிய காலத்தில் ஐரோப்பாவில் உள்ள போர்ச்சுகல் தேசம் முகம்மதியரது ஜன்ம விரோதியாய் இருந்தது. ஏற்கெனவே இரு கட்சியாருக்கும் ஐரோப்பாவில் பெருஞ் சண்டைகள் நடந்திருந்தன. போர்ச்சுகீஸியர் திறமை மிகுந்த மாலுமிகள்; முகம்மதியர்கள் கீழ்நாடுகளுடன் நடத்திவந்த வியாபாரத்தை, முக்கியமாக வாசனைத் திரவிய வர்த்தகத்தைத் தாமே கைப்பற்றிக்கொள்ள வேண்டுமென்பது போர்ச்சுகீஸியர் நோக்கமாயிற்று.

கீழ்த் தேசங்களுக்குப் புதிய மார்க்கம் ஒன்றைக் கண்டுபிடிக்கும்பொருட்டுப் போர்ச்சுகீஸியர் பல முறை ஆப்பிரிக்காவின் மேற்குக் கரையோரமாகத் தங்கள் கப்பல்களைச் செலுத்தினர். கி. பி. 1498ல் அவர்கள் எடுத்த கருமம் கைகூடிற்று. பிரசித்தி பெற்ற வாஸ்கோ-த–காமா (Vasco-da-Gama) என்னும் போர்ச்சுகீஸிய

மாலுமி தென்னாப்பிரிக்காவில் உள்ள நன்னம்பிக்கை முனையைச் (Cape of Good Hope) சுற்றிப் பிரயாணஞ் செய்து, இந்து மஹா சமுத்திரத்தைக் கடந்து, மலையாளக் கரையிலுள்ள கள்ளிக் கோட்டையை அடைந்தான். இது உலக சரித்திரத்திலேயே மிகப் பிரதானமான ஒரு சம்பவமாகும். அந்நாட்களில் கிழக்கிந்தியத் தீவுகளிலிருந்து கொண்டுவரப்பட்ட வாசனைத்திரவியங்களைக் கள்ளிக்கோட்டையிலிருந்துதான் ஐரோப்பாவுக்குக் கொண்டுபோய் முகம்மதியர் வியாபாரஞ் செய்தனர். வாஸ்கோ-த-காமா போர்ச்சுகலுக்குத் திரும்பியவுடன் தான் கண்டறிந்தவைகளைப் பற்றித் தன் தேசத்தவர்க்கு விளம்பரம் பண்ணினான். இதனால், போர்ச்சுகலிலிருந்து திரள் திரளாகப் பலர் பொருள் சேகரிக்கும் நோக்கத்துடன் நன்னம்பிக்கை முனையைச் சுற்றிக் கீழ்த் தேசங்களுக்கு வந்தனர். இவ்வாறு வந்தவர்களுக்குப் பிரபுக் குடும்பம் ஒன்றைச் சேர்ந்த அல்பக்கே(d'Albuquerque) என்பவர் தளகர்த்தராய் இருந்தார்.

ஆரம்பத்திலிருந்தே போர்ச்சுகீஸியர் முகம்மதியர் மீது கொஞ்சமும் அனுதாபங் காட்டாது கிழக்கு ஆப்பிரிக்காவிலிருந்த அராபியர் துறைமுகங்களையும் கள்ளிக் கோட்டையையும் கோவாவையும் கைப்பற்றினர். இன்னும், மலாக்காதான் முகம்மதியரது வாசனைத் திரவிய வியாபாரத்திற்கு மூலஸ்தானம் என வெகு சீக்கிரத்தில் அறிந்தார்கள். ஆகவே, எவ்விதத்திலாவது மலாக்காவைப் பிடிக்க வேண்டுமெனத் தீர்மானித்தார்கள். 1509 ஆகஸ்டு 1௳ ஐந்து போர்ச்சுகீஸியக் கப்பல்கள் தளகர்த்தன் தே-செ—குயிராவின் (de Sequeira) தலைமையின்கீழ் மலாக்காவை அடைந்தன. அடைந்ததும் போர்ச்சுகீஸியர் சுல்தான் மாமூட்டுக்குத் தம்

அரசன் மானுயல் (King Manuel) பெயரால் வெகுமதி களையளித்து, மலாக்காவில் தம்மை வியாபாரஞ்செய்ய அனுமதிக்குமாறு கேட்டனர்.

அவர்களைக் கண்ட மலாயர்களெல்லோரும் அவர்கள் வெள்ளை வங்காளிகளோ எனச் சந்தேகங் கொண்டனர். சிலர் அவர்களது தாடி மயிர்களைப் பிடித்து இழுத்தார்கள்; தோளில் தட்டிக் கொடுத்தார்கள். வேறு சிலர் அவர்களுடைய தொப்பியை எடுப்பதும், கைகளைப் பிடித்துக் குலுக்குவதுமாய் இருந்தனர்.

பண்டாஹரா மத்தகிர் போர்ச்சுகீஸியரை மிக்க மரியாதையுடன் வரவேற்றுனென்றாலும், அந்தரங்கத்தில் அவர்களைத் தூஷித்தான். மேலும், முகம்மதிய வியாபாரிகளின் வர்த்தகத்தை இந்தியாவில் எவ்வாறு போர்ச்சுகீஸியர் கைப்பற்றினுர்கள் என்பதையும் கள்ளிக்கோட்டையை அவர்கள் பிடித்த விதத்தையும் இஸ்லாமியர்களிடமிருந்து பண்டாஹரா அறியலானுன். இதுவுமன்றி, மலாக்காவிலிருந்த குஜராத்தி வியாபாரிகள் போர்ச்சுகீஸியரால் தங்கள் வியாபாரத்திற்குப் பங்கம் உண்டாகுமெனஅஞ்சி, அவர்களை எதிர்க்குமாறு மத்தகிரைத் தூண்டினுர்கள்.

ஆகவே, சுல்தான் மாமூட்டும் மத்தகிரும் சேர்ந்து போர்ச்சுகீஸியக் கப்பல்களைப் பிடிக்கச் சதியாலோசனை செய்தார்கள். அஃது எப்படியெனில், போர்ச்சுகீஸியரை ஒரு விருந்துக்கு அழைத்து, அவர்கள் விருந்துண்ணும்போது அவர்களையும் அவர்களது கப்பல்களையும் பிடித்தல் என்பதாம். இதைப் போர்ச்சுகீஸியனொருவனுடன் சினேகமாயிருந்த ஒரு ஜாவகனியன் அறிந்து, அதே இரவில் கப்பலுக்கு நீந்திச் சென்று, நடக்கப் போவ

தைத் தெரிவித்தான். பின்னர், இருபது போர்ச்சுகீஸியர்கள் சரக்கு வாங்கக் கரைக்குப் போனார்கள். அவர்களைப் பண்டாஹரா பிடித்துச் சிறையில் இட்டான். அவர்களை மீட்க முடியாதபடியால் தே-செ-குயிரா ஆட்களில்லாத இரண்டு கப்பல்களை எரித்துவிட்டு, போர்ச்சுகலுக்குத் திரும்பிச் சென்று, நடந்ததையெல்லாம் தன் அரசாங்கத்தாருக்குத் தெரிவித்தான்.

## 9. போர்ச்சுகீஸியர் மலாக்காவைப் பிடித்தல்

தே-செ-குயிரா கூறியவற்றையெல்லாம் கேள்வியுற்றவுடன் போர்ச்சுகீஸியருக்குக் கோபம் பொங்கியது. சிறைப்பட்டவர்களை மீட்கவும் மலாக்காவைத் தண்டிக்கவும் நான்கு கப்பல்கள் உடனே அனுப்பப்பட்டன. இக்கப்பல்கள் இந்தியாவை அடைந்தவுடன், கோவாவில் போர்ச்சுகீஸியத் தளகர்த்தராய் இருந்த அல்பக்கே என்பவர் மலாக்காவையே கைப்பற்ற வேண்டுமென்ற நோக்கத்துடன் 19 கப்பல்களில் 800 போர்ச்சுகீஸிய வீரர்களையும் 600 இந்திய வீரர்களையும் கொண்டு 1511-ஆம் ஆண்டு, மே மீ, 2உ கொச்சியிலிருந்து மலாக்காவுக்குப் புறப்பட்டார்.

அக்காலத்தில் மலாக்காவில் **நைனு செட்டி** என்னும் ஓர் இந்து வியாபாரி இருந்தான். அவனுடைய ஆலோசனைப்படி, பண்டாஹரா சிறையிலிருந்த போர்ச்சுகீஸியர்களை வெளியே விட்டு, அவர்களுக்குப் பிரத்தியேகமாக ஒரு வீடும் கொடுத்து, அவர்களது சாப்பாட்டிற்காக ஏற்கெனவே அவர்களிடம் கொள்ளையடித்த சாமான்களைவிற்கும்படி செய்தான். இந்தப் போர்ச்சுகீஸியரில் எட்டுப்

பேர் மலாக்காவிலிருந்து தப்பி சுமத்திராவிலுள்ள பெடீர் என்னுமிடத்தில் வந்து தங்கியிருந்தார்கள்.

இதைக் கேள்விப்பட்ட அல்பக்கே மலாக்காவிற்கு வந்த ஒரு குஜராத்திக் கப்பலைக் கண்டு அதன் உதவியால் தம் படைகளுடன் பெடீருக்கு வந்து சேர்ந்தார். பிறகு சிறையிலிருந்து தப்பி வந்த போர்ச்சுகீஸியர்களை ஏற்றிக் கொண்டு ஒரு நாள் மாலை அல்மக்கே பட்டாளத்துடன் மலாக்காத் துறைமுகத்தை வந்து அடைந்தார். குழல் ஊதியவுடன் எல்லாக் கப்பல்களும் நங்கூரம் போட்டன. சுல்தான் மாமூட் இதைக் கேள்விப்பட்டு, அவர்கள் யுத்தம் செய்ய வந்துள்ளார்களா அல்லது சமாதானத்திற்காக வந்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்பி, ஒரு சோனகனை அவர்களிடம் அனுப்பினான். அல்பக்கே அத்தூதனைப் பார்த்து, "அடைபட்டிருக்கும் போர்ச்சுகீஸியர்களை என்னிடம் ஒப்புவித்தல் வேண்டும்; அஃதோடு, தே-செ-குயிராவுக்கு நேர்ந்த கஷ்டங்களுக்கு ஈடு செய்தல் வேண்டும் எனச் சுல்தானுக்குத் தெரிவி," என்று கூறியனுப்பினான். இதைக் கேள்வியுற்ற சுல்தான் மற்றொரு தூதனையனுப்பி, போர்ச்சுகீஸியர் முதலில் சமாதானம் செய்து கொள்ளல் வேண்டும் எனத் தெரிவித்தான். அல்பக்கே தாம் முதலிற் சொன்னதையே திரும்பவும் சொன்னார்.

இப்படி இருக்கையில் மலாக்காப் பட்டணத்திலிருந்த சோனகர்களும் துலுக்கர்களும் ரூமிகளும் குஜராத்திகளும் ஒன்று சேர்ந்து, போர்ச்சுகீஸியருடன் சமாதானம் ஏற்பட்டால் தங்கள் வியாபாரத்திற்குக் கெடுதி நேருமென நினைத்து, மலாய்ப் பிரதானிகட்கு இலஞ்சம் கொடுத்து, அவர்கள் மூலம் சுல்தானைச் சமாதானத்திற்கு உடன்படக் கூடாதெனத் தடுத்தார்கள். சுல்தானும் வெகு வேகமாக யுத்தம் நடத்தவேண்டுமென்று, குஜராத்தி

களை மலாக்காவிலிருக்கும் மலையைச் சுற்றியும் கடற்கரையோரங்களிலும் அரண்கள் கட்டும்படி கட்டளையிட்டான்.

இவ்விஷயம் அல்பக்கே என்பவருக்குத் தெரிய வந்தது. மேலும், கைதிகளாய் இருக்கும் போர்ச்சுகீஸியர்களை இஸ்லாம் மதத்தைத் தழுவும்படி சுல்தான் உபத்திரவப்படுத்துகிறார் எனவும் அறிந்தார். ஆகவே, கைதிகளின் முடிவு எப்படியானாலும், மலாக்காவைப் பிடிப்பது மாத்திரம் நிச்சயமெனத் தீர்மானித்தார். சுல்தானுக்கு ஓர் இறுதிக் கடிதம் எழுதினார். அதில் தான் முன் கூறிய நிபந்தனைகளை நிறைவேற்றாவிடில் சுல்தான் அவனது ஊரை இழக்கவேண்டுமென்று கண்டிருந்தது. சுல்தான் அக்கடிதத்தைப் பார்த்து, "இப்பொழுது இங்கிருக்கும் போர்ச்சுகீஸியக் கைதிகளுக்காக உடைகள் தயாராகின்றன. ஆனபடியால், நீர் கோட்டைக்கு முன்னால் கப்பல்களை நிறுத்த வேண்டிய அவசியமில்லை," எனப் பதில் கொடுத்தான். கனம் அல்பக்கே கப்பல்களை அவ்விடமிருந்து அகற்றிப் போய் ஆறுநாள் வரையில் காத்திருந்தார். கைதிகள் வந்தபாடில்லை. அகவே, அல்பக்கே மலாக்காவின் கரையோரத்திலிருந்த சில வீடுகளுக்குத் தீவைத்து, முகம்மதியருக்குச் சொந்தமான எல்லாக் கப்பல்களையும் எரித்துவிட்டார். இதனால், சுல்தான் பயங்கொண்டு, கைதிகளை விடுதலை செய்தான். ஒரு கோட்டை கட்டுவதற்கு இடங்கொடுத்ததுமன்றி, தே-செ-குயிராவிடமிருந்து கவர்ந்த பொருள்களுக்கெல்லாம் ஈடும் செய்தான்.

சில நாட்கள் சென்ற பின்பு, மலாயர்களுடைய அரண்களிற் கொடிகள் பறந்தன. சத்துருவின் பக்கத்திலுள்ள படைகளையும் பீரங்கிகளையும் சைனியத்தின்

எண்ணிக்கையையும் அவர்கள் சண்டை செய்யும் மாதிரி யையும் தெரிந்துகொள்வதற்காக அல்பக்கே ஒரு வேட்டுக் கிளப்பினார். அங்கிருந்த சீனக் கையாட்கள் மூலமாக ஜாவானியர், பர்ஷியர், சராசெனர் இவர்கள் கொண்ட 2,000 படைகளும், 20 யானைகளும், பீரங்கிகளும், ஏராள மான உணவுப் பொருள்களும் மலாக்காவில் சேகரித்து வைக்கப்பட்டிருக்கின்றன என அல்பக்கே அறிந்தார். பிறகு தம்முடைய ஆட்களையெல்லாம் இரவில் சீனரு டைய படகுகளில் ஏற்றிக்கொண்டு கரைக்கு வந்தார்.

மலாக்கா ஆற்றிலுள்ள பாலத்தை முதலிற்பிடித் தால்தான் சுல்தானது சேனையைத் தோற்கடிக்க முடியு மென அல்பக்கே அறிந்தார். மலாக்கா ஆறுதான் பட் டணத்தை இரண்டாகப் பிரிக்கிறது. அதன் ஒரு பக்கத் தில் மலையும் அரண்மனையும் பள்ளிவாசலும் இருந்தன. இரண்டு பகுதிகளுக்கும் பாலம் இணைப்பாய் இருந்தது. அது மிகப் பலமாக அரண் செய்யப்பட்டிருந்தது. ஆகவே அதைப் பிடித்துவிட்டால், சுல்தானின் சேனையைப் பிரித்து விட்டுச் சுலபமாகத் தோற்கடித்துவிடலாம் என்பதையும் அல்பக்கே கண்டார்.

திரு ஜேம்ஸ் அப்போஸ்தலர் திருநாளன்று அவரைத் தியானித்து, தமது அரைவாசிப் பட்டாளத்தைப் பட்ட ணத்திற்கு வடக்கே அனுப்பினார்; மற்ற அரைவாசியைப் பள்ளிவாசலுக்குத் தெற்கே அனுப்பினார். விடிந்ததும் யுத்தம் ஆரம்பமாயிற்று. முதலில் பாலம் தாக்கப்பட்டது. அங்கே மலாயர்கள் அமைத்திருந்த அரண்களைப் போர்ச்சு கீஸியர்கள் உடைத்தார்கள். எண்ணிறந்த சோனகர்கள் அம்பு, வில், வாள், ஊதுகுழல், போர்க்கவசம் முதலியவற் றைக்கொண்டு போர் புரிந்தார்கள். அநேக போர்ச்சு

கீஸியர் நச்சு அம்புகளால் காயமடைந்தார்கள் : அநேகர் இறந்தார்கள். ஆயினும், அவர்கள் தீவிரமாகப் பொறி பறக்கச் சண்டை செய்தார்கள். இதனால், மலாயர்கள் எதிர்த்து நிற்கமுடியாமல் மலைக்கு ஓடிவிட்டார்கள். அப்போது பள்ளிவாசலும் பாலமும் பிடிபட்டன, அரண்களையும் கைப்பற்றிக்கொண்டார்கள். சுல்தானுடைய மகன் அஹமது இச்சண்டையில் சேர்ந்திருந்தான். அவன் தன் பட்டாளத்துடன் மலையை நோக்கி ஓடும் போது அவன் ஏறியிருந்த யானை வெருண்டதால், கீழே விழுந்து காயமடைந்தான் ; அஃதுடன் எழுந்து தப்பி ஓடிவிட்டான். அவனைப்பற்றி அடுத்த பாடத்தில் படிப்போம்.

இங்கிலையில் போர்ச்சுகீஸியர் யுத்தம் செய்யும் போது தெற்குக் கரையிலிருந்து 700 ஜாவானியர்கள் போர்ச்சுகீஸியரைத் தாக்கினார்கள். ஜாவானியரில் சிலர் கடலுக்குத் துரத்தப்பட்டனர் ; மற்றையோர் கடலில் கொலையுண்டனர்.

இருந்தும் போர்ச்சுகீஸியரால் பட்டணத்தைக் கைப்பற்ற முடியவில்லை. ஆகவே, மீண்டுமொரு முறை மலாயர்களைத் தாக்கும்பொருட்டு அல்பக்கே பட்டணத்துக்கு நெருப்பு வைக்கும்படி தம் சைனியத்திற்குக் கட்டளையிட்டார். இதனால், பட்டணத்தில் பெரும்பான்மையான பாகமும் வர்த்தகப் பொருள்கள் குவித்திருந்த ஒரு பெரிய பண்டகசாலையும் விலையுயர்ந்த வேறு பல பொருள்களும் சாம்பலாயின. ஆயினும், அன்று காலையிலிருந்தே போர்ச்சுகீஸிய சைனியம் நெருக்கடியான சண்டை செய்ததாலும் கடுவெயிலினால் இளைத்துப் போனதாலும் பலர் சோர்வடைய ஆரம்பித்தனர். இதனால், அல்பக்கே தம் சைனியத்தைக் கப்பல்களுக்குத் திரும்பும்படி கட்டளையிட்டார்.

போர்ச்சுகீஸியருள் சிறு தளகர்த்தர் பலர் இருந்த னர். அவர்கள் சண்டை செய்ய மனமில்லாதவர்களாய், மலாக்காவானது மிக வலிமையாக அரண் செய்யப்பட்டிருக்கிறதென்றும் அது கொடூரமாகத் தப்பாமல் தாக்கப்பட்டும் வீழ்ச்சியடையவில்லையென்றும் கூறினர். ஆனால், அல்பக்கே மலாக்காவோடு சமாதானஞ் செய்து கொள்ளவோ அல்லது மலாக்காவை விட்டுவிட்டுப் போய்விடவோ விரும்பவில்லை.

அல்பக்கே சிநேகமான சீனர் சிலரிடமிருந்து மலாக்காவின் பாலத்தைக்காட்டிலும் அதிக உயரமான ஒரு தோணியை வாங்கி, அதன்மேல் துப்பாக்கிகளை நிறுத்தி, அதனை நீர்ப்பெருக்குடன் நதி முகத்துவாரத்திற்குக் கொண்டுவந்தார். பாலத்தை அடைந்ததும் தோணியை அதோடு சேர்த்துக் கட்டினர். தோணியில் அமைக்கப்பட்ட ஓர் உயரமான பீடத்தினின்று குண்டுகளையும் கற்களையும் பாலத்தைப் பாதுகாத்துக்கொண்டிருந்த மலாயர்கள்மீது போர்ச்சுகீஸியர்கள் சொரிந்தார்கள். இஃதொடு, மலாயர்களால் அமைக்கப்பட்டிருந்த தடைவேலிகளின்மீது போர்ச்சுகீஸியரது இரண்டு கப்பல்கள் உக்கிரமாகத் துப்பாக்கிகளிலிருந்து நெருப்புமாரி பொழிந்தன. இன்னும், போர்ச்சுகீஸியச் சேனையின் ஒரு பிரிவு நதியின் வடக்கில் இறங்கியது. இதனால், அநேக போர்ச்சுகீஸியர் காயப்பட்டார்களென்றாலும், அவர்கள் தைரியமாக ஆற்றைக் கடந்து, பள்ளி வாசலைத் தாக்கினர்கள். பள்ளி வாசலில் சுல்தான் மகன் 3,000 பேர் கொண்ட சேனைகளுடனும் யானைகளுடனும் நின்றான். போர்ச்சுகீஸியர்கள் முன் சென்றவுடன் மலாயர் பின் வாங்கினர். இதனால், பள்ளிவாசலையும் பாலத்தையும் போர்ச்சுகீஸியர்கள் கைப்பற்றினர்கள். வடக்கே வீட்டுக் கூரைகளி

னின்று மலாயர்கள் துப்பாக்கி வேட்டுக் கிளப்பினுர்க ளென்ருலும், அன்று மாலை போர்ச்சுகீஸியர் பட்டண வாசிகளிற் பலரைக் கொலை செய்துவிட்டார்களென்று அறிந்தவுடன், மலாயர்கள் அச்சங்கொண்டு, துப்பாக்கி வேட்டை நிறுத்தினுர்கள். இன்னும் கரையிலுள்ள போர்ச்சுகீஸியக்கப்பல்களிலிருந்து வந்த குண்டுமாரியைக் கண்டதும், இரவில் மலாயர்கள் மலாக்காவைப் போர்ச்சு கீஸியர் கையில் விட்டுவிட்டு ஓட்டம் பிடித்தார்கள். இது கி. பி. 1511-ஆம் வருடம், ஆகஸ்டு மாதம், 15-ஆந் தேதியன்று நடந்தது.

---

# 10. மலாய மலாக்காவின் இறுதி

இவ்வாறு ஓடிய மலாயர்கள் சுல்தான் மாமூட் டுடைய மகனுடன் மூவார் ஆற்றில் ஓர் அரண் அமைத்து, போர்ச்சுகீஸியர் பட்டணத்தைக் கொள்ளையடித்துப் பொருள்களுடன் சென்றுவிடுவார்களென எண்ணி, அங்குப் பத்து நாட்கள் காத்திருந்தனர். ஆனுல், அல் பக்கே பட்டினத்தைக் கொள்ளையடித்ததுமன்றி, சுல் தானின் மகனைத் துரத்துவதற்காக 400 போர்ச்சுகீஸி யர்களையும், 600 ஜாவாக்காரர்களையும், 300 பேகுக்காரர் களையும் (பர்மியர்) அனுப்பினுர். இவர்களை எதிர்க்க முடியாமல் சுல்தானுடைய மகன் யானைகளையும் பல் லக்குகளையும் விட்டுவிட்டு ஓடிப்போனுன். அவ்வேளை சுல்தான் மாமூட் மலாக்காவிலிருந்து ஒரு நாள் பயணத் தூரத்திலுள்ள ஓர் இடத்தில் தங்கி, லிங்காவின் (Linga Island) படையுதவியை எதிர்பார்த்துக்கொண்டிருந் தான்.

மகன் ஓடவே, சுல்தானும் அவனுடன் ஓட்டம்

பிடித்தான். இருவருமாக ஒரு சிறு கூட்டத்துடன் பூராஹாங்கை அடைந்தனர்.

அப்போது சோனகர்களுடன் பர்மாக்காரர்களும் பட்டணத்திற்குள் திரும்பி வரத் தொடங்கினுர்கள். தங்களுக்கு இரக்கம் காட்ட வேண்டுமென்று போர்ச்சுகீஸியர்களைக் கெஞ்சினுர்கள். அவர்களுடன் சந்தோஷமாகப் பேசி அவர்களது சொந்தச் சாமான்களை எடுத்துப் போகும்படி போர்ச்சுகீஸியர்கள் அனுமதி கொடுத்தார்கள். இந்து வியாபாரிகளுக்கும் அவ்வாறே உத்தரவளித்தார்கள். இன்னும், இந்துக்களைத் தங்கள் சொந்தக் கப்பல்களில் ஏற்றிக் கன்னியா குமரிக்குக் கொண்டுபோய் இறக்கிவிட்டனர். இவ்வியாபாரிகள் முன்போல மலாக்காவுக்கும் இந்தியாவுக்குமிடையே வியாபாரத்தை நடத்தத் தொடங்கினுர்கள்.

கலகங்களெல்லாம் அடங்கிய பின்னர், பட்டணம் பூராவையும் கொள்ளையடிக்கும்படி அல்பக்கே தம்முடைய ஆட்களுக்குச் சொன்னுர். மலாயரிடமிருந்து பெரும்பாலும் வெண்கலத்தாலான 3,000 பீரங்கிகள் அகப்பட்டன. இன்னும் விலையுயர்ந்த நகைகளும், தங்கம் பூசப்பட்ட பல்லக்குகளும், வேறு பல விதமான சாமான்களும் கிடைத்தன. அவற்றை மானுயல் அரசருக்கும் மரியா இராணிக்கும் அளிப்பதற்காக அல்பக்கே வைத்திருந்தார். ஆனுல், அவை ஏற்றியிருந்த கப்பல் சுமத்திராக் கரையிலுள்ள ஆறுக் குடாவில் ஒரு பாறையின் மீது மோதியதால் அழிந்துவிட்டது.

அல்பக்கே ஒழுங்கான வழியில் அரசியல் முறைகளை அமைப்பதற்காக மலாக்காவில் மூன்று மாதங்கள் தங்கினுர். மலாக்காக் குன்றிலிருந்த அரண்மனைக்கருகில் பலமான ஒரு கோட்டையைக் கட்டுவித்தனர். அதன்

சுவர்கள் 20 அடி உயரமும் 5 அடி கனமும் உள்ளன வாய் இருந்தன. அக்கோட்டையைக் கட்டுவதற்குப் பள்ளிவாசல்களைத் தகர்த்தும், பழைய அரசர்களது கல்லறைகளைப் பெயர்த்துமே கற்களைச் சேமித்தார். கட்டி முடிந்த பிறகு பீரங்கிகளும் பட்டாளங்களும் அங்கே வைக்கப்பட்டன. நகரவாசிகள் அதைப்பார்த்துத் திகிலடைந்தனர். *அதனுள் போர்ச்சுகீஸியர்கள்* பந்தோபஸ்தாக வாழ்ந்தனர். இன்னும் தற்காலம் 'ஸெயின்ட் பால் ஆலயம்' என வழங்கும் கீழ் நாடுகளிலுள்ள மிகப் பழமையான மாதா கோவிலை 1511ல் அல்பக்கே கட்டி முடித்தார்.

அரசியல் மாறுதலால் நாணயத்தைப் பற்றிய இன்னல்கள் பிரஜைகளுக்கு உண்டானதைப் பற்றி நைஞச் செட்டி என்பவன் அல்பக்கேயிடம் தெரிவித்தான். அவர் மலாக்காவிலுள்ள முக்கிய வியாபாரிகளுடன் கலந்தாலோசித்து, மூன்று விதமான நாணயங்களை அடித்துப் பரப்பினார். அவையாவன: தகரக்காசு (மலாயா); வெள்ளிக்காசு (சீயம்); பவுன் காசு (பாஹாங்கும் மினுங்காபோவும்) [மினுங்-காபோ சுமத்ராவில் ஒருமாகாணமாய் இருந்தது] இந்த நாணய மாறுதலை விளம்பரம் பண்ண யானைகள் பவனி வந்தன. அவற்றுள் ஒன்றின் மேல் போர்ச்சுகீஸிய மன்னனது கொடி வைக்கப்பட்டிருந்தது. ஒரு சோனகன் முரசறைந்தான். இன்னும், ஒரு போர்ச்சுகீஸியனும் நைஞச் செட்டியின் மகனும் புதுக்காசுகளை ஜனங்களிடையே வாரி இறைத்தனர். இந்நாட்களில் 80/90 வயதுள்ள ஜாவானியத் தலைவனொருவன் மலாக்காவிலிருந்தான். அவனுடைய பெயர் உத்தி முத்தி ராஜா என்பதாகும். அவன் போர்ச்சுகீஸியரிடம் ஒரு சிறு சேனையே இருப்பதாகவும், அவர்களிடமிருந்து

மலாக்காவை மீண்டும் கைப்பற்றத் தான் உதவி செய்வ தாகவும் பாஹாங்கிலுள்ள பழைய சுல்தான் மாமூடுக்குத் தெரிவித்தான். இன்னும், போர்ச்சுகீஸீயர் வெளியிட்ட புது நிர்ணயங்களை ஜாவானியர் இருந்த குறிச்சிக்குப் போகவொட்டாமல் தடுத்தான். அவனைச் சேர்ந்த வர்கள் போர்ச்சுகீஸியரது பாதுகாப்பிலிருந்த சோன கரைக் கொள்ளையடித்ததுமன்றி, உத்தி முத்தி ராஜா சுல்தானது சொத்துக்களையும் அடிமைகளையும் தன் வசமாக்கினன். மேலும், அவன் மலாக்காவில் இறக்கு மதியான எல்லா அரிசி மூட்டைகளையும் தானே வாங்கி வைத்துக்கொண்டான். இதனுல், மற்ற வர்த்தகர் களுக்கு அரிசி வியாபாரங் கிடைக்காது போயிற்று.

இந்த ஒழுங்கீனமான வேலைகளை அல்பக்கே அறிந் தார். இதற்காகக் கோட்டைக்குள் ஒரு கூட்டம் நடத் தினர். அக்கூட்டத்திற்கு முக்கிய நகர வாசிகள் யாவரும் வந்திருந்தனர். அச்சமயத்தில் அங்கு வந்திருந்த உத்தி முத்தி ராஜாவையும், அவனுடைய மகன், மருமகன், பேரன் முதலானவர்களையும் பிடித்துக் கட்டும்படி அல் பக்கே தம்முடைய ஆட்களிடம் கூறினர், அதன் பின்பு அவர்களின் தலைகளைக் கொய்துவிடும்படி கட்டளையிட் டார். இதனுல் அங்கிருந்த ஜாவானியர்கள் கிளம்பிக் கலகங்கள் செய்யத் தொடங்கினர். ஆனுல், அல்பக்கே கலகக்காரர்களைத் துண்டங்கள் போட்டார்.

இதன்பின்னர் வியாபாரிகளும் நகரவாசிகளும் போர்ச் சுகீஸியரது ஆளுகையில் அமைதியாய் அமர்ந்தனர்.

---

# 11. போர்ச்சுகீஸியரின் ஆட்சி

போர்ச்சுகீஸியர் சோனகரது கப்பல்களைத் தவிர்த்து மற்றவர்களுடைய கப்பல்கள் மலாக்காவிற்கு வந்து

வியாபாரஞ் செய்ய அனுமதித்தனர். போர்ச்சுகீஸிய வர்த்தகர்கள் தங்களது வியாபாரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் சீயம், பர்மா, சீனு, ஜாவா, கம்பார் (சுமத்திரா), மினங்-காபோ, மொலுக்கஸ் தீவுகள் முதலிய இடங்களுக்குச் சென்றனர். இந்தியாவி லிருந்து துணிமணிகள், கற்பூரம், அம்பர், யானைத் தந்தம், அரிசி, கோதுமை முதலியன வந்தன. மலாயா தீபகற் பத்தின் ஏனையவிடங்களிலிருந்தும் கிழக்குச் சுமத்திராவி லிருக்கும் மிளகு, ஈயம், பொன், யானைத்தந்தம், மிருகங் களின் தோல்கள், உணவுக்கான குருவிக்கூடுகள் முதலி யன மலாக்காவிற்கு வந்தன. மொலுக்கஸ் தீவுகள் ஜாவா, போர்னியோ இவ்விடங்களிலிருந்து வாசனைத் திரவியங்கள், கற்பூரம், துணிகள், எண்ணெய், சந்தனக் கட்டைகள், ஆமையோடுகள், நெல் முதலியன கொண்டு வரப்பட்டன. கம்போடியா, சீயம் இவ்விடங்களிலிருந்து தங்கம், அரிசி, துப்பாக்கிகள், மருந்துவகைகள் முதலியன வந்திறங்கின. சீனுவிலிருந்து பொன், பட்டு, திணுசு திணுசான சீனி, முத்து, கோப்பைகள் முதலியன கொண்டுவரப்பட்டன. இத்தகைய வியாபாரத்தால் மலாக்கா அதிசீக்கிரத்தில் செல்வமும் சிறப்பும் பெற் ருேங்கியது.

முந்திய பாடத்தில் போர்ச்சுகீஸியர் கட்டிய கோட்டையைப் பற்றிக் கவனித்தோம். அது கட்டி முடிந்ததும் அல்பக்கேர் கோவாவிற்குப் புறப்பட எத்த னித்தார். இதனுல், தம் சேனைத் தலைவர்கள் எல்லோரை யும் கூட்டி மலாக்கா அரசாங்க அலுவல்களை எவ்வாறு நடத்தவேண்டுமென்பதைப் பற்றியும், அங்கு நிறுத்த வேண்டிய சைனியத்தின் தொகையைப்பற்றியும், மலாக் காவிற்கு வேண்டிய கப்பல், யுத்த தளவாடங்கள்



மலாக்கா செயின்ட் ஜோன் குன்றிலுள்ள கோட்டை. இது டச்சுக்காரரால் கட்டப்பட்டது.



மலாக்கா ஆறும் பாலமும்



குன்றின் மேல் செயின்ட் பால்ஸ் ஆலயம் (மலாக்கா) இருப்பதைக் கவனிக்க. இவ்வாலயத்தை டச்சுக்காரர் ஒரு கோட்டையாகப் பாவித்தனர்.

இவற்றைப்பற்றியும் ஆலோசனை செய்தார். றை-டீ-அரஜோ (Ruy-de-Araujo) என்பவர், அவர் புரிந்த சேவைக்காக, கோட்டைக்கு அதிபதியாக நியமிக்கப்பட்டார். மலாக்காவிலிருந்த ஒவ்வொரு ஜாதியாருக்கும் அவரவர்களுக்குள்ளே தலைவர்கள் நியமிக்கப்பட்டனர். அதன் பின்னர், 1511-ஆம் ஆண்டின் முடிவில் அல் பக்கே கோவாவுக்குப் புறப்பட்டார்.

அக்காலை மலாக்காவின் ஜனத்தொகை 20,000. இதில் 7,000 பேர் போர்ச்சுகீஸியர். குன்றைச் சுற்றிச் சென்றுகொண்டிருந்த ஒடுங்கிய தெருக்களில் கல், பலகை இவற்றால் கட்டப்பெற்ற வீடுகளிருந்தன. இவற்றினிடையே போர்ச்சுகீஸிய கவர்னரின் மனைவியும், பிரதம கத்தோலிக்க அதிகாரியான பிஷப்பினது மாளிகையும், நகர மண்டபமும், ஐந்து கிறிஸ்தவ ஆலயங்களும், இரண்டு ஆஸ்பத்திரிகளும் நிறுவப்பட்டிருந்தன. சுல்தானது அரண்மனை தரை மட்டமாக்கப்பட்டு, அது இருந்த இடத்தில் 120 அடி உயரமுள்ள கோபுரத்துடன் ஒரு மாடம் கட்டப்பெற்றது. அதிலிருந்து காவலாளர்கள் பட்டினத்தையும், துறைமுகத்தையும் கவனித்து வந்தார்கள். ஆற்றின் வடக்கே, கடற்கரை ஓரமாக ஜாவானியர், இந்தியர், சீனர் இவர்களது குடியேற்ற இடங்களிருந்தன. பட்டினத்தைச்சுற்றி நெல் வயல்களும் தோப்புக்களுமிருந்தன. ஆனால், உள் நாட்டு நெல் விளைவு குடிகளுக்குப் போதாமையால்; அயல் நாடுகளிலிருந்தே இத்தானியம் வந்தது.

மலாக்காவின் வர்த்தகம் போர்ச்சுகீஸியர் வசமே இருந்தது. இங்கிருந்து மிக விலையுயர்ந்த பண்டங்களைக் கப்பல்களில் நிரம்ப ஏற்றி ஐரோப்பாவிற்கு அனுப்பினர். எவ்விதத்திலாவது ஐஸ்வரிய மூட்டையைக் கட்டவேண்

டியதுதான் அவர்களது கருத்து. கீழ் நாடுகளது வியாபாரிகளின் இலாப நஷ்டங்களைப்பற்றி அவர்கள் அக்கறை காட்டவில்லை. தங்களோடு போட்டா போட்டியாக வியாபாரம் செய்த ஏனையோரது கப்பல்களைக் கொள்ளையடித்தனர். மலாக்காவுக்கு வாராது சென்ற கப்பல்களைத் தீக்கிரையாக்கினர். அந்நிய வியாபாரிகளது பண்டங்களுக்கு அளவு கடந்த தீர்வை விதித்தனர். அந்நிய வியாபாரிகள் போர்ச்சுகீஸியருக்கு மிகக் குறைந்த விலையில் தங்கள் சரக்குகளை விற்க வேண்டுமென நியதி உண்டாக்கினர். கவர்னருக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும் சன்மானங்களும் கைக்கூலியும் கொடுக்க வேண்டியதாயிருந்தது. இக்காரணங்களால் அநேக கீழ்நாட்டு வர்த்தகர்கள் மலாக்காவை விட்டு வேறு இடங்களுக்குச் சென்றனர். போர்ச்சுகீஸியர் மலாக்காவையாண்ட 130 வருட முழுவதும் மலாய் உலகம் அவர்களை வெறுத்தது. எல்லோரும் அவர்களை விரோதித்தனர். அவர்களது கோட்டை அடிக்கடி தாக்கப்பட்டது. இடைவிடாத தற்பாதுகாப்பாலும் கோவாவிலிருந்து வந்த உதவியாலுமே அவர்கள் மலாக்காவை ஆள முடிந்தது.

## 12. போர்ச்சுகீஸியரும் சுல்தான் மாமூடின் இறுதியும்

பாஹாங்கில் ஓர் ஆண்டைக் கழித்த பின்னர், சுல்தான் மாமூட் தன் பரிவாரத்தோடு தெற்கே சென்றான். அங்கு இவனது வழித்தோன்றல்களால் ஜொகூர் இராச்சியம் உண்டாக்கப்பட்டது. ஆனால், இவன் பிந்தாங் தீவில் ஓர் அரணை உண்டாக்கிக்கொண்டு போர்ச்சுகீஸியருடன் சண்டையை நடத்தி வந்தான். மலாக்கா

விற்கு வெளியே இருந்த மலாயர்களும் மலாக்காப் பட்டணம் மீண்டும் தங்கள் கைக்கு வருமென எண்ணி, போர்ச்சுகீஸியருக்கு ஓயாது தொல்லை கொடுத்தனர். பாஹாங்குக்கு முதல் முதலில் சென்ற போர்ச்சுகீஸியரை மலாயர் பிடித்துக் கொலை செய்தனர். சுல்தான் மாமூடின் கட்டளையால் மலாயர்கள் மலாக்காவுக்கு உணவுப் பொருள்கள் செல்லா வண்ணம் தடை செய்தனர். மலாயரது சண்டைக் கப்பல்கள் போர்ச்சுகீஸியரது வர்த்தகக் கப்பல்களைக் கொள்ளையடித்தன. மூவார் ஆற்றிலுள்ள ஒரு கோட்டையிலிருந்து மலாயர்கள் மலாக்காவை வெகு உக்கிரமாகத் தாக்கி வந்தனர். பின்னர் அவர்கள் போர்ச்சுகீஸியரால் அங்கிருந்து துரத்தப்பட்டும் அவர்கள் செய்து வந்த சேஷ்டையும் கொள்ளையடித்தலும் நின்று விடவில்லை. சுல்தான் மாமூடுதான் இவை யாவற்றிற்கும் காரணஸ்தன் என அறிந்த போர்ச்சுகீஸியர் இப்பொழுது பிந்தாங் தீவைப் பிடிக்க ஆயத்தஞ் செய்தனர். கி. பி 1523-1524 இவ்வாண்டுகளில் இரண்டு போர்ச்சுகீஸியக் கப்பல்களும் படைகளும் பிந்தாங்கைத் தாக்கச் சென்று மோசமடைந்தன. ஆயினும், 1526-ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம், 25-ஆந் தேதியன்று, எப்படியாவது மாமூடின் ஆதிக்கத்தை நசுக்கும் நோக்கத்துடன் 20 கப்பல்கள், 550 போர்ச்சுகீஸியருடனும் 600 மலாயர்களுடனும் மஸ்கரேநாஸ் அவர்களது தலைமையின்கீழ் பிந்தாங்கிற்கு அனுப்பப்பட்டன.

இப்பட்டாளம் சுல்தான் மாமூடுக்கு உதவியாயிருந்த பங்கான் (சுமத்திராவின் கிழக்கில்) துறைமுகத்தைக் கொள்ளையடித்தது. பிறகு, பிந்தாங் தீவுக்குச் சமீபத்திலிருந்த பூலாங் தீவைப் போர்ச்சுகீஸியர் தீக்கிரையாக்கினர். அதன் பின் போர்ச்சுகீஸியப் பட்டாளம்

பிந்தாங் தீவை நாடிச் சென்றது. அதன் தலைமைப்பட்டினமாகிய **கோப்பாக்** ஒரு சிறிய ஆற்றின் கரையில் ஸ்தாபிக்கப்பட்டு, ஒரு பாலத்தாலும் தடை வேலிகளாலும் காக்கப்பட்டிருந்தது. போர்ச்சுகீஸியப்படை ஆற்றின் முகத்துவாரத்திற்குள் சென்று, முன்னுலிருந்த தடைவேலிகள் இரண்டையுங் கைப்பற்றியது. ஆனால், ஆற்றின் நீர் வற்றிவிட்டதால் அவர்கள் மேலேறிச் செல்ல முடியாமல் போயிற்று. மலாய்ப் பட்டாளம் போர்ச்சுகீஸியரைத் தாக்க முன்வந்ததென்றாலும், இடைவழியில் சேற்றில் சிக்கிக்கொண்டது. இன்னும், மலாயர்கள் தம்மைச் சுற்றி ஓர் அணை கட்டப் பல தடவை முயன்ருர்கள். ஆனால், ஒவ்வொரு முறையும் அது நீரால் அடித்துச் செல்லப்பட்டது. ஆகவே, அன்ருடம் உண்டான பெருக்கின் உதவியைக்கொண்டு போர்ச்சுகீஸியர் படிப்படியாக உட்புகுந்து, ஒன்றன் பின் ஒன்ருக ஒவ்வொரு தடை வேலியையுங் கைப்பற்றினர். 14-ஆம் நாள் பாலத்தை அடைந்தனர். ஆனால், பெரிய ஒரு மலாய சைனியம் அதைக் காவல் செய்துகொண்டிருந்தபடியால் போர்ச்சுகீஸியர் எவ்வளவோ முயன்றும் அதைப் பிடிக்க முடியவில்லை. கடைசியாக, மஸ்கரேஞாஸ் ஒரு சூழ்ச்சி செய்தார். போர்ச்சுகீஸிய சைனியத்தில் ஒரு பாகம் பாலத்தின் மீது பீரங்கி வேட்டுப் பிரயோகித்தது; வேருெரு பாகம் பட்டணத்தைப் பின்புறத்திலிருந்து தாக்குவதற்குப் பத்தைகளடர்ந்த சேற்றுப் பிரதேசத்துக்கு ஊடாக அனுப்பப்பட்டது. இதனுல், போர்ச்சுகீஸியரது இரு பீரங்கித் தாக்குதல்களுக்கிடையே அகப்பட்டுக்கொண்ட மலாய சைனியம் ஓட்டம் பிடித்தது. பிந்தாங்கின் உதவிக்காக பாஹாங்கிலிருந்து வந்த ஒரு மலாயக் கடற்பட்டாளம் சின்னபின்னமாக்கப்பட்டது.

போர்ச்சுகீஸியர் பிந்தாங்கைப் பிடித்துத் தங்களுக்கு நேசனுகிய லிங்காவின் அரசனுக்குக் கொடுத்தனர். சுல்தான் மாமூட் ஆருத் துயரத்திலாழ்ந்தவனுய் ஊண் உறக்கமற்று வனுந்தர வாசியானுன். பின்னுல், கம்பாருக்குக் கொண்டு போகப்பட்டு 1528ல் இறந்தான். இவனுக்கு இரண்டு ஆண் மக்கள் இருந்தனர். மூத்தவனுன முசபர், சீய ராஜகுமாரி ஒருத்தியின் மகன். இளைய வனுன அல்லாவுடீன் பண்டாஹராக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருத்தியின் வயிற்றிற்பிறந்தவன்.

---

# 13. ஜொகூர்

சுல்தான் மாமூடின் மூத்த மகன் பேராவுக்குச் சுல்தானுகப் போனுன். இப்போது பேராவை ஆளும் சுல்தான்கள் இவனது சந்ததியைச் சேர்ந்தவர்களே. மாமூடின் இளைய மகன் ஜொகூர் ஆற்றின் கரையில் ஜொகூர் லாமா என்னும் ராஜதானியை ஏற்படுத்தினுன். சில வருடங்கள் மலாயரும் போர்ச்சுகீஸியரும் சமாதானமாய் இருந்தனர். 1533-ஆம் ஆண்டளவில் மலாக்காவிலிருந்த சைன்ய ராஜா என்னும் ஐசுவரியமுள்ள மலாயன் ஒருவன் சுமத்திராவின் வடக்கேயிருந்த அச்சை ராஜ்யத்துடன் இரகசியமாக ஒரு சதியாலோசனை செய்தான். அஃது என்னவெனில், போர்ச்சுகீஸியர் தங்களது மாதா கோவிலில் (Church) வணங்கிக்கொண்டிருக்கும் போது அவர்களைக் கைது செய்து, பின்னர்ச் சிறையிலிடுதல் என்பதாம். இதைப் போர்ச்சுகீஸியர்கள் எப்படியோ அறிந்துவிட்டார்கள். உடனே சைன்ய ராஜாவைப் பிடித்து அவனைத் தங்கள் கோபுரத்தின்

உச்சியிலிருந்து கீழே தள்ளிவிட்டனர். இதனால், அவன் மாண்டான். பழிக்குப் பழி வாங்கும் நோக்கத்துடன், 1533ல் மலாக்காவுக்குப் புதிதாக வந்திருந்த எஸ்தி வாவ்-த-காமா (வாஸ்கோ-த-காமாவின் மகன்) என்னும் போர்ச்சுகீஸியத் தளகர்த்தனை உபசரிப்பது போலப் பாசாங்கு செய்து ஜொகூரினது 27 சண்டைக் கப்பல்கள் மலக்காவுக்கு வந்தன. இதனால் சில தினங்கள் கழித்துப் பதில் மரியாதைக்காக எஸ்திவாவ்-த-காமா தன் தூதனொருவனை ஜொகூர் லாமாவுக்கு அனுப்பினான். மலாயர்கள் இதுதான் தருணமென்று அத்தூதனைப் பிடித்து உயர்ந்த ஒரு மரத்தின்மேலேற்றி அவனைக் கீழே உருட்டிவிட்டனர். இன்னும், மலாயச் சண்டைக் கப்பல்கள் மூவார் ஆற்றுக்கு வந்திருந்து மலாக்காவின் வர்த்தகத்திற்குப் பல இடையூறுகள் உண்டுபண்ணின. இக்காரணங்களால், 1535ஆம் ஜூன்மீ எஸ்திவாவ்-த-காமா இரண்டு பெரிய சண்டைக் கப்பல்களுடனும், 20 சிறிய கப்பல்களுடனும் 400 பேர் கொண்ட பட்டாளத்துடனும் ஜொகூர் ஆற்றுக்குச் சென்று, கோட்டா திங்கிக்கு அருகில் சுல்தான் அல்லாவுடீன் கட்டியிருந்த அரணைத் தாக்கினான். இதனால், மலாயர்களைத் தோற்கடிக்க முடியவில்லையென்றாலும், எஸ்திவாவ்-த-காமா மலாயரது அரணைத் தவிடுபொடியாக்கிவிட்டு, மலாக்காவுக்குத் திரும்பினான்.

எப்படியென்றாலும் மலாயரது தொந்தரவு நின்றபாடில்லை. ஆகவே, 1536ல் மீண்டும் ஒரு போர்ச்சுகீஸியச் சேனையை ஜொகூர் மீது செலுத்தி, மலாயர்களுக்கு அதிக நஷ்டத்தை உண்டு பண்ணினான். இதன் பயனாக அல்லாவுடீன் போர்ச்சுகீஸியருடன் சமாதானம் செய்துகொண்டு, மூவாருக்குப் போய் அங்கு

வசித்து வந்தான். இதற்குப் பின்னும் மற்ற மலாயர்கள் இடையிடையே போர்ச்சுகீஸியருக்குப் பல தொல்லைகளை உண்டுபண்ணியதால், 1584ஆ ஆகஸ்டுமீ 6௳ போர்ச்சுகீஸியர் ஜொகூர் லாமாவைக் கொள்ளையடித்ததுமன்றி, அதை அக்கினிக்கும் இரையாக்கினர். மேலும், மலாயரது கப்பல்களையும் துப்பாக்கிகளையும் பற்றிக்கொண்டு, அவர்களைப் பக்கத்திலுள்ள காடுகளுக்குள் துரத்திவிட்டனர். இன்றைக்கும் ஜொகூர் லாமா இருந்தவிடத்தில் உடைந்த வெண்கலப் பாத்திரங்கள், ஜபமணிகள், தாயத்துகள், கோப்பைகள், நாணயங்கள் ஆகியவை தரையைத் தோண்டினால் அகப்படுகின்றன.

---

## 14. அச்சை

மலாக்காவில் முகம்மதிய ஆதிக்கம் வீழ்ந்த பின்னர், கள்ளிக்கோட்டை, இலங்கை, வங்காளம், பர்மா, சீனா, துருக்கி முதலிய இடங்களிலிருந்து வந்த முஸ்லீம் வர்த்தகர்கள் சுமத்திராவின் வடக்கேயுள்ள அச்சைப் பட்டினத்தைத் தங்களது துறைமுகமாக்கினர். போர்ச்சுகீஸியரை வெறுத்த யாவருக்கும் இது முக்கிய வியாபார ஸ்தலமாகிறபடியால் வெகு சீக்கிரத்திலே பிரசித்திபெற்ற ஒரு துறைமுகமாயிற்று.

அச்சையர் இயல்பாகவே போர்ப் பிரியர்கள். இப்போது நல்ல வர்த்தகத்தின் மூலஞ் செல்வஞ்சேரவே, அச்சை அரசர்கள் யுத்தக் கப்பல்கள் கட்டவும் சேனைகளைத் திரட்டவுந் தொடங்கினர். மலாய உலகத்துக்குத் தாமே அதிபதிகளாக வேண்டும் என்னும் நோக்கமும் அவர்கள் மனத்தில் குடிகொண்டது. இதனால், அவர்கள் மலாக்காவையும் ஜொகூரையும் தாக்க ஆரம்பித்தனர்.

1519ல் அச்சையின் கரையில் ஆப்த்திலகப்பட்ட ஒரு போர்ச்சுகீஸியக் கப்பலை அவர்கள் கொள்ளையடித்தது மன்றி, அதிலிருந்த மாலுமிகளிற்சிலரைக் கொன்று, வேறு சிலரைக் கஷ்டப்படுத்திச் சிறை செய்தனர். இன்னும், 1537ஹு செப்டெம்பர் மாதம், சுமார் 3 000 பேர் கொண்ட அச்சைப் படையொன்று ஒரு நள்ளிரவில் மலாக்காவைத் தாக்கிற்று. ஆனால், போர்ச்சுகீஸியர் தைரியமாக விரோதிகளை அவர்களது கப்பல்களுக்குத் துரத்திவிட்டனர். இருந்தும், அச்சையர் மலாக்காத் துறைமுகத்தைச் சும்மா விட்டுப்போவதில்லை. அடுத்த இரண்டு இரவுகளிலும் நடந்த சண்டையில் போர்ச்சுகீஸியர் தீவர்த்திகளின் வெளிச்சத்தைக்கண்டு அச்சையர் மீது உக்கிரமாகப் பீரங்கி வேட்டுகள் செய்தனர். அச்சையர் சேதமடைந்து, தோல்வியுற்றுத் தம் நாட்டுக்குத் திரும்பினர்.

மேலும், ஜொகூருக்கும் அச்சைக்கும் வெகு காலமாக வைரமிருந்து வந்தது. 1539ல் ஜொகூருக்குக் கீழ்ப்பட்டிருந்த சிற்றரசரான ஆறுவை (சுமத்திராவில்) அச்சையர் பிடித்தனர். இதனால் சுல்தான் அல்லாவுடன் மூவாரிலிருந்தபடியே பேரா, பாஹாங், சீயம் இவ்விடங்களிலிருந்த தன் சொந்தக்காரர்களது கப்பல்களைத்திரட்டி, அச்சைக் கடற்படையைச் சின்னபின்னமாக்கினன்.

ஆகவே, போர்ச்சுகீஸியர், அச்சையர், ஜொகூர் மலாயர் இவர் மூவரும் ஒருவரையொருவர் விரோதித்த வண்ணமாய் இருந்தனர். இத்திரிகோணப் போர் போர்ச்சுகீஸிய மலாக்காவின் வீழ்ச்சி வரையிலும் நடந்துகொண்டேயிருந்தது



மலாக்காவிலே போர்ச்சுகீஸியரால் கட்டடப்பட்ட
கோட்டையின் வாயில்.



அங்கோர்-வாட் இந்து ஆலயங்கள்



மலாக்காவில் டச்சுக்காரரால் கட்டப்பட்ட
கோட்டையின் பிரதான வாயில்

# 15. டச்சுக்காரரின் வருகை

கீழ் நாடுகளிலிருந்து ஐரோப்பாவிற்குக் கொண்டு செல்லப்பட்ட வாசனைத் திரவியங்கள், தானிய வகைகள், பட்டு, சீனி இவற்றையும், இன்னும் மற்றைய பண்டங்களையும் போர்ச்சுகீஸியருடன் டச்சுக்காரர் மொத்தமாக வாங்கி, மேல் நாடுகளில் வியாபாரஞ் செய்தனர். ஆகவே, இச்செல்வம் நிறைந்த வர்த்தகத்தைத் தாங்கள் முழுமையாகக் கையாள வேண்டுமென டச்சுக்காரர் எண்ணங் கொள்வது இயல்பே.

கி. பி. 16-17–ஆம் நூற்றுண்டுகளில் ஹாலந்துக்கும் (டச்சுக்காரருக்கும்) ஸ்பெயினுக்கும் பெரும்பகைமை இருந்து வந்தது. 1580ல் போர்ச்சுகலானது ஸ்பெயின் சாம்ராஜ்யத்துடன் சேர்க்கப்படவே, ஸ்பெயின் நாட்டு மன்னன் லிஸ்பன் (Lisbon) துறைமுகத்திற்கும் தனக்குச் சொந்தமான மற்றைய துறைமுகங்களுக்கும் டச்சுக்காரர்களின் கப்பல்கள் வரவொட்டாது தடை செய்தான். டச்சுக்காரர்கள் தாம் ஏற்கெனவே செய்து வந்த வியாபாரத்தை இழக்கக் கொஞ்சமும் மனமில்லாமையால், தாமே நேராகக் கிழக்கு நாடுகளுக்கு வரத் தொடங்கினர். இதைக் கண்ட ஸ்பெயின் மன்னன் **கோவாவிலிருந்த** போர்ச்சுகீஸிய **வைஸ்ராயைப்** பலம் வாய்ந்த ஒரு கடற்பட்டாளத்துடன் மலாக்கா ஜலசந்திக்கு அனுப்பி, ஹாலந்தரது கப்பல்களைத் தகர்க்கும்படி கட்டளையிட்டான்.

மலாயா உலகத்தில் போர்ச்சுகீஸியரது இறுதிக் காலம் நெருங்கியது. சுதேசிகளும் வர்த்தகர்களான விதேசிகளும் அவர்களை மனமார வெறுத்தார்கள். போர்ச்சுகலோ, ஒரு சிறிய தேசம். சுமார் நூறு வரு

டங்களாக அங்கிருந்து கீழ் நாடுகளுக்கு வந்த வாலிபர் களிற்பெரும்பாலோர், இடையருச் சண்டையாலும், உஷ்ணப் பிரதேசங்களின் நோய்களாலும் மாண்டனர். இதனால், போர்ச்சுகலிலிருந்து கீழ் நாடுகளுக்கு வந்து கொண்டிருந்த உதவி குன்றிற்று. டச்சுக்காரர்களுக்கும் போர்ச்சுகீஸியருக்கும் மலேஷியாக் கடலில் அடிக்கடி சண்டைகள் நடந்தன. டச்சுக்காரரோ, திறன் மிகுந்த மாலுமிகளாகவும் சண்டையில் வல்லவர்களாகவும் இருந்தமையால், போர்ச்சுகீஸியர் அவர்களை எதிர்த்துச் சண்டை செய்ய முடியாமற்போயினர். கி. பி. 1606லும் கி. பி. 1608லும் மலாக்கா ஜலசந்தியில் நடந்த கடற்சண்டையில் டச்சுக்காரர்கள் இலகுவாக வெற்றி பெற்றார்கள். இதன் பின்னர் மலேஷியாவில் தமக்கு வேண்டிய இடங்களுக்குச் சென்று வியாபாரத்தைச் செய்து வந்தனர். இன்னும், போர்ச்சுகீஸியரது கொடூரமான ஆளுகையை வெறுத்த மலாயர் டச்சுக்காரரை உவகையுடன் வரவேற்றனர்.

மலாக்கா பல தடவை டச்சுக்காரர்களால் தாக்கப்பட்ட போதிலும், பெரிய போர்ச்சுகீஸிய கடற்பட்டாளம் ஒன்று துறைமுகத்தைக் காவந்து செய்துகொண்டிருந்தாலும் கோட்டை பலமாக அரண் செய்யப்பட்டிருந்ததாலும் அது பல வருடங்களாக வீழ்ச்சியடையாமலிருந்தது.

மலாக்காவைப் பிடித்துக்கொள்ள முடியாததனால் டச்சுக்காரர் பத்தேவியாவைத் (Batavia) தங்கள் பிரதமத் துறைமுகமாக்கினர். மேலும், தங்களது சண்டைக் கப்பல்களிற்சிலவற்றை மலாக்கா ஜலசந்தியில் நிறுத்தி வைத்து, போர்ச்சுகீஸிய வியாபாரக் கப்பல்களைக் கொள்ளையடித்தனர். இஃதுடன் நிற்காமல், 1635ல் எந்தக் கப்பலையும் மலாக்காவுக்குப் போகவோ வரவோ விடாமல் தடை செய்தனர். மற்

றைய வியாபாரிகளும் டச்சுக்காரரோடுதான் வியாபா ரத்தை நடத்தினர். இக்காரணங்களால் மலாக்காவின் வியாபாரம் அறவே ஒழிந்தது. உணவு, யுத்தத் தளவா டங்கள், படை ஒன்றுமே மலாக்காவுக்குச் செல்லவொட் டாமல் டச்சுக்காரர் தடை செய்தனர்.

# 16. போர்ச்சுகீஸிய மலாக்காவின் வீழ்ச்சி

கி. பி. 1640-ஆம் ஆண்டு, ஜூன்மீ, பத்தேவியாவி லிருந்த டச்சு கவர்னர்-ஜெனரல் **அந்தோனியா-வோன்-தேய்மன்** (Antonio Von Diemem) என்பவரால் அனுப் பப்பட்ட தளகர்த்தர் **அத்ரேயன்-அந்தோனிஸ்** (Adriaen Antonisz) என்பவர் 12 கப்பல்கள், 6 தோணிகள், 15,000 பேர் கொண்ட பட்டாளம் இவற்றுடன் மலாக் காவின் வடக்கேயிருந்த ஒரு பெரிய மைதானத்தில் வந் திறங்கினர். டச்சுக்காரரோடு ஜொகூர் சுல்தானை **அப்துல்** ஜலிஷா போர்ச்சுகீஸியரைத் தாக்குவதற்காக ஓர் ஒப்பந்தஞ் செய்திருந்தான். இவன் நாம் முன் படித்த அல்லாவுடீனின் சகோதரனது மகனுவான். இவனும் டச்சுக்காரர்களுக்கு உதவியாகச் சில சண்டைக்கப்பல் களைச் சுமார் 1,500 பேருடன் மலாக்காவிற்கு அனுப்பி னுன். கோட்டைக்கு வெளியிலிருந்த பல நூறு போர்ச்சு கீஸிய வீரர்கள் தோற்கடிக்கப்பட்டு, கோட்டைக்குள் ஓடினர். அஃதோடு கோட்டையைத் தாக்காமல் அதன் சுவர்களின்மீது மாத்திரம் டச்சுக்காரர் துப்பாக்கி வேட் டுக் கிளப்பினர். இன்னும், உணவும் உட்செல்லவொட் டாமல் தடை செய்து, போர்ச்சுகீஸியரைத் தம்மிடம் சரண் புகும்படி நிர்ப்பந்தப்படுத்தினர். ஆனல், போர்ச்

சுகீஸியத் தலைவரான மாநுயல்-டி-சோஸா-கூட்டின் ஹோ (Manuel de Souza Coutinho) என்பவர் தாமே பெரிய நோயாளியாய் இருந்தும் மலாக்காவைக் கடைசி வரைக்கும் விடாமற் காப்பாற்றத் தீர்மானித்தார். குடிகளது மனம் தளர்ச்சியடையாதிருக்குமாறு கோவாவிலிருந்து வெகு சீக்கிரத்தில் உதவி வருவதாகச் சொல்லிக் கொண்டேயிருந்தார். மேலும், டச்சுக்காரரது கைகளில் அவர்கள் அகப்பட்டால், அதிக அவஸ்தைக்கு உள்ளாவார்களெனவும் கதையைக் கட்டிவிட்டார்.

டச்சுக்காரர் போட்ட முற்றுகை முடிவு பெற்றபாடில்லை. மழை காலமும் ஆரம்பித்தது. டச்சுக்காரர்கள் தங்கள் கூடாரங்களை ஊன்றியிருந்த வயல்கள் சோனு மாரியினுல் வெள்ளம் நிறைந்து சதுசதுப்பாயின. மலேரியாவும் கட்டிக்காய்ச்சலும் அவர்களது சைனியத்தில் அரைவாசியைக் கொள்ளை கொண்டன. பத்தேவியாவிலிருந்து உதவி வந்ததென்றுலும், சைனியத்தில் பலர் நோயுற்றிருந்தபடியினுலே, சண்டை செய்ய முடியாமல் போயிற்று.

போர்ச்சுகீஸியருடைய கதி இன்னும் மோசமாய் இருந்தது. மாதக்கணக்கில் உணவு கிடைக்காமையினுல் அவர்கள் பூனை, நாய், எலி, மிருகங்களின் தோல் இவற்றை உண்டனர்.

டச்சுக்காரரது நேசரான ஜொகூர் மலாயர்கள் நெல் வயல்களையும் தோப்புகளையும் அழித்து, மலாக்காவாசிகள் பலரை அடிமையாக்கிக்கொண்டு போயினர்.

கடைசியாக இந்த அபாய தசையைச் சகிக்க முடியாமல், டச்சுக்காரரது முற்றுகையிலிருந்து தப்பித்து, சுமத்திராவிலிருந்து வந்திருந்த அரிசியைப் பெறுவதற்காகக் கி. பி. 1640ஸு டிசம்பர்மீ 25-ஆந்தேதியன்று

போர்ச்சுகீஸியர் வெளியே வந்தனர். அவர்களை எதிரிகள் கைது செய்தார்கள். கோட்டையின் மதில்கள் தாக்கப்பட்டன. கோட்டையின் வாயில்களைக் காவல் செய்து கொண்டிருந்த போர்ச்சுகீஸியச் சேனை முறியடிக்கப்பட்டது. அன்று காலை 10 மணியளவிலே மலாக்கா டச்சுக்காரர் கைக்கு வந்தது.

டக்சுத் தளகர்த்தன் தோல்வியடைந்த போர்ச்சுகீஸியரை விடுதலை செய்தான். போர்ச்சுகீஸியப் பிரமுகர்கள் ஒரு டச்சுக் கப்பலில் நாகப்பட்டினத்திற்கு அனுப்பப்பட்டனர். போர்ச்சுகீஸியச் சேனைகள் பத்தேவியாவுக்கு அனுப்பப்பட்டன. எஞ்சிய போர்ச்சுகீஸியரும் யூரேஷியரும் மலாக்காவிலேயே இருந்தனர். ஏற்கெனவே 20,000 மக்கள் வசித்த மலாக்காவில் இப்போது 3,000 பேர்தான் இருந்தார்கள்.

டச்சுக்காரர் எதிர் பார்த்த வண்ணம் மலாக்காவில் அவர்களுக்குத் திரவியக் குவியல்கள் கிடைக்கவில்லை; ஏனெனில், டச்சுத்தலைவர்களும், போர் வீரர்களும் தங்களுக்கு வேண்டியவற்றைப் பிடுங்கிக்கொண்டதுமன்றி, வெளியேறின போர்ச்சுகீஸியரிடம் கைக்கூலி வாங்கிக் கொண்டு திரவியங்களை எடுத்துச்செல்ல விட்டுவிட்டனர். வீடு வாசல்களும், கோட்டையும், அதன் கோபுரங்களும், மாதா கோவில்களும் உடைந்து தகர்ந்து கிடந்தன. வயல்களும், தோப்புகளும், தோட்டங்களும் பாழடைந்தவையாய்த்தோன்றின.

## 17. டச்சுக்காரரின் ஆளுகை

டச்சுக்காரர் மலாக்காவைப் பிடித்த போது பட்டினம் சின்னபின்னமாக்கப்பட்டிருந்தது. அதன் முந்திய

வியாபாரமும் மறைவுபட்டிருந்தது. மலாயர், அராபியர், சீனர், இந்தியர் முதலியோரது கப்பல்கள் மலாக்காவைத் திரும்பியே பார்க்கவில்லை. ஆயினும், டச்சுக்காரர் மலாக் காவை முன்னைய நிலைமைக்குக் கொண்டு வருவதற்காக மிகவும் பிரயாசைப்பட்டனர். கோட்டையின் மதில் களும் பாலமும் திருத்தப்பட்டன. வீடுகள் மீண்டும் அமைக்கப்பட்டன.

கீழ்நாட்டு வியாபார அலுவல்களைச் செம்மையான முறையில் நடத்துவதற்காக அந்நாடுகளில் வர்த்தகஞ் செய்து வந்த சிறிய டச்சுக் கம்பெனிகளெல்லாம் சேர்ந்து 'ஐக்கியக் கிழக்கிந்தியக் கம்பெனி' என்னும் ஒரு கம் பெனியை 1602ல் ஸ்தாபித்தன. இந்தக் கம்பெனி நெதர் லாண்ட்ஸ்* அரசாங்கத்தாரால் அங்கீகரிக்கப்பட்டது. இக்கம்பெனியின் கவர்னர் ஜெனரல் ஏற்கெனவே மொலுக்கஸ் தீவிலிருந்தவர். பிறகு 1619ல் பத்தேவியா டச்சுக்காரரது தலைநகராக்கப்படவே, கவர்னர் ஜெனர லும் அங்குச் சென்று வசிக்கலாயினர்.

மேற்கூறிய கம்பெனியின் சார்பில் மலாக்காக் கோட் டையில் ஒரு சேனை நிறுத்தப்பட்டது. மேலும், இக்கம் பெனியைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களும்வியாபாரிகளும் மலாக்காவை முன்போலச் சிறந்த வியாபார ஸ்தலமாக்கு வதற்காக அனுப்பப்பட்டனர். இவர்கள் மிகச் செட் டான முறையில் வியாபார அலுவல்களையும் வரவு செலவு களையும் நடத்தி எப்படியாகிலும் இலாபம் பெறவேண் டும் என்னுங் கருத்துடையவர்கள். கிட்டங்கிகளிலிருக் கும் பண்டங்கள், பட்டாளத்திற்கான பீரங்கி, துப்பாக்கி,

* ஹாலந்து தேசத்தின் மறு பெயர். நெதர்லாண்ட்ஸ்= பாதாள தேசம்; ஹாலந்தின் கரையானது கடல் மட்டத் திலும் தாழ்வாக இருப்பதனால் இப்பெயர் உண்டாயிற்று.

குண்டு, வாள், வெடிமருந்து இவைகளுக்கும், மாலுமிகள், போர்வீரர், வேலைக்காரர், அடிமைகள் முதலாயினோருக்கும் தனித்தனி விவரக் குறிப்புகள் எழுதுவார்கள். ஒவ்வோர் உத்தியோகஸ்தருக்கும் மாதத்தில் இவ்வளவு இவ்வளவு அரிசி, மது வகை முதலிய பொருள்கள்தான் கொடுக்கப்படும் எனவும் நியமனமிருந்தது. ஆகவே, மலாக்காவை ஒரு பெரிய கடையாகவும் டச்சுக்காரர் தங்களை முதலாளிகளாகவும் பாவித்து வந்தார்கள். எவ்விதத்திலாவது வருடமுடிவில் பெரிய இலாபத்தைக் காட்ட வேண்டுமென்பதுதான் கம்பெனியாரின் அவாவாய் இருந்தது.

என்ன செய்தும் அவர்கள் எதிர் பார்த்தவாறு மலாக்கா முந்திய நிலைமையை அடையவில்லை. அதற்குக் காரணங்கள்: முதலாவதாக, பத்தேவியா டச்சுக்காரரது தலைநகரமாகவும் முக்கியத் துறைமுகமாகவுமிருந்தது; மலேஷியாவின் வர்த்தகம் முழுவதும் பத்தேவியாவிற்கே சென்றது. இரண்டாவதாக, போர்ச்சுகீஸியரைப் போல டச்சுக்காரர் முகம்மதிய சமயத்தின்மீது விரோதம் பாராட்டாததனால், முதலில் மலாயர்கள் இவர்களை உவப்புடன் வரவேற்றனர். ஆனால், டச்சுக்காரர் சுரண்டுஞ் சுபாவமுடையவர்களாகையால், மலேஷியாவின் வர்த்தகம் முழுவதையும் தங்கள் கைக்குள்ளேயே வைத்துக் கொண்டனர். இதனால், மலாயர், சீனர், இந்தியர், அராபியர் முதலியோரது வியாபாரம் நசுக்குண்டது. கெடா, பேரா முதலிய இடங்களில் நடைபெற்ற ஈய வியாபாரத்தையும் டச்சுக்காரர் தாமே முழுமையாகக் கைப்பற்றிக் கொண்டனர். எங்கும் டச்சுக்காரருக்கு வேண்டிய பொருள்களை மிகக்குறைந்த விலைக்கு விற்க வேண்டுமெனச் சுதேசிகளைக் கட்டாயப்படுத்தினர். இன்னும்,

சுதேசிகளுக்கு வேண்டிய பொருள்களை டச்சுக் கிழக்கிந் தியக் கம்பெனியார் அதிக விலைக்கு விற்றனர். டச்சுக் கப்பல்கள் தவிர மற்றைய கப்பல்கள் யாவும் கட்டாய மாக மலாக்காவிற்குச் சென்று துறைமுகத் தீர்வை செலுத்துதல் வேண்டுமென வற்புறுத்தினர். ஆகவே, போர்ச்சுகீஸியரைக்காட்டிலும் டச்சுக்காரர் எவ்விதத் திலும் மேலானவர்களல்லர் என்பதைச் சுதேசிகள் உணர்ந்தார்கள்.

மேலும், மலேஷியாவின் கரைகளில் தம் கப்பல்களை நிறுத்தி வைத்துச் சுதேசிகளது வியாபாரத்திற்குத் தடை செய்தனர். இதனால், சுதேசிகள் டச்சுக்காரரது கப்பல் களைக் கொள்ளையடித்தும் அவர்களைக் கொலை செய்தும் வந்தார்கள். கோட்டைகளுக்கும் பட்டாளத்திற்கும் பாதுகாப்புக் கப்பல்களுக்கும் ஏராளமான பணஞ்செல விட வேண்டியிருந்ததால், கம்பெனி நஷ்டமடைந்தது. பலாத்காரத்தால் டச்சுக்காரர் செல்வத்தைப் பெற முடிய வில்லை. கம்பெனி க்ஷீணிக்கலாயிற்று.

## 18. ஜொகூரும் டச்சுக்காரரும்

மலாக்காவை டச்சுக்காரர் தாக்கும்போது ஜொகூர் சுல்தான் டச்சுக்காரர்களுக்கு உதவி செய்தானென்பது உங்களுக்கு ஞாபகமிருக்குமல்லவா? போர்ச்சுகீஸிய ரைத் தோற்கடிப்பதற்காக டச்சுக்காரர் முதல் தடவை யாக மலாக்காவிற்கு வந்த போது ஜொகூர் ஆற்றிலிருந்த தலைநகரத்திற்குச் சென்று ஜொகூர் சுல்தானின் உதவியை நாடினார்கள்.

ஜொகூர் ஆற்றின் அக்கம்பக்கத்தில் இரண்டு அரண்கள் கட்டப்பட்டிருந்தன. பெரிய அரணுள்

சுல்தான் வசித்தான். அது முக்கால் மைல் சுற்றளவு உள்ளது. அதனுள் அத்தாப்புக் குடிசைகளில் 4,000 குடிகள் வசித்தனர். சுல்தானுடைய வீடும், மலாய்த் தலைவர்களின் வீடுகளும் மரத்தாலானவை. இன்னும், கரையோரங்களில் பல்லாயிரம் மலாயர் ஜீவித்தனர். மீன் பிடித்தல், கொள்ளையடித்தல் இவைதான் ஜனங்களின் முக்கியத் தொழில்கள்.

ஜொகூர் சுல்தான் டச்சுக்காரருடன் உண்மையாகவே ஒத்துழைத்திருந்தால், அவன் மீண்டும் மலாய் உலகத்தின் தலைவனாக வந்திருக்கக்கூடும். ஆனால், துரதிருஷ்டவசத்தால் சுல்தானுக்கோ, அவனது மலாய்த் தலைவருக்கோ தங்கட்கு வேண்டிய பேறுகளைத் தேடிக் கொள்ளும் ஆற்றலில்லாமலிருந்தது. அவர்களெல்லோரும் மதியம் வரைக்கும் படுக்கையிலேயே இருப்பார்கள். அதன் பின்பு எழுந்து குளித்துத் தாராளமாகச் சாப்பிடுவார்கள். இப்படிப்பட்ட சோம்பேறிகளால் வேலைசெய்ய முடியுமா ? சுல்தானுக்கு வேண்டியது போகமே; ராஜ்யத்தைப் பற்றியோ, குடிமக்களைப்பற்றியோ அவன் சிறிதும் நினைப்பதில்லை.

ஆகவே, 1606லும் 1608லும் டச்சுக்காரர் மலாக்காவைத் தாக்கியபோது அவர்கள் எதிர்பார்த்த வண்ணம் ஜொகூரிலிருந்து உதவி செல்லவில்லை. மேலும், டச்சுக்காரர் இரு தடவைகளில் மலாக்காவைப் பிடிக்க முடியாது போனதனாலே ஜொகூர் சுல்தான் டச்சுக்காரர்கள் வலிமையற்றவர்களென நினைத்து, போர்ச்சுகீஸியருடன் நேசம் பாராட்டத் தொடங்கினான். இதன் பின்னர்தான் டச்சுக்காரர்கள் ஜொகூரைத் தனிமையாக விட்டுவிட்டு, பத்தேவியாவுக்குப்போய், அங்குத் தங்கள் வியாபார ஸ்தலத்தை ஆரம்பித்தார்கள்.

# 19. பழைய ஜொகூரின் பரிதாப நிலை

ஜொகூர் போர்ச்சுகீஸியருடன் நேசங்கொண்டது காரணமாக **அச்சையின்** ஆத்திரம் அதிகரித்தது.

கி. பி. 17-ஆம் நூற்றுண்டின் துவக்கத்தில் அச்சை செல்வச் சிறப்பைப் பெற்றோங்கியது. அது 'கீழ் நாடுகளில் முதன்மையான வாசனைத் திரவிய வியாபார ஸ்தலமாயிற்று. இந்தியர், அராபியர், ஜாவானியர், மலாயர்கள் முதலான வர்த்தகர்கள் எதேச்சையாக உறைந்திருந்தனர். அச்சையினது அரசர்கள் மல்லர்களாகவும் கொடூரர்களாகவும் இருந்தார்கள். நாள் முழுவதும் குடித்தலும் வெறித்தலும் கூத்தாடுதலுமே அரசர்களுக்கும் அவர்களது சகாக்களுக்கும் வேலையாய் இருந்தன. சேவல் சண்டைகள் நடத்தல், காட்டு மிருகங்கள் நாட்டு மிருகங்கள் இவற்றினுல் சண்டைகள் நடத்தல் முதலியனவே அச்சையர்களுக்குப் பொழுது போக்காயிருந்தன. அரசியலில்நீதி நியாயம் இல்லை ; சிறு குற்றங்களுக்குக்கூடக் குற்றவாளியின் கண் தோண்டி எடுக்கப்படும் : அல்லது அவனது தலை வெட்டப்படும். பெருங்குற்றவாளிகள் கொதி எண்ணெய்க்குள் அமிழ்த்தப்படுவார்கள் : அல்லது கழுவிலேற்றப்படுவார்கள்.

கி. பி. 1611ல் **சுல்தான் மகோடா அலாம்** என்பவன் அச்சையை ஆட்சி புரிந்தான். இவன் சண்டை செய்வதில் வெகு சமர்த்தன் ; தீரன். இவன் காலத்திலேதான் மலாயா தீபகற்பம் முழுவதும் அச்சையின் ஆதிக்கத்திற்கு உட்பட்டது.

அக்காலையில் ஜொகூர் மலாக்காவுடன் நட்புக் கொண்டிருந்ததால் சுல்தான் மகோடா அலாம், ஜொகூர் சுல்தானின் பட்டினமாகிய **பத்து சவாரைக்**

(Batu Sawar) கொள்ளையடித்து, அதைத் தரைமட்ட மாக்கினுன். ஜொகூர் சுல்தான் அச்சைக்குத் தூக்கிக் கொண்டுபோகப்பட்டு அங்கு இறந்தான். அவனது தம்பி யான அப்துல்லா அச்சையர்கள் கையில் பல இடர்க ளுக்கு ஆளாகி, மனம் நொந்தவனுய், கி. பி. 1623ல் இறந் தான். அநேக ஜொகூர் மலாயர்கள் கைதிகளாக்கி அச் சைக்குக் கொண்டு போகப்பட்டனர். வேறு பலர் ஆயி ரக்கணக்காக மக்காஸாருக்குச் சென்று குடியேறினர். ஜொகூரின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்த ஆறு, இந்திரகிரி (சுமத்திராவில்), பாஹாங், கெடா, பேரா முதலிய இடங் களையும் அச்சையர் கொள்ளையடித்தனர். இந்நாடுகளி லிருந்து அச்சைக்குக் கொண்டு வரப்பட்ட கைதிகள் ஊண், உடை, உறக்கம் யாதுமின்றி இங்குமங்கும் அலைந்து திரிந்து மரணத்தின் வாய்ப்பட்டனர்.

சுல்தான் மகோடா அலாம், கி. பி. 1637ல் இறந்தான். அதன் பின்னர் சுமார் 60 வருஷங்களாக அச்சையை இராணிமார் ஆண்டனர். பெண்கள் பேதைக ளாகையால், அவர்களது ஆட்சியில் அச்சை தனது வலி மையை இழந்தது இயல்பே.

ஜொகூர் மலாயர்கள் அச்சையினது அபாயம் இப் போது நீங்கிவிட்டதென அறிந்து, மீண்டும் ஜொகூரில் குடியேறி, ஜொகூர் நதியின் முகத்துவாரத்தில் முன் போலத் தம் பட்டினத்தை அமைத்தனர்; டச்சுக்கார ரோடும் பரஸ்பர உறவு உண்டாயிற்று. ஜாவா சீனு முதலிய இடங்களிலிருந்து வர்த்தகக் கப்பல்கள் ஜொகூ ருக்கு வந்து போயின. ஜொகூர் ஒருவாறு செழிப்புற்றது.

இந்நாட்களில் சுமத்திராவிலிருந்த ஜம்பி என்னும் ராஜ்யத்திற்கும் ஜொகூருக்குமிடையே அரச குடும் பத்திலுண்டான ஒரு விவாக ஒப்பந்த முறிவால் கலகமுண்

டாயிற்று. கி. பி. 1673ல் ஜொகூர் லாமாப் பட்டினம் ஐம்பியர்களால் தாக்கப்பட்டது. ஜொகூர் சுல்தான் தலை தப்பியது தம்பிரான் துணையென்று பாஹாங்கிற்கு ஓடினன்.

இதன் பிறகு சில வருஷங்களாக ஜொகூர் ராஜ்யம் அலங்கோலப்பட்டுக் கிடந்தது. கி. பி. 1690 அளவில் **சுல்தான் மாமூட்** என்பவன் ஒருவன் *ஜொகூரிலிருந்து* அரசு புரியலானன். மலாக்கா சுல்தான்மாரின் வழித் தோன்றல்களுள் இவனே கடைசியாக ஜொகூரை ஆண்டவனுவான். மாமூட் உண்மையில் ஒரு பேயன். ஏனெனில், *பிறரைக் கஷ்டப்படுத்துவதிலும்*, பல இடுக்கண்கள் உண்டுபண்ணுவதிலும் அவன் இன்பம் பெறுபவனுய் இருந்தான். "தினசரி யாரேனும் ஒருவரையாகிலும் தன் கையால் கொல்லாமல் மாமூட் இருக்கவில்லை," என மலாய்ச் சரித்திரங்கள் கூறுகின்றன. இத்தகைய அரசன் ஒருவனைக் குடிகள் யாவரும் மனமார வெறுத்தது அதிசயமன்று. இவனது அத்தியந்த சினேகிதர்களான மலாய்த் தலைவர்களும் இப்பைத்தியக்காரனை முடிவுகட்டச் சதியாலோசனை பண்ணினர். கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தாற்போல, அவர்கள் தங்களது எண்ணத்தை நிறைவேற்ற ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது.

ஒரு நாள் பலாப்பழமொன்று அரண்மனைக்குக் கொண்டுவரப்பட்டது. அதைக் கண்ட பெண் ஒருத்தி, அதில் ஒரு சுளை தனக்குத் தரும்படி கேட்டாள். அவள் அச்சமயத்தில் கர்ப்பவதியாய் இருந்தமையால், மலாய்த் தலைவன் ஒருவன் அவள் வேண்டுதலைப் பூர்த்தி செய்தான். பார்வைக்குத் தோன்றுதபடி ஒரு சுளை வெட்டி எடுக்கப்பட்டிருந்தது. ஆனல், எப்படியோ சுல்தான் மாமூட் இதை அறியலானன். தனக்கெனக் கொண்டு

வரப்பட்ட பலாப்பழமானது எச்சிற்படுத்தப்பட்டதால் தனக்குப் பெரிய அவமானம் உண்டாகிவிட்டதாகக் கருதினன். உடனே பலாப்பழச் சுளையைத் தின்ற பெண்ணின் வயிற்றைத் தன் உடைவாளால் பீறும்படி கட்டளையிட்டான். அவள் தன் பிராணனைக் காப்பாற்றுவதற்காகத் தான் அப்பலாச் சுளையைச் சாப்பிடவில்லையென்றும், தன் கர்பத்திலிருக்கும் சிசுதான் அதைச் சாப்பிட்டதென்றும் கூறினள். ஆனால், சுல்தான் சற்றும் ஈவு இரக்கமில்லாமல் அப்பெண்ணைத் தன் உடைவாளுக்கிரையாக்கினன். இதனால் மாண்டவளது கணவனும் மற்றைய மலாய்த் தலைவர்களும் ஒன்றுகூடி, சுல்தான் தன் காவலாளர்களோடு பள்ளிவாசலுக்குச் செல்லுகையில் பழிக்குப் பழி வாங்கினர். இது கி. பி. 1699ல் நடந்தது.

---

# 20. பண்டாஹரா சுல்தான்கள்

சுல்தான் மாமூடுக்குப் பின்னர் பண்டாஹராவாய் இருந்த அப்துல் ஜலில் என்பவன் பட்டத்திற்கு வந்தான். ஜொகூர், பாஹாங் ராஜ்யங்களின் இப்போதைய சுல்தான்கள் இவன் சந்ததியாரே. அப்துல் ஜலில் சமாதானப் பிரியன். சொற்ப வருடங்கள் அவனது அரசு செவ்வையாய் நடந்தது. அவனது சகோதரர்கள் எவருக்குமடங்காத துஷ்டர்களாயிருந்தார்கள். அவர்க்ள் ஒருவரோடொருவர் விரோதம் பாராட்டினர். இன்னும் மலாய்த் தலைவர்கள் பலருக்கு பண்டாஹராவான ஒருவன் பட்டத்திற்கு வந்தது வெறுப்பாயிற்று. இக்காரணங்களினால் ராஜ்யத்தில் இரண்டு கட்சிகள்

உண்டாயின. இவர்களில் பண்டாஹராவுக்கு விரோதிக ளானவர்கள் சீயத்திலிருந்து (சுமத்திராவிலிருந்து) ராஜா கிச்சில் என்பவனையும், செலிபிஸிலிருந்து வந்த பூகிஸ் ஜாதியாரையும் தமக்கு உதவியாக அழைத்தனர். ராஜா கிச்சில் என்பவன் பூகிஸ் ஜாதியார் உதவிக்கு வருமுன் ஜொகூருக்கு வந்து சேர்ந்தான். வந்து சேர்ந்ததும் ஜொகூரின் நிலைமையை அறிந்து, தானே அரசனாக வர எண்ணினான். சில துரோகிகள் அவனிடமிருந்து இலஞ்சம் வாங்கிக்கொண்டு ஜொகூரர்களது துப்பாக்கிகளை நீரால் நிறைத்துவிட்டனர். இதனால், இவற்றைப் பாவித்து பண்டாஹராவைச் சேர்ந்த ஜொகூர் மலாயர்கள் சண்டை செய்ய முடியாமற்போயிற்று. இந்நாட்களில் அரசியல் விவகாரங்களைச் சுல்தானது சகோதரனான ராஜா மூடா என்பவன் கவனித்து வந்தான். ராஜா கிச்சில் என்ப வன் ஜொகூரைத் தாக்கிய காலையிலும் ராஜா மூடா வானவன் தாயம் விளையாடுவதிலேயே சுகித்திருந்தான். மலாயர்கள் தோல்வியடைந்து பின் வாங்குந் தறுவாயில் தான் ராஜா மூடா அவ்விளையாட்டை நிறுத்தினான். சண்டையில் தான் தோல்வியடைந்ததை உணர்ந்ததும் ராஜா மூடா தன் அழகான மனைவியையும் புதல்வர்களை யுங் கொன்றுவிட்டு, எதிரிகளுடன் சண்டை செய்து தன்னுயிரை நீத்தான்.

பிறகு, சுல்தான் அப்துல் ஜலில் பேடித் தன்மை யுடையவனாகையால், ராஜா கிச்சிலுடன் சமாதானஞ் செய்துகொண்டு, மீண்டும் பண்டாஹரா உத்தியோகத் திற்குச் சென்றான் ; ராஜா கிச்சில் அரசனானான்.

---

# 21. ராஜா கிச்சிலும் பூகிஸ் ஜாதியாரும்

பூகிஸ் ஜாதியார் திறன் மிகுந்த மாலுமிகளாகவும் வர்த்தகர்களாகவும் விளங்கியவர்கள். இவர்கள் போர்ச்சுகீஸிய முறைப்பிரகாரம் தங்கள் கப்பல்களை அமைத்து, அவற்றின்மேல் பெரிய துப்பாக்கிகளையும் வைத்திருந்தார்கள். இன்னும் போர்ச்சுகீஸியரிடமிருந்தே யுத்தக் கவசம் தரிக்கும் விதத்தையும், குண்டு மாரி பொழியும் முறைகளையும் கற்றிருந்தார்கள்.

17-ஆம் நூற்றுண்டின் ஈற்றில் பூகிஸார் பெருவாரியாக மலாயா, ஜாவா, சுமத்திரா, போர்னியோ முதலிய இடங்களிற் குவிந்திருந்தனர். மலாயாத் தீபகற்பத்தில் கிள்ளான் நதி, சிலாங்கூர் நதி இவை பாயுமிடங்களில் அவர்கள் ஆயிரக்கணக்காகக் குடியேறியிருந்தனர்.

பூகிஸ் ஜாதியார் தம் ஆதிக்கத்தை எங்கும் நிலை நாட்டும் ஆவலுடையவர்களாகையால், ராஜா கிச்சிலின் அதிருஷ்டத்தைக் கண்டு பொறுமைப்பட்டனர்.

ராஜ்யத்தை இழந்த பண்டாஹரா சுல்தான் பூகிஸ்காரருடன் சேர்ந்து ராஜா கிச்சிலைத் துரத்துவதற்காக வஞ்சகம் செய்தான். இன்னும், ராஜா கிச்சிலானவன் சுல்தானின் மூத்த மகளான துங்கு தெங்கா என்பவளை விவாகஞ் செய்துகொள்வதாக ஒப்புக்கொண்டிருந்தான். ஆனல், அவள் தங்கையான துங்கு குமரியா என்பவள் மிக்க அழகுள்ளவளாய் இருந்தமையால், அவளைத் தன் மனைவியாக்கிக்கொண்டான். இதுவுமன்றி, ஜொகூரைக் கைப்பற்றுவதில் அவனுக்கு அதிகம் துணை

புரிந்த பூகிஸ் தலைவனை தைன் பரனி என்பவனுக்கு ஜொகூரின் †யாம் துவான் முடா உத்தியோகம் கொடுப்ப தாக வாக்களித்திருந்தான். ஆனால், ஜொகூரைப் பிடித்த பிறகு தன் வாக்குறுதியை நிறைவேற்றவில்லை.

இப்போது துங்கு தெங்கா என்பவள் தன் ஆத்திரத் தைத் தீர்த்துக்கொள்வதற்காகத் தைன் 'பரனியை விவாகஞ் செய்துகொண்டாள்,

பூகிஸ் ஜாதியாருக்கும் ராஜா கிச்சிலுக்கும் சண்டை தொடங்கிற்று. பண்டாஹரா சுல்தான் அப்துல் ஜலில் தன்னுயிரைக் காப்பாற்றிக்கொள்ள குவாலா-பாஹாங்கிற்கு ஓடினான். அவன் அங்குத் தன் கப்பலில் பிரார்த்தனை செய்துகொண்டிருக்கையில் விரோ தியின் தூதர்கள் சிலர் அவனை இறு துண்டமாக்கினர். இது கி. பி. 1718ல் நடந்தது.

ராஜா கிச்சில் ரீயோ தீவை ராஜதானியாக வைத் துக்கொண்டு, பூகிஸ் ஜாதியார்களால் விளைந்த கலகங் களுக்கிடையே ஜொகூரை நான்கு வருடங்கள் வரை ஆண்டான். இக்காலத்திலே தைன் பரனிக்கும் ராஜா கிச்சிலுக்கும் சண்டை நடந்து வந்தது. இறுதியில், பூகிஸ்காரர் வெற்றியடைந்தார்கள். ராஜா கிச்சில் லிங்காத் தீவிற்குத் துரத்தப்பட்டு அங்கிருந்து தன் சொந்த ராஜ்யமாகிய சீயத்திற்குப் போய்ச் சேர்ந்தான்.

## 22. பூகிஸ்காரரின் ஆட்சி

பூகிஸ் ஜாதியார் முதன்முதலாக, கி. பி 1681ல் கிள்ளான் நதி, சிலாங்கூர் நதி இவற்றின் முகத்துவா ரப் பிரதேசங்களிற் குடியேறினார்கள். இவர்கள் கி. பி.

† யாம்—(மலாய்) மாட்சிமை தங்கிய.

1603ல் முகம்மதிய மதத்தில் சேர்க்கப்பட்டார்கள். இவர்களைப் பற்றி நாம் முன்னமே படித்துள்ளோம். 18–ஆம் நூற்றுண்டிலேதான் இவர்கள் கியாதியடைந்தார்கள்.

ராஜா கிச்சில் ஓடிய பின்னர், கி. பி. 1722–ஆம் ஆண்டில் பண்டாஹரா சுல்தானுன அப்துல் ஜலில் மகன் **சுலைமான்ஷா** என்பவனைப் பூகிஸ் ஜாதியார் ஜொகூருக்கும் பாஹாங்கிற்கும் சுல்தானுக்கினுர்கள். இப்போது பூகிஸ் ஜாதியாரின் அதிகாரமே பலாட்டியமாக இருந்தபடியால், பூகிஸ் தலைவர்களுக்குப் பெரிய பட்டங்களும், உயரிய பதவிகளும் கொடுக்கப்பட்டன. தம் ஆதிக்கத்தை வலுப்படுத்தும் நோக்கத்துடன் எல்லா மலாய் அரச குடும்பத்துப் பெண்களையும் பூகிஸ் ஜாதியார் தம்முள்ளேயே மணந்துகொண்டனர். இன்னும், தைன் பரனியின் தமையனுன **தைன் மறைவா** என்பவன் ஜொகூருக்கு உப சுல்தானுக நியமிக்கப்பட்டான். இதன் பிறகு சிலாங்கூரிலிருந்து பூகிஸ் ஜாதியாரும் ஜொகூரில் இருந்தவர்களும் ஒன்றுகூடி, ரீயோவைத் தமது பிரதானக் கொலுவிடமாக்கினர். இத்துடன் அவர்கள் நின்றபாடில்லை. அவர்களது ஆக்கிரமிப்பு, கெடா, பேரா, சுங்கை, உஜோங், தம்பின் முதலிய ராஜ்யங்களிலும் பரவிற்று. போரில் திறமை வாய்ந்தவர்களாகையால், எங்கும் தம் நோக்கப்படி அரசர்களை நீக்கியும் நியமித்தும் வந்தனர்.

---

# 23. பூகிஸ்காரரும் டச்சுக்காரரும்

பூகிஸ்காரர் தமது அதிகாரத்திற்குட்பட்ட இடங்களிலெல்லாம் எதேச்சையாக ஈய வியாபாரத்தைச் செய்

தார்கள். அதுவுமன்றி, பல இடங்களில் பூகிஸ்காரர் உண்டாக்கிய கலகங்களினால் டச்சுக்காரரது வியாபாரத்துக்கு இடர்கள் உண்டாயின.

கி. பி. 1745-ஆம் ஆண்டில் ஜொகூர் சுல்தானை சுலைமான்ஷா என்பவன் பூகிஸ்காரரது ஆக்கிரமிப்பிலிருந்து விடுதலை பெற எண்ணங்கொண்டு, டச்சுக்காரரது உதவியை நாடினான். டச்சுக்காரரும் இத்தருணத்தை இழந்துவிடாது, மலாயர்களுக்குச் சகாயஞ் செய்ய முன் வந்தனர். ஆகவே, டச்சுக்காரருக்கும் பூகிஸ்காரருக்கும் போர் உண்டாயிற்று. கி. பி. 1759ல் பூகிஸ்காரர் ரீயோவிலிருந்து வெளியேற்றப்பட்டு, டச்சுக்காரருடன் சமாதானஞ் செய்துகொண்டார்கள். ஆனால், மீண்டும் கி. பி. 1782ல் இரு பிரிவினர்களுக்குமிடையே யுத்தம் உண்டானது. பூகிஸ் ஜாதியார் முதலில் மலாக்காவை முற்றுகையிட்டார்களாயினும், முடிவில் டச்சுக்காரரே வெற்றி பெற்று, சிலாங்கூரையும் ரீயோவையும் தம் வசமாக்கிக்கொண்டனர். இதன் பிறகு ஐந்து வருஷங்கள் வரை பூகிஸ்காரரது தொல்லை அடங்கியிருந்தது. ஆனால், மலாயர்கள் எங்ஙனம் பூகிஸ்காரரை வெறுத்தார்களோ, அங்ஙனமே டச்சுக்காரர்களையும் வெறுத்தார்கள். கி. பி. 1787ல் போர்னியோவிலிருந்து பூகிஸ் கொள்ளைக் கப்பல் ஒன்று ரீயோவுக்கு வந்தது. அதனைத் துரோக எண்ணத்துடன் ரீயோத் துறைமுகத்திற்குள் வந்துசேரும்படி மலாயர்கள் விட்டார்கள். இதைச் சிறிதும் எதிர் பாராத ரீயோவிலிருந்த சிறிய டச்சுப்பட்டாளம் திடீரென்று தாக்கப்பட்டது. பட்டாளத்தைச் சேர்ந்தவர்களுள் சிலர் காடுகளில் ஓடி ஒளிந்தார்கள்; மற்றவர்களும் டச்சுத் தலைவரும் அன்றிரவே மலாக்காவுக்குப் போய்விட்டார்கள். சில தினங்களில் ஒரு சேனையுடன்

டச்சுக்காரர் மீண்டும் ரீயோவுக்கு வந்து சேர்ந்தார்கள். இதற்குள் மலாய்த் தலைவர்களும் சுல்தானும், தமக்குத் தகுந்த தண்டனை கிடைக்குமென உணர்ந்து, மற்றைய இடங்களுக்கு ஓடிவிட்டார்கள். கி. பி. 1795லேதான் சுல்தான் மாமூட் டச்சுக்காரரின் வேண்டுகோளின்படி ரீயோவுக்குத் திரும்பினன். இவன் சுல்தான் சுலைமான் ஷாவின் பேரன்.

அதே ஆண்டில் மலாக்காவை டச்சுக்காரர் ஆங்கிலேயரது கையில் விடவேண்டியதாயிற்று. ஆங்கிலேயர் பூகிஸ்காரரை ரீயோவிற்கு வந்து போக அனுமதித்தனர்.

சுல்தான் மாமூடை ஜொகூர், பாஹாங், ரீயோ, சிங்கப்பூர் இவற்றின் கடைசி அரசனென்று சொல்லலாம். பூகிஸ்காரருக்கும் மலாய்த் தலைவர்களுக்கும் இடையே உண்டான பகைமையைச் சுல்தான் மாமூடினல் சமாளிக்க முடியவில்லை. சில மலாயர்கள் ரீயோவை விட்டு வெளியேறினர். அவர்களில் ஒருவனன பண்டாஹராக் குடும்பத்தைச் சேர்ந்த தெமங்கோங் என்னும் உத்தியோகஸ்தன் சிங்கப்பூருக்குப் போய்க் குடியேறினன்.

சுல்தான் மாமூடுக்கு இரண்டு மக்களிருந்தனர். மூத்தவனன ஹுசேன் என்பவன் சிங்கப்பூருக்குப் போன தெமங்கோங்குடைய சகோதரியின் கணவனவன். இளையவனின் பெயர் அப்துல் ரஹ்மான். மூத்தவனைச் சுல்தானக நியமிக்க மலாயர்கள் எண்ணங்கொண்டிருந்தனர். ஆனல், பூகிஸ்காரர்கள் இளையவனைச் சிம்மாசன மேற்றக் காத்திருந்தனர்.

ஆகவே, கி. பி. 1812ல் ஹுசேன் தன் மாமனை பாஹாங் பண்டாஹராவிடம் சென்றிருந்த போது, பூகிஸ்காரர் சுல்தான் மாமூடை நஞ்சு கொடுத்துக் கொன்று

விட்டு, தமக்கு இஷ்டமான அப்துல் ரஹ்மானைச் சுல்தானுகை நியமித்தார்கள். இவன் அவர்கள் கருத்துக்களை நிறைவேற்றுகிறவனுயிருந்தான்.

கி. பி. 1818–ஆம் ஆண்டில் ரபிள்ஸ் அவர்கள் பிரிட்டிஷ் வியாபார அபிவிருத்திக்காக மலாயாவின் தெற்கே தகுந்த துறைமுகம் ஒன்றைத் தேடித் திரியுங்காலை மலாயா அரசியல் நிலைமை இவ்வாறு அலங்கோலமாயிருந்தது. இனி மலாயாவிலே பிரிட்டிஷ்காரரது வரலாற்றைப்பற்றிப் பின் வரும் பாடங்களில் படிப்போம்.

# ரு. நவீன காலம்

## 1. பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி

எலிஸபெத்து இராணி (கி.பி. 1558—1603) ஆட்சி புரிந்த காலையில்தான் ஆங்கிலேயர் கிழக்கிந்தியத் தீவுகளுக்கும், இந்தியாவுக்கும், சீனுவுக்கும், ஏனைய கீழ் நாடுகளுக்கும் வர முயன்றனர். ஆங்கில வர்த்தகர்களில் சிலர் சிறு கப்பல்களைத் தம் நாட்டின் வடமேற்கு வடகிழக்கு ஆகிய திசைகளுக்கு அனுப்பி, அம்மார்க்கங்களினுலே முற் கூறிய தேசங்களை அடைய முயன்ருர்கள். ஆனுல், அவ்வழிகள் பனிக் கட்டிகளால் மூடப்பட்டிருப்பவை என்பது பலருக்கும் தெரிந்ததே. இன்னும் வேறு சில ஆங்கிலேயர் தரைமார்க்கமாக ரஷியா, பெர்ஷியா முதலிய நாடுகளைக் கடந்து, மேலே கூறப்பட்ட நாடுகளை அடைய முயன்ருர்கள். ஆனுல், கொள்ளைக்காரரும் விரோதிகளும் அவர்களுக்குப் பல இடர்களையுண்டாக்கினர். எனவே, **நன்னம்பிக்கை முனையைச்** சுற்றிக் கீழ்நாடுகளை அடைவதே உசிதமான மார்க்கமென ஆங்கிலேயருக்குத் தோன்றிற்று.

கி. பி. 1557ல் ஸர் பிரான்ஸிஸ் டிரேக் (Sir Francis Drake) என்னும் ஆங்கிலேயக் கடற்படைத் தலைவர் அட்லாண்டிக் சமுத்திரம் வழியாக ஹோர்ன் முனையைக் (Gape Horn, South America) கடந்து, பஸிபிக் மகா சமுத்திரத்தை அடைந்து, அங்குள்ள ஸ்பானியரது கப்பல்களுடன் சண்டையிட நேரிட்டது. அதன் பிறகு மேற்குத்திசையாக நன்னபிக்கை முனையைக் கடந்து, அவர் இங்கிலாந்துக்குச் சென்ருர். செல்லும் போது மொலுக்கஸ் தீவுகளில் தங்கினுர். அங்கிருந்த வாசனைத் திரவிய வியாபாரிகள் ஆங்கிலேயரோடு வியா

பாரம் நடத்த இச்சையுள்ளவர்களாய் இருத்தலைக் கண்டார். அந்நாட்களில் போர்ச்சுகீஸியர்தான் இந்த வியாபாரத்தை நடத்தி வந்தனர். லண்டனை அடைந்ததும், ஆங்கில வர்த்தகர்களிற் பலரைக் கிழக்கிந்தியத் தீவுகளுக்குப் போகுமாறு ஏவினர். ஆயினும், இதினின்று சுமார் முப்பது வருஷங்கள் வரை ஆங்கிலேயர் எதுவும் செய்யவில்லை. கி. பி. 1592ல் முதன்முறையாக ஒரு பிரிட்டிஷ் வியாபாரக் கப்பல் பினங்குத் தீவை அடைந்தது. அதன் பெயர் எட்வர்டு பொனவென்சூரே (Edward Bonaventure); அதன் தலைமை மாலுமி எட்வர்டு லங்காஸ்டர் (Edward Lancaster), அக்கப்பல் சரக்குகளை ஏற்றிக்கொண்டு போகும் வழியில் உடைந்துவிட்டதனால் இங்கிலாந்து போய்ச்சேரவில்லை.

போர்ச்சுகீஸியருக்கு அடுத்தபடியாக டச்சுக்காரர்கள்தான் கிழக்கிந்தியத் தீவுகளுக்கு வந்தவர்கள். கீழ்நாடுகளின் வாசனைத் திரவிய வியாபாரம் முழுவதும் டச்சுக்காரர் கைக்கு வரவே அவர்கள் மிதமிஞ்சிய கிரயத்திற்கு வாசனைப் பொருள்களை ஐரோப்பாவில் விற்கத் தொடங்கினர்கள். இதைக் கண்ட லண்டன் வியாபாரிகள் இப்போது அவாக்கொண்டு, தாம் அவ்வியாபாரத்தைக் கைப்பற்றவேண்டுமென ஆலோசித்து, கி. பி. 1600-ஆம் ஆண்டில் கிழக்கு இந்தியக் கம்பெனி என்னும் ஒரு வியாபார சங்கத்தை ஸ்தாபித்தார்கள். கம்பெனியின் சார்பில் கிழக்கிந்தியத் தீவுகளுக்குப் பல வர்த்தகக் கப்பல்கள் அனுப்பப்பட்டன. இதனால், டச்சுக்காரருக்கும் ஆங்கிலேயருக்குமிடையே கலகங்கள் உண்டாயின.

இவற்றிற்குக் காரணம் என்னவென்றால், டச்சுக்காரர் போர்ச்சுகீஸியருடன் சண்டை செய்து அவர்

களை விரட்டியடிக்கும்போது அதில் ஆங்கிலேயர் சிறிதும் பங்கெடுத்துக்கொள்ளாததே. இப்போது கிழக்கிந்தியத் தீவுகளின் வர்த்தகத்தில் பங்கு வேண்டுமானால், ஆங்கிலேயர் டச்சுக்காரருக்குச் சகாயமாக யுத்தக்கப்பல் தந்தும் அரண்கள் கட்டிக்கொடுத்தும் உதவி செய்ய வேண்டுமென டச்சுக்காரர்கள் கூறினர். இதற்குக் கிழக்கிந்தியக் கம்பெனியார் சம்மதிக்கவில்லை. தமக்குக் கிடைத்த சொற்ப இலாபத்தையும் சண்டையில் வீணுக்க எண்ணவில்லை. இன்னும் இடையிடையே டச்சுக்காரர் ஆங்கிலேயருக்குப் பல இன்னல்களை விளைவித்த வண்ணமாய் இருந்தார்கள். மேலும், அக்காலத்தில் டச்சுக்காரரிடமிருந்த கப்பல்களிலும் சேனையிலும் நான்கில் ஒரு பங்கே ஆங்கிலேயரிடம் இருந்தமையால், அவர்கள் டச்சுக்காரரை எதிர்த்துச் சண்டை செய்ய முடியவில்லை. எனவே, கி. பி. 1623-ஆம் ஆண்டுக்குப் பின் கிழக்கிந்தியத் தீவுகளில் வர்த்தகஞ் செய்யும் நோக்கத்தை நிறுத்திவிட்டு, கம்பெனி இந்தியாவிற்குச் சென்றது. அங்கு அது நல்ல அதிருஷ்டத்தைப் பெறலாயிற்று.

கி. பி. 1641ல் மலாக்கா டச்சுக்காரரது கைக்கு வரவே, அவர்களது ஆதிக்கம் கிழக்கிந்தியத் தீவுகளில் வலுத்தது. ஜலசந்திக்கூடாக வேறெந்த ஐரோப்பிய வர்த்தகர்களும் செல்லவொட்டாது தடை செய்தனர். இதனால், ஆங்கிலேயருக்குக் கிழக்கிந்தியத் தீவுகளில் இங்குமங்குமிருந்த சொற்ப வியாபார ஸ்தலங்களும் கி.பி. 1683ல் இழக்கப்பட்டன.

# 2. கெப்டன் பிரான்ஸிஸ் லைட்டும் பினங்கும்

18-ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியில் மலாய் உலகத்திலே டச்சுக்காரரது ஆதிக்கம் க்ஷீணிக்கத் தொடங்கிற்று. இதற்குக் காரணம், முன் சில பாடங்களில் நாம் படித்த படி, அவர்களது கொடூரமான ஆட்சியே. அதன் பொருட்டு, பல இடங்களில் கிளர்ச்சிகளும் புரட்சிகளும் உண்டாயின. இவற்றை அடக்க அவர்களிடம் போதிய பலமும் படையும் இருக்கவில்லை. இத்தருணத்தை ஆங்கிலேயர் தமக்குத் தக்கவாறு பயன்படுத்திக் கொண்டார்கள். முன்னர் தாம் கைப்பற்ற விரும்பிய கிழக்கிந்தியத் தீவுகளின் வியாபாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக, வங்காளக் குடாக் கடலுக்குக் கிழக்கேயும், மலாக்கா ஜலசந்திக்கு அருகிலேயும் இருக்கும் ஒரு துறைமுகத்தை இப்போது தேடினுர்கள். இன்னும் அத்துறைமுகமானது வடகிழக்குப் பருவக்காற்று மும்முரமாக வீசும்போது கப்பல்கள் அண்டுவதற்கும், சீனுவுக்குப் போக்கு வரவு செய்யும் கப்பல்களைப் பழுதுபார்ப்பதற்கும் வசதி அளிக்கக்கூடியதாய் இருத்தல் வேண்டுமெனவும் கருதினுர்கள்.

இத்தகைய துறைமுகம் ஒன்றைக் கண்டுபிடித்தவர் தான் கெப்டன் பிரான்ஸிஸ் லைட்டு (Captain Francis Light) என்பவர். இவர் கி. பி. 1740-ஆம் ஆண்டில் இங்கிலாந்திலே ஸவோல்க (Suffolk) மகாணத்திலே பிறந்தவர். தமது 21-ஆம் ஆண்டில் கடற்படையிற் சேர்ந்தார். மதராஸுக்கும் கெடாவுக்குமிடையே வர்த்தகம் நடத்தி வந்த கிழக்கித்தியக் கம்பெனிக் கப்பலொன்றின் தலைவரானுர். பிரான்ஸிஸ் லைட்டு, கி. பி. 1763-ஆம்



கெப்டன் பிரான்ஸிஸ் லைட்டு (சிலை)



ஸர் தோமஸ் ஸ்டாம்போர்ட் ரபிள்ஸ் (லண்டன்
மிருகக் காட்சிச் சாலையிலுள்ள சிலை)

ஆண்டில் கெடாவில் தங்கி, ஓர் ஆலையையும் வியாபார நிலயத்தையும் நிறுவினர். அங்கிருந்தபடியே அந்நாட்டின் விளை பொருள்களான இலவங்கம், ஜாதிக்காய்,மிளகு முதலியவைகளை வாங்கி இந்தியாவிற்கு ஏற்றினர். அதனால், கம்பெனிக்குப் பெருத்த இலாபங் கிடைத்தது. கெடா வாசிகளிற் பலருக்கு நன்மையேற்பட்டது. மலாயர் இவரிடம் நட்பும் நம்பிக்கையும் பாராட்டி வந்தனர். அந்நாட்களில் சீயங்காரர்களாலும், பூகிஸ்காரர்களாலும், கெடாவில் கொள்ளையும் கொலையும் நடந்து வந்தன. இவற்றை நிவர்த்திக்க, கெடாச் சுல்தானுக்குத் துணை வேண்டியிருந்தது. ஆங்கிலேயர் தனக்கு அயலாரானல், விரோதிகளினல் தன் ராஜ்யத்துக்கு அபாயம் நேரிடா வண்ணம் உதவி செய்வார்களெனச் சுல்தான் கருதினன். பிரான்ஸிஸ் லைட்டும் கெடாவைச் சேர்ந்த பினங்குத் தீவை ஏற்கெனவே ஆங்கிலேயர் தேடிக்கொண்டிருந்த துறைமுகமாக அமைக்க எண்ணினர். இன்னும் பினங்குத் துறைமுகமானது நிலமுகமாக(Land-locked) இருப்பதால், அங்குக் கப்பல்கள் யாதோர் அபாயமுமின்றி உறையலாமென்பதையுங் கண்டார். ஆகவே, கி. பி. 1786-ஆம் ஆண்டு, ஜூலை மீ, 3உ லைட்டு அவர்களது தூண்டுதலின் பயனக, கிழக்கிந்தியக் கம்பெனியார் கெடா சுல்தானிடமிருந்து பினங்கை வாடகைக்கு அமர்த்திக் கொண்டார்கள்.

கெப்டன் லைட்டுதான் பினங்குக்கு முதல் கவர்னராவர். அவர் அங்கு வந்த போது பினங்கு காடடர்ந்த இடமாய் இருந்தது. சில சீனர்களே அங்கு வசித்தார்கள்; இடைவிடா முயற்சியால் காட்டையழித்து நாடாக்கினர். தீபகற்பத்திலிருந்து நூற்றுக்கணக்கான குடியேற்றக்காரர் பினங்குக்கு வந்தார்கள். அவர்களுக்கெல்லாம் லைட்டு

நிலங்கள் இனமாகக் கொடுத்து அவர்களைக் காடழிக்கும் படி ஏவினர். கம்பெனியார் பினங்கை ஏற்றுமதி இறக்குமதி ஆகியவற்றிற்குத் தீர்வையில்லாத துறைமுகம் (Free port) ஆக்கியபடியால், சுதேச வியாபாரிகள் டச்சுக்காரரது துறைமுகங்களுக்குச் செல்லாமல், பினங்கிற்கே சென்றனர். இன்னும், பிரான்ஸிஸ் லைட்டு வாசனைத்திரவியத் தோட்டங்கள் பலவற்றை உண்டாக்கினர். இவ்வண்ணம் பினங்கு செல்வமும் சிறப்பும் பெற்றது. இக்காரணங்களினால் மலாயர் மாத்திரமன்றி, சீனர், அராபியர், இந்தியர், ஜாவானியர், பர்மியர், சீயங்காரர் முதலியோரும் திரள் திரளாக வந்து பினங்கில் குடியேறினர்.

முதலில் பினங்கு எல்லா வகையிலும் ஓர் உன்னதத் துறைமுகமாய் இருக்குமெனத் தோன்றிற்று ஆனல், கி. பி. 1819-ஆம் ஆண்டில் சிங்கப்பூர் தலையெடுத்ததாலும், மிளகிற்கிருந்த கிராக்கி குறைந்துவிட்டதாலும், பினங்கின் சமீபத்தில் கப்பல்கள் கட்டுவதற்கான உகந்த மரங்கள் கிடைக்காததனாலும் அது தன் மேன்மையை இழக்கலாயிற்று. எப்படியானாலும் பினங்குதான் கிழக்கிந்திய நாடுகளுள் பிரிட்டிஷ்காரரது முதலாவது நிலையமானது. உலகின் எழில் வாய்ந்த இடங்களுள் ஒன்றாய்ப் பினங்கு விளங்குகிறது.

பிரான்ஸிஸ் லைட்டு மலேரியா ஜுரத்தால் பிடிக்கப்பட்டு, கி. பி. 1794-ஆம் ஆண்டு, அக்டோபர்மீ, 21உ அன்று பூதவுடலை நீத்துப் புகழுடல் பெற்றார். அவரது கல்லறை இன்னும் பினங்கைச் சிறப்புச் செய்துகொண்டிருக்கிறது.

# 3. ஸர் ஸ்டாம்போர்ட் ரபிள்ஸும் சிங்கப்பூரும்

ஸ்டாம்போர்ட் ரபிள்ஸின் தகப்பனுர் லண்டனுக்கும் ஜமைக்காவுக்குமிடையே ஓடிக்கொண்டிருந்த ஓர் ஆங்கிலக் கப்பலின் மாலுமி. அதே கப்பலிலேயே கி. பி. 1781-ஆம் ஆண்டில் ஸ்டாம்போர்ட் ரபிள்ஸ் பிறந்தார். அவர் தகப்பனுர் அவ்வளவு பணக்காரரல்லர்; கடன்காரர். இதனுல், ஸ்டாம்போர்ட் தமது பதினுன்காவது வயதிலேயே பள்ளிக்கூடத்தை விட்டுவிட்டு, லண்டனில் உள்ள கிழக்கிந்தியக் கம்பெனியின் காரியாலயத்தில் குமாஸ்தாவாய் அமர்ந்தார்; தமக்கிட்ட வேலையை ஊக்கத்துடனும் திறமையுடனும் செய்து முடிப்பார்; பொன் போன்ற குணமுடையவர். ஆகவே, காரியாலய அதிகாரிகள் ஸ்டாம்போர்டை மிகவும் பாராட்டினுர்கள். அவரது குடும்பத்தில் அவரொருவரே உழைப்பாளர். குடும்பத்தின் பாரமும் அவர் தலையிலேயே சுமத்தப்பட்டிருந்தது. இதினின்று வாலிப ஸ்டாம்போர்டின் கவலை எத்துணையதாய் இருந்திருக்க வேண்டுமென்பதை நீங்களே யூகித்து உணர்ந்துகொள்ளுங்கள்.

அவர் ஓழிந்த நேரங்களில் பற்பல சிறந்த புத்தகங்களைப் படித்து வருவார்; பிரஞ்சு பாஷையைத் தாமாகவே கற்றுக்கொண்டார்; மிருகங்கள், தாவரங்கள் ஆகியவற்றைப் பற்றியும் தருணம் கிடைத்த போதெல்லாம் ஆராய்ச்சி செய்வார்.

கி. பி. 1805-ஆம் ஆண்டில் கிழக்கிந்தியக் கம்பெனியார் ஸ்டாம்போர்ட் ரபிள்ஸைப் பினுங்கில் குமாஸ்தாவாக நியமித்தனர். இங்கும் அவர் தம் வேலைகளைச் செவ்வையாகச் செய்து வந்தார். பினுங்குக்கு வந்த சில

நாட்களுள் மலாய் பாஷையில் பேசவும் எழுதவும் கற்றுக்கொண்டார்; மலாயர்களது பழக்க வழக்கங்களைப் பற்றியும் வரலாற்றைப் பற்றியும் ஆராய்ந்து வந்தார். மேலோர் கீழோர் என்ற வித்தியாசம் பாராட்டாதவராகையால், மலாயர் அனைவரும் அவருக்கு நண்பர்கள் ஆனார்கள்.

மலாயா உலகுக்கே தம்மை அர்ப்பணஞ்செய்து தம்மால் இயன்ற மட்டில் இந்நாட்டவர்களுக்கு நன்மை புரிதலை அவர் விரதமாகக் கொண்டார். பிரிட்டிஷார் மலாயாவின் அதிபதிகளானால், இத்தேசத்துக்குப் பெரு நன்மை உண்டாகுமென்பது ரபிள்ஸ் கருத்து. டச்சுக்காரரது கொடுங்கோலையும் குடிகளது நலத்தைக் கருதாத ஆளுகையையும் கண்டு டச்சுக்காரரை மிக வெறுத்தார். பிரிட்டிஷ்காரர் வந்தால்தான் மலாய் நாட்டுக்கு அமைதி, சமாதானம், செல்வம், செழிப்பு, குடிகளிடையே சந்தோஷம் ஆகியவை உண்டாகும் என்பதை அவர் உணர்ந்திருந்தார்.

பினாங்கு முன்னாட்களில் தேகாரோக்கியத்திற்குக் கொஞ்சமும் வசதியான இடமாய் இருக்கவில்லை. கிழக்கிந்தியக் கம்பெனியின் கவர்னர்களில் இருவரும், பல காரியஸ்தர்களும், குடி ஜனங்களில் அனேகரும் சடுதியில் இறந்தனர். ரபிள்ஸின் உடல் நலமும் குன்றிற்று. எனவே, கி. பி. 1808-ஆம் ஆண்டில் அவர் தேக சௌக்கியத்தின்பொருட்டு மலாக்காவிற்குச் சென்றார்.

மலாக்கா கி. பி. 1795ல் பிரிட்டிஷ்காரரது கைக்கு வந்தது. அதெப்படியென்றால், அந்நாட்களில் டச்சுக்காரரது தாய்த்தேசமாகிய ஹாலந்தை பிரான்ஸ் கைப்பற்றிற்று. பிரான்ஸ் அப்போது இங்கிலாந்தின் பெரிய விரோதி. ஆகையால், ஒரு வேளை பிரான்ஸ் டச்சுக்கார

ரது கிழக்கிந்திய நாடுகளையும் எடுத்துக்கொண்டு பிரிட்டிஷாருக்குக் கிழ்த் தேசங்களில் இடர்களை உண்டு பண்ண இயலும் என்பதைக் கிழக்கிந்தியக் கம்பெனியார் உணர்ந்தே முன்ஜாக்கிரதையாகக் கேட்டவுன், இலங்கை, மலாக்கா இவற்றைக் கைப்பற்றினார்கள்.

மலாக்காவைக் கைப்பற்றியவுடன் அங்கிருந்த பட்டினத்தை அழித்துவிட்டுக் குடிகளைப் பினங்கிற்கு மாற்ற வேண்டுமென்பதே கம்பெனியாரின் நோக்கமாயிருந்தது. ரபிள்ஸ் மலாக்காவுக்கு வந்தவுடன் இதை அறிந்தார். கம்பெனியாரின் எண்ணப்படி செய்தால் குடிகளுக்குப் பெருநஷ்டமும் சேதமும் தொந்தரவுகளும் உண்டாகுமென்பதை உணர்ந்தார்; உடனே இந்தியாவிலிருந்த கவர்னர் ஜெனரலான லார்டு மின்டோ (Lord Minto) என்பவருக்குத் தமது கருத்தைக் கடிதமூலம் தெரிவித்தார். லார்டு மின்டோவும் இசைந்தார். இவ்விதமாக ரபிள்ஸ் மலாக்கா மலாயருக்கு நன்மை செய்தார்.

நாம் மேலே கவனித்த காரணங்களினால் ஜாவாத் தீவையும் பிரிட்டிஷார் டச்சுக்காரரிடமிருந்து 1811ல் எடுத்துக்கொண்டார்கள். லார்டு மின்டோ ரபிள்ஸின் மேன்மையான குணத்தை உணர்ந்தவராய், அவரையே இப்போது ஜாவாவின் கவர்னராக்கினார். டச்சுக்காரர் ஆளுகையில் ஜாவாவின் விவசாயிகள் பல கஷ்டங்களுக்கு உட்பட்டிருந்தார்கள். அரசாங்க சம்பந்தமான வேலைகள் செய்தால் அவர்களுக்கு ஊதியம் கிடையாது. டச்சுக்காரர் ஆயிரக்கணக்கான அடிமைகளையும் வைத்திருந்தார்கள். ரபிள்ஸ் ஜாவாவிற்குச் சென்றவுடன் குடிஜனங்களுக்கு எல்லா வகையிலும் சுதந்தரம் கொடுத்தார்; அடிமைகளை விடுதலை செய்தார்; அரசாங்க வேலைக்காரர்களுக்குத் தகுந்த சம்பளம் கொடுத்தார். டச்சுக்

காரர் ஆளுகையில் ஜாவானியச் சிற்றரசர்களுக்குப் பல நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருந்தன. அவற்றையெல்லாம் ரபிள்ஸ் நீக்கினார். இவ்வாறெல்லாம் ரபிள்ஸ் ஜாவானியர்களுக்கு நன்மைகள் செய்தார். ஆனால், ஐரோப்பாவில் நெப்போலியன் (Napoleon) வீழ்ச்சிக்குப் பிறகு கி. பி. 1814ல் நடந்த லண்டன் உடன்படிக்கைப் (Convention of London) பிரகாரம் கி. பி. 1816ல் ஜாவாத் தீவானது மற்றைய தீவுகளுடனும் மலாக்காவுடனும் ஆங்கிலேயரால் டச்சுக்காரருக்குத் திருப்பிக் கொடுக்கப்பட்டது. இப்போது ரபிள்ஸ் பதினொரு வருஷத் தீவிர வேலைக்குப் பின் இளைப்பாறுதற்காக இங்கிலாந்து சென்றார்.

பிறகு,கி.பி. 1818ல் கம்பெனியார் ரபிள்ஸைச் சுமத்திராவின் மேற்குக் கரையில் தங்களுக்கு உரிமையாயிருந்த பென்கூலன் (Bencoolen) என்னுமிடத்திற்குக் கவர்னராக அனுப்பினார்கள்.

ரபிள்ஸ் இளைப்பாறுதற்குச் சென்றிருந்த காலையில் டச்சுக்காரர்கள் மீண்டும் முன்போல அநியாய முறையில் அரசியலை நடத்தினதுமல்லாமல் பிரிட்டிஷ் வர்த்தகக் கப்பல்கள், பத்தேவியாவைத் தவிர்த்து வேறு எந்தக் கிழக்கிந்தியத் தீவுகளுக்கும் செல்லக் கூடாதெனக் கட்டளையிட்டிருந்தனர். ரபிள்ஸ் இதைக் கண்டு மலேஷியாவின் ஒரு பாகத்தையாவது பிரிட்டிஷாருக்காக எடுக்க வேண்டுமெனத் தீர்மானித்தார். உடனே பென்கூலனிலிருந்தபடி சுமத்திராவிலுள்ள மலாயத் தலைவர்களுடன் ஒப்பந்தங்கள் செய்தார். டச்சுக்காரர் ரபிள்ஸ் ஒரு கலகக்காரர் எனக் குற்றஞ்சாட்டி அவரைப் பற்றி லண்டனிலிருந்த கம்பெனிக் காரியாலயத்திற்கு எழுதினார்கள். ஐரோப்பாவில் அந்நாட்களில் பிரான்ஸுக்கும் இங்கிலாந்துக்கும்



ஸர் தோமஸ் ஸ்டாம்போர்ட் ரபிள்ஸ்




மலாக்காத் தெருவொன்றின் காட்சி

இருந்து வந்த விரோதத்தினால் பிரிட்டஷ்காரர் ஹாலந்தின் அதிருப்தியை எவ்விதத்திலும் சம்பாதித்துக்கொள்ளப் பிரியப்படவில்லை. ஆகவே, கம்பெனியார் ரபிள்ஸின் செயலை ஆட்சேபித்தார்கள். ஆனால், அவர் மனந் தளர வில்லை.

சுமத்திராவின் மேற்கிலிருந்த பென்கூலனால் பிரிட்டிஷாருக்கு ஒரு நன்மையும் உண்டாகமாட்டாது என்பதை ரபிள்ஸ் அறிந்தார். இன்னும், மலாக்காவைக் கொடுத்து விட்ட பின்பு, வடக்கேயிருக்கும் பினங்கினாலும் பிரிட்டிஷாரது வர்த்தகத்துக்கு அநுகூலம் உண்டாகாது என் பதையும் உணர்ந்தார்.

எனவே, இந்தியாவில் கவர்னர் ஜெனரலாயிருந்த லார்டு ஹேஸ்டிங்ஸ் (Lord Hastings) என்பவருக்குத் தம் கருத்தைத் தெளிவாகத் தெரிவித்து, பிரிட்டிஷாரது வர்த்தக அபிவிருத்தியின்பொருட்டு ஒரு புதிய இடத்தை நிர்மாணிக்கத் தமக்கு அனுமதி கொடுக்கும்படி மனுச் செய்தார். கவர்னர் ஜெனரல் ரபிள்ஸினது ஆர்வத்தையும் யூகத்தையும் கண்டு மெச்சி அனுமதி கொடுத்தார்.

ஆகவே, ரபிள்ஸ் முதலில் ரியோத் தீவை (Riau Island) பிரிட்டிஷ் துறைமுகமாக்க முயன்றார். ஆனால், டச்சுக்காரர் அவரது நோக்கம் நிறைவேறா வண்ணம் பல வழிகளிலும் பூகிஸ்காரரைத் தூண்டிவிட்டனர். அதனால், ரபிள்ஸ் சிங்கப்பூருக்கு வந்து, அங்கிருந்த தெமங்கோங்கிடம் உறவு பாராட்டினார். ('பூகிஸ்காரரும் டச்சுக்காரரும்' என்னும் பாடத்தைப் பார்க்க). இத்தெமங்கோங், பூகிஸ்காரரதும் டச்சுக்காரரதும் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்த சுல்தான் அப்துல் ரஹ்மானின் ஆளுகையில் இருந்தது. தெமங்கோங்கான ஹுசேன் அவனது

ராஜ்யத்தை இழந்த வரலாற்றை ரபிள்ஸுக்கு எடுத்துக் கூறினன். ரபிள்ஸினுதவியால் ஹுசேன் சிங்கப்பூருக்குக் கொண்டுவரப்பட்டு, ஜொகூர் ராஜ்யத்தின் அரசனுக்கப் பெற்றான். எனவே, இப்பொழுது ஜொகூர் ராஜ்யத்துக்கு இரண்டு அரசர்கள் உண்டு ; ஒருவன் ரீயோவிலும் மற்ற வன் சிங்கையிலும் இருந்தனர்.

கி. பி. 1819ல் ரபிள்ஸ் ஹுசேனிடம் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி சிங்கப்பூர், கிழக்கிந்தியக் கம்பெனியின் பெயரில் ஆங்கிலேயர் கைக்கு வந்தது. கி. பி. 1819-1823 வரை சிங்கப்பூர் பென்கூலன் துரைத் தனத்துக்குக் கீழ் இருந்தது.அதன் பின்னர்அது வங்காளத் துரைத்தனத்தின் கீழ் அமைக்கப்பட்டது.

ரபிள்ஸ் சிங்கப்பூரைப் பெற்றவுடன் டச்சுக்கார ருக்குக் கோபம் பொங்கிற்று. ஏனென்ருல், ரபிள்ஸின் இச்செய்கையால் தங்களது கிழக்கிந்திய வியாபாரத் திற்குக் கட்டாயம் பங்கம் ஏற்படும் என்பதை அவர்கள் உணர்ந்தார்கள். அவரைப்பற்றி லண்டனுக்கும் கல்கத் தாவுக்கும் முறையீடுகள் செய்தார்கள். லார்டு ஹேஸ்டிங்ஸ் விஷயத்தைச் சமாளித்துச் சமாதானம் செய்தார்.

ரபிள்ஸ் சிங்கப்பூரை ஏற்றுமதி இறக்குமதி ஆகிய வற்றிற்குத் தீர்வையில்லாத துறைமுகமாக்கினுர் (Free Port). சியம், சீன, மலேஷியாவின் நான தீவுகள் ஆகிய இடங்களிலிருந்து வருங் கப்பல்களுக்குச் சிங்கப்பூர் ஓர் உறைவிடமாயிற்று. மலாயா ராஜ்யங்களிலிருந்து ஏற்று மதிப் பொருள்களும் சிங்கப்பூருக்கு வந்தன. சிங்கப் பூரது இயற்கையான நிலையே அது ஒரு சிறந்த துறை முகமாய் விளங்குவதற்குக் காரணமாகிறது. கீழ் நாடுகள்

பலவற்றிலிருந்தும் திரள் திரளாகக் குடிகள் சிங்கப்பூருக்கு வந்தார்கள். ரபிள்ஸ் சிங்கப்பூரைப் பெற்றுப் புதினெட்டு மாதங்களுக்குள் ஜன சங்கியை 12,000 ஆனது. 1823ல் 13 மில்லியன் வெள்ளிக்கு வியாபாரம் நடந்தது. நியாயநீதி பொருந்திய அரசியலை ரபிள்ஸ் சிங்கப்பூரில் நிறுவினர். சூதாடுதல், சேவற்சண்டை, அடிமை முதலியவற்றை நிறுத்தினர். வீடுகள் கட்டுவதற்கும் ரஸ்தாக்கள் போடுவதற்கும் ஒழுங்குகள் செய்தார். பள்ளிக்கூடங்கள் ஆரம்பிக்கப்பட்டன. ரபிள்ஸால் உண்டாக்கப்பட்ட பள்ளிக்கூடம் அவரது பெயரையே சூடி இன்றும் 'ரபிள்ஸ் இன்ஸ்டிடியூஷன்' (Raffles Institution) என வழங்கப் பெறுகின்றது. ஆகவே, சிங்கப்பூர் பல துறைகளிலும் வளர்ச்சி பெற்றுக்கொண்டே வந்ததனுல் டச்சுக்காரர் கையிலிருந்த மலாக்காவின் வியாபாரம் க்ஷீணிக்கலாயிற்று. எனவே, கி. பி. 1824-ஆம் ஆண்டில் டச்சுக்காரருக்கும் ஆங்கிலேயருக்கும் நடந்த ஒப்பந்தத்தின்படி டச்சுக்காரர் சிங்கப்பூரையும் மலாக்கா உட்பட மலாயாத் தீபகற்பத்தையும் ஆங்கிலேயர் கையில் விட்டு விட்டனர். ஆங்கிலேயர் பென்கூலனையும் சிங்கப்பூருக்குத் தெற்கேயுள்ள ஏனைய கிழக்கிந்தியத் தீவுகளையும் டச்சுக்காரர் கையில் விட்டனர்.

அப்பால் ஹுசேன் பிரிட்டிஷாரிடமிருந்து உபகாரச் சம்பளம் பெறுவானுயினன். ஜொகூர் ராஜ்யம் தெமங்கோங் குடும்பத்தார் கைக்குச் சென்றது.

கி. பி. 1823ல் ரபிள்ஸ் தமது 42-ஆம் வயதில் இங்கிலாந்துக்குத் திரும்பினர். மலாயாவில் இன்று செல்வம், செழிப்பு, அமைதி, நியாயம், நீதி ஆகியன நிலவுவதற்கு ரபிள்ஸே காரணபூதராவார். கி. பி. 1825-ஆம் ஆண்டு, ஜுலை மீ, 5உ அன்று இங்கிலாந்தில்

தம் வீட்டு மாடிப் படியின் அடியில் அவர் இறந்து கிடந்தார். ரபிள்ஸ் மிருகங்களின்மீது பிரியமுடையவ ராகையால், அவரது ஞாபகார்த்தமாக லண்டன் மிருகக் காட்சிச் சாலையில் (Zoo) அவரது உருவச்சிலை ஒன்று இருக்கிறது. இன்னும், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை வளர்த்தவர்களுள் இவரும் ஒருவராகையால், லண்டனி லுள்ள *வெஸ்ட் மினிஸ்டர் அபியிலும்* (Westminster Abbey) அவரது உருவச்சிலை இருக்கிறது. ஆனாலும், *சிறோங்கிய சிங்கப்பூர்தான் ஸர் ஸ்டாம்போர்ட் ரபிள்ஸின்* ஸ்திரமான ஞாபகச் சின்னம் எனலாம்.

---

# 4. தொடுவாய்ப் பகுதிகள்

சிங்கப்பூர், பினங், மலாக்கா, வெலஸ்லி மாகாணம் (இது கெடாச் சுல்தானிடமிருந்து 1800ல் குத்த கைக்குப் பெறப்பட்டது) ஆகிய இவை நான்கும் ஒரே துரைத்தனத்தின் கீழ், தொடுவாய்ப் பகுதிகள் (Straits Settlements) என்னும் பெயருடன் வைக்கப்பட்டன. இவற்றிற்குப் பினங்குதான் முதலில் அரசாங்கத் தலைநகர மாயிற்று. ஆயினும், சிங்கப்பூர் வெகு சீக்கிரத்தில் பல துறைகளிலும் அபிவிருத்தி பெற்றதால், கி. பி. 1837ல் சிங்கப்பூரே துரைத்தனத்தின் நிலையமாக்கப்பட்டது. இத்தீவு அமைந்துள்ள சிறந்த நிலையைப்பற்றி முன்னமே படித்தோமல்லவா? அப்போது இங்கிலாந்து, இந்தியா ஆகிய தேசங்களிலிருந்து பல விதத் துணிமணிகளும் சரக்குகளும் பெரும்பெருங்கப்பல்களில் சிங்கப்பூருக்கு வந்தன. *சீனாவிலிருந்து பட்டு, தேயிலை, பீங்கான்கள்* ஆகியனவும் கொண்டுவரப்பட்டன. கிழக்கிந்தியத் தீவு

களிலிருந்து வாசனைப் பொருள்கள், ஈயம், பொன், முத்துக்கள், கற்பூரம், தேன் மெழுகு, காப்பிக்கொட்டை, கருங்காலி, சந்தனக்கட்டை முதலியன வந்தன. மேற்குத் திசையிலிருந்து வந்த பொருள்கள் சிங்கப்பூரிலிருந்தே கிழக்கு நாடுகளுக்கு ஏற்றுமதியாயின. கீழ்த் திசையிலிருந்து வந்தவை அவ்வாறே மேற்கிலுள்ள நாடுகளுக்கு ஏற்றுமதியாயின. இன்னும் சிங்கப்பூர் தீர்வையில்லாத துறைமுகமாகையால், சுதேச வர்த்தகர்களெல்லோரும் டச்சுக்காரரது துறைமுகங்களுக்குப் போகாமல் சிங்கப்பூருக்கே வந்தனர்.

சிங்கப்பூர் இங்ஙனம் வளர்ச்சியடைந்து வரவே, மலாக்காத் துறைமுகத்தின் உபயோகம் மறைந்து விட்டது. பினாங்கின் வர்த்தகமும் குன்றிற்று: பிறகு அது கெடா, பேரா, அச்சை, சீயம், பர்மா இவற்றிற்கு மாத்திரம் துறைமுகமாய் அமையலாயிற்று.

இப்படிச் சிங்கப்பூர் சிறப்பாகவும், மலாக்கா, பினாங்கு, வெலஸ்லி மாகாணம் பொதுவாகவும் விருத்தியடையவே, இந்தியா, இலங்கை, சீனா, கிழக்கிந்தியத்தீவுகள் முதலியவற்றின் மக்கள் கூட்டங்கூட்டமாகத் தொடுவாய் நாடுகளுக்கு வந்து குடியேறினார்கள். இங்ஙனம் குடியேறிய அந்நியர் பலர் தத்தமக்குள்ளேயும் மலாயர்களுடனும் கலப்பு மணம் செய்துகொண்டார்கள்.

சிங்கப்பூர் சௌத் பிரிட்ஜ் ரோடில் (South Bridge Road) இருக்கும் மாரியம்மன் கோயில் கி. பி. 1825ல் இந்துக்களால் கட்டப்பட்டது. அவர்களது சிற்பத் திறமைக்கு இக்கோயில் இன்று ஓர் எடுத்துக்காட்டாய் இருக்கிறது. அரசாங்கக் காரியாலயங்களில் முதன்முதலாகக் குமாஸ்தாக்களாய் இருந்தவர்கள் இந்தியர்கள்தாம் (இலங்கையர் உட்பட). சிங்கப்பூரிலிருக்

கும் செயின்ட் ஆண்ட்ரூஸ் கதிட்ரல் (St. Andrew's Cathedral), இப்போதைய கவர்னர் வீடு (Govt. House), இவை இந்தியரால் கட்டப்பட்டவை. இந்தியர்கள்தான் காடுகளை அழித்து, பள்ளங்களை நிரவி, கடற்கரைச்சுவர்களை எழுப்பி, பாலங்கள் கட்டி, காரியாலயங்கள் கட்டி, ரஸ்தாக்கள் போட்டு, சிங்கப்பூரை நகரமாக்கினவர்கள். பினங்கு, மலாக்கா, வெலஸ்லி மாகாணம் இவைகளும் இந்தியர்களாலேதான் முன்னேற்றமடைந்தன. மேலும், கி. பி. 1827-1867 வரையில் தொடுவாய்ப் பகுதியின் துரைத்தனம் இந்தியத் துரைத்தனத்துக்கு உட்பட்டிருந்தது. இதன் பிறகு தொடுவாய்ப் பகுதிகள் முடியரசுக் குடியேற்ற நாடுகளாக்கப்பட்டு (Crown Colonies), இங்கிலாந்து மன்னரால் நியமிக்கப் பெற்ற ஒரு தனித் தேசாதிபதியின் பரிபாலனத்தில் வைக்கப்பட்டன. இவற்றின் முதல் கவர்னராய் இருந்தவர் ஸர் ஹரி ஓர்ட் (Sir Harry Ord).

இனி, தொடுவாய்ப் பகுதிகளின் அபிவிருத்திக்காக, சிக்கனத்துக்கும் முயற்சிக்கும் பெயர் போன சீனரும் நெடுங்காலமாக உழைத்துள்ளார்கள். இவர்கள் வர்த்தகர்களாகவும், ரப்பர்த் தோட்டங்கள் ஈயச் சுரங்கங்கள் முதலியவற்றை நடத்துபவர்களாகவும், யந்திர சாலைகளில் வேலை செய்பவர்களாகவும் பல விதக் கைத்தொழிலாளிகளாகவும் வேலை செய்து இந்நாடுகளுக்குச் செல்வப் பெருக்கையும் சீரையும் உண்டாக்கியுள்ளார்கள்.

# 5. மலாய் ராஜ்யங்கள்

போர்ச்சுகீஸியர் மலாக்காவைப் பிடிப்பதற்கு முன்பு மலாய மலாக்காவின் சுல்தான்கள். சிலர் மலாயாத் தீபகற்பம் முழுவதையும் ஆண்டிருந்தார்கள். மலாய மலாக்காவின் வீழ்ச்சிக்குப் பின்னர், தீபகற்பத்துள் ஆங்காங்குப் பற்பல சிறிய மலாய் இராஜ்யங்கள் உண்டாயின. அத்தகைய ஒரு இராஜ்யத்தை இப்போது வருணிப்போம். இது பெரும்பாலும் ஒரு நதி தீரத்திலுள்ள குக்கிராமங்களின் கூட்டத்தாலானது; இதன் பிரதமத் தலைவன் சுல்தான். ஒவ்வொரு கிராமத்திலும் சுல்தானுக்கடங்கிய தலைவன் ஒருவனுண்டு. சுல்தான் திறமையுடையவனுய் இருந்தால் கிராமத்தில் அமைதி நிலவும்: ஆனுல், அவ்வித சுல்தான்மார்கள் அரியராகவே இருந்தார்கள். அடிக்கடி கிராமங்களின் தலைவர்கள் தம் மனம் போன போக்குப்படி நடப்பர்; சரியான சட்ட திட்டங்கள் இல்லை. அரசாங்கக் காரியஸ்தரோ, தாணுக்காரரோ, நியாய துரந்தரரோ இருந்ததில்லை. எனவே, இவ்வித அரசியலில் குடிகள் சந்தோஷத்துடனும் சீர் சிறப்புடனும் இருந்திருக்க முடியுமா? ஒவ்வொரு ராஜ்யமும் அதனதன் அயல் ராஜ்யத்துடன் போரும் கலகமும் புரிந்த வண்ணமாகவே இருந்தது; இன்னும் சுல்தானுக்கும் தலைவருக்குமிடையில் அடிக்கடி சச்சரவு நேர்ந்தது; தலைவர்களுக்குள்ளேயும் போட்டா போட்டியும், சண்டையும், வம்பும் நடந்தன.

ஆகவே, மலாய மலாக்காவின் இறுதிக்குப் பின்னர், சுமார் முந்நூறு ஆண்டுகளாக மலாய்த் தீபகற்பம் அடங்கலும் கலகமும் குழப்பமும் நிலவின.

தொடுவாய் நாடுகள் இம்மலாய ராஜ்யங்களுக்கு அயல் நாடுகளாய் இருந்தமையால், பிரிட்டிஷார் அவ்

விராஜ்யச் சுல்தான்களுக்கு வேண்டிய அளவு உதவி புரிந்து, ஆங்காங்கே சமாதானமும் செல்வாக்கும் உண்டாகும்படி செய்தல் வேண்டுமென்பது ஸ்டாம்போர்ட் ரபிள்ஸின் கருத்தாய் இருந்தது. ஆயினும், ரபிள்ஸுக்குப் பின் வந்த பிரிட்டிஷ் கவர்னர்கள் இதை நிறைவேற்ற முடியவில்லை. ஏனென்றால், கி. பி. 1867 வரையில் தொடுவாய் நாடுகளின் துரைத்தனம் பிரிட்டிஷ் இந்திய துரைத்தனத்துக்கு உட்பட்டிருந்தது. அத்துரைத்தனம் வியாபார விருத்தியிலேயே கவனத்தைச் செலுத்தியது; மலாய ராஜ்யங்களின் கலகங்களிலும், குழப்பங்களிலும் ஈடுபட எண்ணங்கொள்ளவில்லை.

சில நூற்றாண்டுகளாகச் சீயம் தன் ஆக்கிரமிப்பை மலாய ராஜ்யங்களின்மீது செலுத்தி வந்தது. கெடா, கிளந்தான், திரங்கானு இவை சீயத்துக்கு வெகு சமீபத்தில் இருக்கின்றன அல்லவா? ஆகையால், சீயம் இவற்றின் மீது தன் ஆதிக்கத்தை வெகு வலுவாக நிலை நாட்டிற்று.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சீயம் நல்ல அரசியல் வலிமையைப் பெற்றிருந்ததனால் மலாயாத் தீபகற்பம் முழுவதையும் கைப்பற்ற வேண்டுமென எண்ணங்கொண்டது. இந்தப் பேரவாவுக்குக் கெடா முதல் இரையாயிற்று. கி. பி. 1817ல் கெடாச் சுல்தானின் உதவியைக்கொண்டு பேராவைச் சீயம் கைப்பற்றிற்று. மேலும், கெடாச் சுல்தான் பிரிட்டிஷாருக்குப் பினாங்கையும், வெலஸ்லி மாகாணத்தையும் கொடுத்ததற்காகச் சீயங்காரர் பொறாமை கொண்டு, கி. பி. 1821ல் கெடாவைச் சூறையாடி, கிராமங்களைக் கொளுத்தி, ஆயிரக்கணக்கான குடிஜனங்களையும் வாளுக்கிரையாக்கினர்.

கெடாச் சுல்தான் பினாங்கையும் வெலஸ்லி மாகாணத்தையும் பிரிட்டிஷாருக்குக் குத்தகைக்குக் கொடுக்

கும் போது, அவர்கள் தன் ராஜ்யத்தைப் பாதுகாப்பார்கள் எனும் நோக்கங் கொண்டேதான் கொடுத்தான். ஆனால், இப்போது சீயம், நாம் மேலே கண்டபடி, கெடாவைக் கொள்ளையடித்தபோது பிரிட்டிஷார் எவ்வித உதவியும் செய்யவில்லை. இது பிரிட்டிஷ் இந்திய துரைத்தனத்தின் பிசகு எனலாம்.

இனி, கி. பி. 1824-1825ல் *சீயங்காரர் பேரா*, சிலாங்கூர் ஆகிய ராஜ்யங்களின்மீது படையெடுக்கத் தயார் செய்தனர். ஏற்கனவே, 1817ல் பேராச் சுல்தான் பிரிட்டிஷாரது பாதுகாப்பைக் கோரினான். இது கிடைக்கவில்லை. ஆயினும், இந்நாட்களிலிருந்த தொடுவாய் நாடுகளின் கவர்னரான புல்லர்ட்டன் (Fullerton) பிரிட்டிஷ் இந்திய துரைத்தனத்தின் கட்டளையை மீறி, பிரிட்டிஷார் பேராவையும் சிலாங்கூரையும் பாதுகாப்பதாகப் பேராச் சுல்தானுடன் கி. பி. 1826ல் ஓர் ஒப்பந்தம் செய்தார். (இவ்வொப்பந்தத்தின்படி பேராவிலுள்ள டிண்டிங்ஸ் மாகாணமும் பங்கோர் தீவும் (Dindings and Pulau Pangkor) பிரிட்டிஷாருக்கு உரிமையாயின. ஆயினும், கி. பி. 1934ல் இவை பேராவிற்கே திருப்பிக் கொடுக்கப்பட்டன.

இதுவுமன்றி, பேராவையோ, சிலாங்கூரையோ, சீயங்காரர் தாக்கினால், பிரிட்டிஷார் கண்டிப்பாகச் சீயத்துடன் போர் தொடர்வார்கள் எனவும் புல்லர்ட்டன் சீயத்து அரசாங்கத்தாருக்கு வீம்புச் செய்தி விடுத்தார். இதனால், சீயங்காரர் தாம் கொண்ட நோக்கத்தை நிறைவேற்றாமல் விட்டுவிட்டனர். இப்படியாக, புல்லர்ட்டன் பேராவையும் சிலாங்கூரையும் காப்பாற்றினார்.

அடுத்தபடியாக, சீனரால் உண்டான கலகங்களைப் பற்றிக் கவனிப்போம். கி. பி. 1830-ஆம் ஆண்டிற்குப் பின் சீனுவிலிருந்து சீனர்கள் ஈயமெடுப்பதன்பொருட்டுக் கூட்டங்கூட்டமாக மலாயா ராஜ்யங்களுக்கு வந்தார்கள். இவர்கள் லாரூட் (பேராவில்), குவாலாலம்பூர், கிள்ளான், சுங்கை உஜோங் (நகரிசெம்பிலானில்)முதலிய இடங்களில் குடியேறினர்கள். இவ்விடங்களில் இன்றைக்கும் ஈயம் அதிகம் கிடைக்கின்றதல்லவா? இவ்விதம் வந்த ஒவ்வொரு சீனக் கூட்டத்தாருக்கும் 'கபித்தான் சீனு' (Capitan China) என்னும் ஒரு தலைவனுண்டு. மலாயருக்கும் சீனருக்குமிடையே ஈயமெடுத்தல், விற்றல் இவற்றின்பொருட்டு அடிக்கடி சண்டைசச்சரவுகள் உண்டாயின. இதுவுமன்றி, சீனக் கூட்டத்தார் தத்தமக்குள்ளேயே அடிக்கடி சண்டையிடுவதுமுண்டு.

கி. பி. 1873ல் பேராவிலே இரண்டு சுல்தான்மார் இராச்சியத்தை ஆளுவதற்குப் போட்டி போட்டனர். சிலாங்கூரில் குடிகளுக்குள் இரு கட்சிகள் உண்டாகி ஒருவரோடொருவர் யுத்தம் புரிந்தனர். பாஹாங்கிலும் நகரி செம்பிலானிலும் இடையறு உள் நாட்டுச் சச்சரவுகள் நடந்தன. ஜொகூர், கெடா, கிளாந்தன், திரங்கானு ஆகிய ராஜ்யங்கள் மாத்திரந்தான் அமைதியாய் இருந்தன.

சிங்கப்பூர், பினுங்கு முதலிய துறைமுகங்களின் வர்த்தகம், பெரும்பாலும் தீபகற்பத்தின் உள் நாடுகளைப் பொறுத்ததல்லவா? இன்னும், நாட்டில் அமைதி இல்லாவிடில் நாடானது எந்தத் துறையிலாவது விருத்தி பெற முடியுமா? ஆகவே, மலாயாவின் உள் நாடுகளில் நடந்துகொண்டிருந்த கலகங்களும் சச்சரவு



அரசாங்கக் காரியாலயங்கள், கோலாலம்பூர்



கவர்னர் மாளிகை, சிங்கப்பூர்



புல்லர்ட்டன் கட்டடம், சிங்கப்பூர். (இதனுள் அரசாங்கக் காரியாலயங்கள் பல உள)

களும் தொடுவாய்ப் பகுதிகளின் வர்த்தகத்தைப் பாதித்தன. இதனால், கி. பி. 1873-ஆம் ஆண்டு, செப்டெம்பர் மாதம், லண்டன் கலோனியல் ஆபீஸிலிருந்து (Colonial Office, London) அப்போது சிங்கப்பூரில் கவர்னராய் இருந்த ஸர் ஆண்ட்ரு கிளார்க்கு (Sir Andrew Clarke) என்பவருக்குப் பின் வரும் செய்தி வந்தது:— "மலாயாவின் சுதேச ராஜ்யங்களுள் உலவி வரும் சச்சரவுகளும் கலகங்களும் நிறுத்தப்படாவிடின் அச்செழிப்பான நாடுகள் பாழடைந்து போவது திண்ணம். இதை நிவர்த்திக்க நீர் தேச மன்னர்களை உம் வசப்படுத்தி அவர்களுக்கு உதவி செய்ய *முயல்வீராக.* முடியுமான இடங்களில் அம்மன்னர்களுக்கு ஆலோசனை சொல்ல பிரிட்டிஷ் ரெஸிடெண்டுகளை (Residents) நியமித்தல் வேண்டும்." ஸர் ஆண்ட்ரு கிளார்க்கு அவர்கள் இக்கட்டளையை எத்துணை சாதுரியமாக நிறைவேற்றினரென்பதை அடுத்த பாடங்களில் கவனிப்போம்.

---

## 6. பேரா சமஸ்தானம்

ஸர் ஆண்ட்ரு கிளார்க்கு தம் கவனத்தை முதலாவதாகப் பேராமீது செலுத்தினர். மலாக்கா சுல்தான்மார் இச்சமஸ்தானத்தை ஆண்டிருந்தனர்; அவர்கள் காலத்திலிருந்தே அச்சையர், பூகிஸ்காரர், டச்சுக்காரர் ஆகியோரது தொல்லைகளுக்கு இந்த சமஸ்தானம் உட்பட்டிருந்தது. டச்சுக்காரர் லுமுட்டில் (Lumut) ஒரு சிறு கோட்டையும் கட்டியிருந்தனர்.

கி. பி. 1770 மட்டில் சுல்தான் ஸ்கந்தர் என்னும் வலிமையுள்ள ஓர் அரசர் பேராவை ஆண்டு வந்தார். இவர் காலத்தில் டச்சுக்காரருடன் பேரா மும்முரமாக

வியாபாரம் நடத்திற்று. இவரது ஆளுகையில் சமஸ் தானத்தின் பல பாகங்களிலும் அமைதி நிலவிற்று. அதனால் எங்கும் செழிப்புண்டாயிற்று. ஸ்கந்தர் செவ்வையான முறையில் அரசியலை அமைத்திருந்தார். ''சமஸ்தானத்தின் நான்கு பெரிய உத்தியோகஸ்தர் கள்'' இவரால் நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் (1) பண்டாஹறரா, (இவர் ராஜகுடும்பத்தைச் சேர்ந்தவ ராக இருக்க வேண்டும்). (2) †ஓராங் காயா புஸார்; (3) தெமங்கோங்; (4) மந்திரி. இவர்களுக்கு அடுத்த படியாக, எட்டுத் தலைவர்களும், பதினாறு உபதலைவர்க ளும் ஏற்படுத்தப்பட்டனர். இப்பதவிகள் அனைத்தும் இன்றைய பரியந்தம் பேராவில் இருந்து வருகின்றன‡. ஸ்கந்தரின் மரணத்திற்குப்பின் மலாய்த் தலைவர்கள் அனை வரும் தத்தம் இஷ்டப்படி நடக்க ஆரம்பித்தனர். அவ ருக்குப்பின் பட்டத்திற்கு வந்த சுல்தான்களும் பல வீனர்களாய் இருந்தார்கள். அரசியலில் எங்கும் குழப்பம் நடந்தது. பிரிட்டிஷார் சீயங்காரரது படையெடுப்பி லிருந்து பேராவைக் காப்பாற்றினார்களென்பது முன்பாடத் தில் படித்தோமல்லவா? ஆயினும், உள் நாட்டில் சமா தானம் உண்டாகும்படி அவர்கள் இதுவரையிலும் ஒன் றும் செய்யவில்லை. அக்குறையைத்தான் ஸர் ஆண்ட்ரு கிளார்க்கு நிவர்த்தித்தார்.

அஃது எப்படியென்றால், கி. பி. 1871ல் சுல் தான் அலி என்பவன் இறந்த போது ராஜா மூடா அப் துல்லா என்பவன் பட்டத்துக்கு உரியவனாயிருந்தான். ஆனால், இவனுடன் ராஜா யூசப்பு என்பவன் ஒரு பக்கத்

† பெரிய ஐசுவரியவான்

‡ இவ்வழக்குப் பழைய இந்து அரசாட்சி முறைப்படியாம்.

திலும், பண்டாஹரா இஸ்மயில் என்பவன் மற்றொரு பக்கத்திலும் தாம் தாம் பட்டத்துக்கு வரப் போட்டியிட்டனர். குடிகளில் ஒரு கட்சியார் பண்டாஹரா இஸ்மயில் என்பவனையே சுல்தானாக நியமித்தனர். சமஸ்தானத்துக்கு உண்மையாக உரிமையுள்ள அப்துல்லா இந்நாட்களில் சிங்கப்பூருக்குச் சென்று அங்கு ஸர் ஆண்ட்ரு கிளார்க்கைக் கண்டு தமக்குச் சம்பவித்த துரதிருஷ்டத்தைச் சொன்னார்; தாம் சுல்தானாக வந்தால் தமக்கு ஆலோசனை சொல்ல ஒரு பிரிட்டிஷ் ரெஸிடெண்டையும் (Resident) ஏற்றுக்கொள்வதாகவும் கூறினார்.

கவர்னர் இதற்குச் சம்மதித்தார். கி. பி. 1874-ஆம் வருஷம், ஜனவரி மாதம், 20-ஆந் தேதி பங்கோர் தீவில் (Pulau Pangkor) பேரா மலாயத் தலைவர்கள் எல்லோரையும் கூட்டிவைத்து, அப்துல்லாவைச் சுல்தானாகவும், சுல்தானுக்கு ஆலோசனை சொல்ல பிரிட்டிஷ் ரெஸிடெண்ட் ஒருவரையும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டினார். மேலும்பிரிட்டிஷ்ரெஸிடெண்டு மலாயர்களது சமய ஆசாரங்களிலும், வழக்கங்களிலும் எக்காரணத்தை முன்னிட்டும் தலையிட மாட்டார் என்றும் தெரிவித்தார். (Treaty of Pangkor).

ஜேம்ஸ் பேர்ச் (James Birch) என்பவர் முதலாவது ரெஸிடெண்டு ஆனார்: ஆற்றங்கரையிலுள்ள ஜில்லாக்கள் யாவற்றையும் பார்வையிடலானார். எங்கும் அடிமைத்தனம், நியாய நீதியின்மை, கொள்ளையடித்தல், தலைவர்கள் கொடுஞ்செயல்கள் ஆகியவற்றைக் கண்டார். இந்த ஈனங்களையும் இடர்களையும் போக்கிச் சீரான அரசியலைப் பேராவில் உண்டுபண்ணக் கருதினார். இக்கருத்தை நிறைவேற்றப் பணம் அவசியம். ஆனால், அது

கிடைக்கவில்லை. ஏனென்றால், அரசாங்க வரிகள் யாவும் சுல்தானும் தலைவர்களாலும் வசூலிக்கப்பட்டன. அப்பணத்தில் ஒரு பாகத்தையேனும் அவர்கள் அரசியல் நன்மைக்காகச் செலவிட எண்ணினர்களில்லை. திரு. பேர்ச்சு படிப்படியாகச் சீர்திருத்தங்களைச் செய்யாது, பரபரப்பாக அவற்றைச் செய்யத் துணிந்தார். ஒரு சமுதாயத்தின் பழக்கவழக்கங்களை ஒரே நாளில் மாற்ற முடியுமா? பேர்ச்சு, தலைவர்களைக் கொள்ளைக்காரரென மதித்து, தாம் திடமாக நின்றால் அவர்களது குறைபாடுகளை நீக்கி வழக்கங்களை மாற்றலாமெனக் கருதினர். எனவே, எல்லாக் கப்பங்களும் அரசாங்கத்தாலேயே வசூலிக்கப்படுமெனவும், அதற்கு மாருக நடந்துகொள்ளும் தலைவர்கள் யாவரும் தண்டிக்கப்படுவார்கள் எனவும் விதித்தார். இதுவுமல்லாமல், எஜமானர்களிடமிருந்து தம்மிடம் ஓடிவந்த அடிமைகளுக்கு அபயமும் கொடுத்தார். இக்காரணங்களினல் மலாயர்கள் யாவரும், பேர்ச்சு தங்கள் அதிகாரங்களை அபகரிக்க வந்திருக்கிருர் எனக் கருதினர்கள்; விரோதமும் பாராட்டத் தொடங்கினர்கள்.

சுல்தான் அப்துல்லா பேர்ச்சுக்கு எத்தகைய சகாயமும் செய்யவில்லை; தன் இன்பங்களுக்கு வேண்டிய பணம் மாத்திரம் போதிய அளவு கிடைத்தால் போதுமென இருந்து வந்தார்! அரசாங்கத்தைப் பற்றிய கவலையே அவருக்கு இல்லை. இன்னும் மலாயத் தலைவர்களுடன் தாமும் சேர்ந்துகொண்டு, பேர்ச்சு இட்ட கட்டளைகளை மீறி வந்தார். எனவே, ரெஸிடெண்டு இவ்விதமான சுல்தானுடன் தாம் எதுவுஞ் செய்துகொள்ள இடமிராதென உணர்ந்து, ராஜா யூஸப்பு (Raja Yusof) என்பவனைச் சுல்தானுக்க எண்ணங் கொண்டார். அப்துல்லா இதையறிந்து,

தாம் தம் முழு ராஜ்யத்தையும் பிரிட்டிஷாருக்கே கொடுத்துவிடுவதாகவும், தமக்குப் பிரிட்டிஷார் பிரதியுபகாரமாக யாதேனும் உபகாரச் சம்பளம் தரவேண்டுமெனவும் பேர்ச்சிற்குத் தெரிவித்தார். இதன் பிறகு அப்துல்லாவும் மலாயத் தலைவர்கள் யாவரும் ஓரிடத்தில் ஒன்றுகூடி எவ்விதத்திலாவது பேர்ச்சு அவர்களை ஒழித்துவிடவேண்டுமெனச் சதியாலோசனை செய்தனர். அப்துல்லா தம்சொந்தக் கிறிசையே மலாயத் தலைவன் ஒருவனிடம் கொடுத்து, பேர்ச்சு அவர்களை எப்படியாவது குத்திக் கொல்லும்படி ஏவினுர். ஒரு நாள் ஆற்றங்கரையோரத்திலுள்ள தமது குளிக்குமறைவில் பேர்ச்சு இருக்கும் போது அம் மலாய்த் தலைவன் அத்தாப்பு அடைப்புக்கூடாகக் கிறிசை நுழைத்து ஒரே குத்தில் பேர்ச்சைக் கொன்றுன். அவரது உடல் ஆற்றினுள்ளேயே விழுந்து பெருக்கோடு மறைந்தது. இது தெலுக்கான்ஸனுக்குச் சமீபத்திலுள்ள **பஸீர் ஸாலாக் (*Pasir Salak*)** என்னும் குக்கிராமத்தில் நடைபெற்றது.

இப்பாதகச் செயலினுல் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் பழிக்குப்பழி வாங்கினர். ஒரு சிறு யுத்தம் மலாயருக்கும் பிரிட்டிஷாருக்குமிடையே நடந்தது. கொலைக்காரனும் அவனைச் சேர்ந்த வேறொருவனும் தூக்கிலிடப்பட்டனர். சதியாலோசனைக்காரரெல்லோரும் கைதிகளாக்கப்பட்டனர். அப்துல்லாவும், அவரைச் சேர்ந்தவர்களும் நாடு கடத்தப்பட்டார்கள். ஏனையோர் மன்னிக்கப்பட்டார்கள். இப்போது ராஜா யூஸப்பு சுல்தாஞக்கப்பட்டார். இவர் காலத்திலிருந்து பேரா ராஜ்யத்தில் சீர்மையான அரசியல் நிலவி வந்துகொண்டிருக்கிறது. சுல்தான் யூஸப்பு மலாக்காவை ஆண்ட கடைசிச் சுல்தானின் வழித்தோன்றல்களுள் ஒருவர். இவர் பரம்பரைதான் இன்றும்

பேராவை அரசாண்டு வருகிறது. பேராவினது சரித்திரத்திலே ஸர் ஹியு லோ (Sir Hugh Low) என்பவருடைய பெயர் மிகவும் முக்கியமானது. திரு. பேர்ச்சு இறந்த பின்னர் திரு. டேவிட்ஸன் ரெஸிடெண்ட் ஆனார். இவர் கி. பி. 1877ல் ராஜிநாமா செய்யவே, ஸர் ஹியு லோ ரெஸிடெண்டு பதவியை ஏற்றார். இவரால் ஆரம்பிக்கப்பட்ட அரசியலினாலே பேரா சமஸ்தானத்தில் கலகங்கள் ஒழிந்து சமாதானம் உண்டாயிற்று; தரித்திரம் போய் ஐசுவரியம் நிலவியது: சஞ்சலம் பூரிப்புக்கு இடங் கொடுத்தது. ஹியு லோ மலாயத் தலைவர்களையோ குடி ஜனங்களையோ அவர்களது விருப்பங்களுக்கு மாறாக எதுவும் செய்யும்படி பலாத்காரப்படுத்தினாரில்லை. அனைவரிடத்திலும் அன்பு பாராட்டி அவர்களது தேவைகளை நிறைவேற்ற முயன்றார். வரி மூலம் அரசியலுக்கு வேண்டிய பணத்தைத் திரட்டினார். என்றாலும், தலைவர்களுக்குப் போதிய பாகத்தைக் கொடுத்து வந்தார். ஜனங்களைப் பயிர்த் தொழில் நடத்தும்படி தூண்டினார். ரஸ்தாக்களும் இருப்புப் பாதைகளும் அமைத்தார். இன்னும் பல நன்மைகள் பேராவின் அபிவிருத்திக்காகச் செய்தார். இந்த சமஸ்தானத்தின் இன்றைய சீர்மைக்கு ஸர் ஹியு லோதான் அஸ்திவாரம் போட்டவர். பிரிட்டிஷாரின் பாதுகாப்பில் இப்போது பேரா சமஸ்தானமானது அதிக செல்வமும் சிறப்பும் படைத்ததாய் இருக்கிறது.

# 7. சிலாங்கூர் சமஸ்தானம்

முதலிலே கிள்ளான் நதி தீரத்திலிருந்த சிலாங்கூர் சமஸ்தானம் 12-ஆம் நூற்றுண்டுவரை ஸ்ரீவிஜயாவாலும் 14-ஆம் நூற்றுண்டுமட்டில் மஜபாகிதர்களாலும் ஆளப் பட்டிருந்தது. பிறகு மலாக்காவின் சுல்தான்களால் ஆட்சி புரியப்பட்டது. அந்நாளில் அந்நியரும் சிலாங் கூருடன் வியாபாரஞ் செய்தனர். 18-ஆம் நூற்றுண்டில் பூகிஸ் ஜாதியார் இடையருது இவ்விராஜ்யத்தைச் சூறை யாடினர்கள். கி. பி. 1784 அளவில் பூகிஸ் ஜாதியாரின் தலைவனுன ராஜா ஹிஜி என்பவன் டச்சுக்காரரால் யுத்த மொன்றில் கொல்லப்பட்டான். அதன் பிறகு பூகிஸ் காரரது துடுக்கு அடங்கி, அவர்கள் சிலாங்கூரின் மேற் குக்கரை ஓரங்களில் அமைதியாக வாழத்தொடங்கினர். கி. பி. 1826-1858 வரை சுல்தான் முகம்மது என்னும் அரசன் ஒருவன் ஆளுகையில் மலாய்த் தலைவர் ஒவ் வொருவரும் தத்தம் இஷ்டப்படி நடந்து வந்தார்கள். எங்கும் சண்டையும், சச்சரவும், தொல்லையும், களவும் நடந்தன. இவ்விடர்களின் நிமித்தம் குடிகளுள் அநேகர் மலாக்காவுக்கு ஓடிப் போனர்கள். இன்னும், சீன ஈயச் சுரங்கக்காரரையும் மலாய்த் தலைவர்கள் பலவாறு கொடு மைப்படுத்தினர்கள். ஒரு முறை சீனர்கள் யாவரும் வெகுண்டு,இளவரசன் ஒருவனையும் கொன்று, அவனது வீட்டுக்குத் தீ மூட்டி, அவன் பெண்டு பிள்ளைகளையும் தீக்கிரையாக்கினர்கள். லுக்குட்டு (Lukut) என்னும் இடத்தில் மாத்திரந்தான் ஒழுங்கும் அமைதியுமிருந்தன. இங்கிருந்த ராஜா ஜுமாட்டு (Raja Jumaat) என்னும் தலைவன் திறமையும் சாதுரியமும் உள்ளவன். ஈயச் சுரங்கங்களிலிருந்து தனக்குக் கிடைக்கும் இறையைத் தாணுக்காரரை நியமிப்பதிலும், நல்ல ரஸ்தாக்கள் போடு

வதிலும், வாய்க்கால் வடிகால்கள் வெட்டுவதிலும், நல்ல வீடுகள் கட்டுவதிலும் செலவிட்டு வந்தான்.

ராஜா ஜுமாட்டு, கி. பி. 1864ல் இறந்தான். இவன் நாம் மேலே கண்ட சுல்தான் முகம்மதுவின் இறப்புக்குப் பின்னர் தனது சொந்தக்காரருள் ஒருவனுன அப்துல் ஸமாட் என்பவன் சிலாங்கூரின் சுல்தானுவதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்திருந்தான்.

அப்துல் ஸமாட் தனது இளமையில் தீரமுடையவன். ஆனல், சுல்தானுன பின் தன் கடைமைகளை அசட்டை செய்தான். தலைவர்கள் தங்களது இஷ்டப்படி நடக்க அவர்களுக்கு இடங்கொடுத்தான். ஒரு தலைவனேடு மற்ருருவன் சண்டையிடும்படியும் ஏவிவிடும் குணமுடையவனுய் இருந்தான். அவ்வளவு அவலக்ஷணத் தன்மையுள்ள அரசனுடைய ஆளுகையில் எங்கும் களவும் கொலையும் சச்சரவும் இருப்பது இயல்பே.

சுல்தான் அப்துல் ஸமாட்டின் ஆளுகையில் ஏழு வருஷகாலமாக நீண்டதோர் உள்நாட்டுச் சண்டை நடந்தது. இஃது எப்படி உண்டாயிற்றென்ருல், கி. பி. 1867ல் சுல்தான் அப்துல் ஸமாட் தன் மகளைத் துங்கு குடின் (Tengku Kudin) என்னும் கெடா இளவரசனுக்குக் கலியாணம் முடித்து வைத்தான். தன் ராஜ்யத்தையும் துங்கு குடின் முதலிலே ஐரோப்பியருக்குள் ஜீவித்தானுகையால் அவர்களது நேர்மையான நடத்தைகளைக் கிரகித்திருந்தான். எனவே, இப்போது சிலாங்கூர் சமஸ்தானத்தின் அலங்கோலமான நிலையைக் கண்டு அரசியலை நல்ல முறையில் திருத்தி அமைக்க முற்பட்டான். ஆனல், சுல்தான் அப்துல் ஸமாட்டின் மக்கள் அவனைப்



கோலாலம்பூர் ரயில்வே ஸ்டேஷனின் உள் தோற்றம்



கோலாலம்பூர் பத்து மலை உள் தோற்றம்



கோலாலம்பூர் ரயில்வே ஸ்டேஷன் (வெளித்தோற்றம்)

பார்த்துப் பொறுமை கொண்டார்கள்! பூகிஸ் தலைவர்களும் அவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்க மறுத்தார்கள்.

அங்கு குடினது விரோதிகளுக்குள் ராஜா மஹ்டி (Raja Mahdi) என்பவன் முக்கியமானவன். இவன் ஒரு பெரிய போர் வீரன். ராஜா மஹ்டி கிள்ளானை முதலில் பிடித்தான். ஆனால், குடின் அவனுடன் போர் புரிந்து அவனைத் துரத்திவிட்டு கிள்ளானைத் தனது ராஜதானியாக்கிக்கொண்டான். இப்படி இரு கட்சிகள் உண்டாயின. மலாய்த் தலைவர்களுள் பெரும்பாலோர் ராஜா மஹ்டியின் பக்கத்தைச் சேர்ந்தார்கள். குடினுக்கு உதவியாய் இருந்தவர் சுமார் 400 பேர்தான். கி. பி. 1872 வரையில் இரு கட்சியாருக்கும் இடையறுச் சண்டை நடக்கலாயிற்று. இரு பக்கத்திற்கும் வெற்றியும் தோல்வியும் மாறி மாறி ஏற்பட்டுக்கொண்டிருந்தன. பிரஸ்தாப வருஷத்தில் ராஜா மஹ்டியின் கூட்டத்தார் **கோலா சிலாங்கூர், கோலாலம்பூர்** ஆகிய இடங்களைக் கைப்பற்றியதுமன்றி, அவ்விடங்களில் இருந்த சேனைகளையும் கொலை செய்தார்கள். கிள்ளான் மாத்திரமே குடினின் கையிலிருந்தது. இதற்கு இடையில் ராஜா மஹ்டி பாஹாங் சமஸ்தானத்தின் பண்டாஹரா அஹ்மத் என்பவனோடு பொருதிக்கொண்டான். இதனால் பண்டாஹரா அஹ்மத் என்பவன் துங்கு குடினுக்கு உதவியாகப் பலமுள்ள ஒரு சைனியத்தைத் திரட்டியனுப்பினான். அதன் துணையைக் கொண்டு கி. பி. 1874-ஆம் ஆண்டு மட்டில் குடின் தன் விரோதிகள் யாவரையும் தொலைத்தான்.

இதுகாறும் சிலாங்கூர் சமஸ்தானத்தில் சமாதானம் உண்டுபண்ண பிரிட்டிஷார் முன் வரவில்லை. கி. பி. 1873-ஆம் வருஷம் நவம்பர் மாதம் மலாக்காவின் தோணி

யொன்றைச் சுல்தான் அப்துல் ஸமாட்டின் மக்களுள் ஒருவனும் அவனது கூட்டத்தாரும் கூடிக் கொள்ளை யடித்தனர். இன்னும், தோணியிலுள்ள யாவரும் கொலை யுண்டனர். இவ்விதமான கடற்கொள்ளைகள் பற்பல நடந்து வந்தன. ஆகவே, சிங்கப்பூர் கவர்னரான ஸர் ஆண்ட்ரு கிளார்க்கு, கொள்ளைக்காரர் எல்லோரையும் கைது செய்யும்படி சுல்தானுக்குச் செய்தியனுப்பினர். சுல்தானும் அவர்களைத்தண்டிப்பதற்கு உடன்பட்டான். தனது கிறிசைக்கொண்டே அவர்களைப் பழிக்குப் பழி வாங்கும்படி சுல்தான் கட்டளையிட்டான். இதன் பிறகு சுல்தான் துங்கு குடின், மலாயத் தலைவர்கள் ஆகிய யாவரும் ஒருபிரிட்டிஷ் ரெஸிடெண்டைச் சிலாங்கூருக்கு அனுப்பி வைக்கும்படி கவர்னரைக் கேட்டுக்கொண்டார் கள். அதன் பயனுக, பிராங் ஸ்வெட்டன்ஹாம் (Frank Swettenham) என்பவர் முதலாவது ரெஸிடெண்டாகக் கி. பி. 1874ல் சிலாங்கூருக்கு அனுப்பப்பட்டார். இவர் எல்லோரது உள்ளத்தையும் கவரும் தன்மை வாய்ந்தவர்; நல்ல புத்தி சாதுரியமும் உள்ளவர். இக்காரணங்களால் சுல்தானும் குடிகளும் ஸ்வெட்டன்ஹாமை மனமார வாழ்த்தினர்,

---

## 8. நகரி செம்பிலான் சமஸ்தானம்

பதினன்காம் நூற்ருண்டில் இச்சமஸ்தானத்தின் சில பாகங்களை மஜபாஹிதர்கள் ஆண்டார்கள். மலாக்காச் சுல்தான்கள் காலத்திலே இந்நாடு அவர் களிற் சிலரால் ஆளப்பெற்றது. போர்ச்சுகீஸியர் மலாக் காவைப் பிடித்த பின்பு மலாக்காச் சுல்தான்களின் வம்

சத்தில் வந்த ஜொகூர் சுல்தான்மார் இதைக் கொஞ்ச காலம் ஆண்டார்கள். பிறகு சுமத்திராவிலிருந்து மினங் கபோ மக்கள் (Menang-Kabau) என்னுமொரு கூட்டத்தார் படிப்படியாக இவ்விடம் வந்து குடியேறினார்கள். கி. பி. 1773 வரையில் இக்கூட்டத்தார் ஏராளமாக நணிங் (Naning) என்னுமிடத்தில் வசித்து வந்தார்கள்; ரெம்பௌ (Rembau)விலும் பரவினார்கள். இவ்விடங்களிலிருந்து ஸ்ரீமெனாந்தி, இனாஸ், சுங்கை உஜோங், ஜெலுபு முதலிய உட்பிரதேசங்களுக்குச் சென்றார்கள்.

மினங் கபோ ஜாதியார் சாந்தமானவர்கள். இவர்கள் தங்களைச் சிவபெருமானது குடிகளெனக் கொள்வர். விவசாயமே இவர்களது முக்கியத் தொழில். மற்றைய மலாயர்களைவிட இவர்களது பழக்க வழக்கங்கள் வேறானவை. மினங் கபோ மக்களது கிராமக் குடிகள் கூட்டம் கூட்டமாக வகுக்கப்பட்டிருப்பார்கள். ஒவ்வொரு கூட்டமும் ஒரு பெரிய குடும்பத்தைப் போன்றது. அக்கூட்டத்திலுள்ள ஒவ்வொருவரும் தம் பரம்பரையைத் தமது தாயின் வழி மூலமாகக் கண்டு பிடிப்பார்கள். மினங் கபோ ஜாதியாரின் வழக்கப்படி ஓர் ஆடவன் தன் சொந்தக் கூட்டத்தைச் சேர்ந்த நங்கை ஒருத்தியை மணக்கக்கூடாது; பிறிதொரு கூட்டத்திலுள்ளவளை மணம் புரியலாம். தாய்தான் குடும்பத்திற்குத் தலைவி; தகப்பனல்லன். சொத்து யாவும் தாயின் பெயரிலேயே இருக்கும்; அவளுக்குப் பின்னால் அவளது பெண் மகவுகளே சொத்துக்கு உரியவர்களாவார்கள். ஒரு கூட்டத்தார் ஜீவிக்கும் காணி அக்கூட்டத்தாருக்கே சாஸ்வதமாக உரியது; அது மற்றைய கூட்டத்தாருக்கு எக்காரணத்தை முன்னிட்டும் விற்கப்படவோ, மாற்றிவிடப்படவோ மாட்டாது. மற்றைய மலாயர்கள் குற்றவாளிகளைக் கொடூர

மாகத் தண்டிப்பது போல மினுங் கபோ கூட்டத்தார் செய்வதில்லை. இருவர்களுக்குள்ளே மனஸ்தாபமோ சண்டையோ ஏற்பட்டுவிட்டால், கூட்டத்தின் தலைவர்கள் வெகு பிரயாசைப்பட்டு இருவரையும் சமாதானப் படுத்திவிடுவார்கள். ஒருவன் மற்றொருவனுக்கு இரத்தக் காயம் உண்டு பண்ணி அதினின்று சொற்ப இரத்தம் சிந்தியதானால் காயப்படுத்தினவன் ஒரு கோழியைக் காயப்பட்டவனுக்குக் கொடுப்பான்: அதிக இரத்தம் சொரியப் பட்டதானால், ஒரு வெள்ளாட்டைக் கொடுப்பான். இதன் பிறகு காயப்படுத்தினவன், அஃதாவது, குற்றவாளி தான் கொடுத்த வெள்ளாட்டிலிருந்து கொஞ்சம் இரத்தத்தை ஓர் ஏனத்திலெடுத்து, அஃதுடன் ஒரு பிடி நெல், மூன்று எலுமிச்சம்பழம் ஆகியவற்றைக் கொண்டு காயமடைந்தவனின் சிரசில் தேய்ப்பான். இரு பகுதியாருள்ளும் நேசம் புதுப்பிக்கப்படும். இன்னும், ஒருவன் வேறொருவனைக் கொலை செய்துவிட்டால், கொலையுண்டவனுக்குப் பதிலாகக் கொலை செய்தவன் தன் கூட்டத்தாருள் ஒருவனைக் கொலையுண்டவன் கூட்டத்தாருக்குக் கொடுக்க வேண்டும். கொலையுண்டவனும் கொலை செய்தவனும் ஒரே கூட்டத்தாரென்றால், கொலை செய்தவன் மாண்டவனின் சுற்றத்தாருக்கு ஓர் எருமையும், ஐம்பது பறை நெல்லும் கொடுக்க வேண்டும்.

ஒவ்வொரு மினுங் கபோ கூட்டத்துள்ளும் சில காரியக்காரர்கள் இருப்பார்கள். அவர்கள் தங்கள் தங்கள் கூட்டத்தின் வழக்கங்கள் அழிந்து போகாமல் காத்து வருவார்கள். ஒவ்வொரு கூட்டத்துள்ளும் பல பல குடும்பங்களிருக்குமல்லவா? இக்குடும்பங்களிலுள்ள வயது முதிர்ந்த தாத்தாமார்தான் மத்தியஸ்தர்

களாக இருந்து குடும்பங்களுக்குள்ளே ஏற்படும் எல்லாச் சண்டை சச்சரவுகளையும் வழக்குத் தீர்ப்பார்கள். தாத் தாமாருக்கு மேலாகக் கூட்டத்தின் தலைவன் இருப்பான். இவன் கலியாண அலுவல்களையும், விழாக்காரியங்களையும் கவனித்து வருவான். கூட்டத்தாரின் சொத்து யாவும் இவனது கண்காணிப்பிலேயே இருக்கும். யாதாமொரு விதத்தில் தலைவன் கூட்டத்தாருக்கு அவமதிப்பை உண்டு பண்ணினாலோ, அல்லது விருத்தாப்பியத்தை அடைந் தாலோ, கூட்டத்தார் அவனது இடத்தில் வேறொருவனை நியமிப்பார்கள்.

வெகு காலமாக மினங் கபோ ஜாதியார் மலாக்கா சுல்தான்களின் பாதுகாப்பில் இருந்து வந்தார்கள். மலாய மலாக்கா மறைந்த பின் ஜொகூர் சுல்தான்களின் ஆதரவி லிருந்தார்கள். 18-ஆம் நூற்றாண்டில் கிள்ளான், லிங்கி ஆகிய இடங்களிலிருந்த பூகிஸ்காரரால் மினங் கபோ ஜாதியார் பல இன்னல்களுக்கு ஆளானார்கள். அக்காலை யில் அவர்களைப் பாதுகாக்கக் கூடிய சுல்தான் ஜொகூ ரில் இருந்தானில்லை. எனவே, அவர்கள் தங்களது வமி சத்தில் ஒருவரைத் தங்களின் பாதுகாவலராக்கக் கருதி, கி. பி. 1773ல் ராஜா மெலிவர் (Raja Melewar) என்னும் ஓர் அரசகுமாரனைச் சுமத்திராவிலிருந்து வர வழைத்தார்கள். எல்லாத் தலைவரும் குடிகளும் ஏகமன தாக இவ்வரச குமாரனை 'யாம் துவான்' (Yam Tuan) என்னும் பட்டத்துடன் நகரிஸெம்பிலான் சமஸ்தானத் தின் மன்னனாக நியமித்தார்கள்.

ஆயினும், ராஜா மெலிவரும் அவனது சந்தானங் களும் பேரா, சிலாங்கூர் ஆகிய சமஸ்தானங்களின் சுல் தான்களைப் போன்றிருக்கவில்லை : அந்நாடுகளின் அரச ருக்குள்ளே அதிகாரத்துவங்கள் மினங் கபோ அரசர்களுக்

கில்லை. இந்நாட்களைப்போல அக்காலத்தேயும் ஸ்ரீ மெனுந்திதான் இராஜதானியாய் இருந்தது. அங்குள்ள சுல்தான் மாளிகைக்குப் பின்னால் ஸ்ரீ இந்திரனுக்குப் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஒரு குன்று இன்றுமிருக்கிறது.

19-ஆம் நூற்றுண்டு மட்டில் நகரிஸெம்பிலான் சமஸ்தானத்தில் ஒற்றுமை குன்றத் தொடங்கிற்று. பல தலைவர்களுக்குள்ளே யாம் துவானும் ஒரு தலைவனுயிருந்தான். இதனால், ஒவ்வொரு தலைவனும் தனக்குத் தானே யாம் துவான் பட்டத்தைப் பெற விரும்பினன். கி. பி. 1830ல் அப்பட்டத்தைப் பெறுவதற்காக ஐந்து தலைவர்கள் போட்டி இட்டனர். இதுவுமன்றி, சீன ஈயச் சுரங்கக்காரருக்கும், மினங் கபோ தலைவர்களுக்கும் வரி வசூல் விஷயத்தில் அடிக்கடி சண்டை சச்சரவுகள் உண்டாயின. சுங்கை உஜோங் ஜில்லாவில் சுமார் பத்தாயிரம் சீன ஈயச் சுரங்கக்காரர் இருந்து வந்தார்கள். பல போலித் தலைவர்கள் தோன்றி இவர்களிடமிருந்து அநியாய முறையில் வரி வசூலிக்கத் தொடங்கினுர்கள். இதன்பொருட்டுச் சுங்கை உஜோங் ஜில்லாவின் ஈய வியாபாரம் தடைப்பட்டதுமன்றி, பல கலகங்களும் உண்டாயின. எனவே, ஜில்லாவின் தலைவராய் இருந்த *டத்தோ கிளாஞு புத்ரா என்பவர் இக்கலகங்களை அடக்க எண்ணி, கி. பி. 1874ல் பிரிட்டிஷ் அரசாங்கத்தாரின் உதவியை நாடினுர். இதை டத்தோ கிளாஞுவின் பெரு விரோதியாய் இருந்த டத்தோ பாண்டூார் என்னும் தலைவன் அறியலானுன். உடனே சிலாங்கூரிலிருந்த பூகிஸ் கலகக்காரரைத் தன் பக்கம் சேர்த்துக்கொண்டு டத்தோ கிளாஞுவுடன் சண்டை தொடர்ந்

*டத்தோ பாட்டன் ; மலாயத் தலைவர்களின் பட்டப் பெயர்

தான். கிளானுவின் மலாய சைனியம் ஓட்டம் பிடித்தது. நாடெங்கும் கலகக்காரரது பெயரைக் கேட்டு நடுநடுங் கிற்று. பிரிட்டிஷார் டத்தோ கிளானுவுக்கு உதவியாக ஒரு சிறு சேனையை அனுப்பினார்கள். இச்சேனை டத்தோ பண்டாரையும், அவனைச் சேர்ந்த கலகக்காரரையும் நாட் டைவிட்டு ஓட்டிற்று.

மேலே கூறிய சுங்கை உஜோங் ஜில்லாவைத் தவிர்த்து ஏனைய ஜில்லாக்கள் பிரிட்டிஷாரது உதவியைப் பெற முதலில் பிரியங்கொள்ளவில்லை. ஆயினும், அவற் றின்கண் நிகழ்ந்த இடையறாச் சச்சரவுகளினாலே அவை ஒவ்வொன்றாக பிரிட்டிஷாரது சம்ரக்ஷணையை நாடின. கி. பி. 1895ல் எல்லா ஜில்லாக்களும் பிரிட்டிஷாரது பாதுகாப்பில் வந்தன. இதிலிருந்து ஒரே யாம் துவான் நகரி ஸெம்பிலான் சமஸ்தானத்துக்கு அரசரானார். மற் றைய தலைவர்களெல்லோரும் மந்திரி சபையில் பிரதிநிதிக ளானார்கள். இங்ஙனம் சமாதானமும் ஒற்றுமையும் சமஸ் தானத்தில் உண்டாயின.

---

## 9. பாஹாங் சமஸ்தானம்

பாஹாங் ஒரு காலத்தில் ஸ்ரீ விஜயா ராஜ்யத்தால் ஆளப்பட்டது. அதன் பிறகு மஜபாஹித்தின் ஆக்கிர மிப்புக்குட்பட்டிருந்தது. இந்துக்கள் காலத்தில் பாஹாங் கின் தலை நகரம் இந்திரபுரம் என்று வழங்கப்பட்டது. சீன சரித்திரங்களின்படி 14-ஆம் நூற்றாண்டிலே சமஸ் கிருதப் பட்டத்தையுடைய ஓர் அரசன் இதை ஆண்டிருக் கிறான். பின்னால் இவ்விராஜ்யத்தை மலாக்காச் சுல்தான் மார் ஆண்டு வந்தார்கள். இவர்களுக்குப் பின் பாஹாங்

சமஸ்தானம் ஜொகூர் பண்டாஹராச் சுல்தான்மாரால் ஆட்சி புரியப்பட்டது.

பண்டாஹராச் சுல்தான்மாரின் ஆளுகையில் சதா கலகமும் கொலையும் பொதுவாக இருந்துவந்தனவென்றாலும், கி. பி. 1806—1856 வரை பண்டாஹரா அலியின் ஆளுகை சீர்மை உடையதாயிருந்தது எனலாம். ஏனென்றால், இவனிடத்தில் நற்குணம், தயாள சிந்தை, குடிகளின் சுகங்களைக் கருதுந் தன்மை ஆகியவை உண்டு. மேலும், தன் மலாய்த் தலைவர்களைச் சரியான முறையில் அடக்கி ஆண்டும், சிங்கப்பூருடன் நட்புப் பாராட்டியும் வந்தான். இக்காரணங்களினால் பாஹாங் சமஸ்தானத்தின் வியாபாரம் விருத்தியடைந்தது. ஆயிரக்கணக்கான ஜனங்கள் ஜெலையில் (Jelai) இருந்த பொன் சுரங்கங்களில் வேலை செய்தனர். குடிகளெல்லோரும் அலியின் ஆளுகையில் சந்தோஷமாகவும் செல்வச் சிறப்புடனும் இருந்தனர்.

அலியின் மரணத்திற்குப் பிறகு அவனது இரு குமாரர்களும் ஒருவரோடொருவர் சண்டையிட்டனர். மூத்தவனான துன்மத்தகீர் தகப்பனது இடத்தை வகித்தான். இளையவன் பெயர் அஹ்மது. தகப்பனது சாவீட்டிலேயே இருவரும் ஒருவரையொருவர் கிறிஸால் குத்திக்கொள்ள எண்ணியிருந்தார்கள்; சாவீட்டிற்கு வந்திருந்த மலாயத் தலைவர்கள்தான் இதை விலக்கினார்கள்.

அலி தனது மரணசாசனத்தில் குவாந்தனும், எண்டௌவும் (Kuantan & Endau) அஹ்மது என்பவனுக்குச் சேரவேண்டும் எனக் கண்டிருந்தான். துன்மத்தகீர் அவ்வாறு செய்ய மறுத்தான். அதனால், அஹ்மது திரங்கானுவுக்குச் சென்று, தமையனுடன் சண்டையிட ஆள் திரட்டினான்.

தமையன் தம்பிக்கிடையே ஆறு வருஷ காலமாகச் சண்டை நடந்தது. இரண்டு தடவை அஹ்மது தன் திரங்கானுப் பரிவாரத்துடன் பாஹாங் மீது பாய்ந்தான். அவன் திடகாத்திர நெஞ்சம் உடையவனென்றாலும் பாஹாங் தலைவர்களது உதவியில்லாமல் ஒன்றும் செய்து கொள்ள முடியவில்லை.

இவ்வாறு சண்டை நடந்துகொண்டிருக்கும்போது துன்மத்தகிர் வன் எம்பங் (Wan Embong) என்னும் மலாயத் தலைவனை எதிர்த்து அவனைக் கொன்றுவிட்டான். அத்துடன் அவனது குடிகளைக் கொடூரமாகத் தண்டித்து அவர்களில் பலரை அடிமைகளாக்கிப் பெக்கான் பட்டினத்துக்குக் கொண்டு வந்தான். இஃது இவ்வாறிருக்க, துன்மத்தகிர் கஞ்சா குடிப்பவன்; கோழை நெஞ்சன்; ஆகையால், யுத்த அலுவல்களையும், அரசியல் காரியங்களையும் தன் ஆண் மக்களது கையில் விட்டுவிட்டான். அவர்கள் தங்கள் இழிவுள்ள கொடூரமான நடத்தைகளாலும் செய்கைகளாலும் குடிகளது விரோதத்தைப் பெற்றனர். இக்காரணங்களினால் தலைவர்களும் குடிகளும் மத்தகிரையும் அவனது மக்களையும் மிக வெறுத்தனர். போதாக்குறைக்கு மாண்ட எம்பங் என்பவனது தகப்பனும் அஹ்மதுக்கு உதவி புரிவதாகச் சொல்லி அவனைப் பாஹாங்மீது படையெடுக்கும்படி ஏவினான்.

அஹ்மது இதுதான் தருணமென்று மறுபடியும் பாஹாங்மீது பாய்ந்தான். மத்தகிருக்கு ஜொகூர்ச் சுல்தானான அபுபக்கர் என்பவன் சைனியமும் யுத்தத் தளவாடங்களும் கொடுத்து உதவி செய்தான். பாஹாங்மீது தனது ஆதிக்கத்தை நிலை நாட்டும் நோக்கத்துடனேயே அபுபக்கர் இந்த உதவியைச் செய்தான். இருந்தும்,

பாஹாங் தலைவர்களும், குடிகளும் அஹ்மதுவையே விரும்பினார்கள். எனவே, இத்தடவை அவன் படையெடுத்து வந்த போது அவனுக்கே சகாயம் செய்தார்கள். நடந்த யுத்தத்தில் மத்தகீரும் அவனது கூட்டத்தாரும் முறியடிக்கப்பட்டு, இறந்தவர்கள் போக, பாக்கியிருந்தவர்கள் சிலாங்கூருக்கு ஓடினார்கள். பெக்கான் (Pekan) அஹ்மது கைக்கு வந்தது. இங்ஙனம் சிலாங்கூருக்கு ஓடியவர்கள் நாம் முன்னொரு பாடத்தில் படித்த ராஜா மஹ்டி என்பவனது உதவியைப் பெற்று, அங்கிருந்தபடி இடையிடையே கலகங்கள் செய்துகொண்டிருந்தார்கள். ஆயினும், கி. பி. 1874ல் அஹ்மது தன் ஆட்களை மலைகளைக் கடந்தும் கடல் மார்க்கமாகவும் சிலாங்கூருக்கு அனுப்பி ராஜா மஹ்டியையும் கலகக்காரர்களையும் முடிவு கட்டினான்.

இதன் பிறகு பாஹாங் சமஸ்தானத்துள் அமைதி உண்டாயிற்று. என்றாலும், முன் நடந்த சண்டையின் பயனாகக் குடிகள் பல இன்னல்களுக்குட்பட்டிருந்தனர். அனேக ஆண் மக்கள் சண்டையில் மடிந்தனர். அவர்களது நிலங்களும், பயிர் பச்சைகளும் சண்டைக்காரரால் பாழ்படுத்தப்பட்டன. ஆயிரக்கணக்கான ஜனங்கள் சண்டைக்கு அஞ்சி அயல் சமஸ்தானங்களுக்கு ஓடினார்கள். இக்காரணங்களினால் முன்பு நிரம்பிய குடியேற்றத்தையுடைய பாஹாங் சமஸ்தானத்தில் இப்போது குடிஜனங்கள் வெகு சொற்பமாயினர்.

அஹ்மது கி. பி. 1882ல் சுல்தானாயினான். ஆனால், அவன் மதியூகமுள்ளவனாகவோ, காருண்யமுள்ளவனாகவோ, இருக்கவில்லை. கைப்பணம் வாங்கிக்கொண்டு வரி வசூலிக்கும் தொழிலைப் பெக்கானிலிருந்த சீனர் கையில் விட்டான். அவர்கள் தங்கள்

இஷ்டப்படி குடிகளிடமிருந்து மிதமிஞ்சி வரி வசூலித்தனர். இன்னும் சுல்தான் அஹ்மது தன் எண்ணப்படி ஈயச் சுரங்கங்களிருக்கும் நிலங்களைச் சிங்கப்பூரிலுள்ள வியாபாரிகளுக்கு விற்று வந்தான். இக்காரணங்களினுல் குடிகள் மாத்திரமன்றி, மலாயர், சீனர் ஆகிய இரு ஜாதி ஈயச் சுரங்கக்காரர்களும் கோபம் கொண்டனர். அஹ்மது இவர்களது மறுப்புக்களையும் கவனிக்கவில்லை.

ஈயச் சுரங்க நிலங்களை வாங்கிய சிங்கப்பூர் வியாபாரிகள் பிரிட்டிஷ் குடிகளல்லவா? எனவே, சுல்தான் அஹ்மது தன் ஏறுமாருன செய்கைகளை மாற்ருது போனுல் பாஹாங்கில் கலகமேற்படுவது நிச்சயம் என அறிந்தனர். இதைத் தடை செய்யும்பொருட்டு அவர்கள் ஒரு பிரிட்டிஷ் பிரதிநிதியை (British Agent) பெக்கானுக்கு அனுப்பினுர்கள், ஹியூ கிளிபோர்டு (Hugh Clifford) என்பவர் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார். ஆயினும், உள்நாட்டு அரசியல் விஷயங்களில் அவர் ஒன்றும் செய்துகொள்ள முடியவில்லை. எங்கும் ஆக்கினையும் அநியாயமும் நடந்து வந்தன. மலாயாத் தலைவர்கள் யாவரும் ஒன்று கூடிச் சுல்தானுடன் சண்டை தொடரத் தயாரித்தனர். பஞ்சமும் உண்டாயிற்று, மலாயருக்கும் சீனருக்குமிடையே பகை உண்டாயிற்று. ஒரு முறை சில மலாயர் சேர்ந்து ஒரு சீன-பிரிட்டிஷ் பிரஜையைச் சுல்தானது அரண்மனையினுள்ளேயே குத்திக் கொலை செய்தனர். இவ்விதமாக பாஹாங் சமஸ்தானத்துக்கு ஏற்பட்டிருந்த அலங்கோலங்களைத் தடுக்கும்பொருட்டுக் கி. பி. 1888ல் சுல்தான் அஹ்மது பிரிட்டிஷ் ரெஸிடெண்டு ஒருவரை ஏற்றுக்கொள்ளச், சம்மதித்தான். என்ருலும், சுல்தானுக்கு இது அந்தரங்கத்தில் பிரிய

யில்லையாகையால், அரசியலைத் தன் மகன் முகம்மது வசம் ஒப்படைத்துவிட்டு, தான் உபகாரச் சம்பளம் பெற்று ஜீவிக்கலானான்.

பிரிட்டிஷாரது சம்ரக்ஷணையில் நீதியான முறைப்படி இறை வசூலிக்கப்படலாயிற்று. நீதி மன்றங்கள் நிறுவப் பட்டன. அடிமையும், கட்டாய வேலையும் ஒழிந்தன. வரி இப்போது அரசாங்கத்தாரால் வசூலிக்கப்பட்ட மையால், மலாயாத் தலைவர்களுக்குப் படிச் சம்பளங்கள் கொடுக்கப்பட்டன. ஆயினும், தலைவர்களது பேரவா தணிந்தபாடில்லை. கி. பி. 1891 மட்டில் பஹ்மன் என்னுமொரு மலாயத் தலைவன் கலகம் உண்டுபண்ணினான். இவன் சுல்தான் அஹ்மதுவின் உதவியாளருள் ஒருவன். அரசாங்கத்தாரின் சட்டங்களை மீறினதுமன்றி, இவனும் இவனைச் சேர்ந்தவர்களும் தானைக்காரரைத் தாக்கியும், பட்டணங்களையும் கிராமங்களையும் கொள்ளையடித்தும் வந்தார்கள். ஒரு முறை ஒரு சிறிய பிரிட்டிஷ் சீக்கியப் பட்டாளத்தை இவர்கள் தாக்கி, சீக்கியருள் ஒருவனைத் தவிர மற்றவர்கள் யாவரையும் கொன்றுவிட்டார்கள். பிழைத்தவன் தைரியத்துடன் ஒரு படகு மூலமாகப் பெக்கானையடைந்து, நடந்ததை அரசாங்கத்தாரிடம் தெரிவித்தான். பஹ்மனையும் அவனைச் சேர்ந்தவர்களையும் பாஹாங்கை விட்டு விரட்ட ஒரு சைனியம் அனுப்பப்பட்டது. பஹ்மனுக்கு முதலில் உதவி செய்தவர்களும் இப்போது சண்டையால் இளைத்திருந்தபடியால்,அவனுக்குச் சகாயம் செய்யவில்லை. பிரிட்டிஷார் சமாதானத்துக்கு உடன்படுகிறவர்களை மன்னிப்பதாகச் செய்திவிடுத்திருந்தார்கள். எனவே, பஹ்மன் திக்கற்றவனாகி விரட்டப்பட்டுத் திரங்கானுவுக்கு ஓடினான். அங்குச் சீயங்காரரிடம் தஞ்சம் புகுந்தான். இதுடன் பாஹாங் சமஸ்தானத்துள் கலகங்கள் ஒழிந்து அமைதி நிலவுதலாயிற்று.

ஐக்கிய மலாய் நாடுகள் :

கி. பி. 1895ல் பேரா, சிலாங்கூர், நகரி ஸெம்பி லான், பாஹாங் ஆகிய நான்கு சமஸ்தானங்களும் ஒன்ருக இணைக்கப்பெற்று ஐக்கியமலாய் நாடுகள் (Federated Malay States) எனப் பெயர் பெற்றன. நான்கு சமஸ்தானங்களும் பிரிட்டிஷாரது பாதுகாப்பிலும், பிரிட்டிஷ் ரெஸிடெண்டுமார்களின் மேற்பார்வையிலும் இருந்தமையால், சுலபமாக அரசியல் விவகாரங்களை நடத்தும் பொருட்டே அவை ஒன்ருக இணைக்கப்பெற்றன. இதன் பயனுக ஒவ்வொரு சமஸ்தானத்துக்கும் தனித்தனி சட்ட திட்டங்கள், ரஸ்தா, புகை வண்டிப்பாதை முதலியன அமைக்கும் தனித்தனி முறைமைகள் இன்னன பிறவும் இல்லாமல், நான்கு சமஸ்தானங்களுக்கும் ஒரே விதமான சட்ட திட்டங்கள், ஒரே மாதிரியான ரஸ்தா, புகை வண்டிப் பாதை, காரியாலய நிர்வாகம் முதலியன அமைக்கும் முறைகள் ஏற்படுத்தப்பட்டன. இவ்வாறு நான்கு சமஸ்தானங்களுக்குமிடையே பரஸ்பர சம்பந்தம் உண்டாக்கப்பட்டது. ஒவ்வொரு சமஸ்தானத்துக்கும் தனித்தனி ராஜதானி இருந்தபோதிலும் குவாலாலம்பூர் ஐக்கிய ராஜதானி (Federal Capital) ஆக்கப்பட்டது. நான்கு ரெஸிடெண்டுகளுக்கும் மேலான அதிகாரியொருவர் 'ரெஸிடெண்டு ஜெனரல்' என்னும் பட்டத்துடன் குவாலாலம்பூரில் நியமிக்கப்பட்டார். முதலாவது ரெஸிடெண்டு ஜெனரலாய் இருந்தவர் ஸர் பிராங் ஸ்வெட்டன் ஹாம் (Sir Frank Swettenham). இவரைப்பற்றிமுன்பு படித்திருக்கிருேம். பிறகு, இவ்வுத்தியோகஸ்தர் ஐக்கிய சமஸ்தானங்களின் காரியதரிசி (Federal Secretary) எனச் சொல்லப்பட்டார். தொடுவாய்ப் பகுதிகளின் கவர்னர் ஐக்கிய மலாய் நாடுகளின் உயர்தர அதிகாரி

யாக்கப்பட்டார் (High Commissioner of the Federated Malay States).

---

# 10. ஜொகூர் சமஸ்தானம்

ஜொகூர் சமஸ்தானத்தைப் பற்றி முன் பாடங்களில் படித்திருக்கிறோம். கி. பி. 1819ல் ரபிள்ஸ் ஹுசேன் என்பவனை ஜொகூரில் சுல்தானாக நியமித்தார் அல்லவா? இவன் எவ்வித சாமர்த்தியமும் அற்றவனாகவும், பெருஞ் செலவாளியாகவும், தூங்கி விழுபவனாகவும் இருந்தான். கி. பி. 1835ல் இவன் இறந்த பின்னர், ஜொகூர் தெமங்கோங் வமிசத்தாருக்கும் ஹுசேனின் மகனான அலி என்பவனுக்கும் பட்ட உரிமையைப் பற்றிப் பெரு விவாதங்கள் நடந்தன. அப்போது அலி சிறு பையனாய் இருந்தான். அக்காலையிலிருந்த தெமங்கோங் இப்ரஹிம் என்பவர் வெகு சமார்த்தியமும், நல்ல தன்மையும் உள்ள வர். பிரிட்டிஷாருக்கும் இப்ரஹிம் ஜொகூரின் சுல் தானானால் நாட்டுக்கு நன்மையுண்டாகும் என்று தோன் றிற்று. எனவே, அலி பருவமடைந்த பின்னர், கி. பி. 1855ல் பிரிட்டிஷார் அவனுக்கு உபகாரச் சம்பளமும், மூவார், கீசாங் என்ற நதிகளுக்கிடையேயுள்ள ஒரு ஜில்லா வையும் அளித்துவிட்டு, இப்ரஹிமை ஜொகூரின் சுல் தானாக அங்கீகரித்தார்கள். இப்ரஹிம் இறந்த பின்னர் அவரது மகன் அபுபக்கர் சுல்தானானான்.

அலி தன் தகப்பனாரைப் போலவே வெற்று மனிதனா னான். தன் ஜில்லாக் காரியங்களில் அவனுக்குக் கொஞ்ச மும் அக்கறையே இல்லை. இறை வசூலிப்

பதையும் கைக்கூலி வாங்கிக்கொண்டு ஒரு பூகிஸ்காரன் கையில் விட்டான். இதன்பொருட்டு ஜில்லாவுக்குள் கலகங்கள் உண்டாயின. இதுவுமன்றி, ஒரு தமிழனிட மிருந்து பணம் கடன் வாங்கிக்கொண்டு, தன் ஜில்லாவை ஈடு வைத்தான். இக்காரணங்களால் மூவார்க்குடிகள் அலியைப் பூராவாக வெறுத்தனர். ஆகவே, கி.பி. 1877ல் அலி இறந்தவுடன் அவர்கள் சுல்தான் அபுபக்கரைத் தங்களது மன்னனுக்கினுர்கள். இன்றைய பரியந்தம் ஜொகூர் அரசாங்கம் சுல்தான் அலியின் வம்சத்தாருக்கு உபகாரச் சம்பளம் கொடுத்து வருகிறது.

தெமங்கோங் ஆன இப்ரஹிம் சுல்தாஞய் வந்த காலந்தொட்டு ஜொகூர் சமஸ்தானம் பல துறைகளிலும் விருத்தியடைந்து, சீரும் செல்வமும் பெறத் தொடங் கிற்று. நாம் மேலே கண்டபடி, இப்ரஹிமிக்குப் பின் பட்டத்துக்கு வந்த அவரது மகன் சுல்தான் அபுபக்கர் ஐரோப்பாவுக்குப் பல தடவை சென்ருர். அதன் பயனுக நாட்டின் முன்னேற்றத்திற்குரிய பல நவீன முறைகளை அரசியல் விஷயங்களில் கையாண்டார். இன்னும், சீன விவசாயிகளுக்கு ஜொகூரில் குடியேற இடங் கொடுத்து மிளகு, கத்தைக் காம்பு, வாசனைத் திரவியப் பொருள்கள் ஆகியவற்றைப் பயிரிடும்படி தூண்டினுர். அபுபக்கர் விக்டோரியா மகாராணியின் பெரிய நண்பர். கி. பி. 1889 மட்டும் சிங்கப்பூரானது ஜொகூர் அரச குடும்பத் தின் உறைவிடமாய் இருந்தது. இக்காரணங்களால் ஜொகூர் அரச குடும்பத்திற்கும் பிரிட்டிஷாருக்கும் பெரிய நட்புறவு உண்டாயிற்று.

1895ல் அபுபக்கர் இறந்த பின் இப்போதைய சுல் தான் இப்ரஹிம் பட்டத்துக்கு வந்தார். இவரும் தம் தந்தை

அபுபக்கரைப் போலத் திறமையுள்ள அரசர். இவரது ஆளுகையிலேதான் சிறந்த ரஸ்தாக்கள், வீடு வாசல்கள், புகை வண்டிப் பாதை முதலியன அமைக்கப்பட்டன; அநேக பட்டினங்களும் உண்டாயின; ஜனத் தொகையும் அதிகரித்தது.

கி. பி. 1906 வரையில் ஜொகூர் அரசாங்கத்துக்கு ஆலோசனை சொல்ல லண்டனில் ஓர் ஆலோசனை சபை (Advisory Board) இருந்து வந்தது. இதன் பிறகு கி. பி. 1909ல் சுல்தானது வேண்டுகோளின்படி சிங்கப்பூர்க் கவர்னருக்குட்பட்ட பிரிட்டிஷ் பிரதிநிதியொருவர் நியமிக்கப்பட்டார். அப்பால், கி. பி. 1914ல் சுல்தானது கோரிக்கையின் பிரகாரமே ஒரு பொது ஆலோசனையாளர் (General Adviser) நியமிக்கப்பட்டார். அதிலிருந்து பிரிட்டிஷார் ஜொகூரது மந்திரி சபையிலும் பல இலாக்காக்களிலும் நியமனம் பெற்றூர்கள். ஜொகூர் சமஸ்தானம் இன்றைய மலாயாவிலுள்ள சமஸ்தானங்களுள் சிறந்ததாகவும் முற்போக்குடையதாகவும் கருதப்படுகின்றது.

---

## 11. கெடா, பேர்லிஸ், கிளந்தான், திரங்கானு சமஸ்தானங்கள்

மலாய மலாக்காவின் இறுதிக்குப் பின்னர், மலாயத் தீபகற்பத்தின் வடக்குப் பாகம் வெகு காலமாகச் சீயத்தின் ஆக்கிரமிப்புக்குட்பட்டிருந்தது. கெடாவைப் பற்றி முன் சில பாடங்களில் படித்தோம். கி. பி. 1821ல் சீயங்காரர் கெடாவைச் சூறையாடிய போது அவர்கள் அதை (1) கெடா, (2) ஸெட்டுள் (3) பேர்லிஸ், (4) குபாங்



விவேகானந்த ஆச்ரமம், கோலாலம்பூர்



ஜப்பானியர் விட்டுப்போன பெரிய பீரங்கிகளை
லூயி மவுன்ட் பேட்டன் பிரபு பார்வையிடுதல்



சீனர் சபா மண்டபம், கோலாலம்பூர்



சிலாங்கூர் சுல்தானின் மஸூதி, கிள்ளான்

பசு என நாலு கூறுக்கினர். கெடாச் சுல்தானும் பட்டத்தை இழந்தான். ஆயினும், 1843ல் பிரிட்டிஷாரது தலையீட்டால் சுல்தான் தன் பட்டத்தை மீண்டும் பெற்றானென்றாலும், ஸெட்டுள் சீயங்காரருக்குச் சொந்தமாயிற்று. இதன் பிறகு சீயங்காரர் கெடாவின் அரசியல் விவகாரங்களைக் கவனிக்க ஒரு பிரிட்டிஷ் உத்தியோகஸ்தரை நியமித்தார்கள். இருந்தும், சமஸ்தானத்தினுள்ளே அடிக்கடி அலங்கோலங்கள் உண்டாகிக்கொண்டிருந்தனவாகையால், கி. பி. 1909ல் கெடா சமஸ்தானத்தைச் சீயம் பிரிட்டிஷாரது ஆதிக்கத்தில் விட்டது. அதிலிருந்து தொடுவாய் நாடுகளின் கவர்னருக்குட்பட்ட பிரிட்டிஷ் அட்வைசர் என்னும் ஓர் ஆங்கிலேய உத்தியோகஸ்தர் சுல்தானுக்கு ஆலோசனை சொல்ல அனுப்பப்பட்டார். பிறகு பெர்லிஸ் சுல்தானின் வேண்டுகோளின்படி அச்சமஸ்தானத்துக்கும் ஒரு பிரிட்டிஷ் அட்வைசர் நியமிக்கப்பட்டார்.

கி. பி. 1780 தொடக்கம் கிளாந்தன் சீயத்துக்குக் கப்பம் கட்டி வந்தது. பழங்காலத்திலிருந்தே சீனர் பொன் எடுப்பதற்காகக் கிளாந்தனுக்கு வந்திருக்கிறார்கள். கி. பி. 1900த்தில் இச்சமஸ்தானச் சுல்தான் 3000 சதுரமைல் கொண்ட நிலத்தைச் சொற்ப விலைக்கு டப் டெவலப்மெண்ட் கம்பெனி (Duff Development Co.) என்னுமோர் அன்னிய கம்பெனிக்கு விற்றான். இக்கம்பெனியார் மிகக் குறைந்த எடையுள்ள ஈயக் காசுகளை ஏராளமாக அடித்து வெளியிட்டார்கள். கம்பெனிக்குக் கிடைத்த ஆதாயம் முழுமையும் பங்காளிகளால் அபகரிக்கப்பட்டது. சமஸ்தானத்தின் வரி கம்பெனியைச் சேர்ந்த இரண்டு குமாஸ்தாக்களால் வசூலிக்கப்பட்டது. ஆனால்,

பணம் எங்கே போயிற்றென்பது ஒருவருக்கும் தெரியாது. கம்பெனியின் தொழிலாளிகளுக்குச் சம்பளம் கொடுப்பது அரிது. கடன் வாங்கினவர்கள் அதைத் திருப்பிக் கொடுப்பதே இல்லை. இக்காரணங்களினால் நாடெங்கும் சச்சரவுகள் உண்டாயின. எனவே, சீயத்து அரசாங்கத்தார் கிளாந்தனில் அரசியல் வியவகாரங்களைக் கவனிக்க கி. பி. 1903–1909 வரை பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர் ஒருவரை நியமித்திருந்தார்கள். பிறகு கி. பி. 1909ல் சமஸ்தானத்தை பிரிட்டிஷாரின் ஆதிபத்தியத்துக்கு மாற்றிவிட்டார்கள். அதிலிருந்து கிளாந்தனில் பிரிட்டிஷ் அட்வைசர் ஒருவர் ஏற்படுத்தப்பட்டார்.

திரங்கானு சமஸ்தானம் மலாக்கா பண்டாஹராச் சுல்தான்மாரின் வழித்தோன்றல்களால் ஆளப்பட்டு வருகிறது. கி. பி. 1720 மட்டில் பூகிஸ்காரர் இவ்வி ராஜ்யத்தைக் கொள்ளை அடித்தார்கள். அதன் பிறகு இது சீயத்து அரசாங்கத்தாருக்குக் கப்பம் கட்டி வந்தது. மற்றைய ராஜ்யங்களைப் போலவே திரங்கானுவுள்ளும் கொலை, களவு, அநியாயம் இருந்தன. சுல்தானது இனத்தார் தம்பிஷ்டப்படி இறை வசூலித்தார். குடிகள் அடைந்த இன்னல்களுக்கோர் அளவில்லை ஆகவே, கி. பி. 1909ல் திரங்கானு சமஸ்தானத்தைச் சீயம் பிரிட்டிஷாரிடம் ஒப்படைத்தது. பிறகு கி. பி. 1919ல் திரங்கானு சுல்தானின் வேண்டுதலின்படி பிரிட்டிஷ் அட்வைசர் ஒருவர் நியமிக்கப்பட்டார்.

ஐக்கியப்படாத மலாய் நாடுகள் :

ஜொகூர், கெடா, பெர்லிஸ், கிளாந்தான், திரங்கானு இவை ஐந்தும் ஐக்கியப்படாத மலாய் நாடுகள் எனப்பட்டன. இவை ஐக்கியப்பட்ட மலாய் நாடுகளி

லிருந்து பின் வரும் விஷயங்களில் வித்தியாசப்பட்டன. (1) இவை ஒன்றோடொன்று எவ்வித அரசியல் விஷயத்திலும் சம்பந்தப்படவில்லை. (2) ஐக்கிய மலாய் நாடுகளுடனோ தொடுவாய் நாடுகளுடனோ அரசியல் சம்பந்தம் பெறவில்லை. (3) ஒவ்வொரு சமஸ்தானத்திற்கும் ஒவ்வொரு தனி ராஜாங்க சபை ஏற்படுத்தப்பட்டது. அதில் ஒவ்வொரு சுல்தானுக்கும், தன் தன் பிரிட்டிஷ் அட்வைசரின் ஆலோசனைப்படி, சமஸ்தான மந்திரி சபையின் உதவியைக் கொண்டு சமஸ்தானத்துக்கு வேண்டியசட்ட திட்டங்களை ஏற்படுத்திக்கொள்ள அதிகாரமிருந்தது. தொடுவாய் நாடுகளின் கவர்னர் ஐக்கியப்படாத மலாய் நாடுகளின் உயர்தர அதிகாரியாக்கப்பட்டார் (High Commissioner of the Unfederated Malay States).

---

# 12. பிரிட்டிஷ் மலாயாவும் அதன் அரசியலும்

இதுகாறும் நாம் படித்து வந்த தொடுவாய்ப் பகுதிகள், ஐக்கிய மலாய் நாடுகள், ஐக்கியப்படாத மலாய் நாடுகள் இம்மூன்று பிரிவுகளும், 1941-ஆம் ஆண்டு இறுதியில் ஏற்பட்ட ஜப்பானியப் படையெடுப்பு வரை 'பிரிட்டிஷ் மலாயா' என்னும் ஒரே தலைப்புப் பெயரால் குறிப்பிடப்பட்டிருந்தன. தொடுவாய்ப் பகுதிகள் பிரிட்டிஷ் அரசாங்கத்தாரது நேர் ஆளுகையிலும், ஐக்கிய மலாய் நாடுகள், ஐக்கியப்படாத மலாய் நாடுகள் ஆகியவை பிரிட்டிஷ் அரசாங்கத்தாரது பாதுகாப்பிலும் இருந்து வந்தன.

தொடுவாய்ப் பகுதிகளின் தேசாதிபதி (Governor) மற்றைய இரண்டு பகுதிகளின் உயர்தர அதிகாரி எனப் பட்டார். (High Commissioner). இவருடைய சாஸ்வதமான இருப்பிடமாக இருந்தது சிங்கப்பூர்.

தொடுவாய்ப் பகுதிகள் முடியரசுக் குடியேற்ற நாடுகளாக இருந்தமையால் (Colonies) அவற்றின் அரசியலுக்குரிய சட்டதிட்டங்கள் மூன்று முறைகளினுலேயே ஏற்படுத்தப்பட்டன. (1) பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் (Parliament) தீர்மானிக்கப்பட்ட சட்டங்கள், (2) இங்கிலாந்திலிருந்து அரசரின் கட்டளைகள், (3) தொடுவாய்ப் பகுதிகளின் சட்டசபையில் நிறைவேறிய தீர்மானங்கள்.

ஐக்கிய மலாய் நாடுகளுக்கு **மத்திய ஐக்கிய சபை** ஒன்று குவாலாலம்பூரிலிருந்தது. இதற்குத் தலைவர் உயர்தர அதிகாரியே. ஐக்கிய சமஸ்தானங்களின் சுல்தான்மார் எவரும் அபிப்பிராயமிருந்தால் இச்சபைக்கூட்டங்களிற்கலந்துகொள்ளலாம். இச்சபை குறைந்த பக்ஷம் வருடத்தில் ஒரு முறையாவது கூடும்.

இனி, முகம்மதிய சமயசம்பந்தமான காரியங்களும், உபகாரச் சம்பள விஷயங்களும், இன்னும் உயர்தர அதிகாரியின் அபிப்பிராயப்படி அந்தந்த சமஸ்தானத்தாலேயே தீர்மானிக்கப்பட வேண்டுமென்ற விஷயங்களும், அந்தந்த **சமஸ்தான சபையில்** (State Council) நிச்சயிக்கப்படும். ஒவ்வொரு ராஜ்யத்தின் பொருளாதார விஷயங்கள் அந்தந்த சமஸ்தானத்தின் கையிலேயே பெரிதுமிருந்தன.

முன்னெரு பாடத்தில் நாம் படித்தபடி 1895ல் நடந்த ஐக்கிய ஒப்பந்தத்தின் பயனுக, ஏற்கெனவே ஒவ்வொரு சமஸ்தான ரெஸிடெண்டுக்குமிருந்த அதிகாரங்களிற்பல **ஐக்கியக் காரியதரிசிக்கு** (Federal Secretary)

மாற்றப்பட்டிருந்தன. இதனுல், ஒவ்வொரு ரெஸிடெண்டும் அந்தந்த சமஸ்தானத்துச் சுல்தானுக்கு அண்மையிலிருந்தும், சுல்தான் தனது சமஸ்தானத்தின் அபிவிருத்தியின்பொருட்டுக் கொள்ளும் கருத்துக்களை ரெஸிடெண்டு சித்திப்படுத்த முடியாமலிருந்தது. இஃது இவ்வாருக, துரைத்தன இலாக்காக்கள் யாவும் ஐக்கிய சபைக்குக் கட்டுப்பட்டிருந்தமையால், ஒவ்வோர் இலாக்காவின் அதிகாரிகளும் தத்தம் நோக்கத்திற்கு ஏற்றவாறு எல்லாக் காரியங்களையும் ஐக்கியக் காரியதரிசியுடன் நேரில் நடத்தி வந்தனர். இம்முறை நாட்டின் பொது அபிவிருத்திக்குச் சாதகமாயிருந்தது. என்ருலும், சிற்சில சமஸ்தானங்களைத் தனிநிலைமையில் புறக்கணிக்க ஏதுவாயிற்று. எனவே, ஒவ்வொரு சமஸ்தானத்தின் பிரத்தியேக நலத்தைக் கருதி, பிரிட்டிஷ் அரசாங்கத்தார் முதற்படியாக 1927ல் ஒவ்வொரு சமஸ்தானத்திற்கும், அதனதன் நிதி விஷயத்தைப் பொறுத்த வரையில் ஓர் அளவு அதிகாரம் கொடுத்தார்கள். இது தான் 'நிர்மத்தியத்வத்தின்' (Decentralisation) ஆரம்பம். பிறகு 1932ல், அப்பொழுது தேசாதிபதியாகவும் உயர்தர அதிகாரியாகவுமிருந்த ஸர் ஸிஸில் கிளெமெண்டி (Sir Cecil Clementi) நகரி செம்பிலானிலுள்ள ஸ்ரீ மெனுந்தி என்னும் இடத்தில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளினது சுல்தான்மாரின் மாகூட்டத்தில், நிர்மத்தியத்வ நிர்வகிப்புச் சம்பந்தமான சில கருத்துக்களைப் பகிரங்கமாகக் கூறினுர். பிறகு, அதே ஆண்டில் இந்த நிர்மத்தியத்வ நிர்வகிப்பைப் பற்றி விசாரணை செய்யக் குடியேற்ற நாடுகளின் உப காரியதரிசி (Under Secretary of State for Colonies) இங்கிலாந்திலிருந்து மலாயாவுக்கு வந்தார். அவரது அறிக்கையின் பயனுக நிர்மத்தியத்வத்தை பிரிட்

டிஷ் அரசாங்கத்தார் ஆமோதித்தனர் என்றாலும், அதனி மித்தமாக உண்டாகும் மாறுதல்களைப் படிப்படியாகவே அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமெனத் தீர்மானித்தனர்.

நிர்மத்தியத்வ நிர்வகிப்பினால் சமஸ்தான சபைகளின் வலிமை அதிகரித்தது. வேளாண்மை (Agriculture), கல்வி (Education), மின்சாரம் (Electricity), காடு (Forestry), சுரங்க வேலை (Mining), மராமத்து வேலை (Public Works), மிருக வைத்தியம் (Veterinary), சிறை (Prisons), நீர்ப்பாசனம்-வாய்க்கால் (Drainage and Irrigation) இவ்விலாக்காக்கள் யாவும் சமஸ்தானத்தினுடைய ஆதீனத்திற்கு வந்தன. இவ்விலாக்காக்களின் தலைமை உத்தியோகஸ்தர்கள் தொடுவாய் நாடுகளைச் சேர்ந்தவர்களாயிருந்தனரென்றாலும், அவர்கள் ஐக்கிய சமஸ்தானங்களைப் பொறுத்த மட்டில் ஆலோசனையாளர்களாகவே இருந்தார்கள்.

இன்னும் முன்பு ஐக்கியக் காரியதரிசிக்கிருந்து வந்த அதிகாரங்களிற்சில இப்போது சமஸ்தானத்துச் சுல்தான்மார்களின் கைக்கு வந்தன.

சமஸ்தான சபையில் பின் சொல்லப்பட்டுள்ளவர்கள் அங்கத்தினர்களாயிருந்தார்கள்:—சுல்தான் (தலைவர்), முக்கிய மலாய்த் தலைவர்கள், பிரிட்டிஷ் ரெஸிடெண்டும் அவருடைய காரியதரிசியும், நியாய துரந்தரர், பெரிய இலாக்காக்களின் தலைமை உத்தியோகஸ்தர்கள், சமஸ்தானத்திலிருக்கும் பல சமூகத்தாரின் பிரதிநிதிகள் ஆகியோர்; ஐக்கிய சபையிலுள்ள அரசியல் உத்தியோகமில்லாத அங்கத்தினர்கள் சமஸ்தானத்திலிருந்தால், அவர்கள் தங்களுடைய சமூகத்தின் பிரதிநிதிகளாய் இருப்பார்கள்.

சிற்சில சிறிய காரியங்களில் ஒவ்வொரு சமஸ்தான சபையின் நிர்வகிப்பிலும் வித்தியாசங்கள் இருந்தன. அந்தந்த சமஸ்தானத்தின் நிர்வாகம் அதனதன் சுல்தானின் கைவசமிருந்தது. ஆயினும், சாதாரண விஷயங்களில் ரெஸிடெண்டுக்கும் அதிகாரமிருந்தது.

ஐக்கியப்படாத மலாய் நாடுகளான ஜொகூர், கெடா, பெர்லிஸ், கிளாந்தான், திரங்கானு ஆகியவற்றின் அரசியலைப் பற்றி முன் படித்திருக்கிறோம். இவற்றின் சமஸ்தான சபைகள் தத்தமக்கு விருப்பமான சட்ட திட்டங்களை அமைக்க இயன்றதென்றாலும், பல காரணங்களை முன்னிட்டு அவை தொடுவாய்ப் பகுதிகளினதும், ஐக்கிய மலாய் நாடுகளினதும் சட்ட திட்டங்களையே பொதுவாகச் செயலில் அநுசரித்து வந்தன. சர்வதேச சம்பந்தமான பிரச்சினைகளிலும் இன்னும் தொடுவாய் நாடுகளிலிருந்தோ அல்லது ஐக்கிய நாடுகளிலிருந்தோ ஐக்கியப்படாத நாடுகளில் உத்தியோக நியமனம்பெறும் உத்தியோகஸ்தர்களைப் பற்றிய காரியங்களிலும், உயர்தர அதிகாரியின் கட்டளைப்படியே இந்நாடுகள் நடக்கவேண்டி இருந்தது. ஐக்கியப்படாத மலாய் நாடுகளின் காரியங்கள் யாவும் அவற்றிற்கெனப் பிரத்தியேகமாகச் சிங்கப்பூரிலிருந்த காரியதரிசி ஒருவரால் கவனிக்கப்பட்டு வந்தன. இவர் உயர்தர அதிகாரிக்குக் காரியதரிசியென்று சொல்லப்பட்டார் (Secretary to the High Commissioner).

பிரிட்டிஷாரது ஆளுகையில் மலாய்நாடு எல்லாத் துறைகளிலும் சீர்திருத்தம் பெற்று உன்னத நிலையை அடைந்துளது. பிரிட்டிஷாருக்கு முன்பு இந்தியர், இஸ்லாமியர், போர்ச்சுகீஸியர், டச்சுக்காரர், மலாய்ச் சுல்தான்கள் ஆகியோர் மலாயாவின் பாகங்களை ஆங்காங்கே

ஆண்டனரென்ருலும், பிரிட்டிஷாரது வருகைக்குப் பின்னரே அரசியல் செவ்வையாக நடைபெறத் தொடங்கிற்று. காடுகள் அழிக்கப்பெற்று நாடுகள் ஆக்கப்பட்டன; நகர்கள் உண்டாயின. போக்கு வரத்து வசதிக்காக நல்ல ரஸ்தாக்கள் அமைக்கப்பட்டன; மலாயாவில் உள்ள ரஸ்தாக்கள்தான் உலகிலே சிறந்தவையென இன்று சொல்லப்படுகிறது. நாட்டின் வடக்கிலிருந்து தெற்கு வரைக்கும் புகை வண்டிப் பாதை போடப்பட்டிருக்கிறது. தபாலாபீஸுகள், பாங்குகள் (Banks), நீதி மன்றங்கள், தாணுக்கள், மறியற்சாலைகள், வைத்தியசாலைகள், பற்பல காரியாலயங்கள், துறைமுகங்கள் முதலியன பிரிட்டிஷாரால் நிர்மாணிக்கப்பட்டவையே, குடிகளின் தேக சௌக்கியத்தின்பொருட்டுச் சுகாதார இலாக்காக் காரியாலயங்கள் நிறுவப்பட்டுள்ளன. தண்ணீர்க் குழாய்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன, மின்சார விளக்கு, டெலிபோன், தந்தி, ரேடியோ, ஆகாய விமானம், மோட்டார், பஸ் ஆகிய சகல வசதிகளும் பிரிட்டிஷாரால் மலாயாவுக்கு நல்கப்பட்டவை. குடிஜனங்கள் முன்போலத் தலைவர்களின் அநியாயமான ஆக்கிரமிப்புக்குட்படாது சுதந்தரமாக வாழ்க்கையை நடத்த பிரிட்டிஷ் அரசியலுள் போதிய இடமுண்டு. முன்னிருந்த பலாத்காரமான வரி வசூல், அடிமை முறை முதலியன பிரிட்டிஷாரால் ஒழிக்கப்பட்டன,

கல்வி நிலையங்கள், கைத்தொழிற்சாலைகள், யந்திர சாலைகள், கலைக்கழகம், வைத்தியக் கல்லூரி ஆகியன யாவும் பிரிட்டிஷ் அரசாங்கத்தினுலேயே மலாயாவில் முதன்முதலாக உண்டாக்கப்பட்டன.

மலாயாவின் செல்வப் பெருக்கிற்கு ஆதாரமாக இருப்பவை ரப்பரும், ஈயமுமே. இவற்றுள் ஈயமெடுத்



பிரிட்டிஷ் கடற்படைத் தளகர்த்தரும் நேசதேசப்படைகளின் பிரதம சேனாபதியுமான மேன்மை தங்கிய பிரபு லூயி மவுன்ட்பேட்டன் (நடுவில்) சிங்கப்பூரிலிறங்கியபோது எடுத்த படம்.

—By courtesy : P.R.D.



பத்துமலைப் படிகள், பத்து கேவ்ஸ், கோலாலம்பூர் மலைக்குள் சுப்பிரமணிய சுவாமியின் சிறு கோவிலுள்ளது.

தல் முன்னமே இருந்ததென்றாலும், பிரிட்டிஷார் வந்த பிறகேதான் யந்திரங்களின் உதவியைக்கொண்டு செவ்வையான முறையில் எடுக்கப்படலாயிற்று, இத்தொழில் முதன்முதல் கி. பி. 1848ல் தைப்பிங்கிற்கு வடக்கேயுள்ள கிளியன் பௌ என்ற குக்கிராமத்தில் தொடங்கப்பட்டது. ரப்பர் பிரிட்டிஷாராலேயே கி. பி. 1876ல் மலாயாவிற்குக் கொண்டுவரப்பட்டது. முதன்முதல், இருபத்திரண்டு இள ரப்பர்க் கன்றுகள் தென்னமெரிக்காவிலுள்ள பிரேஸில் (Brazil) நாட்டிலிருந்து சிங்கப்பூர்த் தாவரத் தோட்டத்திற்கு (Singapore Botanical Gardens) கொண்டு வரப்பட்டன. அவற்றினின்று மலாயா அடங்கலும் ரப்பர்த் தோட்டங்கள் பரவலாயின. இன்றைக்கு உலகுக்கு வேண்டிய மூன்றிலொரு பாகம் ஈயமும், அரைவாசி ரப்பரும் மலாயாவில் கிடைக்கின்றன.

எனவே, பிரிட்டிஷ் ஆளுகையால் மலாயாவுக்கு உண்டான நன்மைகள் எண்ணிறந்தவையல்லவா ? இந்த ஆளுகையில் மலாயர்கள் மாத்திரமன்றி, சீனர், இந்தியர், முதலியோரும் சமாதானமாகவும் சந்தோஷமாகவும் வாழ்ந்து வருகின்றனர்.

---

# 13. ஜப்பானின் வெற்றிக் காலம்

எல்லாரிடத்தும் ஆசை உண்டு. இவ்வாசை பலமாகி மனிதனிடத்தே அவாவாகும் போது அவன் பிறர் பொருள்களைத் தன்னுடையனவாக்க முயல்கிறான். இவ்வாறே வலிமை படைத்த நாடுகளும், பிற நாடுகளைப் பிடித்து ஆள அவாக் கொள்கின்றன. இதனால்தான் யுத்தங்கள் உண்டாகின்றன.

கீழ் நாடுகளில் சிறந்த வல்லரசாய் இருந்து வந்த ஜப்பான் (நிப்பொன்) ஆரம்பத்தில் கொரியாவையும் (Korea), அடுத்தபடியாக முதலாம் உலக மகா யுத்தத் திற்குப் பிறகு (1914-1918) சில ஆண்டுகளாகப் பிறநாடு களையும் கைப்பற்றப் பேரவாக்கொண்டு, முதலில் மஞ்சூரியாவைத் தனதாக்கிக்கொண்டது. பிறகு சீனு மீது படையெடுத்து அதன் ஒரு பாகத்தையும் ஆக்கிரமித் தது. இத்துடனும் நிற்கவில்லை. 1941-ஆம் ஆண்டு, ஆகஸ்டு மாதம், இந்து-சீனுவின் தெற்கேயும் ஜப்பானியப் படை வந்திறங்கிற்று.

இன்னும், ஆங்கிலேயர், அமெரிக்கர், பிரஞ்சுக்காரர், டச்சுக்காரர் ஆகியோரது ஆதிக்கத்தையும் செல்வாக்கை யும் கீழ்நாடுகளினின்று தொலைத்தால், தாம் அந்நாடுகளை இலகுவாகக் கைப்பற்றலாம் என ஜப்பானியருக்குத் தோன்றிற்று, ஐரோப்பாவில் நடந்துகொண்டிருந்த இரண்டாவது உலக மகா யுத்தம் (1939-1945) ஜப்பானி யருக்கு நல்ல வாய்ப்பாய் இருந்தது. ஏனென்றால், பிரிட்ட னும் அமெரிக்காவும் அதில் ஈடுபட்டுத் தம் முழுக் கவனத் தையும் வலிமையையும் ஐரோப்பாவிலேயே செலுத்திக் கொண்டிருந்தன. ஆகவே, 1941-ஆம் ஆண்டு, டிசம்பர், 8-ஆம் தேதி பிரிட்டன், ஐக்கிய அமெரிக்க நாடுகள் இவ் விரண்டு வல்லரசுகள்மீதும் ஜப்பான் யுத்தப் பிரகடனம் செய்தது. அன்றைய தினமே ஜாப்பானிய ஆகாயப் படையும், நீர் மூழ்கிப் படையும் மணிலாவையும் பேர்ல் ஹார்பரையும் தாக்கி, அங்கிருந்த அமெரிக்கக் கடற் படையின் பெரும்பாகத்தை நாசஞ் செய்தன. சிங்கப் பூரும் ஜப்பானிய ஆகாய விமானங்களால் தாக்குண் டது. தைலாந்து (Thailand) ஜப்பானிய வலிமைக்கு அடி பணிந்தது. மலாயாவின் வடக்குக் கோடியிலிருந்த

கிளாந்தன் ஆகாய விமானத் திடல் அவர்களால் பிடிக்கப் பட்டது; கோட்டா பாரு (Kota Bharu) கரைகளிலும் ஜப்பானியப் படைகள் இறங்கின. டிசம்பர் 9-ஆம் தேதி பிரின்ஸ் ஆப் வேல்ஸ் (Prince of Wales), ரிப்பல்ஸ் (Repulse) என்ற பிரசித்திபெற்ற இரு பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்கள் சீயக் குடாக் கடலில் எதிரி விமானங்களால் மூழ்கடிக்கப்பட்டன. இதனால், அமெரிக்கக் கடற் படைக்கு நேர்ந்த துரதிருஷ்டமே பிரிட்டிஷ் கடற்படைக் கும் தூரக் கிழக்கில் ஏற்பட்டது.

டிசம்பர் 13-ஆம் தேதியன்று ஜப்பானிய பிரதானப் படை கெடாவின் வடக்கே ஜித்திராவில் (Jitra) இருந்த மலாய்ப் பாதுகாப்பு ஸ்தானங்களைத் தகர்த்துவிட்டு, நாளொன்றுக்குச் சராசரி பத்து மைல் விகிதம், 550 மைலுக்கும், சிங்கப்பூரை நோக்கி முன்னேறிற்று. பினாங்கு பிரிட்டிஷாரால் கைவிடப்பட்டது. குவாலக் கங்சார் (Kuala Kangsar), கம்பார் (Kampar), சிலிம் ரிவர் (Slim River) ஆகிய இடங்களில் பிரிட்டிஷ் படை களும் இந்தியப்படைகளும் சேர்ந்து ஜப்பானியர்களை எதிர்த்துப் போராடின. என்றாலும், பின்னர் நாம் அறிந்து கொள்ளப்போகும் காரணங்களினால் ஜப்பானியர் முன் னேற்றத்தை நிறுத்த முடியாமற்போயிற்று. 1942-ஆம் வருஷம், ஜனவரி மாதம், 9-ஆம் தேதி ஜெனரல் வேவல் (General Wavell) மலாயாவுக்கு விமான மூலம் விஜயம் செய்து, நிலைமையை ஆராய்ந்து, கோலாலம்பூரி லிருந்து தம் படைகளனைத்தையும் பின்வாங்கி மூவார் நதி தீரத்தில் பாதுகாப்பு ஸ்தானத்தை நிறுவும்படி ஏற்பாடு செய்தார். இன்னும், ஜப்பானியர் கிழக்குக்கரைச் சம வெளிக்கு ஊடாகவும் மத்திய மலைப் பிரதேசத்திற்கு ஊடாகவும், கடல் மார்க்கமாக ஆங்காங்கே இறங்கியும்,

தெற்கே முன்னேறி வந்துகொண்டிருந்தனர். இக்காரணங்களால் ஜொகூரின் தென்பாகத்தைத் தவிர இதர மலாய் சமஸ்தானங்கள் யாவும் ஜப்பானியர் கையில் விடப்பட்டன.

கிமாஸிலிருந்து (Gemas) மூவார் (Muar) நதிப் *பிரதேசம் வரைக்கும் ஆஸ்திரேலியப் படைகள் தீவிர* யுத்தம் புரிந்தன. ஆயினும், எதிரியின் முன்னேற்றத்தைத் தடுக்க முடியவில்லை.

1942-ஆம் வருஷம், ஜனவரி, 25-ஆம் தேதி மலாயா ராணுவ அதிகாரிகள் செய்த முடிவுப்படி ஜனவரி 30-31-ஆம் தேதி இரவு மலாயாப் படைகள் அனைத்தும் *சிங்கப்பூருக்குள் வந்து சேர்ந்தன.* £30,000,000 செலவில் அமைக்கப்பட்ட சிங்கப்பூர்க் கடற்படைத் தளம் (Naval Base) ஜப்பானியருக்குப் பிரயோஜனப்படாவண்ணம் அன்றே பிரிட்டிஷ் எஞ்சினீயர்களால் அழிக்கப்பட்டது. தளத்தில் நின்றுகொண்டிருந்த 'எம்பிரெஸ் ஆப் இந்தியா' (Empress of India) *என்ற பிரிட்டிஷ்* யுத்தக் கப்பலும் எதிரியின் விமானத் தாக்குதலினால் இக்கிரையாயிற்று.

இப்பொழுது ஜொகூர் ஜலசந்திக் கரையினின்று ஜப்பானியர் பீரங்கி வேட்டுகளைச் சிங்கப்பூர்மீது பாய்ச்சினர். அவர்களது ஆகாயப் படையும் சிங்கப்பூரை ஓயாமல் தன் குண்டுத் தாக்குதல்களுக்கு உட்படுத்தியது. பிப்பிரவரி 8-ஆம் தேதி மாலை 10 மணி அளவில் சிங்கப்பூரின் வடமேற்குக் கோடியில் வதி நிறைந்த இடமொன்றில் 23,000 பேர் கொண்ட ஜப்பானியப் படை இறங்கிற்று. பிப்பிரவரி 11-ஆம் தேதி ஜப்பானிய டாங்கிகள் (Tanks) தீவின் நடுவிலுள்ள புக்கித்திமாவை (Bukit Timah) அடைந்தன. அத்துடன் சிங்கப்பூர்

மக்களுக்கும் படைகளுக்கும் தண்ணீர் கிடைக்காவண்ணம், ஜொகூரிலிருந்து சிங்கப்பூருக்குச் சென்றுகொண்டிருந்த தண்ணீர்க் குழாய்களை வெட்டிவிட்டனர். 36,000 பேர் கொண்ட பிரிட்டிஷ் இந்தியப் படையொன்று அப்பொழுதுதான் சிங்கப்பூருக்கு வந்து சேர்ந்ததென்றாலும், அவர்கள் சண்டை அனுபவம் மிகவும் குறைந்தவர்களாக இருந்தார்கள். அவர்களது யுத்த தளவாடங்களைக் கரையிலிறக்கவொட்டாது ஜப்பானிய ஆகாய விமானங்கள் குண்டு மாரி பொழிந்தன. முதலில் சிங்கப்பூரிலிருந்த படைகளும் இளைப்பால் தளர்ந்தவையாயின. இக்காரணங்களினால், 1942-ஆம் வருஷம், பிப்பிரவரி, 15-ஆம் தேதியன்று சிங்கப்பூர் கவர்னர் மாளிகையில் வெள்ளைக்கொடி உயர்த்தப்பட்டு, பிரிட்டிஷ் மலாயாப் படைகளெல்லாம் ஜப்பானியரிடம் சரணாகதி அடைந்தன. அஃதோடு சில மாதங்களுக்குளெல்லாம் மலேஷியா முழுமையும் ஜப்பானியர் ஆதிக்கத்திற்குட்பட்டது. இதன் பிறகு 1945-ஆம் வருஷம், ஆகஸ்டுமீ, 15-ஆம் தேதி ஜப்பானிய சரணாகதிவரை மலாயா நாடு ஜப்பானிய ராணுவ ஆளுகைக்குட்பட்டிருந்தது.

ஜப்பானிய இராணுவ ஆட்சியில் குடி ஜனங்கள் பட்ட இன்னல்கள் கொஞ்சநஞ்சமல்ல: உணவு, உடை, மருந்து முதலியன கிடைக்காமல் ஆயிரக்கணக்கில் குடி ஜனங்கள் மாண்டனர். ஜப்பானிய ராணுவ நிர்வாகஸ்தர்களில் பெரும்பாலோர் திமிர், வெறி, செருக்கு முதலிய குணங்கள் கொண்டார்கள். அவர்களிடம் நடுவுநிலைமை, நியாயநீதி, இரக்கம் வெகு குறைவு. அவர்களுக்கு மனிதத் தன்மையில் நம்பிக்கையிருந்ததாகத் தெரியவில்லை. வாளாட்சி புரிவதிலும், தாமே எல்லா விதத்திலும் மேலானவர்கள் என்ற கருத்தைக் குடிஜனங்க

ளிடம் உண்டுபண்ணுவதிலுமே அவர்கள் ஆர்வங்கொண்டிருந்தார்கள். இந்தியத் தொழிலாளர்கள் பத்தாயிரக் கணக்கில் ஜப்பானியர் புதிதாக அமைக்கத்தொடங்கிய தைலாந்து—பர்மா ரயில் பாதையின் வேலைக்குக் கூட்டிக்கொண்டு போகப்பட்டு ஆங்காங்குக் காடுகளிலும் மலைகளிலும் மாண்டனர். அவர்களது பெண்டு பிள்ளைகள் மலாயாவில் அநாதைகளாய்ச் சுற்றித் திரிந்தனர். இவர்களுக்கு நிவாரண வேலை இந்திய தேசீய இயக்கத்தினரால் முடிந்த அளவு செய்யப்பட்டதென்றாலும், நிலைமை சாமானியமாகச் சமாளிக்க முடியாததாயிருந்தது. இன்னும், பிரிட்டிஷ், இந்திய, ஆஸ்திரேலியப் படைகளைச் சேர்ந்த கைதிகளும் எதிரியினிடம் அளவு கடந்த இமிசைகளுக்காளாயினர். எனவே, இத்தகைய அநீதியும் குரூரமும் பொருந்திய ஆட்சி மறையும் நாளைக் குடி ஜனங்களெல்லோரும் எதிர்பார்த்த வண்ணமாய் இருந்தார்கள். இவ்வாட்சியினால் ஏற்பட்ட மனக்கொந்தளிப்பு மக்களிடையே பின்னாலும் ஓர் அளவு தங்கியிருக்க நேரிட்டது. 1944-ஆம் ஆண்டிறுதியில் பிரிட்டிஷ் - அமெரிக்க எதிர்த் தாக்குதல் ஜப்பானியர்மீது பல இடங்களிலும் ஆரம்பிக்கப்பட்டு, 1945-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் அமெரிக்காவின் அணுக்குண்டு வீச்சினால் ஜப்பானியர் தோல்வியடைந்தனர். இனி, ஜப்பானியர்களால் மலாயா தற்காலிகமாகக் கைப்பற்றப்பட்டதன் காரணங்களையும் நாம் தெரிந்து கொள்ளல் வேண்டும்.

(1) ஐரோப்பாவிலும் வட ஆப்பிரிக்காவிலும் ஜெர்மானியருக்கும் பிரிட்டிஷ் – அமெரிக்கருக்கும் நடந்துகொண்டிருந்த போரின் பொருட்டு, பிரிட்டனதும் நேசநாடுகளினதும் தரை, கடல், ஆகாயப்படைகளின் மிகப்

பெரும்பாகம் அவ்விடங்களுக்குச் சென்றிருந்தமை.

(2) ஜப்பானியருடைய விமானப்படையின் மிகுந்த எண்ணிக்கை.

(3) ஜப்பானியர் படையெடுப்பில் 300 டாங்கிகள் வரை (Tanks) பாவித்தார்கள்; மலாயாவில் டாங்கிகள் அவ்வேளையில் இருக்கவில்லை.

(4) ஜப்பானியருக்குக் காட்டு யுத்தப் (Jungle Warfare) பயிற்சியில் திறமையிருந்தமை. மலாயாவில் பெரும்பாகம் காடடர்ந்த இடம்; இஃது அவர்களுக்குப் பெருஞ்சாதகமாயிருந்தது.

(5) மலாயாவிலிருந்த நிலப் பீரங்கிகள் காட்டு யுத்தத்தில் உபயோகப்படவில்லை.

---

# 14. ஏகத்துவ மலாயாவும் சிங்கப்பூரும்

மலாயாவிலிருந்த ஜப்பானியப் படைகள் நேசதேசப் படைகளின் பிரதம தளகர்த்தரான லார்டு மவுண்ட்பேட்டனிடம் (Lord Louis Mountbatten) சரணடைந்த பிறகு 1945-ஆம் வருடம், செப்டெம்பர், 1-ஆம் தேதி முதல் 1946-ஆம் ஆண்டு, மார்ச்சு மாதம், 31-ஆம் தேதி வரை பிரிட்டிஷ் ராணுவ ஆட்சி (British Military Administration) மலாயாவில் ஸ்தாபிக்கப்பட்டது. பின்னர், யுத்த காலத்தில் தயாரிக்கப்பட்ட ஒரு புது அரசியல் திட்டத்தை பிரிட்டிஷார் மலாயாவிற்குக் கொண்டு வந்தனர். அதன்படி. ஜப்பானியப் படையெடுப்

புக்கு முன்னிருந்த ஐக்கிய மலாய் நாடுகள், ஐக்கியப் படாத மலாய் நாடுகள், சிங்கப்பூரொழிந்த ஏனைய தொடு வாய்ப் பகுதிகள் அனைத்தையும் ஏகத்துவ மலாயா (Malayan Union) என்ற ஒரே அரசியலுக்கு உட்படுத்தல்; சிங்கப்பூர் மாத்திரம் முடியரசுக் குடியேற்ற நாடாக (Crown Colony) முன்போன்று இருத்தல் என்பதாம். இப்புது அரசியல் திட்டம் மாக் மய்க்கல் ஒப்பந்தம் (Mac Michæl Treaty) என்று சொல்லப்படும்.

இவ்வரசியல் திட்டத்தின் அடிப்படைகளை நாம் விளங்கிக்கொள்ளுதல் வேண்டும். அவை பின் வருமாறு :—

(1) மேலே நாம் கண்டவாறு ஏற்படுத்தப்பட்ட ஏகத்துவ மலாயாவுக்கு ஒரு கவர்னர் நியமிக்கட்டார்: 1946-ஆம் வருஷம், ஏப்பிரல் மாதம், 1-ஆந்தேதி ஸர் எட்வர்டு ஜெண்ட் (Sir Edward Gent) முதல் கவர்னரானார். சிங்கப்பூருக்குப் பிரத்தியேகக் கவர்னர் ஒருவர் நியமிக்கப்பட்டார் ; இவர்களிருவருக்கும் மேலாகக் கவர்னர் ஜெனரல் ஒருவர் ஏற்படுத்தப்பட்டார் ; மாட்சிமை தங்கிய மன்னர் பிரானே இரு பிரிவுகளுக்கும் அதிபதி.

(2) முன்போல பிரிட்டிஷ் பாதுகாப்புக்குட்பட்ட தனியுரிமை சமஸ்தானங்கள் இல்லை ; ஏகத்துவ மலாயா முழுவதும் பிரிட்டிஷ் பரிபாலனத்துக்குரிய ஒரே நாடாகக் கொள்ளப்பட்டது.

(3) முன்னர் தத்தம் சமஸ்தான சபைகளுக்குத் தலைமை தாங்கிய சுல்தான்களுக்கு எவ்வித நிர்வாக அதிகாரமுமில்லாமல், அவர்களுடைய இடத்தில் ஒரே பிரிட்டிஷ் ரெஸிடெண்ட் கமிஷனர் (British Resident

Commissioner) ச்மஸ்தான சபைகளுக்குத் தலைவராக ஏற்படுத்தப்பட்டார்.

(4) அரசாங்கத்திற்குரிய நிலங்களைப் பொறுத்த அலுவல்கள், அரசியல் சட்ட திட்டங்கள், இவைகளை முன்னர் சுல்தான்கள் கையெழுத்திட்டு ஆமோதித்தார்கள்; தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட கொலைக் குற்றவாளிகளுக்குக் கருணை காட்டும் தனியுரிமை முன்னர் சுல்தான்மாருக்கு இருந்தது. புதுத் திட்டத்தின்படி இவை சம்பந்தமான அதிகாரங்கள் பூராவும் கவர்னருக்கே அளிக்கப்பட்டன; இன்னும், யாதாமொரு சமஸ்தான சபைக்கு நியமிக்கப்படும் மலாய் உத்தியோகஸ்தரோ, மலாய்த் தலைவரோ, தமது விசுவாசப் பிரமாணத்தை முன்னர் போன்று தம் சமஸ்தான சுல்தானுக்குச் செய்துகொள்ளாமல், மன்னர் பிரானுக்கே செய்து கொள்ளல் வேண்டும்.

(5) புதுத் திட்டத்தில் 'மலாயாப் பிரஜா உரிமை' (Malayan Citizenship) என ஓர் அங்கமேற்படுத்தப் பட்டது. இதன்படி மலாயாவில் பிறந்திருந்தமையாலும் அல்லது சிலகாலம் இங்கு வசித்திருந்தமையாலும், சுதேசியான ஒரு மலாயரைப் போன்றே விதேசியான ஒரு பிரிட்டிஷாருக்கோ, சீனருக்கோ, இந்தியருக்கோ, இலங்கையருக்கோ சகலவிதமான சம உரிமைகளும் அளிக்கப் பட்டன. இது மலாயாவிலுள்ள பெருந்தொகையான சீனருக்குப் பல சலுகைகள் கிடைக்க ஏதுவாயிருந்தது: ஆயின், அறிவுத் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் பிற்போக்காளர்களான மலாயர்கள் மிகவும் பாதிக் கப்பட்டார்கள் என்பது தெளிவு. மேலும், இவ்வரசியல் மாறுதலை உண்டு பண்ணுமுன் சுல்தான்கள் கலந்து





படம் 1. ஜப்பானியர் சரணாகதி அடைந்தபின் ஜப்பானியத் தளகர்த்தர் தமது உடைவாளை நேசதேசத் தளகர்த்தரிடம் ஒப்படைக்கும் காட்சி

படம் 2. சரணாகதி அடைந்த ஜப்பானிய இராணுவத் தலைவர்கள் அணிவகுத்து நிற்கும் காட்சி — By courtesy : P.R.D.

ஆலோசிக்கப்படவில்லை; புதுத் திட்டத்தை அவர்கள் தங்கள் குடிகளுக்கும் தெரிவிக்க முடியாமலிருந்தது.

மேற்கண்டவற்றையெல்லாம் கவனிக்கும் போது மலாயர்களும் சுல்தான்களும் தம் சொந்த நாட்டிலேயே தம் சுய உரிமைகளை இழந்தவர்களானார்கள் என்பது விளங்கும். அதுவுமன்றி, சமஸ்தானச் சுல்தான்களுக்கும் பிரிட்டிஷாருக்குமிடையே முன்னர் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களனைத்தும் அவமாக்கப்பட்டன எனலாம். எனவே, சுல்தான்களிலொருவர் இப்புதுத் திட்டத்தைத் தாக்கி, திட்டவட்டமான ஆக்ஷேபனையை இங்கிலாந்து பாராளுமன்றத்துக்கு அனுப்பினார். இன்னும் டத்தோ சர் ஆன் பின் ஜபாரினால் (Dato Sir Oon bin Jaffar) 1947ல் ஆரம்பிக்கப்பட்ட ஐக்கிய மலாயாத் தேசீய இயக்கத்தின் (U. M. N.O.) வலிமையைக்கொண்டு மலாயர்கள் இப்புதுமைத் திட்டம் நடவடிக்கைக்கு வருதலை எதிர்த்தது மட்டுமன்றி, ஒரு வாரத்திற்குத் துக்கமும் கொண்டாடினார்கள். இங்கிலாந்திலும் சம புத்தியுடையோரும், மலாயர்களின் அநுதாபிகளும், புதுத்திட்டத்தை வன்மையாகக் கண்டித்தார்கள். இவற்றின் பயனாக பிரிட்டிஷ் அரசாங்கத்தார் ஆங்கிலேய அதிகாரிகளும் ஆசியப் பிரமுகர்களும் கொண்ட ஒரு விசாரணைக் குழுவை (Enquiry Committee) அமைத்து, அதைப் புதுத் திட்டத்தின் குறை நிறைகளைப் பற்றி ஆராயச் சொன்னார்கள். இக்குழுவின் ஆலோசனைப்படி

(1) ஏகத்துவ மலாயா ஐக்கிய மலாயாவாக (Federation of Malaya) 1948-ஆம் ஆண்டு, பிப்பிரவரி மாதம், 1-ஆம் தேதியன்று மாற்றப்பட்டது. அதற்கு உயர்தர அதிகாரி (High Commissioner) ஒருவர் ஏற்

படுத்தப்பட்டார். ஐக்கிய மலாயாவின் அரசியல் திட்டம் முன்னைய ஐக்கிய மலாய் நாடுகளின் அரசியல் போன்ற தாகும். அஃதாவது, சமஸ்தானச் சுல்தான்களுக்கு உரிய அந்தஸ்தும் உரிமைகளும் மாறுபடாதிருத்தலாகும். மேலே சொல்லப்பட்ட காரணத்தால் பிப்பிரவரி மாதம் 1–ஆம் தேதி ஆண்டுதோறும் ஐக்கிய மலாயா தினமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

(2) 'மலாயாப் பிரஜா உரிமை' என்ற அங்கம் சில சிறு திருத்தங்களுடன் ஆமோதிக்கப்பட்டது. அஃதாவது, யாதாமொருவர் ஐக்கிய மலாயாவில் பிரிந்திருந்து அல்லது குறைந்த அளவு பதினைந்து வருஷத்திற்கு இந் நாட்டில் தொடர்ச்சியாக வசித்திருந்து, மலாயாவைத் தமது நிரந்தர வாசஸ்தலமாகக் கொள்ள விருப்பப் பட்டால், அன்னவர் மலாயாப் பிரஜை ஆகலாம். மலா யாப் பிரஜைகள் ஐக்கியச் சட்ட சபையிலும் (Federal Legislative Council), சமஸ்தானச் சபையிலும் (State Council) அங்கம் பெறலாம். ஆனால், மலாயாப் பிரஜை களானவர்கள்(சீனர், இந்தியர்,இலங்கையர், பிரிட்டிஷார் முதலியோர்) விதேசிகளாய் இருப்பர்.

(3) இப்போதைக்குச் சிங்கப்பூர் ஒரு கவர்னரின் கீழ்த் தனிமையான குடியேற்ற நாடாகவே இருந்து வரும்.

(4) ஐக்கிய மலாயாவின் உயர்தர அதிகாரியும் சிங் கப்பூர்க் கவர்னரும் கிழக்காசியாவிலுள்ள பிரிட்டிஷ் பிரதம உயர்தர அதிகாரியின் (Commissioner General for South East Asia) ஆலோசனைகளுக்கு உட்பட்ட வராவர். கௌரவ மால்கம் மாக்டொனல்டு (Malcolm Mac Donald) இப்பதவிக்கு முதன்முதலாக நியமிக்கப் பட்டார்.

# 15. மலாயாவின் இப்போதைய அரசியல் விவரம்—I

மலாயாவில் இக்காலே இரு வித அரசியற்பிரதேசங் கள் உள்ளன. அவையாவன: (1) சிங்கப்பூர் முடி யரசுக் குடியேற்ற நாடு; (2) ஐக்கிய மலாய் நாடு (இதனுள் கெடா, பெர்லிஸ், பினங்கு (வெல்லஸ்லி மாகாணமுட்பட), பேரா, சிலாங்கூர், நகரிசெம்பிலான், மலாக்கா, ஜொகூர், பாஹாங், திரங்கானு, கிளந்தான் ஆகியன அடங்கும்.)

1948ல் மலாயாவின் ஒன்பது சமஸ்தானங்களின் சுல்தான்மாருக்கும் பிரிட்டிஷ் மன்னர் பிரானுக்கு மிடையே நிகழ்ந்த ஒப்பந்தப்படி ஐக்கிய மலாயா உருவா னது. இவ்வொப்பந்தத்தின்படி மன்னர் கோமான் மலா யாவின் தற்காப்பு அலுவல்களிலும், நிதிக் காரியங்களி லும், அதன் வெளி விவகாரங்களிலும் பூரண அதிகார முடையவராய் இருப்பார்.

சிங்கப்பூரின் கவர்னரும் ஐக்கிய மலாயாவின் உயர் தர அதிகாரியும் குடியேற்ற நாடுகளின் அரசியற்காரிய தரிசியின் (Secretary of State for the Colonies) சிபாரி சின்பேரில் பிரிட்டிஷ் பிரதம மந்திரியால் ஏற்றுக் கொள்ளப்பட்டு மன்னர் கோமானுல் நியமனம் பெறுவார் கள். அரசியல் காரியதரிசி பிரதம மந்திரிக்கு அடங்கியவர். ஒரு புது அரசாங்கம் இங்கிலாந்தில் ஏற்படும் போது குடியேற்ற நாடுகளின் அரசியற்காரியதரிசியும் புதியவ ராகவே நியமிக்கப்படுவர். என்றாலும், குடியேற்ற நாடு களைப் பொறுத்தவரை பிரிட்டிஷ் அரசாங்கத்தின் திட்டம் அவ்வளவு மாறுபடுவது இல்லே. ஆயினும், அரசியற் காரியதரிசியும் அவருக்குத் துணைபுரியும் நிரந்தர உத்தியோ

கஸ்தர்களும் பிரிட்டிஷ் ஆளுகைக்கும் பாதுகாப்புக்கும் உட்பட்ட நாட்டு மக்களின் கருத்துக்களுக்கு எப்பொழுதும் செவி சாய்ப்பார்கள். இன்னும், பக்குவ காலத்திலே படிப்படியாக மக்களுக்குச் சுயாட்சி தரவேண்டும் என்பதே பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கொள்கையாகும்.

**சிங்கப்பூர் கவர்னரும் அவர் வேலையும்:**

கவர்னர் மன்னர் கோமானின் பிரதிநிதி, என்றாலும், அரசருக்குரிய உரிமைகளெல்லாம் அவருக்கில்லை. அவர் மன்னரால் அதிகார பூர்வமாக நியமிக்கப்படுபவராகையால் முடியரசுக் குடியேற்ற நாட்டில் அவரே தனித்த மேலதிகாரியாவர். அவர் மன்னருக்கே பொறுப்பானவர். ஆதலால், எல்லாக் குடிகளும் படைகளும் தோட்டி முதல் தொண்டைமானீறாக அவரைக் கனம் பண்ணி அவருக்கு மரியாதை செய்து, கீழ்ப்படிந்து, அவர் கட்டளைப்படி நடக்க வேண்டுவது இயல்பே. கவர்னரின் கடமைகள் மன்னரால் அவருக்கு அளிக்கப் பெற்ற நியமனப் பத்திரத்தில் (His Majesty's Commission) தெளிவாக வரையறுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. இன்னும் அவருக்குச் சில பொது அதிகாரங்களும் உள. உதாரணமாக, ஒரு குற்றவாளிக்கு மரண தண்டனையோ அல்லது நெடுஞ்சிறை வாசமோ விதிக்கப்பட்டால், அவற்றைக் கவர்னர் தம்முத்தேசப்படி குறைக்கவோ அல்லது குற்றவாளியை மன்னித்துவிடவோ கூடும். இது கவர்னரின் 'கருணை காட்டும் தனியுரிமை (Prerogative of mercy) என்று சொல்லப்படும்.

தம் நிருவகிப்பிலிருக்கும் நாட்டின் அரசாங்க உத்தியோகஸ்தர்களை மக்களால் 1955-ஆம் ஆண்டு தொடக்கம் தேர்ந்தெடுக்கப் பெற்ற மந்திரி சபையின் ஆலோசனை கொண்டு நியமிக்கவும், விலக்கவும், காரணமிருந்தால்



புது பெடரல் சட்ட சபையின் அங்கத்தினர்கள் கடந்த 1955 ஆகஸ்டு 30-ஆந்தேதியன்று விசேஷக்கூட்டமொன்றில் கலந்துகொண்டு விசுவாசப் பிரமாணம் செய்தனர். இப்படத்தில் சட்ட சபையின் ஒரே பெண் அங்கத்தினரான சேஹலிமாத்தான் பிந்தி அப்துல் மஜீது பிரமாணம் செய்வதைக் காணலாம். பின்னுலிருப்பவர் சபாநாயகர் ராஜா சர் உடா. அவருக்குக்கீழே சட்டசபைப் பரிபாலகர்.



இரண்டாவது சிலாங்கூர் சமஸ்தானக் கவுன்சிலின் அங்குரார்ப்பணக் கூட்டம் கடந்த 1955-ஆம் வருடம், அக்டோபர், 20-ஆந் தேதியன்று நடைபெற்றது. சிலாங்கூர் சுல்தாஞல் திறப்பு விழா விமரிசையாக நடந்தது.

கவுன்சில் திறப்பு விழாவுக்கு முன்பு இந்தப் படம் எடுக்கப்பட்டது. மத்தியில், இடப்புறமிருந்து ஆருமவராக அமர்ந்திருப்பவர்தான் சிலாங்கூர் சுல்தான் அவர்கள். அவருக்கு வலப்புறத்தில் இருப்பவர் சிலாங்கூர் மந்திரி புஸார் இஞ்சே அப்துல் அஜீஸ் பின்ஹாஜி அப்துல் மஜீது. அவருக்கு இடப்புறத்தில் உள்ளவர் பிரிட்டிஷ் ஆலோசகர் திரு. எப். வி. டக்வொர்த்.

வேலையினின்று நிறுத்தி வைக்கவும் கவர்னருக்கு அதிகாரமுண்டு. நாட்டுக்குரிய கூட்டங்களமைப்பதிலும், நிதி அலுவல்களிலும், தற்காப்புக் காரியங்களிலும், வெளி விவகாரங்களிலும் இங்கிலாந்திலுள்ள அரசியற்காரிய தரிசியின் தீர்ப்புக்குக் கவர்னரும் மந்திரி சபையும் அடங்கியவர்கள்.

**ஐக்கிய மலாயாவின் உயர்தர அதிகாரியும் அவர் வேலையும் :**

பினங்கு (வெல்லஸ்லி மாகாணம் உட்பட), மலாக்கா இவை மலாய் சமஸ்தானங்கள் போன்றவையல்ல என்பது நமக்குத் தெரியும். இப்பிரதேசங்களில் உயர்தர அதிகாரியின் உரிமைகளும் கடமைகளும் சிங்கப்பூரின் கவர்னரது போன்றவையே. இவ்விரு முடியரசுக் குடியேற்றப் பிரதேசங்களிலும் உயர்தர அதிகாரிக்குட்பட்ட நிரந்தர அதிகாரிகள் (Resident Commissioners) இருக்கிறார்கள்.

மலாய் சமஸ்தானங்களில் 'காருண்யம் காட்டும் உரிமை' அந்தந்த சமஸ்தானத்துச் சுல்தான்களுடையது.

சிங்கப்பூர்க் கவர்னரும் ஐக்கிய மலாயாவின் உயர்தர அதிகாரியும் மலாயா மக்களது கருத்துக்களை அவ்வப்போது இங்கிலாந்திலுள்ள அரசியற்காரியதரிசிக்குத் தெரிவித்தல் வேண்டும். அவர் அவைகளை நன்கு ஆராய்ந்து பின்னர் பிரிட்டிஷ் பிரதம மந்திரிக்கு விளக்கிச் சொல்வார். பிரதம மந்திரி முறையே மன்னர் கோமானுக்குத் தெரிவிப்பார். அக்கருத்துக்கள் அரசியல், பொருளாதாரம், வியாபாரம், சட்டதிட்டங்கள், தேச பரிபாலனம், நீதி, தற்காப்பு முதலியன சம்பந்தமானவையாக இருத்தல் கூடும். இவற்றைப் பொறுத்த மாமூல் விஷயங்களைத்

தெளிவாக உணரக் கூடியவர்கள் கவர்னரும், உயர்தர அதிகாரியும், அவர்களுக்குத் துணை புரியும் மந்திரி சபைகளுந்தான். ஏனென்றால், எல்லாக் காரியங்களும் அவர்களது கண்காணிப்பின்கீழ் உள்ளன. சிங்கப்பூர்க் கவர்னர், சிங்கப்பூரின் தலைமை மந்திரியையும் சிங்கப்பூரின் தலைமைக் காரியதரிசியையும் (Chief Secretary) எல்லாக்காரியங்களிலும் கலந்தாலோசிப்பார். ஐக்கிய மலாயாவின் உயர்தர அதிகாரி நாட்டின் தலைமை மந்திரியையும், தலைமைக் காரியதரிசியையும், பினங்கு மலாக்கா இவற்றின் அதிகாரத்துவப் பிரதிநிதிகளையும், இதர மலாய சமஸ்தானங்களின் மந்திரி புசார்களையும், பிரிட்டிஷ் ஆலோசகர்களையும் கலந்தாலோசிப்பர். இம்மேலுத்தியோகஸ்தர்களனைவரும் தத்தமக்குக் கீழுள்ள பலப்பல இலாக்காக்களினதும் ஜில்லாக்களினதும் (District) தலைமை உத்தியோகஸ்தர்களை முறையே கலந்தாலோசிப்பர்.

**அரசாங்கக் காரியதரிசிகள் :**

சிங்கப்பூர்க் கவர்னருக்குத் தலைமைக் காரியதரிசி (Chief Secretary) என்றோர் உத்தியோகஸ்தர் உண்டு. இவர் சிங்கப்பூரின் தலைமை மந்திரிக்கு அடுத்தபடியான உத்தியோகஸ்தர் எனலாம். இவரே சிங்கப்பூர் அரசாங்கத்துச் செயலாளர்.

இதே போன்று ஐக்கிய மலாயாவிலும் உயர்தர அதிகாரிக்குத் தலைமைக் காரியதரிசி (Chief Secretary) என ஒருவர் இருக்கின்றார். இவர் ஐக்கிய மலாயாவின் தலைமை மந்திரிக்கு அடுத்தபடியான உத்தியோகஸ்தர். இவரை ஐக்கிய மலாயா அரசியலின் செயலாளர் எனலாம். இவர் மந்திரிகளையும் இதர பிரதம உத்தியோகஸ்தர்களையும் சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உத்தியோகப் பற்

றற்ற அங்கத்தினர்களையும் கலந்தாலோசித்து அரசாங்க சம்பந்தமான விஷயங்களை உயர்தர அதிகாரியின் கவனத்திற்குக் கொண்டு வருவார். இனி, உயர்தர அதிகாரியின் கருத்துக்களையும் ஆஞ்ஞைகளையும் பிறருக்குத் தெரிவிப்பவரும் இவரே.

சிங்கப்பூர்க் கவர்னர் வெளியிடங்களுக்குப் போக நேரின், தலைமைக்காரியதரிசியே அவருக்குப் பதிலாக அரசியல் வேலைகளைக் கவனிப்பார். உயர்தர அதிகாரிக்கும் ஐக்கிய மலாயாவின் தலைமைக் காரியதரிசிக்கும் உள்ள சம்பந்தமும் இவ்வாறே. சட்ட சபைகளில் இவ்வரசாங்கக் காரியதரிசிகளும்மந்திரிகளும் முக்கிய இடம் பெறுவார்கள். அச்சபையின் அங்கத்தினர்களின் வினக்களுக்கெல்லாம் இவர்களே விளக்கங்கூறுவர். அரசாங்கத்தின் உத்தேசத்திலிருக்கும் சட்ட திட்டங்களையும் அதன் நோக்கங்களையும் விளக்கிக் காட்டுதல் இவர்களது பொறுப்பாகும்.

நிதி விஷயம் :

அரசியல் நிருவாகத்துக்குரிய சட்ட திட்டங்களை இயற்றுங்கால் நிதி வருவாயும் செலவும் முக்கிய கவனத்தைப் பெறுகின்றன.

ஒவ்வோர் ஆண்டுத் துவக்கத்திலும் அரசாங்க இலாக்காக்களெல்லாம் அடுத்து வரும் வருஷத்திற்குரிய செலவு வகையறுத் திட்டத்தைச் சட்டசபைக்கோ அல்லது சமஸ்தான சபைக்கோ சமர்ப்பிக்க வேண்டும். இத்திட்டமானது நுணுக்கத்துடனும் பெரு விவரிப்புடனும் தயாரிக்கப்படும். உதாரணமாக, சாதாரண குமாஸ்தா ஒருவரைக் காரியாலயமொன்றில் வேலைக்கமர்த்த வேண்டுமானல், அவரது கடமைகள், பொறுப்புகள், வேலைநேரம் முதலியனவெல்லாம் மேற்கூறிய திட்டத்தில் தெளி

16

வாகக் கூறப்பட்டிருத்தல் வேண்டும். பல இலாக்காக்களின் திட்டங்களையும் அதற்கதற்கென இருக்கும் உப குழுக்கள் ஆராய்ந்து உத்தேசச் செலவுகளைக் குறைக்க வேண்டிய இடங்களிற்குறைத்து, பின்னர் அவற்றைச் சபைக்குச் சமர்ப்பிக்கும். அப்பால் அத்திட்டங்கள் ஆமோதிக்கப் பெற்றவுடன், அவற்றிற்குத் தேவையான வருவாயைத் திரட்டுவதற்கு வழிகள் கண்டு பிடிக்கப் படும். நிதி சேமிப்பு, நிதிச் செலவு இரண்டும் நிதிக்காரிய தரிசியின் பார்வையிலிருக்கும். என்றாலும், தலைமை மந்திரியே அதற்குப் பொறுப்பானவர்.

தீர்வை, பலவித வரிகள், பத்திரங்களுக்கு ஒட்டப் படும் முத்திரைகள், பலவித லைசென்ஸ் (Licence), அபராதம், அரசாங்க நிதி முதலீட்டிலிருந்து (Investment) வரும் வட்டி, அரசாங்க நிலங்களின் வாடகை இவற்றின் வாயிலாக அரசாங்கத்துக்கு வருவாய் கிடைக்கின்றது. நாட்டின் பல விதச் சீர்திருத்தத்திற்காகவும், தற்காப்பிற்காகவும் செலவுமிகையாகிவிடின் வருமானவரி (Income-Tax) விதிக்கப்படும்; தீர்வைகளும் ஏற்றப்படும்.

அரசாங்க இலாக்காக்களின் வரவு செலவுகளைப் பரிசீலனை செய்யக் கணக்குப் பரிசோதனை இலாக்கா (Audit Department) உள்ளது. இது நுட்பமாக எல்லாக் காரியாலயங்களின் கணக்கு வழக்குகளையும் அவ்வப் போதே பரிசீலனை செய்யும். கணக்குப் பரிசோதனை இலாக்காவுக்குப் போதிய சுதந்தரம் உண்டு. இதனால் அது கவர்னரையும் உயர்தர அதிகாரியையும் மந்திரிமார்களையுங்கூட நிதி விஷயங்களில் ஆக்ஷேபிக்க இயலும்; அதுவுமன்றி, லண்டனிலுள்ள குடியேற்ற நாடுகளின் அரசியல் காரிய தரிசிக்கு (Secretary of State for the Colonies) தாம் காணும் நிதி சம்பந்தமான குறைகளைத் தெரிவிக்கக்கூடும்.

**மலாய் சமஸ்தானங்களின் சுல்தான்கள் :**

இஸ்லாம் சமய சம்பந்தமான அலுவல்களிலும், உபகாரச் சம்பள விஷயங்களிலும், இன்னும் உயர்தர அதிகாரியின் அபிப்பிராயப்படி அந்தந்த சமஸ்தானத்தாலேயே தீர்மானிக்கப்படவேண்டுமென்ற காரியங்களிலும், சட்டங்களை அங்கீகரிப்பதிலும் சுல்தான்களுக்கு உரிமை உண்டு. ஒவ்வொரு சுல்தானும் தம் தம் சமஸ்தானத்தில் ஒரு பிரிட்டிஷ் ஆலோசகரை ஏற்றுக்கொண்டு அவரது ஆலோசனைப்படியே தம் சமஸ்தான நிர்வாகக் காரியங்களை நடத்துதல் வேண்டும் என்ற ஒப்பந்தம் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கும் மலாயாச் சுல்தான்களுக்குமிடையே கடந்த எண்பது ஆண்டுகளாய் இருந்து வருகிறது.

**சட்டசபையும், நிர்வாக சபையும், மந்திரி சபையும் :**

இங்கிலாந்திலுள்ள அரசியற்காரியதரிசியினதும் பிரிட்டிஷ் பிரதம மந்திரியினதும் சிபாரிசின்பேரில் மன்னர் கோமான் சிங்கப்பூர்க் கவர்னரதும் ஐக்கிய மலாயாவின் உயர்தர அதிகாரியினதும் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த இயலும். இவ்விரு பிரதேசங்களில் பிரேரேபிக்கப்படும் உத்தேச சட்ட திட்டங்களையும் மன்னர் நிராகரிக்க இயலும். இது மன்னரின் 'நிராகரிக்கும் விசேஷ உரிமை' (Right of Veto) என்று சொல்லப்படும். ஆயினும், 1955–ஆம் ஆண்டு முதல் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட சபையும் மந்திரி சபையும் சிங்கப்பூரிலும், ஐக்கிய மலாயாவிலும் அரசியல் நிருவாகங்களை இப்பொழுது நடத்துவதனுல் இவ்விசேஷ உரிமை கையாளப்பட ஏதுவில்லை.

சிங்கப்பூரினதும் ஐக்கிய மலாயாவினதும் அரசியல் நிருவாகம் அதனதன் சட்ட சபையாலும் நிருவாக சபை

யாலும் (Legislative Council & Executive Council) நடத்தப்படுகின்றது. இவற்றைவிட மந்திரி சபையில் (Council of Ministers) மந்திரிமார் தங்கள் தங்கள் இலாக்காக்களுக்குரிய விஷயங்களை அடிக்கடி பரிசீலனை செய்வார்கள்.

நிருவாக சபைதான் அரசியல் காரியங்களை நடத்தி வைக்கின்றது. சிங்கப்பூரில் கவர்னருக்கும், ஐக்கிய மலாயாவில் உயர்தர அதிகாரிக்கும் உதவி புரிதலும் ஆலோசனை சொல்லுதலும் அந்தந்த நிருவாக சபையின் அல்லது மந்திரி சபையின் வேலையாகும். என்றாலும், மிக அவசியமான காரியங்களில் வேண்டுமானால் கவர்னரும் உயர்தர அதிகாரியும் நிருவாக சபையின் ஆலோசனைக்கு மாறாகத் தங்கள் 'நிராகரிக்கும் விசேஷ உரிமையைக்' (Right of Veto) கையாண்டு காரியத்தைச் செய்யலாம். ஆயினும், தாம் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளைப் பின்னர் முகாந்தரங்களுடன் முழு விவரமாக இங்கிலாந்தி லுள்ள அரசியற்காரியதரிசிக்குத் தெரிவித்தல் வேண்டும். ஆனால், இப்படிப்பட்ட சந்தர்ப்பம் இயல்பாக எழுவ தில்லை.

சிங்கப்பூர் நிருவாக சபைக்குச் சிங்கப்பூர்க் கவர்னர் தலைமை தாங்குவார். இதன் அங்கத்தினர்கள் :—தலைமை மந்திரி, வர்த்தகக் கைத்தொழில் மந்திரி, தலைமைக் காரியதரிசி, தொழில் பொதுநலன் மந்திரி, கல்வி மந்திரி, ஸ்தல அரசியல் - நில - வீடு வசதி மந்திரி, தபால் – தந்தி -ரேடியோ – ரெயில்வே - போக்கு வரத்து - மராமத்து மந்திரி, சுகாதார மந்திரி, பிரதம நியாய துரந்தரர், நிதிக் காரியதரிசி ஆக 9 பேர்.

சிங்கப்பூரின் சட்டசபையிலே அதன் நிர்வாக சபை அங்கத்தினருட்பட 32 பேர் இருப்பார்கள். இவர்களுள்,

25 பேர் பொது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்; 4 பேர் உத்தியோகப் பற்றற்றவர். இவர்கள் கவர்னரால் நியமிக்கப்பெற்ற பல சமூகப் பிரதிநிதிகள், தொழிற் சங்கப் பிரதிநிதிகள் முதலியோர். 3 பேர் உத்தியோக அங்கத்தினர்கள். சிங்கப்பூர்ச் சட்டசபைக்குக் கண்ணியம் வாய்ந்த ஒருவர் சபை நாயகராக (Speaker) இருப்பார். இவர் சபையின் அங்கத்தவரல்லர்.

சிங்கப்பூர், பினங்கு, மலாக்கா ஆகிய பிரதேசங்களில் பிரிட்டிஷ் பிரஜைகள் வாக்காளர்களாகலாம். ஐக்கிய மலாயாவில் பிறப்பாலோ பதிவாலோ இந்நாட்டுப் பிரஜைகளாக இருத்தல் வேண்டும். வாக்காளர்கள் 21 வயது பூர்த்தியடைந்திருத்தல் வேண்டும். தேர்தல்கள் எங்கும் போன்று கட்சி அடிப்படையில் நடைபெறுகின்றன.

சிங்கப்பூரிலும் ஐக்கிய மலாயாவிலும் நிர்வாக சட்டசபைகளிலிருக்க வேண்டிய அரசாங்க உத்தியோக அங்கத்தினர், உத்தியோகப் பற்றற்ற அங்கத்தினர் ஆகிய இரு பிரிவினரது எண்ணிக்கை மன்னர்பிரானல் கவர்னருக்கும் உயர்தர அதிகாரிக்கும், இது சம்பந்தமாக அளிக்கப்படும் பத்திரத்தில் (Letter Patent) குறிப்பிடப்பட்டிருக்கும். சட்டசபையின் கால அளவு 4 ஆண்டுகளாகும்.

ஐக்கிய மலாயாவின் நிருவாக சபை கோலாலம்பூரில் கூடும். இதற்குத் தலைவர் உயர்தர அதிகாரியே. இதில் 15 அரசியல் உத்தியோக அங்கத்தினர் உளர். அவர்கள் பின் வருமாறு :—தலைமை மந்திரியும் உள்நாட்டு மந்திரியும், தலைமைக் காரியதரிசி, போக்கு வரத்து மந்திரி, பிரதம நியாய துரந்தரர், நிதிக் காரியதரிசி, இயற்கை மூலப் பொருள்கள் மந்திரி, பொருளாதாரக் காரியங்கள் மந்திரி, தற்காப்புக் காரியதரிசி, கல்வி மந்திரி,

சுகாதார சமூக நலன் மந்திரி, தொழில் மந்திரி, ஸ்தல அரசியல்–வீட்டு வசதி–நகர்த் திட்ட மந்திரி, விவசாய மந்திரி, மராமத்து மந்திரி, தந்தி-தபால் மந்திரி.

ஐக்கிய மலாயாவின் சட்டசபைக்குக் கண்ணியம் வாய்ந்த ஒருவர் சபாநாயகராக (Speaker) இருப்பர், இவர் சபை அங்கத்தவரல்லர், இச்சட்டசபையில் 3 உத்தியோக அங்கத்தினர், 9 சமஸ்தானங்களின் மந்திரி புசார் மார், பினாங்கு மலாக்காப் பிரதிநிதிகள் 2, நியமன அங்கத்தினர்கள் 32 பேர் (இவர்களில் சகல சமூகத்தையும் சேர்ந்த 6 வர்த்தக முதலாளி பிரதிநிதிகள்; தோட்டத் தொழில் முதலாளி பிரதிநிதிகள் 6 பேர்; சுரங்கத் தொழில் முதலாளி பிரதிநிதிகள் 4 பேர்; விவசாயப் பண்ணை முதலாளி பிரதிநிதிகள் 2 பேர்; தொழிற்சங்கங்களின் 4 பிரதிநிதிகள்; சிறுபான்மையோரான பூர்வக்குடிகள், இலங்கையர், யூரேஷியர்கள் பிரதிநிதிகள் 3 பேர்; மற்றும் நியமன அங்கத்தினர்கள் 7 பேர்), ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட (மந்திரிகள் உட்பட) அங்கத்தினர் 52 பேர்; ஆக மொத்தம் 98 அங்கத்தினர்கள்.

சட்டசபை அங்கத்தினர்கள் பொதுவாக நாட்டின் நன்மைக்குரிய எவ்விஷயத்தையும் சட்ட சபையில் பிரேரேபிக்கலாம்; அல்லது அரசாங்க சட்டதிட்டங்கள் நடவடிக்கைகள் இவற்றிலுள்ள குற்றங்குறைகளை ஆராய்ந்து அவைகளுக்குப் பரிகாரம் தேடலாம்; இன்னும் தனிப்பட்டவர்களதோ சங்கங்களினதோ முறையீடுகளையும் இவர்கள் சபைக்கு முன்னர்ச் சமர்ப்பிக்கலாம். சிங்கப்பூரிலும் ஐக்கிய மலாயாவிலும் உத்தியோகப் பற்றற்ற அங்கத்தினர் யாவரும் சபை அலுவல்களுக் குரிய போக்குவரத்துச் செலவீட்டை இலவசமாகப்பெறு வதுடன் குறிப்பிட்ட ஒரு சிறு தொகையைக் கைச்செல



பெடரேஷன் ஹைகமிஷனர் இப்படத்தில் விசேஷ சடங்குகளுக்கான தமது உடையுடன் இருப்பதைக் காணலாம். அவர் தலைக்கு மேலே மலாயா பெடரேஷன் முத்திரை அடையாளம் பொறிக்கப்பட்டிருக்கிறது. ஹை கமிஷனர் பேசிக்கொண்டிருக்கிறார். அவருக்குக் கீழே இருப்பவர் சபாநாயகர் ராஜா சர் உடாவும் சட்டசபைப் பரிபாலகர் திரு. சி. ஏ. பிருட-ரிக்ஸும். ஐந்து சுல்தான்களின் பிரதிநிதிகளும் தேசிய உடைகளுடன் வரிசையாகக் கோடியில் அமர்ந்திருப்பதைக் காணலாம்.



தேர்தலுக்குப் பிறகு பெடரேஷன் மலாயா சட்டசபை ஆரம்பக் கூட்டம் 31-8-'55 புதன் கிழமை காலை கோலாலம்பூரில் நடைபெற்றது.

அதற்கு மே. த. ஹை கமிஷனர் சர். டொனல்ட் மெக்லிவ்ரேயும், சுல்தான்களின் பிரதிநிதிகளும், கமிஷனர் ஜெனரல் மால்கம் மெக்டொனல்டும், காலனி மந்திரி திரு. ஆலன் லானக்ஸ் பாய்டும், சிங்கப்பூர் சட்டசபைப் பிரதிநிதிகளும் விஜயம் செய்திருந்தனர்.

இந்தப்படத்தில் முதலமைச்சர் துங்கு அப்துல் ரஹ்மான் அவர்கள் பேசுகிருர். மேன்மை தங்கிய ஹை கமிஷனர் சர். டொனல்டு மெக்லிவ்ரேயையும், சபாநாயகர் ராஜா சர். உடாவையும், சட்டசபைப் பரிபால கரையும் காணலாம்.

விற்காகப் பெறுகிறார்கள். உத்தியோக அங்கத்தினர் களும் மந்திரிகளும் ஊதியம் பெறுகிறார்கள்.

கோலாலம்பூரில் குறைந்தளவு இரண்டு மாதங்களுக் கொருமுறை கூடும் ஐக்கிய சபையானது ஒன்பது மலாய் சமஸ்தானங்களின் சபைகளுக்கும், பினாங்கு மலாக்கா ஆகியவற்றின் மாகாண சபைகளுக்கும் உட்படாத விஷ யங்களைக் கவனிக்கும்; அஃதுடன், ஐக்கிய மலாயாவிற் குரிய பொதுச்சட்ட திட்டங்களையும் ஏற்படுத்தும். அமு லுக்குக் கொண்டு வரப்படவிருக்கும் உத்தேச சட்ட திட் டங்களெல்லாம் அவ்வவற்றிற்கெனச் சட்ட சபையால் நிய மிக்கப்படும் சிறு சிறு குழுவினரால் நுணுக்கத்துடன் தயாரிக்கப்பட்டு, பின்னர் நிருவாக சபை சட்ட சபைகளி னால் விவாதிக்கப்படும். பிறகு அவை சிங்கப்பூரிலும் ஐக்கிய மலாயாவிலும் தலைமைக் காரியதரிசியால், அல் லது பிரதம நியாய துரந்தரரால் சட்ட சபையோருக்குத் தெளிவாக விளக்கப்படும்; சட்ட சபை அங்கத்தினர்கள் அவற்றில் திருத்தங்களோ மாற்றங்களோ சட்டங்கள் பிறப்பிப்பதற்கு முன்னர்ச் செய்யக்கூடும். தீர்மானிக்கப் படும் சட்டங்களை ஏற்கவும் மறுக்கவும் சிங்கப்பூரில் கவர்னருக்கும், ஐக்கிய மலாயாவில் உயர்தர அதிகாரிக் கும் உரிமையுண்டு. பிரத்தியேகச் சட்டங்கள் உத்தே சத்திலிருக்குமானால், அவை மன்னர் பிரானது உடன் பாட்டிற்கோ மறுப்பிற்கோ உட்பட்டவை.

சபைகளிலிருக்கும் மந்திரிகளும் உத்தியோக அங்கத்தி னர்களும் தம் தம் இலாக்காக்களுக்குத் தேவைப்படும் சட்டதிட்டங்களைப் பிரேரேபிப்பர். இன்னும் உத்தியோ கப் பற்றற்ற அங்கத்தினர்களால் வினவப்படும் காரியங் களுக்கு அரசாங்கத்தின் சார்பில் மறுமொழியுங் கூறுவர். மந்திரிகள், உத்தியோக அங்கத்தினர்கள் ஒவ்வொருவருக்

கும் ஒவ்வோர் ஓட்டு (vote-வாக்கு)உண்டு : என்றுலும் தலைமை மந்திரி புறம்பாக உத்தரவு கொடுத்தாலன்றி இவர்கள் எப்பொழுதும் அரசாங்கத்தைச் சேர்ந்தே ஓட்டுச் செய்தல் வேண்டும்.

---

# 16. மலாயாவின் இப்போதைய அரசியல் விவரம்—II

**சுல்தான்களின் மகாசபை :**

"மஜ்லிஸ் ராஜா நகரி மலாயு" (Majlis Raja Negri Melayu) என்ற ஒரு மகாசபையானது 1948ல் அமைக்கப் பெற்ற ஐக்கிய சபைத்திட்டத்திலே இடம் பெற்றது. இம்மகாசபையில் ஒவ்வொரு சுல்தானுக்கும் உதவியாக ஒரு மலாய் ஆலோசகர் இருப்பார்.

இச்சபைக்குரிய "மொஹர் பிஸார் ராஜா ராஜா" (Mohar Besar Raja Raja or the Rulers' Seal) என்னுமொரு முத்திரையானது ஐக்கிய மலாயாவின் நிர்வகிப்புச் சட்டங்களுக்கெல்லாம் பொறிக்கப்படும். இதைப் "பென்யிம்பன் மொஹர் பிஸார் ராஜா ராஜா நகரி மலாயு" (Penyimpan Mohar Besar Raja Raja Negri Melayu) என்னும் ஒரு மலாய் உத்தியோகஸ்தர் மிக்க கவனத்துடன் பாதுகாத்து வைத்திருப்பார். இவர் மேலே நாம் கண்ட மகாசபைக்குக் காரியதரிசியாகவும் இருப்பார். இச்சபை குறைந்தளவு ஓராண்டில் மூன்று தடவையாயினும் கூடும்; இதில் சுல்தான்களனைவரும் உயர்தர அதிகாரியுடன் குடி ஜனங்களின் நலன்களைப் பற்றிப் பொதுவாகப் பேசுவார்கள். சபைக்குச் சுல்தான்களுள் யாரேனுமொருவர் தலைமை வகிப்பார்.



பிரிட்டிஷ் காலனி மந்திரி திரு. ஆலன்
லெனொக்ஸ் பாய்டு தமது பிரசங்கத்தை
நிகழ்த்தும் காட்சி,



ஸர் ஜெரால்ட் டெம்பிளரும் சுவாமி சத்தியானந்தாவும் பெட்டாலிங் சுத்த சமாஜ ஆலயத்திலிருந்து படி இறங்கல்—18-2-1954.

இன்னும், ஐக்கிய மலாயாவிற் குடியேற வரும் விதேசிகளின் எண்ணிக்கையைப் பற்றிய சட்டதிட்டங் களில் மாற்றங்களோ மாறுதல்களோ செய்யப்படவேண் டுமாயின், சுல்தான்களையும் தலைமை மந்திரியையும் சட்ட சபையின் உத்தியோகப் பற்றற்ற அங்கத்தினர்களையும் உயர்தர அதிகாரி கலந்தாலோசிக்க வேண்டும்.

**சமஸ்தான ஆட்சி :**

ஐக்கிய நிருவாக சபை, ஐக்கிய சட்டசபை இவை யன்றி ஒவ்வொரு சமஸ்தானத்திலும் (State) ஒரு நிரு வாக சபையும் ஒரு சமஸ்தான சபையும் (State Executive Council and Council of State) உண்டு. சமஸ் தான சபைக்கு அச்சமஸ்தானத்து முதல் அமைச்சர் அல்லது மந்திரி புஸார் (Mentri Besar) தலைவராய் இருப்பார். இதில் அங்கத்தினராக சமஸ்தான பிரிட்டிஷ் ஆலோசகர் (State British Advisor), சமஸ்தான காரிய தரிசி (State Secretary), சட்ட ஆலோசகர் (Legal Advisor), சமஸ்தான நிதி உத்தியோகஸ்தர் (State Financial Officer), பெரிய இலாக்காக்களின் தலைமை உத்தியோகஸ்தர்கள், பல சமூகங்களின் முக்கியப் பிரதி நிதிகள், குடிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர் கள் ஆகியோர் இருப்பார்கள். சமஸ்தான சபையில் நிறைவேற்றப்பெற்ற எந்தச் சட்டமும் சமஸ்தான சுல் தானது அங்கீகாரத்தைப் பெறல் வேண்டும். எந்த முக்கியமான ஓர் அரசியல் விஷயத்திலும் கருத்து வேற்றுமை ஏற்பட்டால், பிரிட்டிஷ் ஆலோசகர் அல்லது உயர்தர அதிகாரியின் முடிவையே சமஸ்தான சுல்தான் ஏற்றுக்கொள்ளல் வேண்டும்; சமஸ்தான நிருவாக சபையில் மேலே சொல்லப்பட்ட 5 மேலிட உத்தி யோகஸ்தரோடு வேறு உத்தியோக அங்கத்தினரும் உத்தி

யோகப் பற்றற்ற அங்கத்தினரும் இருப்பர். உத்தியோக அங்கத்தினரின் எண்ணிக்கை அதிகமாக இருக்க வேண்டும்.

நிர்வாக சம்பந்தமான சாதாரண அலுவல்களெல்லாம் அந்தந்த சமஸ்தான அரசாங்கத்தாலேயே கவனிக்கப்படும். பெரிய விஷயங்கள் மாத்திரம் ஐக்கிய அரசாங்கத்தால் நிர்வகிக்கப்படும். நிர்வாகத் திறமையையும் சிக்கனத்தையும் கருதியே இவ்வொழுங்கு உள்ளது. உதாரணமாக, மலாயாப் புகை வண்டிப்பாதை நிர்வகிப்பு ஐக்கிய அரசாங்கத்திற்குக்கீழ் உள்ளது. அவ்வாறன்றி, பல சமஸ்தானங்கள் இதன் நிர்வகிப்பில் தலையிட்டால் பிரயாணக்கிரயம், சாமான்கள் ஏற்றுமதி இறக்குமதிக் கிரயம் எல்லாம் சமஸ்தானத்துக்கும் சமஸ்தானத்துக்கும் இடையே வித்தியாசப்பட்டுக் குடிஜனங்களுக்குப் பல இன்னல்கள் உண்டாகும்.

---

# 17. ஸ்தல ஆட்சி

## (Local Government)

இது வரை மேலிடத்து அரசியலைக் கவனித்தோம். இப்பொழுது நாம் நமது தினசரி வாழ்க்கையில் தொடர்பு கொள்ளும் அரசியலைப்பற்றி ஓரளவு தெரிந்துகொள்ளல் வேண்டும்.

ஒவ்வொரு சமஸ்தானமும் சில ஜில்லாக்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு ஜில்லாவிலும் மலாய் மொழியில் 'முக்கிம்' (Mukim) என்று சொல்லப்படும் சிறு பிரிவுகள், 'கம்பங்கள்' (Kampong), பட்டினங்கள், நகரங்கள் ஆகியவை உள்ளன.

ஒரு ஜில்லாவின் அதிகாரி 'டிஸ்ட்ரிக்ட் ஆபீசர்' (District Officer) எனப்படுவார். இவரது பார்வையில் நகர சபைகள் (Municipal Councils), பட்டின சபைகள் (Town Councils and Town Boards), நாட்டுப் புறச் சபைகள் (Rural Boards), ஸ்தல சபைகள் (Local Councils) ஆகியன உள்ளன. ஜில்லா பெரியதாய் இருந்தால் இவருக்கு உதவியாக உதவி-ஜில்லா அதிகாரிகள் இருப்பார்கள். நகர சபைகளுக்கு இவரைப் போன்ற சம அந்தஸ்துடைய உத்தியோகஸ்தர்கள் (Presidents of Municipal Councils) தலைமை தாங்குவார்கள். ஒவ்வொரு முக்கிமுக்கும் ஒவ்வொரு புங்குளு (Penghulu) இருப்பார். புங்குளுதான் முக்கிம் தலைவர். இவர் ஜில்லா அதிகாரிக்கும் அவரது உத்தியோகஸ்தர்களுக்கும் நிர்வாக விஷயங்களில் உதவி செய்தல் வேண்டும் புங்குளுவாக நியமிக்கப்படும் ஒருவர் குறிப்பிட்ட ஸ்தலத்தைச் சேர்ந்த மலாயராக இருத்தல் வேண்டும்; செல்வாக்கும் நல்ல பேரும் உடையவராக இருத்தல் வேண்டும். ஜில்லா அதிகாரியின் சிபாரிசின் பேரில் சமஸ்தான சபை புங்குளுவை நியமிக்கிறது. அவருக்குச் சம்பளமுண்டு. சிறிய வழக்குகளை விசாரிக்கவும் அதிகாரமுண்டு.

புங்குளுவிற்குக்கீழ் இன்னும் சிறு உத்தியோகஸ்தர்கள் இருப்பார்கள். இவர்கள் 'கித்துவா' (Ketua) என்று சொல்லப்படுவார்கள். கம்பங்களுக்கு இவர்களே தலைவர்களாக இருந்து புங்குளுவுக்கு உதவி செய்வார்கள். இவர்கள் மலாயர்களாகவும் வயது சென்றவர்களாகவும் கண்ணியமுடையவர்களாகவும் இருத்தல் வேண்டும். இவர்களின் வேலை திருப்தியாக இருந்தால், ஆண்டின் முடிவில் இவர்களுக்குச் சிறிய வெகுமதிப் பணம் அளிக்கப்படும்.

ஜில்லா அதிகாரி தேச பரிபாலனத்தில் முக்கிய அம்சம் பெறுகிறர். அரசாங்கத்திஞல் இடப்படும் கட்டளைகள் நடைமுறையில் கையாண்டு வரப்படுவதை இவர் பொறுப்புடன் கவனிக்க வேண்டும். இந்நாட்டு வாசி ஒருவருக்கு எத்தகைய பாதகமும் அரசாங்கத்திஞல் ஏற்பட்டால், அவர் அதை ஜில்லா அதிகாரிக்குத் தெரிவிக்கலாம். ஜில்லா அதிகாரி அதனைச் சீர்தூக்கி ஆராய்ந்து செய்ய வேண்டுவதைச் செய்வார். எல்லோரையும் அவர் சமமாக நடத்துதல்வேண்டும். ஜில்லாவில் நிகழும் காரியங்கள் அனைத்தும் அவருக்குத் தெரிந்திருத்தல் வேண்டும். அவர் ஏற்றத் தாழ்வில்லாமல் எல்லோருடனும் சுமுகமாகப் பழக வேண்டும். பெருங்காரியங்கள் இருந்தாலோ, நிகழ்ந்தாலோ, தம் சமஸ்தான காரியாலயத்துக்கு அவற்றைத் தெரிவித்தல் ஜில்லா அதிகாரியின் பொறுப்பு, அவருடைய கடமைகள் பலதரப்பட்டவை. அவைகளை நான்கு பெரும்பிரிவுகளுக்குள் அடக்கலாம்; முதலாவது நில சம்பந்தமானது. இரண்டாவது, அரசாங்கத்தின் வருவாய் சம்பந்தமானது. மூன்ருவது, நியாய நீதி. நான்காவது, குடிகளின் இதரப் பொது அலுவல்கள்.

**ஜில்லா அதிகாரியின் அந்தஸ்து :**

எல்லா நிலமும் பூர்விகமாக அரசாங்கத்திற்கே உரியது. எனவே, நிலவரி, வீட்டு வரி முதலியன ஜில்லா அதிகாரியால் குடிகளிடமிருந்து வசூலிக்கப்படுகின்றன. இன்னும், ஒருவருக்கோ அல்லது ஒரு கம்பெனியாருக்கோ ரப்பர்த் தோட்டம், அன்ஞசித் தோட்டம், காப்பித் தோட்டம், புன்செய் நன்செய் பயிரிடுதல், சுரங்க வேலை இவற்றிற்கு நிலம் தேவைப்பட்டால், அன்னவர் ஜில்லா அதிகாரிக்கு மனுச் செய்தல் வேண்டும். அவர் அரசாங்கத்தின் உபயோகத்திற்கு அது தேவையில்லையென்று கண்

டால், அங்கிலத்தை வாடகைக்கு மனுதாரருக்குக் கொடுப்பார். என்றாலும், அங்கிலம் அரசினருடைமையாகவே இருந்து வரும். வரிகள் வாயிலாகவும் வாடகை வாயிலாகவும் அரசாங்கத்திற்கு வருவாய் கிடைக்கிறது.

நாம் மேலே கண்ட வருவாயைவிடக் காட்டு மரங்களை வெட்டுகிறவர்கள் அதன்பொருட்டு அநுமதி வரி செலுத்தல் வேண்டும். அநுமதியில்லாமல் காட்டு மரங்களை வெட்டுவது குற்றமாகும். ஜில்லா அதிகாரி நியாய ஸ்தலங்களில் நீதிபதியாக இருத்தலும் உண்டு; அக்காலை குற்றவாளிகளுக்கு அவர் விதிக்கும் அபராதங்களும் அரசாங்க நிதிக்குச் சேருகின்றன. பல விதப் பத்திரங்களுக்கு முத்திரை அடிக்கப்படும் போது முத்திரைக் கிரயம் வசூலிக்கப்பட்டு அதுவும் இந்நிதிக்குச் சேருகின்றது. ஏற்றுமதி இறக்குமதிச் சாமான்களுக்கு இடப்படும் தீர்வையும் இந்நிதிக்கே சேரும்.

தம் ஜில்லா வாசிகளின் ஆரோக்கியத்தைக் கருதி அவர்களது சுகாதார வாழ்வை அபிவிருத்தி செய்வது ஜில்லா அதிகாரியின் பொதுக்கடமையாகும். இத்துறையில் அவருக்கு உதவி புரிய சுகாதார இலாக்கா இருக்கின்றது. நீர்நிலைகள், குடிகளுக்குத் தண்ணீர் வசதியளித்தல் முதலியவற்றை ஆராய்ந்து, ஜில்லா அதிகாரி அவற்றிற்கென இருக்கும் இலாக்கா அதிகாரிக்கு எழுதுவார்: மிருகங்களின் பீடைகளைப்பற்றி மிருக வைத்திய இலாக்காவுக்குத் தெரிவிப்பார்; நகர கிராமவாசிகளின் சிக்கனம், பணச் சேமிப்பு இவற்றின்பொருட்டு ஆங்காங்குக் கூட்டுறவு சங்கங்கள் (Co-operative Societies) ஏற்படுத்தத் தூண்டுவார்; பண்ணைக்காரரது நெல், முட்டை, கோழி, கால்நடை முதலியவற்றை அவர்கள் நல்ல விலைக்கு விற்பதற்கு உதவி புரிவார்; ரஸ்தாக்கள், காலடிப் பாதைகள்

ஆகியவற்றின் அமைப்பு, சீர்திருத்தம், பாதுகாப்பு முதலிய வற்றையும் கவனிப்பார். நன்செய்ப்பொருள் போன்ற உணவுப்பொருள்களின் பெருக்கத்தில் அவருக்கு அக்கறை அதிகம். வயல்களையும் நீர்ப்பாசனங்களையும் அடிக்கடி அவர் பார்வையிடுதல் உண்டு. இவ்வேலையில் அவருக்கு விவசாய இலாக்கா துணை செய்கிறது.

ஜில்லா அதிகாரியின் பொறுப்புகள் பல; எனவே, அவருக்கு உதவியாகத் தேர்ச்சியுள்ள பல உத்தியோகஸ்தர் கள் இருப்பார்கள். இன்னும் அவருக்கு ஆலோசனை கூறவும் துணை செய்யவும் பல சபைகள் (Boards) உண்டு. இச்சபைகளில் உத்தியோகஸ்தரும் அரசாங்க உத்தியோ கப் பற்றற்றவர்களும் உறுப்புப் பெறுகிறார்கள். இச்சபை களில் பிரதானமானவை பின் வருவன :—சுகாதார சபை (Health Board), அனுமதி வழங்குஞ்சபை (Licensing Board), கொசு நாசசபை (Mosquito Destruction Board), ரப்பர் அனுமதிச் சபை (Rubber Licensing Board) என்பன.

லைசென்ஸிங் போர்டு குடிவகைகள் விற்கும் கடை களின் விஷயங்களையும், ரப்பர் லைசென்ஸிங் போர்டு ரப்பரில் வியாபாரஞ்செய்யுங்கடைகள் விஷயங்களையும், கொசு நாசசபை கொசுக்கள் விருத்தியாகாமல் நீர் நிலை களுக்கு எண்ணெய் (நச்சு மருந்து) தெளிப்பது, பள்ளம் குழிகளை நிரவுவது ஆகியவற்றையும், சுகாதார சபை சுத்தம், நோய்த் தடை, ஆரோக்கியம் முதலியவற்றையும் கவனிக்கும்.

ஸ்தல சபைகளின் (Local Councils) சட்டம் 1952ல் அமலுக்கு வந்தது. ஸ்தல சபைக்கு ஜில்லா அதிகாரியே தலைவர். இதில் குறைந்த அளவு ஏழு அங்கத்தினரும்கூடிய அளவுபதினைந்துஅங்கத்தினரும்இருப்பார்கள், இவர்களுள்

$\frac{2}{3}$ பாகத்தவர்கள் வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள்; $\frac{1}{3}$ பாகத்தவர்கள் சிறுபான்மை வகுப்பைச் (Minority Communities) சேர்ந்தவர்கள். அவர்கள் சமஸ்தானத்து முதல் அமைச்சராலோ அல்லது பினங்கு மலாக்கா இவற்றின் நிரந்தர அதிகாரியாலோ நியமிக்கப்படுகின்றவர்கள். ஸ்தல சபைகளுக்கு மூன்று ஆண்டுக்கொருமுறை தேர்தல் நடக்கும்; 21 வயதும் அதற்கு மேற்பட்ட வயதும் உடையவர்களே இதில் பங்கு பெறலாம். இச்சபைகள் கல்வி, பள்ளிக்கூடத் தோட்டம், விளையாட்டுத்திடல், ரஸ்தாக்கள், பீடங்கள், குப்பை, பொது ஜன சந்தை (Market), சமூக நலன் நிலையம், பொதுத் தோட்டங்கள், சில வரிகள் முதலியவைகளைக் கவனிக்கும். இச்சபையின் கூட்டம் மாதம் ஒரு முறை நடக்கும்.

**நகர சபைகள், பட்டின சபைகள், நாட்டுப்புறச் சபைகள்.**

மலாயாவின் பெரிய நகரங்களான சிங்கப்பூர், பினங்கு, மலாக்கா, கோலாலம்பூர் ஆகிய இடங்களில் நகர சபைகளும் (Municipalities), மற்றைய பெரிய பட்டினங்களில் பட்டினப் பெருஞ்சபைகளும் (Town Councils), இதர சிறிய பட்டினங்களில் சாதாரண பட்டினச் சபைகளும் (Town Boards), இவையொழிந்த நாட்டுப்புறங்களில் நாட்டுப்புறச் சபைகளும் (Rural Boards) ஸ்தல ஆட்சியின் நிலையங்களாய் விளங்குகின்றன. இவை ஒவ்வொன்றும் வேறு வேறு பெயர்களால் குறிப்பிடப்பட்டாலும் இவை யாவும் செய்கிற வேலைகள் ஏறத்தாழ ஒரே விதமானவைகளே.

பத்தாயிரத்துக்கு மேற்பட்ட ஜனத்தொகையுள்ள பட்டினங்களில் பட்டினப் பெருஞ்சபைகள் உண்டு. அவ்விதச் சபைகள் பத்தொன்பது ஐக்கிய மலாயாவில்

இருக்கின்றன. சிறிய பட்டினங்கள் அறுபத்து நான்கில் சாதாரண பட்டினச் சபைகள் உள்ளன. நாட்டுப்புறச் சபைகள், மலாக்கா, பினங்கு, வெல்லஸ்லி மாகாணம், சிங்கப்பூர் ஆகிய இடங்களிலேயே இருக்கின்றன.

ஸ்தல ஆட்சியின் விரிவான நோக்கம் என்ன வெனின், அவ்வவ்விடத்து வாசிகளால் பொது மக்களின் நன்மைக்காக அரசாங்கம் இயங்கவேண்டும் என்பதாம். ஒரு நகர சபையில் ஓர் அத்தியக்ஷர் (President) இருப்பர். இவர் மலாயா நியாயபாரக உத்தியோகஸ்தர் (Malayan Civil Servant); நல்ல அனுபவம் வாய்ந்த வராகவும் இருப்பார். இவரது சபையில் குறைந்த அளவு ஆறும் கூடிய அளவு இருபத்து நான்குமான அதிகார நியமனம் பெற்ற அங்கத்தினர்கள் (Councillors) இருப் பர். இவர்களுள் அதிகமானவர்கள் வாக்காளர்களினுல் மூன்று ஆண்டுக்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படுகிறவர் கள். அவரவர்கள் பெற்ற வாக்குகளுக்கு ஏற்ப ஆண்டுக் கொரு முறை தேர்தலுமுண்டு.

குறைந்த எண்ணிக்கையோரில் சிலர் பினங்கிலும் மலாக்காவிலும் ஐக்கிய மலாயாவின் உயர்தர அதி காரியாலும், சிங்கப்பூரில் சிங்கப்பூர்க் கவர்னராலும், சமஸ்தானங்களில் சுல்தான்களினுலும் நியமிக்கப் படுவார்கள்; வேறு சிலர் வர்த்தக சங்கங்கள், பெரிய சமூக ஸ்தாபனங்கள் முதலியவற்றுல்தேர்ந்தெடுக்கப்பட்டு நியமனம் பெறுவார்கள். இந்தக் கவுன்ஸிலர்கள் பொது வாக வைத்திய நிபுணர், சட்ட நிபுணர், வியாபார நிபுணர் ஆகியோரா்ய் இருப்பர். இவர்கள் தங்கள் சேவைக்குச் சம்பளம் ஏற்றுக்கொள்வதில்லை; முனிசிபல் இலாக்காக் களின் வரவு செலவுகளையும் வேலைகளையும் கவனிப்பார் கள். கவுன்ஸிலர்களுள் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பகுதி

யார் தாம் சேவையாற்றிய பின் தமக்குக் கிடைத்துள்ள வாக்குகளின் எண்ணிக்கைக்கு ஒவ்வத் தாங்களாகவே ஆண்டுதோறும் பதவியிலிருந்து நீங்கிக்கொள்வர். என்ருலும் இவர்கள் மீண்டும் தேர்தலுக்கு நிற்கலாம். இவர்கள் எல்லோருக்கும் ஆங்கிலத்தில் நல்ல புலமை இருத்தல் வேண்டும்.

முனிஸிபாலிட்டியில் தண்ணீர் இலாக்கா, மின்சார இலாக்கா, வாகன இலாக்கா, சுகாதார இலாக்கா, கட்டட இலாக்கா, மிருக வைத்திய இலாக்கா, தீயணைக்கும் இலாக்கா முதலியன இருக்கும். முனிசிபல் காரியதரிசியின் காரியாலயத்தில் நிதி சம்பந்தமான விஷயங்களும் நிர்வாக விஷயங்களும் கவனிக்கப்படும்.

அத்தியக்ஷருக்கு உதவியாகக் கவுன்ஸிலர்களும், ஆலோசனை சொல்லப் பல இலாக்காக்களின் அதிபர்களும் இருக்கின்ருர்கள் என்ருலும், எக்கருத்தையும் ஏற்கவோ தள்ளவோ அவருக்கு அதிகாரம் உண்டு. அத்தியக்ஷர் உட்பட, எல்லாக் கவுன்ஸிலர்களின் நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்பார்வை இடுகின்றது. அவர்கள் தாம் செய்யவேண்டிய வேலைகளைச் செய்யத் தவறிவிட்டால், அவ்வப்பிரதேசத்திற்கேற்ப உயர்தர அதிகாரியோ, கவர்னரோ, சுல்தானே விசாரணை நடத்துவார்; விசாரணை சம்பந்தமான அறிக்கை சமஸ்தான சபையாலோ, சட்ட சபையாலோ பரிசீலனை செய்யப்படும்.

முனிசிபாலிட்டி மாதந்தோறும் இரண்டு முறை கூடும். கவுன்ஸிலர்கள் ஆட்சேபனை இல்லாவிடில்பொது ஜனங்களும் அதன் கூட்டங்களுக்குப் போகலாம். கவுன்ஸிலர்களின் தீர்மானங்கள் யாவும் அவற்றிற்கென இருக்கும் ஒரு புத்தகத்தில் பதிவு செய்யப்படும். பதிவுப் புத்தகத்தைப் பொது ஜனங்களில் எவரும் பார்க்க விரும்பினுல்

பார்வையிடலாம். இன்னும், தீர்மானங்களும் பத்திரிகை களில் பிரசுரிக்கப்படும்.

முனிஸிபாலிட்டியின் பல வேலைகளைக் கவனிக்க உப குழுக்களும் உண்டு. முனிசிபாலிட்டியின் முக்கிய நோக்கமாவது:— மின்சாரம், தண்ணீர், சுகாதாரம், ரஸ்தா, நோய்களைத் தடை செய்தல், பசார், குளிக்கும் நிலையங்கள், மைதானங்கள், காஸ் (Gas), டிராம் (Tram), பஸ் (Bus), கக்கூஸ், குழாய்கள், குடிஜனங் களுக்கு வசிக்கும் வசதிகள், இவை சம்பந்தமானவற்றை ஏற்படுத்தலும், விருத்தி செய்தலும் ஆகும். இன்னும் குடி ஜனங்களின் எதிர்காலச் சுக நலன்களையும் அதுநிதா னத்துடன் கருதி வேலைகளை நடத்துதல் வேண்டும்.

முனிசிபாலிட்டியின் நிர்வகிப்பு அதற்கென இருக் கும் பிரத்தியேகச் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது: அதன் நிர்வாகச் செலவு ஸ்தல வரிகளினால் நடைபெறு கிறது. பல வித லைசென்ஸுகள், தண்ணீர், மின்சாரம், நிலவரி, வீட்டுவரி முதலியன வாயிலாக 'முனிசிபல் நிதி' திரட்டப்படுகிறது.

பிரார்த்தனைக்குரிய இடங்கள், மயானங்கள், தர்ம நிலையங்கள் முதலானவைகளுக்கு வரிகள் இல்லை. இனி, பணம் அவசியமாகத் தேவைப்படும் காலத்தில் உயர்தர அதிகாரியினதோ, அல்லது சிங்கப்பூர்க் கவர்னரதோ, சுல் தானதோ, சட்டசபைகளினதோ அனுமதியுடன் முனிசி பாலிட்டி வட்டிக்குக் கடன் வாங்கலாம். இன்னும், அர சாங்கம் முனிசிபாலிட்டிக்குப் பணவுதவி செய்வதுண்டு.

பட்டினச் சபைகளும் நாட்டுப்புறச் சபைகளும் முனிசிபாலிட்டி போன்றே சிறிய முறையில் வேலைகள் செய்கின்றன.

---

# 18. தேசீய மலாயாவின் உதயம்

இரண்டாவது உலக மகா யுத்தத்தின் முடிவிலிருந்து மனித சமுதாயத்தின் சரித்திரத்திலேயே ஒரு புது சகாப்தம் ஏற்பட்டு இருக்கின்றது. முன்னர் அந்நிய அரசாங்கங் களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த நாடுகளிலெல்லாம் சுய நிர்ணய உணர்ச்சி மேலிட்டுள்ளது. சுதந்தரம் என்பது ஒவ்வொரு மனிதனுக்கும், ஒவ்வொரு சமுதாயத்துக்கும் பிறப்புரிமையானது என்பதை பிரிட்டிஷ் அரசாங்கம் உணர்ந்துள்ளமையால், யுத்தத்திற்குப் பிறகு இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பர்மா ஆகிய கிழக்காசிய நாடு கள் சுதந்தரம் அடைந்தன. இன்னும், டச்சு அரசாங்கம் ஒரு சிறு போராட்டத்திற்குப் பிறகு இந்தோனேஷிய நாடுகளுக்கும், அமெரிக்க அரசாங்கம் பிலிப்பைன் நாட் டுக்கும் சுதந்தரத்தை அளித்தன. சுதந்தரமடைந்த இந் நாடுகள் யாவும் மலாயாவைச் சூழ்ந்திருக்கின்றன. யுத்த கால ஜப்பானிய ஆட்சியும் மக்களை விழிக்கச் செய்து விட்டது. எனவே, சுதந்தர வேட்கை மலாயாக் குடிக ளிடம் உண்டாவது இயல்பே. சுயாட்சி உடனடியாகச் சாதிக்கக் கூடியதொன்றன்று. அது படிப்படியாக ஆட்சியனுபவத்துடன் அடைய வேண்டுவதொன்றாகும்

இதற்கிடையே யுத்த காலத்தில் பிரிட்டிஷாரின் உதவிகொண்டு ஜப்பானியருக்கு எதிராக மறைவிலிருந்து போராடி வந்த படையினர் தாங்கள் மலாயா அரசாங்கத் தைக் கைப்பற்றி எதேச்சாதிகாரம் புரியும் நோக்கத்துடன் பயங்கரவாத முறைகளைக் கையாண்டார்கள். காடு மேடுகளில் பதுங்கிக்கொண்டு மறை முகமாகக் கொலை, தீ வைத்தல், போக்கு வரத்துச் சாதனங்களைக் கவிழ்த்தல் தந்திக் கம்பிகளை அறுத்தல் முதலிய நாசகரமான காரியங்

களில் ஈடுபட்டார்கள். இப்பயங்கர வாதக் கோஷ்டி யினர்களில் பெரும்பாலோர் சீனர்களாய் இருந்தாலும், மலாயர்களும் தமிழர்களும் சிறு அளவில் சேர்ந்திருந்தார் கள். இக்கோஷ்டியின் மிருகத்தன்மைக்கு ஆயிரக்கணக் கான குடி மக்களும் தற்காப்புப் படையினரும் இரையாகி யிருக்கிறார்கள். மலாயாவின் சுபிட்சத்தை விரும்பும் எவரும் இவர்களை ஆதரிக்கவில்லை. இவர்களை அடக்கு வதற்காக 1948-ஆம் வருடம், ஜூன் மீ, 10 உ அவசர காலச் சட்டம் (State of Emergency) பிரகடனம் செய்யப்பட்டது.

ஜனநாயக ஆட்சியிலும் சுதந்தரத்திலும் நம்பிக்கை கொண்ட பிரிட்டிஷார் மலாயாவின் சுயாட்சிக்கு இன்றி யமையாது வேண்டப்படுவன மலாயாவின் பல இனத்தவர் களுக்கிடையே ஒருமைப்பாடும் மலாயாத் தேசீய மனப் பான்மையும் என்பதை உணர்ந்தனர். இதன்பொருட்டு 1952-ஆம் ஆண்டு, செப்டெம்பர் மாதம், 15-ஆம் தேதி ஐக்கிய மலாயாவுக்கும் மலாய் சமஸ்தானங்களுக்கும் உரிய பிரஜா உரிமைச் சட்டம் அமலுக்கு வந்தது. அஃதோடு, தேச ஆட்சியில் மலாயா மக்களைப் பங்கு பெறச் செய்வ தற்காகத் தேர்தல் சட்டமும் 1952ல் பிறப்பிக்கப்பட்டது. தேசியக் கல்விச் சட்டமும் அமலுக்கு வந்தது. இன்னும், மலாயாப் பிரஜைகளைச் சுயாட்சியில் அனுபவம் பெறச் செய்யும் நோக்கத்துடன் ஐக்கிய மலாயாவின் அரசாங்கத் தில் இலாக்காக்களுக்கு அதிபர்களாக நியமன அங்கத் தினர்கள் (Members of Federal Departments) ஏற்படுத் தப்பட்டார்கள். இவர்கள் மலாயாவிலுள்ள பல இனங் களைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள். பல தொழிற்சங்கங் களுக்கும் அரசாங்கம் ஆதரவு கொடுத்து அவற்றுக்கு ஆக்க கரமான துறைகளில் முன்னேறத் துணை செய்துள்ளது.

மலாயா நாட்டின் நன்மைக்காக இம்முன்னேற்றங்களுக்கு அஸ்திவாரம் போட்டு உழைத்தவர்களுள் உயர்தர அதிகாரிகளான ஸர் ஹென்றி கர்னியும் (Sir Henry Gurney), ஜெனரல் ஸர் ஜெரால்ட் டெம்பிளரும் (General Sir Gerald Templer) முதன்மை இடம் பெற்றவர்களாவர். ஸர் ஹென்றி கர்னி பயங்கரவாதிகளால் 1951 அக்டோபர் 6-ஆந் தேதி பாஹாங் பிரேசர் மலைக்கருகில் சுட்டுக் கொல்லப்பட்டார். அவர்தான் மலாயாச் சுயாட்சிக்குத் திட்டமிட்டு, தேசியக் கல்வியின் அவசியத்தை உணர்த்தியவர். இனி மலாயா ஜனநாயக ஆட்சியை உருவாக்கியவரும் பல இன மக்களிடையே பரஸ்பரத்தை வளர்க்க முயன்றவரும் பயங்கரவாதத்தின் வலிமையைக் குறைத்தவரும் ஜெனரல் டெம்பிளரே (1952—1954 ஜூன் மீ). அவரிடம் வீரமும், மன உறுதியும், மக்களின் நலனைக் கருதும் உள்ளமும், செய்கைத்திறனும் ஒருங்கே குடிகொண்டிருந்தன. அவருக்குத் துணையாக அவர் மனைவியார் லேடி டெம்பிளரும் இருந்தார். லேடி டெம்பிளர் மலாய் நாட்டின் சமூக நலன் இயக்கங்களுக்காகவும், ஏழை எளியவர்கள் நோயாளிகளுக்காகவும் மிகவும் உழைத்திருக்கின்றார்.

மலாயாவின் சுயாட்சி வழிக்கும் முன்னேற்றத்திற்கும் மிகவும் உயர்நோக்குடன்உழைத்தவர்களுள் டத்தோ ஸர் தன்-செங்-லாக் (Dato Sir Tan Cheng Lock), டத்தோ ஸர் ஆன் பின் ஜபார் (Dato Sir Onn bin Jaffar), டத்தோ ஸர் துரைசிங்கம்(Dato Sir Thuraisingham), துங்கு அப்துல் ரஹ்மான் (Tunku Abdul Rahman) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களுள்ளும் இவர்களைப் பின்பற்றுகின்றவர்களுள்ளும் மலாயாவின் சுதந்தர சாதனைகளைப் பொறுத்த வரையில் கருத்து வேறு

பாடுகள் உண்டென்றாலும், மலாயாவைத் தாயகமாகக் கொண்ட யாவரும் மலாயாவின் சுதந்தரத்திலும் சுபிட்சத்திலும் முழு நாட்டம் கொண்டுள்ளார்கள் என்பதற்கு ஐயமில்லை.

சிங்கப்பூரிலும் ஐக்கிய மலாயாவிலும் 1955ல் மக்களின் சட்டசபைத் தேர்தல்கள் நடந்துள்ளன. மலாயா நாட்டு மந்திரிகளும் பிரதிநிதிகளும் ஆட்சியை நடத்துகிறார்கள். சமஸ்தான சபைகளிலும் குடியேற்றப் பிரதேச சபைகளிலும் (Settlement Councils) மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருக்கின்றார்கள். ஸ்தல ஆட்சி (*Local Government*) மன்றங்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகள் உளர். மலாயா மக்களின் உயர்தரப் படிப்புக்குச் சர்வ கலாசாலையும், இன்னும் தொழிற்சம்பந்தமான கல்லூரிகளும், இதர பள்ளிக்கூடங்களும் நடைபெறுகின்றன. மலாயாச் சரித்திரத்தில் புதுக்கட்டம் தொடங்கியிருக்கின்றது. இந்நாட்டின் மேம்பாட்டிற்கும் சுபிட்சத்திற்கும் உழைக்க வேண்டுவது மலாயா வாசிகளின் கடமையாகும்.

### பிரஜா உரிமைத் திட்டம்

1. ஒருவர் ஐக்கிய மலாயாவில் பிறந்திருந்து பின்வரும் மூன்று நிலைமைகளில் ஒன்று பொருந்தியிருப்பின் சட்டப்படி அவர் ஐக்கிய மலாயாப் பிரஜையாவார்.

(1) ஒருவர் ஒரு மலாய்க்காரராயிருந்து பிரிட்டிஷ் பிரஜையாயிருந்து மலாய் சமஸ்தானமொன்றில் பிறந்திருந்தால், அவர் அச்சமஸ்தானாதிபதியின் பிரஜையாவார். ஆகவே, இயல்பாகவே அவர் ஐக்கியமலாயாவின் பிரஜை.

(2) ஒருவர் வேறெந்த இனத்தவராயுமிருந்து ஒரு மலாய் சமஸ்தானத்தில் பிறந்திருந்தும் அவர் தகப்பனு

ராவது தாயாராவது ஐக்கிய மலாயாவில் எங்கேனும் பிறந்தவராயிருந்தால், அவர் அச்சமஸ்தானதிபதியின் பிரஜையாவார். ஆகவே, இயல்பாகவே அவர் ஐக்கிய மலாயாவின் பிரஜையே.

(3) ஒருவர் எந்த இனத்தவராயினும், பினங்கு அல்லது மலாக்காக் குடியேற்றப் பிரதேசமொன்றில் பிறந்தவரானல், அவர் ஐக்கிய மலாயாவின் பிரஜை.

2. ஒருவர் ஐக்கிய மலாயாவுக்கு வெளியே பிறந் திருந்தால், பின் வரும் வழிகளுள் ஏதாவதில் அவர் சட்டப்படி ஐக்கிய மலாயாவின் பிரஜையாகலாம் :

(அ) பின் வரும் இரண்டு வழிகளுள் ஏதாவது ஒரு வழியில் ஒருவரது தகப்பனர் ஐக்கிய மலாயாவுக்கு நெருங்கிய தொடர்புள்ளவரானல், ஒருவர் எங்குப்பிறந்தவராயினும், எந்த இனத்தவராயினும், அவரது தகப்பனர் ஒரு குடியேற்றப் பிரதேசத்தில் பிறந்தவராயிருந்து அவர் பிறந்த சமயம் ஐக்கிய மலாயாவில் கடந்த 15 ஆண்டுகளாக வசித்து வந்திருந்தால் அவர் ஐக்கிய மலாயாவின் பிரஜை.

(ஆ) ஒருவர் எங்குப் பிறந்தவராயினும், எந்த இனத்தவராயினும், அல்லது தகப்பனர் மலாய் சமஸ்தானமொன்றில் பிறந்திருந்து அவர் பிறந்த சமயம் அவர் ஒரு சமஸ்தானதிபதியின் பிரஜையாகத் தகுதியுள்ளவராயிருந்திருந்தால் அவரும் சமஸ்தானதிபதியின் பிரஜையாவார். ஆகவே, இயல்பாகவே அவர் ஐக்கிய மலாயாவின் பிரஜையாவார்.

3. குடியேற்றப் பிரதேசங்களுள் ஒன்றில் ஒருவர் பிரிட்டனதும், காலனிகளினதும் பிரஜையாகக்குடியுரிமை பெற்றுக்கொண்டதோடு அவர்,

(i) கடந்த 12 வருடங்களில் மொத்தம் 10 வருட காலத்திற்குக் குறையாமல் குடியேற்றப் பிர தேசங்களில் வசித்திருக்க வேண்டும்.

(ii) பிரிட்டனதும் காலனிகளினதும் பிரஜை யாகக் குடியுரிமை பெறுவதற்கு மனுச் செய்த தேதிக்கு முந்திய இரண்டு வருடங்கள் பூராவும் குடியேற்றப் பிரதேசங்களில் வசித் திருக்க வேண்டும்.

4. ஒருவர் எங்கே பிறந்தாலும், முன்னரே அம லில் உள்ள சட்டங்களின்படி அவர் ஐக்கிய மலாயா வின் பிரஜை என்று அத்தாட்சிப்படுத்தும் பத்திரத்தை 1952 செப்டெம்பர் 15ல் அவர் வைத்திருந்தால், அவர் ஐக்கிய மலாயாவின் பிரஜையாவார்.

5. ஏற்கெனவே பிரஜையல்லாத ஓருவர் இரண்டு வழிகள் மூலம் பிரஜா உரிமை பெறலாம்; ஒன்று பதிவு செய்வதன் மூலம்; ஆனால், ஒரு சமஸ்தானாதிபதியின் பிரஜையொருவர் இயல்பாகவே ஐக்கிய மலாயாவின் பிரஜையும் ஆவாராதலால் இந்த இருமுறைகளும் நான்கு முறைகளாகின்றன. இப்படியாக ஒருவர் (1) ஒரு சமஸ்தானாதிபதியின் பிரஜையாகப் பதிவு செய்துகொள்ள லாம்; (2) ஒரு சமஸ்தானாதிபதியின் குடியுரிமை பெற லாம்; (3) ஐக்கிய மலாயாவின் பிரஜையாகப் பதிவு செய்துகொள்ளலாம்; அல்லது (4) ஐக்கிய மலாயா வின் பிரஜையாகக் குடியுரிமை பெறலாம்.

இந்த ஒவ்வொரு நிலைமையிலும் கீழ்க்காணும் தகுதி கள் இருக்க வேண்டும்:

(1) ஒரு சமஸ்தானதிபதியின் பிரஜையாகப் பதிவு செய்வதனால் பிரஜா உரிமை பெறுதல் ;

இதற்கு ஒருவர்—

(அ) குறைந்தது 18 வயதானவராயிருக்க வேண்டும்.

(ஆ) அவர் பதிவு செய்துகொள்ள விரும்பும் அதே சமஸ்தானத்தில் பிறந்திருக்க வேண்டும்,

(இ) மலாய் அல்லது ஆங்கில மொழியில் பேசுவதற்கு நியாயமான அளவு திறமை பெற்றிருக்க வேண்டும்.

(ஈ) நல்லொழுக்கம் உடையவராய் இருக்க வேண்டும்.

(உ) சமஸ்தானதிபதிக்கு விசுவாசப் பிரமாணம் ஏற்க வேண்டும்.

கடந்த 10 ஆண்டுகளில் தொடர்ச்சியாக 5 ஆண்டுகளுக்கு ஒருவர் ஐக்கிய மலாயாவுக்கு வெளியே இருந்திருந்தால், அந்தக் காலத்தில் அவர் ஐக்கிய மலாயாவுடன் கணிசமான தொடர்பு வைத்திருந்தார் என்பதை நிரூபிக்க அத்தாட்சிப் பத்திரம் காட்டல் வேண்டும்.

மேலும், பிரிட்டனது காலனிகளினதும் பிரஜையான ஒரு ஸ்திரீ மலாயா பெடரேஷன் பிரஜை ஒருவரை விவாகம் செய்து அவ்விவாகம் பதிவு செய்யப்பட்டும் அந்த ஸ்திரீ நல்லொழுக்கமுடையவராயும் விஸ்வாசப் பிரமாணம் ஏற்றுக்கொண்டவராயும் இருந்தால் பிரஜையாகப் பதிவு செய்யப்படலாம்.

(2) ஒரு சமஸ்தானாதிபதியின் பிரஜையாகக் குடி உரிமை பெறுதல்;

இதற்கு ஒருவர்,

(அ) குறைந்தது 18 வயதானவராயிருக்க வேண்டும்.

(ஆ) கடந்த 12 ஆண்டுகளில் 10 ஆண்டுகள் ஐக்கிய மலாயாவில் வசித்து வந்திருக்க வேண்டும்.

(இ) அவர் குடியுரிமை பெற விரும்பும் சமஸ்தானத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக வசித்து வந்திருக்க வேண்டும்.

(ஈ) நல்லொழுக்கம் உடையவராய் இருக்க வேண்டும்.

(உ) சமஸ்தானம் அல்லது அரசாங்க உதவியின்றித் தம்மை ஆதரித்துக்கொள்ளக் கூடியவராக இருக்க வேண்டும்.

(ஊ) மலாய் அல்லது ஆங்கில மொழியில் பேசுவதற்கு நியாயமான அளவில் திறமை பெற்றிருக்க வேண்டும்.

(எ) ஐக்கிய மலாயாவில் நிலையாக வசிக்கும் நோக்கமுள்ளவரென உறுதி கூறவேண்டும்.

(ஏ) சமஸ்தானாதிபதிக்கு விசுவாசமுள்ளவரெனப் பிரமாணம் ஏற்க வேண்டும்.

(3) ஐக்கிய மலாயாவின் பிரஜையாகப் பதிவு செய்வதனால் பிரஜா உரிமை பெறுதல்:

இதற்கு அவர்,

(அ) பெடரேஷனில் பிறந்திருக்க வேண்டும்.

(ஆ) குறைந்தது 18 வயதானவராயிருக்க வேண்டும்.

(இ) பிரிட்டனதும் காலனிகளினதும் பிரஜையாக இருக்க வேண்டும்.

(ஈ) ஐக்கிய மலாயாவுக்கு விசுவாசப் பிரமாணம் ஏற்க வேண்டும்.

கடந்த 10 ஆண்டுகளில் தொடர்ச்சியாக 5 ஆண்டுகளுக்கு அவர் ஐக்கிய மலாயாவுக்கு வெளியே இருந்திருந்தால், அந்தக் காலத்தில் அவர் ஐக்கிய மலாயாவுடன் கணிசமான தொடர்பு வைத்திருந்தார் என்பதை நிரூபிக்க அத்தாட்சிப் பத்திரம் காட்ட வேண்டும்.

மேலும், ஒருவர் ஸ்திரீயாகவும், சமஸ்தானதிபதியின் பிரஜையொருவருக்கு விவாகம் செய்யப்பட்டும், நல்லொழுக்கமுடையவராயும், விசுவாசப் பிரமாணம் ஏற்றுக்கொண்டவராயும் இருந்தால், சமஸ்தானதிபதியின் பிரஜையாகப் பதிவு செய்யப்படலாம்.

(4) ஐக்கிய மலாயாவின் பிரஜையாகக் குடியுரிமை பெறுவதனால் பிரஜா உரிமை பெறுதல்:

(அ) பிரிட்டனதும் காலனிகளினதும் பிரஜையாக இருக்க வேண்டும். (மேலே (3) ல் உள்ள விளக்கத்தைப் பார்க்க.)

(ஆ) குறைந்தது 18 வயதானவராயிருக்க வேண்டும்.

(இ) கடந்த 12 ஆண்டுகளில் 10 ஆண்டுகள் ஐக்கிய மலாயாவில் வசித்திருக்க வேண்டும்.

(ஈ) கடந்த 2 ஆண்டுகளாக ஐக்கிய மலாயாவில் வசித்து வந்திருக்க வேண்டும்.

(உ) நல்லொழுக்கம் உடையவராய இருக்க வேண்டும்.

(ஊ) சர்க்காரின் உதவி நாடாமல் தம்மை ஆதரித்துக்கொள்ளக் கூடியவராக இருக்க வேண்டும்.

(எ) மலாய் அல்லது ஆங்கில மொழியில் பேசுவதற்கு நியாயமான அளவு திறமை பெற்றிருக்க வேண்டும்.

(ஏ) ஐக்கிய மலாயாவில் நிலையாக வசிக்கும் நோக்கமுள்ளவரென உறுதிகூற வேண்டும்.

(ஐ) ஐக்கிய மலாயாவுக்கு விசுவாசப் பிரமாணம் ஏற்க வேண்டும். மற்றும் அவர் ஸ்தலப் படைகளில் முழு நேரச் சேவையில் 3 ஆண்டுகளோ, பகுதி நேரச் சேவையில் 4 ஆண்டுகளோ சேவித்துக் கௌரவமாகச் சேவையிலிருந்து விடுவிக்கப்பட்டு, மேலே (ஏ) பாராவில் கூறியுள்ள உறுதி மொழி அளித்தாலும் ஐக்கிய மலாயாவின் பிரஜையாகக் குடியுரிமையைப் பெறலாம்.

---

# 19. பிரிட்டிஷ் சம்மேளனமும் (Commonwealth) மலாயாவும்

விஞ்ஞான விருத்தியும் நாகரிக முன்னேற்றமும் இன்றைய உலகில் மக்கள் கருத்துக்களையெல்லாம் வெகு வேகத்தில் விரிவுறச் செய்துகொண்டிருக்கின்றன. இந் நிலையிலே எத்தேசமும் அதன் வாணிகம், நிதி, நாணயம், கலை, சமூகாதார அலுவல்கள் முதலியவற்றில் தனித்

தியங்க இயலாது. இவ்வுண்மை பெருநாடுகளைவிடச் சிறு நாடுகளுக்குப் பன்மடங்கு பொருந்தும். ஒரு நாடு மற்றைய நாடுகளுடன் நாம் மேலே கூறிய துறைகளில் சம்பந்தங்கொண்டிருக்குமாயின், அது பல நன்மைகளை அடையும்.

பிரிட்டிஷ் சம்மேளனத்தில் உலகின் பல திசைகளிலுமுள்ள நாடுகள் அங்கம் வகிக்கின்றன என்பது நம்மெல்லோருக்கும் தெரியும்; இந்நாடுகள் யாவும் பொதுவாகக் கூறுமிடத்து உண்மையான ஜனநாயக முறைகளை எல்லாக் காரியங்களிலும் கையாளுகின்றன என்பதும் நமக்குத் தெரியும்: இன்னும் இவை யாவற்றுக்குமிடையே பரஸ்பரம் நிலவி வருகின்றது. மலாயா, பிரிட்டிஷ் சம்மேளனத்துள் ஒரு நாடாக இருக்கின்றது; என்றாலும், அது சிறு தேசம்; அஃதுடன், சில சமூகாதாரத் துறைகளில் அது இன்னும் முன்னேற வேண்டி இருக்கின்றது. இக்காரணங்களால் மலாயாவுக்கு பிரிட்டிஷ் சம்மேளனத்தைச் சேர்ந்த இதர நாடுகளின் தொடர்பு இன்றியமையாததாகின்றது.

மலாயா அரசாங்கத்திற்கும் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கும் உள்ள தொடர்பை முன் சில பாடங்களில் கவனித்தோம். பிரிட்டனிலியங்கும் அரசியல் கொள்கைகளும் முறைகளும், காலதேச சந்தர்ப்பங்களுக்குப் பொருந்த, மலாயாவிலும் கையாளப்படுகின்றன. குடியேற்ற நாட்டுச் சேவைப் பகுதியிலிருந்து (Colonial Service) மதிநுகம் நிறைந்த, நிர்வாக அனுபவமும் வாய்ந்த உத்தியோகஸ்தர்கள் குடியேற்ற நாட்டுக் காரியதரிசியினால் தேர்ந்தெடுக்கப்பட்டு, மலாயாவுக்கு அனுப்பப்படுகிறார்கள். இதனால், மலாயா பல துறைகளிலும் நன்மையைப் பெறுகின்றது. இன்னும், குடியேற்ற

நாட்டுக் காரியாலயம் தன் நீண்ட அனுபவங்களை யொட்டி மலாயாவின் அபிவிருத்திக்குகந்த கருத்துக்களை அவ்வப்போது இந்நாட்டு அரசாங்கத்துக்குக் கூறி வரு கின்றது.

மலாயாவின் பொருளாதார சமூக அபிவிருத்திகளுக் குப் பணம் தேவைப்படும் போதெல்லாம் பிரிட்டனி லிருந்து முதற்பணம் (Capital) குறைந்த வட்டி விகிதத் தில் கிடைக்கின்றது. உதாரணமாக, மலாயாவின் புகை வண்டிப் பாதை (Malayan Railway) அமைக்கப் பட்டது இவ்விதமாகவே.

மலாயாவில் முதல் புகை வண்டிப் பாதை பேரா சமஸ்தானத்தில் வெல்ட் துறைமுகத்திலிருந்து (Port Weld) தைப்பிங் வரை 1885ல் அமைக்கப்பட்டது. அதன் நீளம் 8 மைல். அது சர் ஹியு லோ (Sir Hugh Low) அவர்களால் திட்டமிடப்பட்டு, சர் பிராங் ஸ்வெட் டன்ஹாம் (Sir Frank Swettenham) அவர்களால் முடிக்கப்பட்டது. இதை அமைத்தவர்கள் இலங்கையி லிருந்து வந்த இராணுவப் படைகளைச் சேர்ந்தவர்கள்.

இரண்டாவது புகை வண்டிப் பாதை கிள்ளானி லிருந்து கோலாலம்பூர்வரை 22 மைல் தூரம் 1886–ஆம் ஆண்டு, செப்டெம்பர் மாதம், 15-ஆந்தேதி திறக்கப் பட்டது. இதுவும் சர் ஸ்வெட்டன்ஹாம் அவர்களால் போடப்பட்டது.

1891ல் சிரம்பான் போர்டிக்ஸன் புகை வண்டிப் பாதையும், 1893ல் தாப்பாரோட் டெலுக்கான்ஸன் புகை வண்டிப் பாதையும் போடப்பட்டன.

இனி, உலகத்தின் மேற்கே பிரிட்டனிலிருந்து கிழக் குக் கோடியிலுள்ள ஹோங்கொங் (Hongkong), தென்

கிழக்குக் கோடியிலுள்ள ஆஸ்திரேலியா, நியூஸீலந்து (New Zealand) ஆகிய நாடுகள் வரையுள்ள பிரிட்டிஷ் சம்மேளனத் தொடர்ச்சியில் மலாயா ஒரு சிறு கட்டத்தை வகிக்கிறதென்றாலும், மலாயாவின் தற்காப்புவிஷயத்தில் அத்தொடர்பிலுள்ள சம்மேளன நாடுகள் யாவும் பங்கெடுத்துக்கொண்டிருக்கின்றன.

இன்னும் மிகவும் முக்கியமான தொடர்பு ஒன்றுண்டு. அஃதென்னவென்றால், மலாயா பிரிட்டிஷ் 'பவுன் வட்டத்தில்' (Sterling Bloc) இருக்கின்றது. 1902-ஆம் ஆண்டிலிருந்து மலாயாவின் நாணயம் பிரிட்டிஷ் நாணயமாற்றுடன் இணைக்கப்பட்டிருக்கின்றது. 1906-ஆம் ஆண்டு முதல் 'மலாயா டாலர்' அல்லது வெள்ளியானது பிரிட்டிஷ் 2 ஷிலிங் 4 பென்ஸ் (2s. 4d.) இதற்குச் சமமாக இருந்து வருகின்றது. இத்தகைய நாணயமாற்று, சம்மேளனத்தின் இதர நாடுகளுக்கும் பிரிட்டனுக்குமிடையே, கானடா (Canada) நீங்கலாக, உண்டு. இதனால், இந்நாடுகள் யாவும் பொருளாதாரத் துறையிலே நஷ்டத்தைப் பற்றிய அச்சத்துக்கு இடமிராமல், தத்தம் வியாபாரத்தை நடாத்தல் இயலுகின்றது.

பிரிட்டிஷ் பாராளுமன்றம் சம்மேளனத்திலுள்ள இதரநாடுகளின் பாராளுமன்றங்களுக்குத் தாய் போன்றது. ஏனெனில், அந்நாடுகளின் பாராளுமன்றங்கள் யாவும் அதன் சாயலிலேயே அமைக்கப்பட்டிருக்கின்றன. பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் சம்மேளனத்தின் இதர நாடுகளைப் பற்றிய எத்தகை பிரச்சினைகள் கிளப்பப்பட்டாலும் அவை யாவற்றிற்கும் குடியேற்ற நாட்டுக் காரியதரிசி சரியான விளக்கம் அளித்தே தீரவேண்டும்.

உலகச்சூழ்நிலைகள் கடந்த அறுபது, எழுபது ஆண்டுகளுள் பல மாறுதல்களை அடைந்துவிட்டன என்றாலும்,

மலாய் சமஸ்தான சுல்தான்களுடன் பிரிட்டனுக்கிருந்து வரும் ஒப்பந்தமானது அவர்களுக்கும் மலாயாவின் சுய குடிகளான மலாயருக்கும் எப்பொழுதும் சகாயமாகவே இருந்து வருகின்றது. இனி, சமஸ்தானங்களில் நிர்வாக உத்தியோகஸ்தர்கள் அந்தந்த சமஸ்தானத்துச் சபைகளுடைய கட்டளைகளையே பெரும்பான்மையாக நிறைவேற்றுகின்றார்கள். அச்சபைகளில் இப்போது அரசாங்க உத்தியோகப் பற்றற்ற அங்கத்தினர்களும் இடம் பெறுகின்றார்கள். இவர்கள் பொதுவாகக் கூறின், சாமானிய ஜனங்களின் பிரதிநிதிகளாக இருக்கின்றார்கள்.

இன்னும், சாதாரண ஜனங்களின் மக்கள் பிரிட்டனுக்கும் இதர சம்மேளன நாடுகளுக்கும் சென்று பல விதமான உத்தியோகத் தேர்ச்சியும் பயிற்சியும் பெறுவதற்கு மலாயா அரசாங்கமும் பிரிட்டிஷ் குடியேற்ற இலாக்காவும் சம்மேளன நாடுகளும் 'படிப்புச் செலவு' (Scholarship) தந்துதவுகின்றன.

மலாயாப் பிரஜைகளெல்லோரும் இந்நாட்டு அரசாங்கத்தைப் பற்றிய விஷயங்களில் தங்கள் கருத்துக்களை ஆக்க முறையிலே தாராளமாக வெளியிடலாம். இது அரசாங்க நிர்வாகஸ்தர்களை ஆலோசிக்கத் தூண்டும்; இன்னும், அவர்கள் தம் நடவடிக்கைகளையும் அவர்களே பரிசீலனை செய்ய ஊக்குவிக்கும். நாமொவ்வொருவரும் இந்நாடு சுமுகமாகவும் செழிப்பாகவும் இருப்பதற்கு நம் மாலியன்ற அளவு பாடு படலாம்.

1957-ஆம் ஆண்டு, ஆகஸ்டுமீ, 31 ஆந்தேதி மலாயா நாடு சுதந்தரம் பெற ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன. அதன் பிறகு இந்நாட்டுச் சரித்திரத்தில் ஒரு புது அத்தியாயம் தொடங்கும்.

# அநுபந்தம்

## மலாய் மொழியில் சாதாரணமாக வழங்கப்படும் சில இந்திய வார்த்தைகள்

| மலாய் | கருத்து | இந்திய வார்த்தை |
|---|---|---|
| ஸரீர | உடல் | சரீரம் |
| அங்கூத | தேகத்தின் உறுப்பு | அங்கம் |
| கபால | தலை ; தலைவன் | கபாலம் |
| பாத | கால் | பாதம் |
| நாடி | நாடி | நாடி |
| மீசா | மீசை | மீசை |
| ரோம | மயிர் | ரோமம் |
| ரூபா | உருவம் | ரூபம் |
| மூகா | முகம் | முகம் |
| போத்தாக் | மொட்டை | மொட்டை |
| போடோ | மூடன் | மூடன் |
| ஆயா | தகப்பன் | ஐயா |
| ஸ ்வர | குரல் | ஸ்வரம் |
| மாநுஸிய | மானிட | மாநுஷ்ய |
| ஸ ்டாரா | சகோதரன் | சகோதர |
| ஸ்திரீ | மனைவி | ஸ்திரீ (பெண்) |
| ஸ ்வாமி | கணவன் | ஸ்வாமின் (தலைவன்) |
| வங்ஸா | வமிசம் | வமிசம் |
| குலவர்க்க | குடும்பம் | குலவர்க்கம் |
| ராஜ | அரசன் | ராஜன் |
| மஹாராஜா | மலாய்த் தலைவன் | மஹாராஜா |
| இந்திரா | விண் உலகத்தோர் | இந்திரன் |
| ஜநு : ஜன | ராக்ஷசன் | ஜன (ஜீவஜந்து) |
| ஹந்து | பேய் | ஹந்த்ரு (கொல்லுபவன்) |
| ஸாஸ்திர | மந்திர வித்தை | சாஸ்திரம் |

| மலாய் | கருத்து | இந்திய வார்த்தை |
|---|---|---|
| வாதே | கொலைப்பிசாசு | வதை (கொலை) |
| ஆகம | சமயம் | ஆகமம் (சமய சாஸ்திரம்) |
| குரு | குரு | குரு |
| பூஜி ; பூஜா | வணக்கம் | பூஜை |
| ஸர்க்க | சுவர்க்கம் | ஸ்வர்க்கம் |
| நாரக | நரகம் | நரகம் |
| புவாஸ | உபவாசம் | உபவாசம் |
| ஸக்கி | சக்தி | சக்தி |
| மந்திரா | மந்திரம் | மந்திரம் |
| பக்தி | பக்தி | பக்தி |
| பிக்கு | துறவி | பிக்ஷு |
| ஓம் ; ஹொங் | பிரணவ மந்திரம் | ஓம் |
| பதார | தெய்வம் | அவதாரம் (தெய்வத்தின் பிறப்பு) |
| தேவ ; தேவதா | தெய்வம்; தேவதை | தெய்வம்: தேவதை |
| தேவீ | தேவி | தேவி |
| கால | காலம் | காலம் |
| தத்கால | தற்காலம் | தற்காலம் |
| கடிக | நேரம் | கடிகா (24 நிமிஷம்) |
| ஹாரீ | சூரியன் | ஹரி |
| தின | நாள் | தினம் |
| சதகால | எப்போதும் | சதாகாலம் |
| மாஸ | பருவகாலம் | மாஸம் (மாதம்) |
| லவங் | இலவங்கம் | லவங்கம் |
| காப்பூர் | கற்பூரம் | கற்பூரம் |
| சந்தான | சந்தனம் | சந்தனம் |
| ஆராங் | கரி | ஆகர (சுரங்கம்) |
| காபஸ் | பருத்தி | கர்ப்பாஸ |
| ஹர்க்க | விலை | அர்க்க |
| லக்ஷ | நூறாயிரம் | லக்ஷம் (100,000) |
| ஜூத | பத்துலட்சம் | அயுதம் (10,0000) |
| மாஸ் | பொன் | மஸ் (அளவு) |

| மலாய் | கருத்து | இந்திய வார்த்தை |
|---|---|---|
| தம்பாக | செம்பு | தாமிரம் |
| தீம் | தகரம் | தீவ்ரம் |
| ராஸ | வெள்ளீயம் | ரஸம் |
| காச்சு | கண்ணாடி | காச்ச |
| மானிக்கம் | மாணிக்கம் | மாணிக்கம் |
| முத்தியா | முத்து | முத்து |
| பிடூரி | வைடூரியம் | வைடூர்யம் |
| குஞ்சீ | சாவி | குஞ்சிகா |
| கன்ட | மணி | கண்ட |
| ஜால | வலை | ஜால |
| பெட்டீ | பெட்டி | பெட்டி |
| தங்கால | கலப்பை | லாங்கலம் |
| ஜூடி | தாயம் | சூது |
| ஜந்திரா | யந்திரம் ; சக்கரம் | யந்திரம் |
| ராத | இரதம் | ரதம் |
| மூரி | புல்லாங்குழல் | முரளி |
| கிரஹன | கிரஹனம் | கிரஹணம் |
| பூமந்தார | வாயுமண்டலம் | பூ-அந்தர |
| மங்கார | மகர ராசி | மகரம் |
| அங்கஸ | ஆகாயம் | ஆகாசம் |
| பூமி | பூமி | பூமி |
| ராஹு கேது | கிரகண தெய்வங்கள் | ராஹு, கேது |
| உதார | வடக்கு | உத்தரம் |
| தக்ஸீன் | தெற்கு | தக்ஷிணம் |
| காஜ | யானை | கஜ |
| ஆங்குஸ் | அங்குசம் | அங்குச |
| கொம்ப | கும்பம் | கும்பம் |
| மொர்க்க | மிருகம் | மிருகம் |
| சிங்க | சிங்கம் | ஸிம்ஹம் |
| ஸ்ரீகால | நரி | ஸ்ரீகால |
| காக | காகம் | காகம் |
| மெர | மயில் | மயூர |

| மலாய் | கருத்து | இந்திய வார்த்தை |
|---|---|---|
| அங்ஸ | அன்னப்பட்சி | ஹங்ஸ |
| மெரபாடி | புரு | பாராபத |
| குடா | குதிரை | குதிரை |
| கருட | கருடன் | கருடன் |
| ஜின்டாயு | ஜடாயு | ஜடாயு |
| ஹரீமோ | புலி | அரிமா (ஆண் சிங்கம்) |
| புஷ்ப | பூ | புஷ்பம் |
| சமபக | சண்பகப்பூ | சம்பகம் |
| ஆங்ஸோக | அசோகப் பூ | அசோகம் |
| ஸீலஸி | துளசி | துளசி |
| ஸரோஜ | தாமரை | ஸரோஜம் |
| கும்குமா | குங்குமம் | குங்குமம் |
| ஜம்பு | ஜம்புக்காய் | ஜம்பு |
| மம்பெலம் | மாம்பழம் | மாம்பழம் |
| பிலிம்பிங் | பிலிம்பி | பிலிம்பி |
| ஸுக | சந்தோஷம் ; இஷ்டம் | ஸுகம் |
| தூக்க | துக்கம் | துக்கம் |
| முர்க்க | கோபம் | மூர்க்கம் |
| லோப | உலோபி | லோபி |
| பூடி | புத்தி | புத்தி |
| பாண்டே | அறிஞன், கெட்டி | பண்டிதன் |
| மலஸ் | சோம்பல் | ஆலஸ |
| டெர்மா | தருமம் | தர்மம் |
| செதிய | உண்மை | சத்தியம் |
| செதியவான் | நம்பிகையானவன் | சத்தியவான் |
| தர்க்க | சந்தேகம் | தர்க்கம் (கேள்விக் [கிடமான) |
| செலா | குற்றம் | ச்சலம் (கள்ளம்) |
| தோஸ | பாவம் | தோஷம் |
| துஸ்ட | துஷ்டன் | துஷ்டன் |

| மலாய் | கருத்து | இந்திய வார்த்தை |
| --- | --- | --- |
| பஹால | பலன் | பலன் |
| பஹகிய | பாக்கியம் | பாக்கியம் |
| குன | குணம் ; தன்மை | குணம் |
| பீலா | வேளை ; எப்பொழுது | வேளை ; வேலா |
| மனி-மனி | ஜபமணி | மணி |
| பிரஹு | படகு | படகு |
| ரொட்டி | ரொட்டி | ரொட்டி |
| ச்செரி | தேடுதல் | சாரி |
| டெண்டா | தண்டம் | தண்டம் |
| புனே | நிறைவு | பூரணம் |
| ஸுகசித்தா | உவகை | ஸுகசித்தம் |
| ஞ்ஞாட் | அறிதல் ; நினைவு | ஞாத (எண்ணுதல்) |
| சௌதகர் | வியாபாரி | சௌதாகர் |
| கர்த்தாஸ் | கடுதாசி | கடுதாசி |
| ஸுன்யி | தனிமை | ஸுநியம் (வெறுமை) |
| பிஜி | கோட்டை | பீஜம் |
| செந்திரி | தானாகவே | ஸ்வதந்திர |
| உபயம் | உபாயம் | உபாயம் |
| கொலம் | குளம் | குளம் |
| ச்சூரி | களவு | சூரா |
| ஸம | போல் | ஸமம் |
| கத | சொல்லு | கதா |
| ஸுத்திர | நூல் ; பட்டு | ஸுத்திர (நூல்) |
| ச்செரிதா | சரித்திரம் | சரித்திரம் |
| ரஸ | ருசி | ரஸம் |
| ரோதா | சில்லு | ரோதை |
| கிர்ஜ | வேலை | கிரியை |
| பியாச | பயிற்சி | அப்பியாசம் |
| அந்தர | உள் | அந்தர் |
| மாரா | கோபம் | மாரா |
| கான்டிவ ; பான | வில்லு | பாணம் (அம்பு)<br>காண்டீவம் |

| மலாய் | கருத்து | இந்திய வார்த்தை |
|---|---|---|
| ஸத்ரு | சத்துரு | சத்ரு |
| கும்புல் | கும்பல்; குவியல்; கூடுதல் | கும்பல் |
| வர்ன | நிறம் | வர்ணம் |
| நெக்ரி | ஊர் | நகர் (பட்டினம்) |
| நீல | நீலம் | நீலம் |
| கோட்டா | கோட்டை | கோட்டை |
| ஜய | வெற்றி | ஜயம் |
| கப்பல் | கப்பல் | கப்பல் |
| [illegible] | கடை | கடை |
| முதல் | பணமுதல் | முதல் |
| கட்டில் | கட்டில் | கட்டில் |
| புத்திரா | இளவரசன் | புத்திரன் (மகன்) |
| புத்திரீ | இள்வரசி | புத்திரி (மகள்) |
| ஸ்கிலியான் | எல்லாரும் | சகல |
| வாச்சா | படித்தல் | வச (வாசி) |
| பாஷா | பாஷை | பாஷை |
| சிலகஷி | கலகம் | கலஹம் |
| நாம | நாமம் | நாமம் |
| பிஸம் | விஷம் | விஷம் |
| கல்தை | கழுதை | கழுதை |
| பால | சேனை | பலம் |
| பெர்மஸுரி | அரசி | பரமேஸ்வரி (பார்வதி) |
| பர்த்தன மந்திரி | பிரதான மந்திரி | பிரதான மந்திரி |
| பர மந்திரி | ஆலோசனை—அமைச்சன் | பர மந்திரி |
| பதுகா | அடிகள் சேவை | பாதுகா (பாதரக்ஷை) |
| தூலி | அரசருக்கு முன் உபயோகுக்கும் மரியாதை வார்த்தை | தூளி (தூசி) |
| சிங்காஹஸன | சிங்காசனம் | சிம்மாசனம் |

| மலாய் | கருத்து | இந்திய வார்த்தை |
|---|---|---|
| புங்கா | வீர உத்தியோகஸ் | புங்கவன் |
| மகோட | மகுடம் [தன் | மகுடம் |
| அஸ்தான | அரண்மனை | ஸ்தானம்(இடம்) |
| தேஸ | மாகாணம் | தேசம் |
| பிரேக்ஷா | பரீட்சை | பரீக்ஷை |
| பிச்சார | வழக்கு | விசாரம்(விசாரணை) |
| ஸக்ஷி | சாட்சி | சாக்ஷி |
| ஆநியாய | அநியாயம் | அநியாயம் |
| பிதி | விதி ; நியாயம் | விதி |
| ஆங்கார | அவமானம் | அஹங்காரம், டெழு |
| ஸிக்ஸா | தண்டனை | சிக்ஷை [மை |
| பன்ஜார | சிறை | பஞ்சர (கூடு) |
| பலபய | தூக்கிடுவோன் | பர-பயம் (பெரிய |
| தூப | தூபம் | தூபம் [பயம்) |
| சங்க-கால | குழல் | சங்கு-(கால) |
| ஸம்பன | ஆசீர்வாதம் | சம்பந்த |
| பாக்கி | மீதி | பாக்கி |
| காரன | காரணத்தால் | காரணம் |
| கமிலி | கம்பளி | கம்பளி |
| மெம்பிலே | மாப்பிள்ளை | மாப்பிள்ளை |
| பூங்கா | பூ | பூ பூங்கா + வனம்) |
| உன்டா | ஒட்டகம் | உஷ்ட்ர |
| சம்பொர்ண | சம்பூரணமாக | சம்பூரணம் |
| விநாஸ | அழிவு | விநாசம் |
| லாப | இலாபம் | லாபம் |
| ஹாடாங் | இருல் | ஊடான்(ஒருமீன்) |
| ஜீவ | உயிர் | ஜீவன் |
| ரஹாஸ்ய | இரகசியம் | ரகஸ்யம் |
| அச்சார் | ஊறுகாய் | அச்சார் |
| ஜோடோ | ஜோடி | ஜோட |
| மெலிகை | அரசமாளிகை | மாளிகை |
| மச்சம் ; மாதிரி | விதமான | மச்சம் – அடையாளம்;மாதிரி = போல |
| ஹின | தாழ்மை | ஹீனம் (குறைவு) |
| சூச்சி | சுத்தம் ; துப்புரவு | சூசி |

# BIBLIOGRAPHY

இந்நூலுக்குரிய சில கருத்துக்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட முக்கிய புத்தகங்களின் விவரணம் :—


W. S. Morgan—*The Story of Malaya*

R. O. Winstedt—*A History of Malaya*

Institute of Culture, Calcutta—*Cultural Heritage of India, Vol III.*

Roland Braddell—*The Lights of Singapore*

Jawaharlal Nehru—*Glimpses of World History, Vol. I*

G. M. Khan—*History of Kedah*

R. O. Winstedt—*Malaya and its History*

S. M. Middlebrook & A. W. Pinnick } *How Malaya is Governed*

W. E. Maxwell—*A Manual of the Malay Lang·age*

A. E. Pringle—*English and Malay Vocabula·y*

W. G. Shellabear—*Malay - English Vocabulary*